வரு.74 இல. 40 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

2022 ஒக்டோபர் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

October 02 Sunday, 2022

24 பக்கங்கள் 80/-
















## பெரும்போகத்துக்குத் தேவையான உரம் உரிய நேரத்தில் வழங்கப்படும்

### போதுமான அளவில் வழங்க அரசு நடவடிக்கை



பெரும்போகத்துக்குத் தேவையான உர வகைகளை உரிய நேரத்தில் போதுமானளவில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேவையான உரங்களைக் கொள்வனவு செய்வதற்கு முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் அவற்றை விவசாயிகளுக்கு விநியோகிக்க தயார் நிலையிலிருப்பதாகவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். பெரும்போகத்துக்குத் தேவையான உரங்களை வழங்குவது குறித்து ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையில் (29) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் இராஜாங்க 04

## மட்டு.இராமகிருஷ்ண மிஷனுக்கு விஜயம் செய்த இந்தியத் தூதுவர்

*மட்டக்களப்பு விஷேட, காரைதீவு குறூப் நிருபர்கள்*



இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று (01) சனிக்கிழமை மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் இல்லத்துக்கு விஜயம் செய்தார். இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் இல்ல முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷயானந்த ஜீ மகராஜ், உதவி முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் ஆகியோருடன் இல்ல மாணவர்கள் இந்திய உயர்ஸ்தானிகரை வரவேற்றனர்.

அவர், இல்லத்திலுள்ள இராமகிருஷ்ணர் ஆலயத்துக்கு சென்று 04

### ஹற்றனில் மாணவி மீதான தாக்குதலின் எதிரொலி

## பாடசாலை மாணவர்களிடம் பணம் அறவிடப்படுவது தடை

### கல்வியமைச்சின் செயலாளர் கண்டிப்பான உத்தரவு




கல்வி அமைச்சு மற்றும் மாகாணக் கல்வி அமைச்சுக்களால் மட்டும் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை வசதிக் கட்டணங்களைத் தவிர சிறுவர் தினம், ஆசிரியர் தினம் உள்ளிட்ட பல்வேறுபட்ட நிகழ்வுகளுக்கு மாணவ, மாணவிகளிடமோ அல்லது பெற்றோரிடமோ பணம் அறவிடக் கூடாதென கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க தெரிவித்துள்ளார். 04

**2015/05 சுற்றறிக்கை குறித்தும் சுட்டிக்காட்டல்**

### வாழைச்சேனை காகித ஆலை, சோளப் பயிர்ச் செய்கையுடன் விவசாயத்துறை;

# ஒரு மாத காலப் பகுதிக்குள் 110 மில். டொலர் முதலீடு

### அரசின் முடிவுக்காக காத்திருக்கும் புலம்பெயர் இலங்கையர்

*மர்லின் மரிக்கார்*





**ஜனாதிபதி ரணில் புலம்பெயர் சமூகத்துக்கு விடுத்த அழைப்புக்கு 'பைனஸ்' தனியார் நிறுவனம் பச்சைக் கொடி**

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்கும் வகையில் மில்லியன் கணக்கான அமெரிக்க டொலர்களை இலங்கையில் முதலீடு செய்வதற்கு புலம்பெயர் இலங்கையர் முன்வந்துள்ளனர்.

இதன்படி சுவிற்சர்லாந்து நாட்டைத் தலைமையகமாகக் கொண்டு உலகில் 05 நாடுகளில் செயற்படும் பைனஸ் தனியார் நிறுவனம், அடுத்த 10 நாட்களில் பத்து மில்லியன் அமெரிக்க டொலர்களை வாழைச்சேனை காகித ஆலையிலும் அடுத்துவரும் 30 நாட்களில் நூறு மில்லியன் அமெரிக்க டொலர்களை சோளப் பயிர்ச்செய்கை உள்ளிட்ட விவசாயத்துறையில் கிழக்கு மாகாணத்திலும் முதலீடு செய்வதற்குத் தயாராக இருப்பதாக நிறுவனத்தின் தலைவரும் நிறைவேற்று அதிகாரியுமான சிவபாதம் விக்கினேஷ்வரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை கட்டியெழுப்ப முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்கள் மற்றும் புலம்பெயர் இலங்கையருக்கு விடுத்துள்ள அழைப்பு 04



கொழும்பு, வெள்ளவத்தை மயூராபதி பத்ரகாளியம்மன் ஆலயத்தில் நவராத்திரி விழா ஆரம்பமான தினம் முதல் கொலுபூஜை நடைபெற்றுவருகிறது. 09 அடுக்குகளை கொண்டதாக ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ள அலங்கார கொலுவையே படத்தில் காண்கிறீர்கள். இன்று சரஸ்வதி தேவிக்குரிய முதலாவது நாளாகும். எதிர்வரும் 05 ஆம் திகதி விஜயதசமியுடன் விழா நிறைவு பெறும்...



## பாலர் பாடசாலைகளில் இலவச காலை உணவு 04

அனைத்து மாணவருக்கும் ஏற்பாடு – கீதா குமாரசிங்க

### பாராளுமன்றம் நாளை கூடுகிறது;

## அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தம் மீது விவாதம்

*லோரன்ஸ் செல்வநாயகம்*



பாராளுமன்றம் நாளை திங்கட்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் தலைமையில் கூடுகிறது.

22 ஆவது திருத்தம் தொடர்பான பாராளுமன்ற விவாதம் எதிர்வரும் 06 மற்றும் 07ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்தது. 22 ஆவது திருத்தம் ஏற்கனவே பாராளுமன்றத்தில் 04

## போராட்ட களத்தை வழிநடத்திய சகலரையும் கைது செய்ய வேண்டும்



**ஒத்துழைத்த இளைஞர்களுக்கு சமூகமயப்படுத்தும் திட்டம் அவசியம்**

போராட்டக்களத்தை வழிநடத்தியவர்களை கைது செய்து, அதற்கு ஒத்துழைப்பு வழங்கிய இளைஞர்களை சமூகமயப்படுத்தும் வேலைத்திட்டமொன்று அவசியமென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, இந்நாட்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி மறுசீரமைப்பு கூட்டங்களில் கலந்துகொள்வதுடன், வெலிமடை நுகதலாவையில் நேற்று நடைபெற்ற செயற்றிட்டத்திலும் பங்கேற்றிருந்தார்.

நிகழ்வை பதிவு செய்வதற்கு ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதுடன், கூட்டத்தின் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார்.

இதன்போது பேசிய அவரிடம், போராட்டக்காரர்களுக்காக புனர்வாழ்வு பணியகங்களை அமைக்கும் திட்டம் உள்ளதா என கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த நாமல் ராஜபக்ஷ, 04

### ஸ்பெயின் நாட்டு பெண்ணுடன் சேட்டை;

## காரைநகரில் கைதான ஒன்பது இளைஞர்களுக்கு தண்டனை

### சிறை மற்றும் தண்டப்பணம் விதிப்பு

காரைநகரில் வெளிநாட்டுப் பெண்ணுடன் சேட்டை புரிந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட 09 இளைஞர்களுக்கு ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றம் தண்டப் பணம் விதித்ததுடன், ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் விதித்துள்ளது.

அத்துடன் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 02 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடும் வழங்கவும் நீதிமன்றம் உத்தவிட்டுள்ளது.

ஸ்பெயின் நாட்டில் இருந்து காரைநகருக்கு சுற்றுலா சென்ற பெண்ணும் அவரது நண்பரும் யாழ். காரைநகர் கசூரினா கடற்கரைக்கு அண்மித்த கடற்கரை பகுதிக்கு கடந்த 24 ஆம் திகதி சென்றுள்ளனர்.

இதன் போது அப்பகுதியில் மது போதையிலிருந்த இளைஞர்கள் அவர்களை தகாத வார்த்தையால் பேசி, இப்பெண்ணுக்கு பாலியல் தொல்லையும் கொடுத்ததாக ஊர்காவற்துறை பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. கிடைத்த தகவலின்படி விசாரணைகளை நடத்திய 04

## எங்கள் கருத்து...

### நெருக்கமடைந்து வருகின்ற சர்வதேசத்துடனான நல்லுறவு!

இவ்வருட ஆரம்பத்தில் உருவெடுத்த தீவிரமான பொருளாதார நெருக்கடியிலிருந்து எமது நாடு படிப்படியாக மீண்டெழுவதற்கான முன்னேற்றகரமான அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன. பாவனைப் பொருட்களுக்கான விலைகள் இன்னும் குறிப்பிடத்தக்கவாறு குறைவடையாத போதிலும், எரிபொருட்களுக்கான நெருக்கடி தணிந்துள்ளதையும், அத்தியாவசிய பொருட்களுக்கான பற்றாக்குறை குறைந்துள்ளதையும் முதலாவது அறிகுறியாகக் கொள்ளலாம்.

இலங்கை மீது சர்வதேசத்தின் உதவிகள் தற்போது பெருகி வருவதை இரண்டாவது சாதகமான அறிகுறியாகக் கொள்ள முடியும். எமது நாட்டின் நெருக்கடியைத் தீர்ப்பதற்கான கடனுதவி புரிவதற்கு சர்வதேச நாணய நிதியம் இணக்கம் தெரிவித்துள்ளது. அதேசமயம் இலங்கைக்கு கைகொடுத்து உதவுவதற்கு ஐக்கிய நாடுகள் சபை, ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட சர்வதேச நிறுவனங்கள் தயாராகவுள்ளதாக அண்மைய தினங்களாக நிம்மதியான செய்திகள் வெளிவந்த வண்ணமுள்ளன.

கடன் மறுசீரமைப்புக்கு கைகொடுக்க ஜப்பானும், இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு சிங்கப்பூரும் புலம்பெயர் சமூகமும் இணக்கமான மனோநிலையில் உள்ளன. பிலிப்பைன்ஸ் நாடும் இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டிலேயே உள்ளது.

இவ்வாறான தகவல்களையெல்லாம் ஒன்றுசேர்த்து வைத்து நோக்குகின்ற போது எமக்கு தெளிவான உண்மையொன்று புரிகின்றது. 04

## பெற்றோலின் விலை நேற்று நள்ளிரவு முதல் குறைப்பு

பெற்றோலின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார். அதனடிப்படையில் 92 ரக பெற்றோலின் விலை லீற்றருக்கு 40 ரூபாவும், 95 ரக பெற்றோலின் விலை லீற்றருக்கு 30 ரூபாவும் குறைக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் தெரிவித்தார்.

இதனடிப்படையில், 92 ரக பெற்றோலின் புதிய விலை 410 ரூபாவாகவும், 95 ரக பெற்றோலின் புதிய விலை 510 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஏனைய எரிபொருட்களின் விலைகளில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை என எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### மாணவியை கொடூரமாக தாக்கிய சம்பவம்;

## கைதான அதிபருக்கு பிணை மற்றும் தற்காலிக இடமாற்றம்

கொட்டகலை, போகாவத்த பிரதேச பாடசாலையில் மாணவி ஒருவர் கொடூரமாக தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பாடசாலையின் அதிபருக்கு தற்காலிகமாக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இப் பாடசாலை மாணவி தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் திம்புள்ள, பத்தனை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பாடசாலை அதிபர் நேற்று முன்தினம் ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட பின்னர் 05 இலட்ச ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார். 04



சிறுவர் தினத்தை முன்னிட்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பம்பலப்பிட்டி இந்து கல்லூரிக்கு பாடசாலை பாவனைக்காக பஸ் ஒன்றை நேற்று கையளித்தார். நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், எஸ்.உதயகுமார், ஐக்கிய மக்கள் சக்தி உபதலைவர் உமாசந்திரா பிரகாஷ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

### ஏப்ரல் 21 ஈஸ்டர் தாக்குதல் சம்பவம்;

## சஹ்ரானின் மனைவி மீதான வழக்கு நவம்பர் 18க்கு ஒத்திவைப்பு



உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான பயங்கரவாதி சஹ்ரானின் மனைவி அப்துல் காதர் பாத்திமா ஹாதியா மீதான வழக்கு, கல்முனை மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ரொக்ஸி முன்னிலையில் (30) முன் விளக்க மாநாட்டுக்காக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மேலதிக முன் விளக்க மாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் 18 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. 04

### யாழ்.வல்வெட்டித்துறையில் சோகம்;

## வீடொன்றில் எரிந்த நிலையில் தம்பதியினர் சடலமாக மீட்பு

*யாழ். விசேட நிருபர்*



யாழ். வல்வெட்டித்துறை, நெடியகாடு பகுதியிலுள்ள வீடொன்றில் கணவனும் மனைவியும் தீக்காயங்களுக்குள்ளாகி நேற்று சனிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். 04

## குழியொன்றுக்குள் இரண்டு ஆண்களின் சடலங்கள் மீட்பு

### புதையல் அகழ்வில் ஈடுபட்டிருக்கலாமென சந்தேகம்

*ஹற்றன் சுழற்சி நிருபர்*



நுவரெலியா, வலப்பனை பகுதியில் குழியொன்றுக்குள்ளிருந்து இரு ஆண்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

புதையல் தேடல் அல்லது மாணிக்கக் 04

# நவராத்திரி மகிமை



நவராத்திரி மிக பிரம்மாண்டமான ஒன்றாகும். மற்ற பண்டிகைகளைப் போலவே, நவராத்திரி திருவிழா கொண்டாடுவதற்கும் பல விஷயங்கள் இருக்கிறது. ஒரு விதத்தில், நவராத்திரியை திருவிழாவாகக் கொண்டாடுவதால் நம் ஆன்மீக ஆற்றல்கள் வெளிப்படுகிறது. நம் ஆன்மிக பயணத்தில் துர்கா, லட்சுமி மற்றும் சரஸ்வதி ஆகிய மூவரின் கோட்பாடுகளை நாம் கடந்து செல்கிறோம். அதாவது கல்வி, செல்வம், வீரம் இவை மூன்றும் அனைவரின் வாழ்விலும் மிக முக்கியமான விஷயமாகும். இந்த உலகில் ஒருவரின் ஒருவர் சுயத்தை உணர இது அவசியம் தேவைப்படுகிறது.

'ஒன்பது இரவுகள்' என்று பொருள்படும் நவராத்திரி, துர்க்கா, லட்சுமி மற்றும் சரஸ்வதி வடிவங்களில் தெய்வீக வழிபாட்டை ஒவ்வொரு மூன்று நாட்களும் வழிபடுகிறார்கள். இருப்பினும், பத்தாவது நாள் மிக முக்கியமான நாளாகும். இது 'வெற்றியின் அடையாளமாகக் கொண்டாடப்படுகிறது. இதனை விஜயதாசமி என்று அழைக்கப்படுகிறது.

துர்க்கா,லட்சுமி,சரஸ்வதி ஆகிய மூவரையும் இவ்வுலகில் வழிபடக் காரணம், அனைத்து எதிர்மறை எண்ணங்களையும் அழித்து நேர்மறை குணங்களை வளர்க்கும் பண்புகளும், நற்குணங்களும் இம்மூவரிடம் இருக்கிறது. அவை இவ்வுலகில் வேரூன்றவே நாம் அவர்களை வணங்குகிறோம்.

சிவன் என்னும் பெரும் சக்தியை இம்மூன்று சக்திகளின் அருள் இருந்தால் மட்டுமே உணர முடியும் என்று கூறப்படுகிறது. அதனால்தான், தேவி என்று அழைக்கப்படும் மகா சக்தியை மக்கள் அவரது பல்வேறு வெளிப்பாடுகளில் வணங்குகிறார்கள். ஆன்மீக முன்னேற்றத்தின் வெவ்வேறு கட்டங்கள் நவராத்திரி கொண்டாட்டங்களில் பிரதிபலிக்கின்றன. முதல் மூன்று நாட்கள், துர்க்காவை வழிபடுகிறோம், அவள் சக்தியின் அம்சம் ஆவாள், இது நம் மனதில் தோன்றும் எதிர்மறை எண்ணங்களை அழித்து நமது புலன்களைக் கட்டுப்படுத்த முயற்சிக்கும் செயல்முறைக்கு ஒத்ததாகும், எனவே புராணங்களில் உள்ள கதைகளில் தேவியை துர்க்கா வடிவத்தில் போரை நடத்துவதையும் அசுரர்களை அழிப்பதையும் அடையாளமாகச் சித்தரிக்கின்றனர்.

நம் முற்பிறவி கர்மாக்கள் நம்மை பின் தொடரும், அந்த கர்மாக்கள் நமக்கு நன்மையும் கொடுக்கும், தீமையையும் கொடுக்கும். இது அவரவர் வினைகளை பொறுத்தது. எனவே, நாம் அவற்றை நேர்மறையான குணங்களுடன் மாற்ற வேண்டும். பகவத் கீதையில் இந்த குணங்களை டைவிசம்பத் என்று குறிப்பிடுகிறார்கள், அதாவது "தெய்வீக செல்வம்". என்று கூறுவார்கள். நம் வாழ்க்கையில் தைரியம் எவ்வளவு முக்கியமோ அதே போன்று தான் செல்வமும். அதற்காக அடுத்த மூன்று நாட்களில் லட்சுமியை நாம் வணங்குகிறோம்.

லட்சுமி என்பது மொத்த செல்வம், மற்றும் செழிப்பின் அடையாளம் ஆவாள். நவராத்திரியின் கடைசி மூன்று நாட்கள் அறிவின் உருவமான சரஸ்வதியை வணங்குவதற்காக அர்ப்பணிக்கப்படுகிறது. அவள் ஒரு சுத்தமான வெள்ளை புடவை அணிந்திருப்பதாக சித்தரிக்கப்படுகிறாள், இது உச்ச சத்தியத்தின் வெளிச்சத்தை குறிக்கிறது.

பத்தாவது நாள் விஜயதசமி திருவிழா கொண்டாடப் படுகிறது. இது வெற்றியின் அடையாளமான திருவிழாவாகும்.

ஆகவே, வழிபாட்டின் ஒவ்வொரு கட்டத்தின் முக்கியத்துவமும் தெளிவான விளக்கத்தை தருகிறது. முதலாவதாக, எதிர்மறை எண்ணங்களை கட்டுப்படுத்த வேண்டும்; இரண்டாவதாக, நல்லொழுக்கங்கள் வேரூன்ற வேண்டும், தேவையான மன தூய்மையைப் பெற்ற பிறகு, மூன்றாவதாக ஆன்மீக அறிவைப் பெற வேண்டும். அப்போதுதான் சாதக (ஆன்மீக ஆர்வலர்) ஆன்மீக வெளிச்சத்தை அடைவர்.

துறவறம் மேற்கொள்ள வேண்டும் என்று எண்ணுபவர்களுக்கு விஜய தசமி தினம் ஒரு புனித தினமாகக் கருதப்படுவது குறிப்பிடத்தக்கது. மேம்பட்ட ஆன்மீக ஆர்வலர்கள் இந்த நாளில் சன்னியாசத்தை (துறவறத்தின் சபதம்) தொடங்குகிறார்கள்.

**நவராத்திரி வழிபாடு தரும் பலன்கள்**

நவராத்திரி என்பது ஆன்மீக ஆர்வலர்களுக்கு மட்டுமல்ல; இது சாதாரண மனிதர்கள் தங்கள் வாழ்க்கையை மேற்கொள்ளுவதற்கான பாடத்தைக் கற்பிக்கிறது. ஒரு மனிதன் வாழ்வின் தடைகளை தாண்டி வெற்றி பெற தைரியத்தின் அடையாளமான துர்கையை வழிபட வேண்டும். அதே போன்று வாழ்வில் அமைதியையும் செழிப்பையும் பெற லட்சுமியை பிரார்த்தனைச் செய்ய வேண்டும்.

மேலும் அறிவைப் பெறுவதற்காக சரஸ்வதியை வணங்க வேண்டும். இந்த மூன்றும் ஒரு முழுமையான உலக வாழ்க்கைக்கு அவசியமானவை.

உண்மையில், நாம் இவ்வாறு வணங்கும் போது நமக்குள் இருக்கும் சக்தி தூண்டப்படுகிறது.

துர்க்கா, லட்சுமி மற்றும் சரஸ்வதி வெவ்வேறு தெய்வங்கள் அல்ல, அவர்கள் ஒருமை தெய்வீகத்தின் வெவ்வேறு அம்சங்களாக திகழ்பவர்கள்.

நவராத்திரியுடன் தொடர்புடைய சில ஆன்மீக நடைமுறைகள் இருக்கிறது. அதாவது விரதம் இருத்தல், அம்மனுக்குரிய பாடல்களை பாடுதல், ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம் கூறுதல் போன்றவை இதில் அடங்கும். ஒன்பதாம் நாள் ஆயுத பூஜை நாள் என்று கூறுவார்கள். அயூத பூஜை என்பது ஒருவரின் வாழ்வாதாரத்திற்காக ஒருவர் பயன்படுத்தக்கூடிய கருவிகளை வழிபடுவது தான் ஆயுத பூஜையின் சிறப்பு.

அனைவரும் இந்நாளில் தங்கள் கருவிகளை தெய்வத்தின் பலிபீடத்தின் முன் வைத்து வணங்குவர். இந்தியாவில் ஒவ்வொரு நாளும் ஒருவரது வேலையைத் தொடங்குவதற்கு முன்பு தான் பயன்படுத்தும் கருவிகளுக்கு முன்பாக சிரம் பணிந்து தொடங்குவது வழக்கம். இது ஒருவரின் கடமைகளை நிறைவேற்ற உதவியதற்காக கடவுளுக்கு நன்றி தெரிவிப்பதாகும்.

குழந்தைகள் இந்நாளில் தங்கள் பாடப் புத்தகங்களையும் எழுதும் கருவிகளையும் பலிபீடத்தின் மீது வைத்து வணங்குவார்கள். இந்த நாளில், எந்த வேலையும் படிப்பும் செய்யப்படுவதில்லை.

பத்தாம் நாள் விஜய தசமி என்று அழைக்கப்படுகிறது. சரஸ்வதியின் ஆசீர்வாதங்களைப் பெற பக்தர்கள் சரஸ்வதி பூஜை (வித்யாரம்பம்) செய்கிறார்கள். மஹிஷாசுரன் என்ற அரக்கனை வென்றதற்காக சில பக்தர்கள் துர்காவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பூஜைகளையும் செய்கிறார்கள்.

வித்யாரம்பம் என்பது அறிவாற்றலை பெறுவதற்கு தொடங்கும் நாளாகும் மற்றும் சிறு குழந்தைகள் கல்வி கற்க இந்நாளில் தான் ஆரம்பிப்பார்கள். நாம் எப்போதும் ஒரு தொடக்க மனப்பான்மையைக் கொண்டிருக்க வேண்டும்."என்பதற்காக இந்நாளைக் கொண்டாடுகிறோம்.

தபேலா, ஹார்மோனியம், வீணை, வயலின் போன்ற இசை கருவிகளைப் பற்றிய முதல் பாடங்களைத் தொடங்க இது ஒரு நல்ல நாள். மற்றொரு மட்டத்தில், ராமாயணத்தால் தெளிவுபடுத்தப்பட்ட கொள்கைகளையும் நவராத்திரி எடுத்துக்காட்டுகிறது. இந்தியாவில் விஜயதசமியை, தசரா என்று அழைப்பார்கள்.

**அ.கனகசூரியர்**

# மகா சித்தர் சற்குரு சீரடிசாயியின் மகா சமாதி



இன்று இவ்வுலகில், ஒரு மகா சக்தியாக, சீரடி சாயி பாபா, சமாதிநிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அதற்கு எடுத்துக்காட்டு, உலகில் பல சீரடி ஆலயங்களின் வளர்ச்சி, கட்டுக்கடங்காத பக்தர்களின் எண்ணிக்கை. இன்றைய காலகட்டத்தில் பக்தர்களின் சுமைகளை ஏற்று, மனதிருப்தியை அளிப்பதும், கைகூடாத, நினைத்துப் பார்க்க முடியாத காரியங்களை நிவர்த்தி செய்வதும், அத்துடன் பக்தர்களின் கனவில் வந்து அறிகுறிகளை வெளிப்படுத்துவதும், பக்தர்களின் தியானத்தில் காட்சியளிப்பதும். வேறு ஒருவரின் தோற்றத்தில் வந்து உதவிபுரிவதும். திடீர் என்று தனது தோற்றத்தை ஏதோ ஒரு வழியில் தெரிவிப்பதுமாக இருக்கிறது.

"சர்வம் விஷ்ணுமயம் ஜகத்" என்பது வேதாந்தத்தின் மையக் கோட்பாடு. அதுவே எங்கும் நிறை தன்மை எனலாம். சீரடி சாயிபாபா இந்த கொள்கைப் படி வாழ்ந்தார். அவர் எல்லா உயிர்களிடத்திலும் தன்னைக் கண்டார். ஜாதி, மதம், இனம் என்பது மனிதனால் ஏற்படுத்தப்பட்டது. இதை அவரிடத்தில் எடுத்துச்செல்ல முடியாது. அவரே தனது ஜாதியையும், மதத்தையும் வெளிப்படுத்தியதும் கிடையாது.

அக்டோபர் 5ம் திகதி, புதன் கிழமை, சீரடி சாயி நாதரின் மகா சமாதி தினம். அன்றைய புண்ணிய திதியில், விஜயதசமி நாளில் கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள, சீரடி சாயி மத்திய நிலையம் (ஸ்ரீலங்கா) ஏற்பாட்டில், வருடாவருடம் இடம் பெறும். "மகா விஷ்ணு யாகம்" காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. சீரடி சாயி பாபா மகா விஷ்ணுவின் அவதாரம். ஸ்ரீ தத்தாத்ரேயரின் வழி வந்த சத்குரு, வெங்குசாவை (வெங்கடாஜலபதியை) குருவாகக் கொண்டவர் என்பதால், இந்த யாகம் இடம் பெறுகிறது.

அத்துடன் அதிகாலை 5 மணிக்கு புண்ணிய நீராடலுடன், நான்கு கால ஆராத்தியும். பக்தர்களினால் பால் அபிஷேகமும், சீரடி சாயி பஜன் பூஜைகளுடன் மதிய அன்னதானம் பிரசாதமாக வழங்கப்படவுள்ளது. அன்று மாலை சித்திரத்தேர் பவனியும் இடம்பெறும். பாபாவைப் பல்லக்கில் சுமப்பதுதான் மரபு. இது ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் மாலையில் இடம்பெறுவதுண்டு. ஆனால் சித்திரத்தேரில், வருடத்தில் ஒரு தடவை கோவிலைச் சுற்றி உலா வருவது சாயி நிலையத்தின் சிறப்பு. உலகில் எங்கும் இடம்பெறாத ஒரு பவனி இது.

**எஸ்.என்.உதயநாயகம்,**
சீரடி சாயி பாபா மத்திய நிலையம்

# இருபத்தைந்து வருட காலமாக 'ஆன்லைனில் நற்செய்தி!'

"JW.ORG" கடந்த 25 ஆண்டுகளாக இன்டர்நெட்டில் வலம் வரும் பிரபலமான வெப்சைட்டாகும்! ஜனவரி 15, 1997ல் இந்த வெப்சைட், ஆரம்பிக்கப்பட்ட போது WATCHTOWER.ORG என்று அழைக்கப்பட்டது. 'ஆன்லைனில் நற்செய்தியை' அறிவிப்பதே இந்த வெப்சைட்டின் நோக்கம். அன்று முதல், இந்த வெப்சைட்டில் இருந்து பல வகையான துண்டுப்பிரதிகளை, சிறு புத்தகங்களை, காவற்கோபுர மற்றும் விழித்தெழு! கட்டுரைகளை யார் வேண்டுமென்றாலும் டவுன்லோட் செய்துகொள்ள முடிந்தது.

1999ல் JWMEDIA என்ற ஒரு புதிய வெப்சைட் அறிமுகம் செய்யப்பட்டது. இந்த வெப்சைட் ஊடகங்களுக்கு யெகோவாவின் சாட்சிகளை பற்றிய துல்லியமான தகவல்களை வழங்கியது. யெகோவாவின் சாட்சிகளுக்கு கிடைத்த சட்டரீதியான அங்கீகாரங்கள் மற்றும் சாட்சிகளால் நடத்தப்பட்ட விசேஷ நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்கள் இதில் வெளியிடப்பட்டது. 2005ல் JW.ORG என்ற புதியதொரு வெப்சைட் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த வெப்சைட்டில் இருந்து அனைவரும் ஒரு சில பிரசுரங்களையும்,ஆடியோ/வீடியோ பதிவுகளையும் டவுன்லோட் செய்துகொள்ள முடிந்தது. 2012ல் இந்த மூன்று வெப்சைட்களும், JW.ORG என்ற ஒரே பெயரில் ஒன்றிணைக்கப்பட்டன.



அன்று முதல், JW.ORGயில் உள்ள ஆயிரக்கணக்கான பிரசுரங்கள், ஆடியோ பதிவுகள் மற்றும் வீடியோக்கள் உலகின் எட்டுத்திக்கிலும் உள்ளவர்களை சென்றெட்டியிருக்கிறது. ஆரம்பத்தில், 411 மொழிகளில் மட்டுமே பிரசுரங்களை டவுன்லோட் செய்துகொள்ள முடிந்தது.

கொவிட்19 பரவ தொடங்கியபோது JW.ORGயின் தேவை இன்னும் அதிகரித்தது. யெகோவாவின் சாட்சிகள் வணக்கத்திற்காக ஒன்றுகூடும் இடங்கள் தொற்று நோய் அபாயம் காரணமாக மூடப்பட்டதால், பிரசுரங்களை அச்சடிப்பதும் விநியோகிப்பதும் மிகவும் சவாலாக ஆனது.

அதனால் பலர் இந்த பிரசுரங்களை பெற்றுக்கொள்ள JW.ORG வெப்சைட்டை பயன்படுத்த ஆரம்பித்தார்கள்.

நாளுக்கு நாள் வெப்சைட்டை பார்வையிடும் நபர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க தொடங்கியது.

# சீனன்கோட்டை அல் ஸலாஹ் பெண்கள் ஹிப்ழ் பிரிவு இன்று ஆரம்பம்




பேருவளை சீனன் கோட்டை அல் ஸலாஹ் அரபுக் கல்லூரி நிர்வாகத்தின் கீழ் பாடசாலை சென்று வரும் பெண் பிள்ளைகளுக்கான பகுதி நேர அல்குர்ஆன் மனன வகுப்புகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மாவத்தையிலுள்ள அல் ஸலாஹ் பெண்கள் மத்ரஸாவில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படும்.

ஸலாஹ் அரபுக் கல்லூரியின் நிர்வாக சபைத்தலைவர் எம்.எஸ். எம். ரஸ்வி தலைமையில் நடைபெறவுள்ள ஆரம்ப நிகழ்வில் சீனன் கோட்டை பள்ளிச் சங்கத் தலைவர் முக்தார் உட்பட பள்ளிச்சங்க உறுப்பினர்கள், உலமாக்கள், முக்கிய ஊர் பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கின்றனர்.

ஆரம்ப நிகழ்வாக மேற்படி பெண்கள் மத்ரஸா ஆரம்பிக்கப்பட வேண்டியதன் தேவை தொடர்பில் நீண்டகாலமாக ஆர்வமாகவும் ஆலோசித்தும் வந்த சீனன்கோட்டை மூத்த பெண்கள் அமைப்பைச் சேர்ந்த பரோபகாரிகளின் முன்னிலையில் மத்ரஸாவில் புதிதாக இணையவுள்ள பெண் பிள்ளைகளின் அல்குர்ஆன் பாராயணம் நடைபெற்று வைபவ ரீதியாக நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்படும் என மத்ரஸா அதிபர் தெரிவித்தார்.







'படித்ததும் பகர்வதும்' மற்றும் 'இனியவனே என்று பாடிவந்தேன்' ஆகிய இரண்டு தொடர்களும் தவிர்க்க முடியாத காரணகளால் இம்முறை வெளிவரவில்லை என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம். ஆர்




# மனித உரிமைகள் பேரவையின் வரம்பை மீறிய குற்றச்சாட்டுகள்!

## இலங்கை எதிர்ப்புத் தெரிவித்ததற்கான காரணத்தை விளக்குகிறார் அமைச்சர் அலி சப்ரி



**இலங்கையில் பொருளாதாரக் குற்றங்கள் இடம்பெற்றதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் வரம்புக்கு மீறியவை என்பதாலேயே அதனை நாம் எதிர்க்க நேரிட்டது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். ஐ.நா மனித உரிமைப் பேரவையில் இலங்கை நிலைவரம் குறித்து எமது நிறுவனத்துக்கு வழங்கிய பேட்டியில் அவர் பல்வேறு விடயங்களைப் பகிர்ந்து கொண்டார்.**

**கே: ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவான நாடுகள் வெளிப்படுத்திய கருத்துக்கள் எவை?**

பதில்: பொதுவாக, முன்னர் எமக்கு ஆதரவளித்த நாடுகள் இம்முறையும் எமக்கு ஆதரவளிப்பதுடன், பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீண்டெழுந்து வருவதற்கு அவர்கள் அனைவரும் ஆதரவளிக்க விரும்புகின்றனர் என்றே கருதுகின்றோம்.

**கே: இலங்கை தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் வரைவுத் தீர்மானத்தில் முதல் தடவையாக பொருளாதாரக் குற்றங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவை ஐ.நா மனித உரிமை பேரவையின் வரம்புக்குப் புறம்பானவையெனக் கருதுகின்றீர்களா?**

பதில்: ஆம். இது ஐ.நா மனித உரிமை பேரவையின் ஆணைக்கும், நடைமுறைக்கும் அப்பாற்பட்டது என்பதே எமது நிலைப்பாடு. நமக்கான உள்நாட்டுப் பொறிமுறையைக் கண்டறிந்து ஒரு குற்றம் நடந்ததா அல்லது வேறு ஏதேனும் நடந்ததா என்பதை கண்டறிய ஏற்கனவே சிலர் உயர்நீதிமன்றத்துக்குச் சென்றுள்ளனர். இந்த விடயங்கள் அனைத்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் ஒன்றிணைக்கப்பட உள்ளன. எங்களின் கருத்துப்படி அது ஏற்றுக்கொள்ள முடியாதது, அதனால்தான் அதனை எதிர்த்தோம்.

**கே: ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பிரதான நாடுகள் மற்றும் பிறநாடுகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை உறுதியான முன்னேற்றம் கண்டுள்ளதா?**

பதில்: ஆம் நிச்சயமாக. வேறு யாரும் கோருகின்றார்கள் என்பதற்காக அன்றி, நாம் அதனைச் சிறப்பான முறையில் செய்துள்ளோம். பயங்கரவாதத்திற்கு எதிரான போரின் பின்னர், 12,194 புலிகள் சரணடைந்தனர். அவர்கள் அனைவரும் புனர்வாழ்வளிக்கப்பட்டு மீண்டும் ஒருங்கிணைக்கப்பட்டனர்.

அன்றைய காலகட்டத்தில் இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்ட காணிகளில் 94 வீதமானவை மக்களிடம் விடுவிக்கப்பட்டுள்ளன. கடந்த இரண்டு மூன்று வருடங்களில் காணாமல் போனவர்கள் தொடர்பில் ஒரு பிரச்சினை கூட இல்லை என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

துரதிர்ஷ்டவசமாக, இலங்கையில் நடந்தது ஒரு பொருளாதார நெருக்கடி, அது சமூக நெருக்கடிக்கு இட்டுச் சென்று அரசியல் நெருக்கடியில் உச்சக்கட்டத்தை அடைந்தது. சர்வதேச சமூகமும் இதைப் புரிந்து கொள்வது அவசியம் என்று நான் நினைக்கிறேன். இதிலிருந்து இலங்கை மீண்டு வருவதற்கு சமூக ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பு உரிய முறையில் இருக்க வேண்டும் என்பது முக்கியமாகும். அதனை அடைய சட்டம் ஒழுங்கை கடைப்பிடிக்க வேண்டும். அந்த நோக்கத்தில் சட்டம் பயன்படுத்தப்பட வேண்டும். இலங்கை அரசியலமைப்பின் மூலம் கருத்துச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தியுள்ளது. எனவே, அந்த போராட்டங்கள் அமைதியாக இருக்கும் வரை அனைவரும் தங்கள் உரிமையை வெளிப்படுத்தலாம்.

எவ்வாறாயினும், பாரம்பரியமாக ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையில்லாத மறைமுக நிகழ்ச்சி நிரலைக் கொண்ட சில தனிநபர்கள் அதை அபகரிக்க அனுமதிக்க முடியாது. தற்போது அவர்கள் அதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். சமூக ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய கடமை அரசுக்கு உள்ளது. எனவே, அதனை சர்வதேச சமூகத்திற்கு விளக்கினேன்.



**போராட்டங்கள் அமைதியாக இருக்கும் வரை அனைவரும் தங்கள் உரிமையை வெளிப்படுத்தலாம். சமூக ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய கடமை அரசுக்கு உள்ளது. அதனை சர்வதேச சமூகத்திற்கு விளக்கினேன்**

**கே: பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச் செய்து, தேசிய பாதுகாப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதாக அரசாங்கம் உறுதியளித்த போதிலும், மக்கள் இன்னமும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இது இலங்கையின் நிலையை எவ்வாறு பாதிக்கும்?**

பதில்: உண்மையில் பயங்கரவாத தடைச் சட்டம் மார்ச் மாதத்தில் திருத்தப்பட்டது என்பதை நாங்கள் அவர்களுக்கு விளக்கியுள்ளோம். முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸுடன் இணைந்து நான் நீதியமைச்சராக இருந்த போது பயங்கரவாத தடைச்சட்டத்தை திருத்தினோம். இப்போது பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்படுவது நீதிமன்றங்களில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதில் பிணை விதிகளும் உள்ளன.

பயங்கரவாத தடைச்சட்டத்திற்குப் பதிலாக மிகவும் சமநிலையான தேசிய பாதுகாப்புச் சட்டத்தை கொண்டு வருவதற்கு நாங்கள் ஏற்கனவே அமைச்சரவைக்கு சென்றுள்ளோம். அந்த விஷயங்கள் நடைபெறும். ஆனால் இடைப்பட்ட காலத்தில், நாசவேலை, சதி அல்லது நாசவேலைச் செயல்களுக்கான ஆதாரங்கள் இருந்தால், சட்ட அமுலாக்க அதிகாரிகளின் கருத்துப்படி, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட வேண்டும். அந்த பொறிமுறையில் அரசாங்கம் தலையிட வேண்டும் என்று நான் நினைக்கவில்லை.

ஆனால் முன்னோக்கிச் செல்லும் போது, பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலாக, தேசிய பாதுகாப்பு மற்றும் குடிமக்களின் சுதந்திரம் ஆகியவற்றுக்கு இடையே சமநிலையைக் கொண்டிருக்கும் ஒரு சமநிலையான தேசிய பாதுகாப்புச் சட்டத்தை நாங்கள் மாற்றுவோம்.

**கே: ஒக்டோபர் 7ஆம் திகதி நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவை வாக்கெடுப்பில் இலங்கை எவ்வாறான ஆதரவை எதிர்பார்க்கிறது?**

பதில்: நாம் யதார்த்தமாக இருக்க வேண்டும். உலகில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் 47 நாடுகள் மட்டுமே வாக்களிக்க முடியும். எனவே, நீங்கள் அந்த நாடுகளை கவனமாகப் பார்த்தால், நமது நண்பர்கள் சிலர் இப்போது அங்கு இல்லை. மாலைதீவு, பங்களாதேஷ், ரஷ்யா என கடந்த சில சந்தர்ப்பங்களில் எங்களுடன் வாக்களித்த நாடுகள் அங்கு இல்லை, புதியவர்கள் வந்துள்ளனர்.

எனவே, பிரதான குழுவான அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, கனடா போன்ற சக்திவாய்ந்த நாடுகள் வரும் போது, கொஞ்சம் செல்வாக்கு உள்ளது. எங்கள் வாய்ப்புகளைப் பற்றி நாங்கள் யதார்த்தமாக இருக்கிறோம்.

முடிவுகளைப் பொருட்படுத்தாமல், இலங்கைக்கு எதிரான ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையானது இலங்கையின் சட்டக் கட்டமைப்பிற்கு அப்பாற்பட்டது என்பதாலும், அதில் எங்களால் உடன்பட முடியாது என்பதாலும், எம்மீது சுமத்தப்படும் ஒன்றை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர்களிடம் கூறுவோம்.

**“ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையில்லாத மறைமுக நிகழ்ச்சி நிரலைக் கொண்ட சில தனிநபர்கள் ஜனநாயகத்தை அபகரிக்க முற்படுகின்றனர். அதனை அனுமதிக்க முடியாது!”**

**கே: இந்த ஐ.நா மனித உரிமைகள் பேரவை அமர்வில் இலங்கை அரசியல்வாதிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள் மீது தடைகள் விதிக்கப்பட வாய்ப்பு உள்ளதா?**

பதில்: இல்லை. அந்தக் கேள்விக்கே இடமில்லை. எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. இலங்கையில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு விசாரணை அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட மீறல்கள் அல்லது குற்றங்கள் இலங்கைக்குள்ளேயே விசாரிக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று நமது அரசியலமைப்பு நேரடியாகக் கூறுகிறது.

**கே: புலி ஆதரவு அமைப்புகள் பலவற்றின் மீதான தடைநீக்கம் புலம்பெயர் குழுக்களாலும் பல மேற்கத்திய நாடுகளாலும் வரவேற்கப்பட்டுள்ளது. இலங்கையில் முதலீடு செய்யுமாறு புலம்பெயர் தமிழ்க் குழுக்களுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். இந்த நடவடிக்கைகள், இலங்கைக்கு உதவுமா?**

பதில்: கண்டிப்பாக... ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் என்ன நடந்தாலும், வெளியில் இருக்கும் இலங்கையர்களை நாம் அணுக வேண்டும், இதுவே எங்களின் பிரச்சினை. எமது நாட்டை கட்டியெழுப்ப அனைத்து இலங்கையர்களும் ஒன்றிணைய வேண்டும். பல்லின, பன்முக கலாசார மற்றும் பல மொழி சமூகம் கொண்ட நாடு இதுவென்பதை நாங்கள் எப்போதும் ஏற்றுக்கொள்கிறோம். நமது அரசியலமைப்புச் சட்டத்தின்படி அனைவருக்கும் சம உரிமை உண்டு. எனவே, அவர்களை அணுகி பேசுவதே முன்னோக்கி செல்லும் வழி. நாம் அவர்களை வெல்ல வேண்டும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து நமது நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டிய நேரம் இது என்று நினைக்கிறேன்.

---




# முன்னைய தவறுகள் மீது குறை கூறுவதால் கிடைக்கப் போகும் நன்மை எதுவுமில்லை!

நாட்டில் பொருளாதாரப் பிரச்சினை உள்ளது. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, வேலைவாய்ப்பின்மை மற்றும் பணவீக்க நிலைமை இலங்கையின் பொருளாதாரத்தில் காணப்படும் சிக்கலான பிரச்சினையை எடுத்துக் காட்டுகின்றன. உயர்ந்தபட்ச அர்ப்பணிப்புடன் செயல்பட்டால் இந்த ஆபத்திலிருந்து விடுபடலாம்.

உற்பத்தியை அதிகரிப்பதோடு ஏற்றுமதிக்கான சந்தர்ப்பங்களைக் கண்டுபிடிக்க வேண்டும். வெளிநாட்டு சொத்துகளை வலுப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம். தற்காலிக பின்னடைவு ஏற்படலாம். சரியான முறையில் அமைதியாக முடிவுகளை எடுத்து பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். 'பதறிய காரியம் சிதறும்' என ஒரு கூற்றும் உண்டு.

சமூகத்தின் நடவடிக்கையைப் பார்க்கும் போது 'அவசரம்' தெரிகிறது. ஆலோசனை வழங்கக் கூடியவர்கள் போதுமான அளவு இருக்கின்றார்கள், வேலை செய்பவர்கள் மிகக் குறைவு. செய்யும் வேலையை விமர்சனம் செய்பவர்களே அதிகம்.

அதிகாரத்தைக் கைப்பற்றவும் அதன் பின்னர் நாட்டை மேம்படுத்தவும் அரசியல் கட்சிகள் போராடி வருகின்றன. குறைந்தளவு நிதியைக் கொண்ட, உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ள எமது நாட்டை வளர்ச்சியடையச் செய்ய மந்திரவித்தை கிடையாது என்பதை அதிகாரத்தை பெற்ற பின்னரே அரசியல்வாதிகள் புரிந்து கொள்கிறார்கள். அனைவரும் இணைந்து நாட்டை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்று மக்களை மகிழ்ச்சியான இடத்திற்கு கொண்டு சென்ற பின்னரே அதிகாரத்துக்காக போராட வேண்டும் என்பதை ஏன் அவர்கள் புரிந்து கொள்வதில்லை?

பொருளாதாரத்தை மீண்டும் உருவாக்கும் முயற்சியை ஒருபுறம் வைத்துவிட்டு உரிமைகளை நோக்கமாகக் கொண்டு போராட்டத்தை மீண்டும் கூர்தீட்டி வருகிறார்கள். ஜனநாயகம் முக்கியம். கருத்துகளைக் கூறுவதற்கான உரிமையை உறுதி செய்ய வேண்டும். அமைதியான எதிர்ப்புகள் மூலம் மக்களின் எரியும் பிரச்சினையை ஆட்சியாளர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லும் உரிமையை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் அவ்வாறான ஜனநாயக நடைமுறைகளுக்காக முறையான கட்டமைப்பொன்று அவசியம்.

ஜனநாயகத்தால் மாத்திரம் வாழ்க்கை இல்லை. நல்ல வருமானம் சிறந்த வாழ்க்கை முறையை அமைக்க அவசியமாகவுள்ளது. பழைய தவறுகள் மீது குறை கூறுவதால் எதுவித நன்மையும் நடைபெறாது. அனுபவங்களை கற்பதென்றால் இலங்கையைப் போன்ற அனுபவமுள்ள நாடு உலகில் வேறு எங்கும் இல்லை. மோதல்களால், பயங்கரவாதத்தால், மத மற்றும் அரசியல் அடிப்படைவாதத்தால் பாதிக்கப்பட்ட நாடு இலங்கை. மிகவும் குறுகிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இன, மத, அரசியல், வர்க்கம் மற்றும் குலம் என நாடு பிரிந்துள்ளது. இந்தப் பிரிவே நாட்டை அழிவுப்பாதையை நோக்கி கொண்டு சென்றுள்ளது. சுதந்திரம் பெற்ற பின்னர் ஒரு விடயத்திலாவது இணங்காத நாம் அனைவரும் இணைந்து நாட்டை வளர்ச்சிப் பாதையில் இட்டு செல்வது எவ்வாறு?

துர்ப்பாக்கிய நிலைமைக்கு முகம் கொடுத்துள்ள இளைஞர்கள் பெருமளவில் நாட்டை விட்டு செல்வதாகக் கூறப்படுகின்றது. இந்த பிரச்சினையான சமூகத்திலிருந்து விடுபட்டு அமைதியான சமூகத்தில் நிம்மதியாக வாழ அவர்கள் கனவு காண்பது இயல்பு. அந்நாடுகள் நீண்ட காலம் அர்ப்பணிப்புடன் செயலாற்றி அதன் பின்னரே தற்போதைய வளர்ச்சியான நிலைமைக்கு வந்துள்ளன. அபிவிருத்திப் பயணம் ஒருபோதும் இலகுவானதல்ல. பிள்ளைகளுக்கு சமாதானத்துடன், மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வதற்கு தேவையான பின்னணியை உருவாக்க வேண்டியது எமது பொறுப்பாகும். பொருளாதாரத்தை மேம்படுத்தும் உண்மையான போராட்டம்ஒற்றுமை இல்லாமல் வெற்றி ஏற்படாது.

கடந்த இரு வருடங்களாக பொருளாதாரம் பின்னோக்கிப் பயணித்துள்ளது.தேசிய வருமானம் நாட்டின் தேவைக்குப் போதுமானதல்ல. அபிவிருத்திக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட கடனை மீளச்செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. யதார்த்தத்தை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இந்தத் தீர்மானம் மிக்க சந்தர்ப்பத்தில் சமூக ஒருமைப்பாடு அவசியம். வாதப்பிரதிவாதங்கள் மிகவும் மோசமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

# ஜனாதிபதி ரணில் நாடு திரும்பினார்

ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது குழுவினர் நேற்று முந்தினமிரவு நாடு திரும்பினர்.

சிங்கப்பூர் எயார்லைன்ஸ் விமானம் மூலம் நேற்று முன்தினமிரவு 11.35 மணியளவில் ஜனாதிபதியும் தூதுக்குழுவினரும் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.



உடப்பு, ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலய தேசிய பாடசாலையின் வாணி விழாவை முன்னிட்டு மாணவர்களுக்கிடையிலான கோலப் போட்டி நேற்று சனிக்கிழமை (1) நடைபெற்றது. போட்டியில் பல மாணவர்கள் கலந்து கொண்டனர். (படம்: உடப்பு குறூப் நிருபர்)

# பாலர் பாடசாலைகளில் இலவச காலை உணவு

## அனைத்து மாணவருக்கும் ஏற்பாடு – கீதா குமாரசிங்க



பாலர் பாடசாலை மாணவர்களுக்கு காலைநேர உணவு வழங்கும் வேலைத் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக சிறுவர் மற்றும் பெண்கள் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதமாகும்போது நாட்டிலிருக்கும் அனைத்து பாலர் பாடசாலை மாணவர்களுக்கும் காலை உணவு இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

சிறுவர்களின் போஷாக்கின்மை அதிகரித்து வருவதால் அதனை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கை தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

காலை நேர இலவச உணவு வேலைத்திட்டத்தை தொடர்ந்து மேற்கொள்வதற்கான திட்டத்தை தயாரித்திருக்கின்றோம். ஏனெனில் தாய்ப்பாலுக்கு பின்னர் குழந்தைகள் பாலர் பாடசாலைக்கு செல்ல ஆரம்பிக்கின்றனர். இதன்போது அவர்களுக்கு போஷாக்கு கிடைக்க வேண்டும்.

அத்துடன் பிள்ளைகளின் ஆரம்பம் தாயின் கருவறையாகும். அதனால் கர்ப்பிணித் தாய்மாருக்கு போஷாக்குணவுக்காக 10 மாதங்களுக்கு 20ஆயிரம் ரூபா பணம் வழங்கப்படுகின்றது.

அந்த தொகைக்கு மேலும் 250ரூபா சேர்த்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். குழந்தைகள் போஷாக்கு குறைபாடு இல்லாத குழந்தைகளாக பிறப்பதற்கு தாய் கர்ப்ப காலத்தில் போஷாக்கான உணவு எடுத்துக்கொள்ள வேண்டும். அதனாலேயே கர்ப்பிணித் தாய்மாருக்கு போஷாக்கு பொதி வழங்கும் நடவடிக்கையை ஆரம்பித்திருக்கின்றோமென்றார்.

# அம்பாறை விசேட நிருபரின் தாயார் காலமானார்

தினகரன் பத்திரிகையின் அம்பாறை விசேட நிருபரான இறக்காமம் இஸ்மாயில் ஹுஸைன்தீனின் தாயார் மீராலெவ்வை ஹஸினா உம்மா நேற்றுமுன்தினம் காலமானார்.

அன்னாரின் ஜனாஸா நல்லடக்கம் இறக்காமம் பெரிய ஜும்மா ஆப் பள்ளிவாசல் மையவாடியில் நடைபெற்றது.

## மட்டு. இராமகிருஷ்ண மிஷனுக்கு...

நவராத்திரி விசேட பூஜையில் கலந்து கொண்டதுடன் அருள்மிகு துர்க்கா தேவிக்கு புஷ்பாஞ்சலி செலுத்தினார்.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பணிகளை அவர் கேட்டறிந்து புகழாரம் சூட்டியதுடன் பாராட்டி நன்றியும் தெரிவித்தார்.

## பெரும்போகத்துக்குத் தேவையான...

அமைச்சர் மொஹான் பிரிய தர்ஷன டி சில்வா ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், பெரும்போகத்தில் நெற்செய்கை மற்றும் ஏனைய விவசாய பயிர்ச் செய்கைக்குத் தேவையான சேதன மற்றும் இரசாயன உரங்களை வழங்குவது தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதற்கமைய, விவசாயிகள் எவ்வித சந்தேகமுமின்றி அடுத்த பெரும்போகத்தில் பயிர்ச் செய்கையை ஆரம்பிக்க முடியுமென விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

## அரசியலமைப்பின் 22 ஆவது...

சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான விவாதத்தை 06 மற்றும் 07ஆம் திகதிகளில் நடத்துவதற்கு கட்சித் தலைவர்கள் இணக்கம் தெரிவித்தனர். பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பான தெரிவுக்குழு கூட்டத்திலேயே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அதேவேளை இம்முறை பாராளுமன்ற அமர்வுகள் 03ஆம் திகதி முதல் 07 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. அத்துடன் 03ஆம்திகதி திங்கட்கிழமை வாய்மூல விடைக்கான வினாக்களுக்காக ஒதுக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## வீடொன்றில் எரிந்த நிலையில்...

நெடியகாடு, ஏஜிஏ ஒழுங்கையைச் சேர்ந்த சரவணபவா ரஞ்சித்குமார் (வயது 30) அவரது மனைவி கிருசாந்தினி (வயது 26) என்ற இருவருமே நேற்று வீட்டுக்குள்ளிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

தம்பதிகளின் படுக்கையறைக்குள் நேற்று அதிகாலை 04 மணியளவில் தீ பற்றி எரிவதைக் கண்ட வீட்டிலிருந்தவர் அறையை உடைத்து உள்நுழைந்த போது இருவரும் தீயில் எரிந்து சடலமாகக் காணப்பட்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

தீ ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லையென்பதுடன் வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## நாடளாவிய ரீதியில்...

அச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, அரச ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதை 60 ஆக மட்டுப்படுத்தியுள்ளதையடுத்து, பெருமளவிலான அதிபர்களும் இவ்வருடம் ஓய்வுபெறவுள்ளதாக இலங்கை அதிபர் சேவைகள் சங்கத்தின் தலைவர் சுனில் பிரேமதிலக்க தெரிவித்துள்ளார்.

## போராட்ட களத்தை வழிநடத்திய...

அவ்வாறானதொரு யோசனை அரசாங்க தரப்பிலிருந்து முன்வைக்கப்படவில்லை. போராட்டக்களத்துடன் தொடர்புடைய அப்பாவி இளைஞர்களும் இருக்கிறார்களென்பதை நாம் உணர வேண்டும். அவர்களை சிறையிலடைத்து, தடுத்து வைத்து குறைந்தபட்சம் வேலையொன்றையேனும் பெற்றுக்கொள்ள முடியாதவாறான சூழலை ஏற்படுத்துவது பிழையான விடயமாகும். எனது மனைவியின் வீட்டுக்கும் தீ வைத்தனர். எனது வீட்டுக்கும் தீவைத்தனர். இதனை வழிநடத்திய வர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும். எனினும், வழிநடத்தியவர்கள் வெளியில் சுதந்திரமாக இருக்கும்போது, அதற்கு ஆதரவு வழங்கிய இளைஞர்களை கைது செய்து சிறையில் அடைப்பதும் தடுத்து வைப்பதும் பயனற்றது. வழிநடத்தியவர்களை கைது செய்ய வேண்டும். போராட்டத்துக்கு ஆதரவு வழங்கியவர்களை ஏதேனுமொரு வேலைத்திட்டத்தின் மூலம் சமூயமயப்படுத்த வேண்டுமென்றார்.

## சஹ்ரானின் மனைவி ...

வழக்கின் வாதி தரப்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுகர்ஸி ஹேரத்துடன் அரச தரப்பு சட்டத்தரணி மாதினி விக்கினேஸ்வரனும் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

நேற்றைய முன் விளக்க மாநாட்டின் போது, வழக்கின் வாதி தரப்பினலால் முன்மொழியப்பட்ட ஏற்புகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

சாய்ந்தமருது, வெளிவேரியன் கிராமத்தில் குண்டுத்தாக்குதல் இடம்பெற்றதையும், இதில் சஹ்ரானின் மகன் இறந்ததையும் சஹ்ரானின் மகள் காயமடைந்ததையும் சஹ்ரானின் மனைவி காயமடைந்து அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டதையும் பிரதிவாதி தரப்பு சட்டத்தரணி ஏற்றுக் கொண்டதாக சட்டத்தரணி மாதினி விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன், சந்தேகநபரின் வாக்குமூலங்கள் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளமையை ஏற்றுக்கொள்வதாகவும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினருக்கு வழங்கப்பட்ட வாக்குமூலங்கள் அச்சுறுத்தல், வாக்குறுதி அல்லது வேறு ஏதேனும் எதிர்பார்ப்புகளின் நிமித்தம் வழங்கப்பட்டதாகவும் அந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் சுயவிருப்பின் பேரில் வழங்கப்படவில்லையெனவும் இவை குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களின் சுயாதீன தன்மையை

கேள்விக்குட்படுத்துவதாகவும் பிரதிவாதி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரை பிணையில் விடுவிக்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் வாதி தரப்புக்கு தமது ஆட்சேபனைகளை எழுத்து மூலமாக சமர்பிப்பதற்கு தவணை கோரப்பட்டுள்ளது.

இதனையடுத்து, மேலதிக முன் விளக்க மாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் 18 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

## பாடசாலை மாணவர்களிடம்...

ஹற்றன், கொட்டகலை போகஹவத்த பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் ஆசிரியர் பாராட்டு விழாவொன்றை நடத்துவதற்காக 300 ரூபாவை வழங்காத காரணத்தினால் பாடசாலை மாணவியை அதிபர் தும்புத்தடியால் அடித்த சம்பவம் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இச்சம்பவம் தொடர்பில் ஹற்றன் கல்வி வலயம் ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

பாடசாலைகளில் முறையற்ற விதத்தில் பணம் அறவிடப்படுவதைத் தடுக்கும் வகையில் 2015/05 என்ற சுற்றறிக்கை வெளியிடப்பட் டுள்ளதை வலியுறுத்திய கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க , கடுமையான நிதி நெருக்கடிகளுக்கு மத்தியில் பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்விக்காகப் போராடிக் கொண்டிருக்கும் இவ்வாறான சந்தர்ப்பத்தில் இவ்வாறு பணத்தைச் செலவழிக்கும் செயற்பாடுகளை நிறுத்துவது அதிபர்களின் பொறுப்பெனவும் அவர் தெரிவித்தார்.

பாடசாலையில் மாணவர்களிடம் அவசியமற்ற முறையில் பணம் கேட்பார்களாயின் அது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டியது பெற்றோரின் பொறுப்பெனவும் செயலாளர் வலியுறுத்தினார்.

கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், பாடசாலைக்கு சட்ட ரீதியாக செலுத்த வேண்டிய வசதிக்கட்டணத்தைக் கூட உடனடியாக செலுத்துமாறு மாணவ, மாணவியரிடமோ அல்லது பெற்றோரிடமோ அழுத்தத்தை பிரயோகிக்க கூடாது. பெற்றோரால் அந்தத் தொகையைச் செலுத்த முடியாத பட்சத்தில் கிராம சேவகரின் சான்றிதழை சமர்ப்பித்து அதனை செலுத்துவதைத் தவிர்க்க முடியுமெனவும் கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க சுட்டிக்காட்டினார்.

## குழியொன்றுக்குள் இரண்டு...

கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த போது இவர்கள் மரணித்திருக்கலாமென சந்தேகிக்கப்படுவதுடன் அது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வலப்பனை, குருந்துஓய பகுதியில் புதையல் அல்லது மாணிக்கக் கல் அகழ்வு செய்யும் பகுதியென கருதப்படும், குழியொன்றிலிருந்தே 61 வயதான அபேசிங்க பண்டா மற்றும் 30 வயதான ருவன் குமார என்ற இருவரும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இருவரும் நேற்று முன்தினம் வீடு திரும்பாததால் உறவினர்கள் வலப்பனை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து முன்னெடுக்கப்பட்ட தேடுதலின் போதே, இரு சடலங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குழிக்குள்ளிருந்து தண்ணீர் இறைக்கும் மோட்டார் ஒன்றும் குழிக்கு வெளியே ஜெனடேட்டர் உள்ளிட்ட பொருட்களும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## கைதான அதிபருக்கு பிணை தற்காலிக...

இதனையடுத்தே இந்த அதிபர் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொட்டகலை, போகாவத்த பிரதேச பாடசாலையில் தரம் பத்தில் கல்வி பயிலும் மாணவியொருவர், அதிபரின் தாக்குதலுக்கு இலக்காகி காயங்களுடன் கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற பின்னர் மாணவி வீடு திரும்பியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆசிரியர் தின நிகழ்வுக்காக தனது சகோதரன் 300 ரூபாய் செலுத்தவில்லையென தெரிவித்து, அதிபர் மாணவியின் சகோதரனை தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார்.

இதனையடுத்து “சேர் எனது சகோதரனை தகாத வார்த்தைகளால் திட்ட வேண்டாம்” என்றும் தனது தந்தை அருகில் வேலை செய்வதால் அவரிடமிருந்து பணத்தை வாங்கி தருவதாக மாணவி தெரிவித்துள்ளார்.

இதனையடுத்தே அதிபர் மாணவியை தடியால் அமானுஷ்யமாக தாக்கியதாகவும் இதனையடுத்து பாடசாலைக்கருகில் வேலை செய்துக்கொண்டிருந்த மாணவியின் தந்தை, மகளின் அலறல் கேட்டு, பாடசாலைக்கு ஓடி மாணவியைக் காப்பாற்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலுக்கிலக்கான மாணவியுடன் தனக்கு 04 குழந்தைகள் இருப்பதாக தெரிவித்த தந்தை பொருளாதார பிரச்சினையில் தான் இருப்பதுடன், தனது மனைவி வெளிநாட்டிலிருப்பதாகவும் தனது மகள் தாக்கப்பட்டமை தொடர்பில் திம்புள்ள, பத்தனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடையும் செய்துள்ளதாக தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் பாடசாலை அதிபரிடம் வினவிய போது, ஒழுக்கம் விடயமாகவே மாணவியை சிறு தடியொன்றில் தாக்கியதாக அதிபர் தெரிவித்துள்ளார்.

இந் நிலையிலேயே மாணவியின் வாக்குமூலத்தின் பின் அதிபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## காரைநகரில் கைதான 09...

பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனும் குற்றச்சாட்டில் 13 இளைஞர்களை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட 13 இளைஞர்களும் ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். இவ்வழக்கு விசாரணைகளின் போது, 04 இளைஞர்கள் அரச தரப்பு சாட்சிகளாக மாறினர்.

ஏனைய 09 இளைஞர்களுக்கும் எதிராக தொடர்ந்து வழக்கு விசாரணை நடைபெற்றது. நேற்று முன்தினம் (30) வெள்ளிக்கிழமை இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, 09 இளைஞர்களையும் நீதிமன்றம் குற்றவாளியாக கண்டது.

வழக்கின் 07ஆவது குற்றவாளிக்கு, 02 வருட சிறைத்தண்டனை விதித்து அதனை 05 வருட காலத்துக்கு ஒத்திவைத்த நீதவான், மூன்று குற்றங்களுக்கு தலா 1,500 ரூபாய் தண்டம் விதித்ததுடன், 01 இலட்ச ரூபாய் நஷ்ட ஈடு வழங்க உத்தரவிட்டார்.

தண்டப்பணம் கட்டத்தவறின் ஒரு மாத கால சாதாரண சிறைத் தண்டனையும், நஷ்ட ஈட்டை கட்டத்தவறின் 01 வருட சாதாரண சிறைத் தண்டனையும் விதித்தார்.

வழக்கின் 02 ஆம் குற்றவாளிக்கு 02 வருட சிறைத்தண்டனை விதித்து, அதனை 05 ஆண்டுகளுக்கு ஒத்திவைத்த நீதவான், 50 ஆயிரம் ரூபாய் நஷ்ட ஈடு செலுத்துமாறும், இரண்டு குற்றங்களுக்கு தலா 1,500 ரூபாய் அரச செலவாக செலுத்தும் மாறும் நஷ்ட ஈட்டை செலுத்தத் தவறினால் ஒரு வருட சிறைத் தண்டனையும், அரச செலவு பணத்தை கட்டத்தவறின் ஒரு மாத சிறைத் தண்டனையும் விதித்தார்.

வழக்கின் 02 ஆம் மற்றும் 07 ஆம் குற்றவாளிகள் தவிர்ந்த ஏனைய ஏழு குற்றவாளிகளுக்கும், 06 மாத கால சாதாரண சிறைத்தண்டனை விதித்து அதனை 05 வருடங்களுக்கு ஒத்திவைத்த நீதவான், இரண்டு குற்றச்சாட்டுகளுக்கும் தலா 1,500 ரூபாயாக 07 பேருக்கும் தண்டம் விதித்துடன் , 20 ஆயிரம் ரூபாய் நஷ்ட ஈடு வழங்க உத்தரவிட்டார். தண்டப் பணத்தை செலுத்தத் தவறின் ஒரு மாத கால சாதாரண சிறைத் தண்டனையும், நஷ்ட ஈட்டை செலுத்தத் தவறின் 06 மாத கால சிறைத் தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார்.

# எங்கள் கருத்து

## நெருக்கமடைந்து வருகின்ற சர்வதேசத்துடனான நல்லுறவு!

புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவானதையடுத்து, சர்வதேசத்துடனான இலங்கையின் நல்லுறவு தற்போது நெருக்கமடைந்து வருகின்றதென்பது தெளிவாகத் தெரிகின்றது. அதேசமயம் சர்வதேசத்தின் ஆதரவின்றி எமது நாடு ஒருபோதுமே முன்னைய நிலைமைக்கு மீண்டெழ முடியாதென்ற யதார்த்தமும் புரிகின்றது.

இலங்கையில் கொவிட் நெருக்கடி தீவிரமடைந்த வேளையிலும், அதன் பின்னர் பொருளாதார நெருக்கடி தலைதூக்கிய சமயத்திலும் வெளிநாடுகளின் உதவிகளுக்காக எமது நாடு ஏங்க வேண்டியிருந்தது. எமது அயல்தேசமான இந்தியா விரைந்து வந்து கைகொடுத்து உதவியமை ஒருபுறமிருந்தாலும், பொருளாதார வீழ்ச்சிக்குக் கைகொடுக்க தூரநாடுகளின் பொருளாதார உதவிகள் போதுமானளவு கிடைக்கவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் கிடைப்பதிலும் நிச்சயமற்ற தன்மையே நிலவியது.

ஆனால் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னரே இலங்கைக்கு சர்வதேச உதவிகள் சாத்தியமாவதற்கான வாய்ப்பு உருவாகியது. வெளிநாடுகளுடனான இராஜதந்திர உறவைக் கையாளுவதிலும், நட்புறவை வளர்ப்பதிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடைப்பிடிக்கின்ற திறமையான அணுகுமுறைகளே தற்போது உதவிகள் பெருகுவதற்கான காரணமென்பதில் ஐயமில்லை.

எமக்கு நாமே கடினமான எல்லைவேலிகளை வகுத்துக் கொண்டபடி உலகில் தனியாக வாழ்ந்து விட முடியாது. சர்வதேசத்துடன் நல்லிணக்கத்தைப் பேணியவாறு சென்றால் மாத்திரமே நாட்டை முன்கொண்டு செல்ல இயலும். அதற்கு சர்வதேசத்துடனான இராஜதந்திர அணுகுமுறைகளே முதலில் அவசியம். தற்கால நடைமுறைகளுக்கு ஒவ்வாத வெற்றுப்பேச்சுகளால் விளையப் போகின்ற நன்மைகள் எதுவுமேயில்லை.

கடந்தகால விரிசல்களை நீக்கி, சர்வதேசத்துடன் இசைந்து செல்லும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அணுகுமுறைகள் அமைந்திருப்பதாக அவதானிகள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். வீழ்ச்சியடைந்து போன தேசத்தை மீளக்கட்டியெழுப்புவதாயின் அவ்வாறான அணுகுமுறைகளே அவசியமாகின்றன.

## ஒரு மாத காலப் பகுதிக்குள்...

என்பன நம்பிக்கை தரக்கூடியவையாக உள்ளன. அதனடிப்படையிலேயே தாயகத்தில் முதலீடுகளை மேற்கொண்டு நாட்டை மீளக்கட்டியெழுப்ப உதவுவதற்கு எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் வகையில் புலம்பெயர் உறவுகளின் ஒத்துழைப்போடு தாயக உறவுகளுக்கு உதவும் முகமாக பைனஸ் என்ற நிறுவனத்தை ஆரம்பித்து தலைமை தாங்கிவருவதோடு அதற்கான வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்துள்ளேன்.

ஜனாதிபதியின் அழைப்பின் அடிப்படையில் தாயகத்தைக் கட்டியெழுப்ப முதலீடுகளை செய்து உதவுவதில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். இதன் நிமித்தம் புலம்பெயர் முதலீட்டாளர் மார்டின் ஜெயராஜ் உள்ளிட்ட எமது பிரதிநிதிகள் வாழைச்சேனை காகித ஆலையை கடந்த வாரப் பிற்பகுதியில் நேரில் சென்று பார்வையிட்டனர். அதில் முதலீடு செய்வதற்கான எமது விருப்பத்தை நாம் தெரிவித்துள்ளோம். முதலீட்டுக்கான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதும் அடுத்த 10 நாட்களில் 10 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீட்டுடன் வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கத் தயாராக உள்ளோம். இந் நாட்டுக்கு தேவையான காகிதாதிகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வதற்கு தேவையான மூலப்பொருட்களை உள்நாட்டிலேயே பெற்றுக்கொள்ளக்கூடிய வசதி காணப்படுவது எமக்கு பெரும் பக்கபலமாக இருக்கிறது.

அதேநேரம் அடுத்துவரும் 30 நாட்களுக்குள் கிழக்கு மாகாணத்தில் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யவும் நாம் தயாராக இருக்கிறோம். குறிப்பாக சோளப் பயிர்ச் செய்கை உள்ளிட்ட விவசாய துறைகளில் முதலீடு செய்ய எதிர்பார்த்துள்ளோம். அதனூடாக திரிபோஷா சத்துணவு, கோழித் தீவனம், மாட்டுத் தீவனம் உள்ளிட்ட கால்நடை தீவனங்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்ள முடியும். அதன் பயனாக இவற்றின் இறக்குமதிக்காக வருடாந்தம் செலவிடப்படும் பெருந்தொகை அந்நியச் செலாவணியை மீதப்படுத்திக் கொள்ளலாமென்றும் பைனஸ் தனியார் நிறுவனத் தலைவர் விக்கினேஷ்வரன் குறிப்பிட்டதாக வாழைச்சேனை மற்றும் எம்பிலிப்பிட்டி கடதாசி தொழிற்சாலைகளின் முன்னாள் தகுதிகாண் அதிகாரி மங்கள செனரத் நேற்று தினகரன் வாமஞ்சரிக்கு தெரிவித்தார்.

இதேவேளை அண்மையில் தாயகத்துக்கு வருகைதந்த பைனஸ் தனியார் நிறுவனப் பிரதிநிதிகள், பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க உதவும் வகையில் மூன்று மில்லியன் ரூபாவை ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் முன்னாள் அமைச்சருமான சாகல ரத்னாயக்காவைச் சந்தித்துக் கையளித்துள்ளனர். தற்போது ஜேர்மன் நாட்டிலிருந்து தாயகம் வந்துள்ள பைனஸ் நிறுவனப் பிரதிநிதியான புலம்பெயர் முதலீட்டாளர் மார்டின் ஜெயராஜ் மற்றும் பி. ஜோன் வசந்தபாலன் உள்ளிட்ட குழுவினர் நிதி மற்றும் வேலைத்திட்டங்களின் மறுசீரமைப்பு தொடர்பான ஜனாதிபதி செயலக சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.டி சமரதுங்கவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளதோடு கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திலகா சுந்தர உள்ளிட்டவர்களையும் சந்தித்துள்ளனர்.

இச்சந்திப்புக்களில் வாழைச்சேனை மற்றும் எம்பிலிப்பிட்டி கடதாசி தொழிற்சாலைகளின் முன்னாள் தகுதிகாண் அதிகாரி மங்கள செனரத், ரி.என்.எல் தனியார் தொலைக்காட்சி நிறுவனப் பணிப்பாளர் சட்டத்தரணி சுதத் ஜயசுந்தர ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர்.

'இச்சந்திப்புகள் ஆக்கபூர்வமானவையாகவும் நம்பிக்கை தரக்கூடிய வகையிலும் அமைந்திருந்ததாக புலம்பெயர் முதலீட்டாளர் மார்டின் ஜெயராஜ் உள்ளிட்டவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## வரிசை யுகத்தை முடிவுக்கு... (11 ஆம் பக்கத் தொடர்)

**மலையகத்தில் இன்றுவரை பெருந்தோட்ட தொழிலாளர்கள் நாள் வேதனத்துக்கு போராடி வருகின்றனர். இதை பற்றி உங்கள் கருத்து என்ன?**

இந்த நிலைமை முற்றாக மாற்றியமைக்கப்பட வேண்டும். தொழிசங்கங்கள் மக்கள் குறித்து சிந்திக்க வேண்டும். காலம் காலமாக மக்கள் சம்பளத்துக்கு போராடிவருகின்றனர். கூட்டு ஒப்பந்தம் முறை குறித்து பல குற்றச்சாட்டுகள் உள்ளன. முறைமை மாற்றத்தை பலர் வலியுறுத்துகின்றனர். மலையக தொழிற்சங்களுக்கு இடையில் ஒற்றுமையின்மையே இந்த நிலைமைக்கு பிரதான காரணமாக உள்ளது.

கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட இரண்டு வருடங்களை நெருங்கவுள்ளது. இன்னமும் தொழிலாளர்கள் ஆயிரம் ரூபாய்க்குதான் போராடிக்கொண்டிருக்கின்றனர். ஆயிரம் ரூபாவையை முழுமையாக பெற்றுக்கொடுக்க முடியவில்லை. அன்று இருந்த வாழ்க்கைச் செலவுக்கும் இன்றுள்ள வாழ்க்கைச் செலவுக்கும் பாரிய வித்தியாசம் ஏற்பட்டுள்ளது.

எமது மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்றாலும் முதலில் அனைத்து தொழிற்சங்களும் ஒன்றுகூடி கலந்துரையாடி ஒரு பொது இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும். அப்போதுதான் இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வை எட்ட முடியும். கட்டாயம் இந்த கூட்டு ஒப்பந்த நடைமுறையில் பல மாற்றங்களை எடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளேன்.

**உங்கள் அரசியல் பயணம் மீண்டும் பாராளுமன்றம் நோக்கியதா அல்லது இடையில் வரவுள்ள மாகாணசபை அல்லது உள்ளூராட்சி மன்ற தேர்தலை நோக்கியதா?**

பாராளுமன்றம் செல்வதன் ஊடாகவே இரத்தினபுரி மாவட்ட தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க முடியும் என்பதில் உறுதியாக உள்ளேன். பல தசாப்தங்களாக துன்பங்களை எதிர்கொள்ளும் மக்களாக இவர்கள் உள்ளனர். அவர்களது பிரச்சினைகள் நாட்டின் அதி உயர் சபையாகவுள்ள பாராளுமன்றத்தில் ஒலிக்க வேண்டும். அதனை அடுத்த பொதுத் தேர்தலில் நிச்சயமாக இரத்தினபுரி மாவட்ட தமிழ் பேசும் மக்கள் நிறைவேற்றுவார்கள் என்பதை உறுதியாக நம்புகிறேன்.



புலம்பெயர் இலங்கையரை பிரித்தானியாவில் ஜனாதிபதி சந்தித்த போது...

# தாயகத்தில் முதலீடு செய்வதில் புலம்பெயர் இலங்கையர் ஆர்வம்

## யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு பிரதேசங்களில் கூடுதல் கவனம்

இலங்கையானது அந்நிய செலாவணி பற்றாக்குறையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார நெருக்கடிக்கு தற்போது முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இதன் அழுத்தங்களையும் தாக்கங்களையும் நாடும் மக்களும் உணர்ந்த வண்ணமுள்ளனர். குறிப்பாக அந்நியச் செலாவணியை அடிப்படையாகக் கொண்டுள்ள பொருட்களை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பயன்படுத்த வேண்டிய நிலைமை உருவாகியுள்ளதோடு அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட எல்லா பொருட்களது விலைகளும் அதிகரித்துள்ளன.

இந்நிலையில் இப்பொருளாதார நெருக்கடி மக்களுக்கு சுமையாக அமைவதைத் தவிர்க்கும் வகையிலான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்தோடு இந்நெருக்கடியில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்கவும் கட்டியெழுப்பவும் தேவையான நடவடிக்கைகளும் விரிவான அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டும் உள்ளன.

இவ்வாறான சூழலில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிக்க முன்வருமாறு நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் ஏற்கனவே அழைப்பு விடுத்திருக்கின்றார். அத்தோடு புலம்பெயர் இலங்கையருக்கும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். எலிசபெத் மகாராணியின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்ளவென பிரித்தானியாவுக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி, புலம்பெயர் இலங்கையருடன் விசேட சந்திப்பொன்றை நடாத்தியதோடு இலங்கையில் முதலிட முன்வருமாறு அங்கும் கேட்டுக்கொண்டார். புலம்பெயர் இலங்கையருக்கான அலுவலகத்தை ஜனாதிபதி செயலகத்தில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்நாட்டின் இரண்டு மில்லியனுக்கும் மேற்பட்ட குடிமக்கள் புலம் பெயர்ந்தவர்களாக ஐரோப்பா உள்ளிட்ட மேற்குலக நாடுகளில் உள்ளனர். அவர்களில் பலர் நாட்டில் நிலவிய மூன்று தசாப்த கால யுத்த காலத்தில் புலம்பெயர்ந்தவர்களாவர். என்றாலும் புலம்பெயர்ந்துள்ள இலங்கையரில் குறிப்பிடத்தக்களவிலானோர் முதலீட்டாளர்களாவும், வர்த்தகர்களாகவும், தொழில் வல்லுனர்களாகவும், புத்திஜீவிகளாகவும் உள்ளனர்.

இப்பின்புலத்தில் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து தாய்த்திருநாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதற்கு தமது பங்களிப்பையும் ஆதரவையும் நல்கவென புலம்பெயர்ந்துள்ள இலங்கையரில் பலர் விருப்பம் கொண்டுள்ளனர். இதன் நிமித்தம் தம் முதலீடுகளை மேற்கொண்டு நாட்டின் முன்னேற்றத்திற்கு பங்களிக்கவும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர். இதற்கு ஜனாதிபதியின் அழைப்பை புலம்பெயர்ந்த இலங்கையரில் பெரும்பாலானவர்கள் சாதகமாக நோக்கியுள்ளனர். இந்தப் பின்னணியில் புலம்பெயர்ந்துள்ள இலங்கையர் தாயகத்திற்கு வருகைதரவும் ஆரம்பித்துள்ளனர்.



சுவிட்சர்லாந்தை தலைமையகமாகக் கொண்டுள்ள பைனஸ் நிறுவனத்தினால் பொருளாதார நெருக்கடித் தீர்வுக்கு உதவும் வகையில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி ஆளணி பிரதானியுமான சாகல ரட்நாயக்காவிடம் நிதியுதவி கையளிக்கப்படுகையில்...

அந்த வகையில் சுவிட்சர்லாந்து நாட்டைத் தலைமையகமாகக் கொண்டு உலகில் 05 நாடுகளில் பணிகளை முன்னெடுக்கும் பைனஸ் தனியார் நிறுவனத்தின் பிரதிநிதிகள் தற்போது தாயகத்திற்கு வருகை தந்துள்ளனர். இந்நிறுவனத்தின் சார்பில் மூன்று மில்லியன் ரூபா பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள தாயகத்தைக் கட்டியெழுப்ப உதவும் வகையில் கையளிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி ஆளணி பிரதானியுமான சாகல ரட்நாயக்காவிடம் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து இந்நிதி உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் வாழைச்சேனை மற்றும் எம்பிலிப்பிட்டிய கடதாசி தொழிற்சாலைகளின் முன்னாள் தகுதிகாண் அதிகாரி மங்கள செனரத்தும் கலந்து கொண்டிருந்தார்.

**ஜனாதிபதியின் அழைப்புக்கு கிடைத்துள்ள பிரதிபலன்**

இதேவேளை இந்நிறுவனத்தின் சார்பில் இவ்வார முற்பகுதியில் ஜேர்மன் நாட்டில் இருந்து தாயகத்திற்கு வருகை தந்துள்ள புலம்பெயர் முதலீட்டாளர்களில் ஒருவரான மாட்டின் ஜெயராஜ் அடங்கலான குழுவினரும் ஜனாதிபதி செயலக உயரதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளதோடு இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு தம்மாலான பங்களிப்புகளை முதலீடுகளாக மேற்கொள்ளத் தயாராக இருப்பதையும் உறுதி செய்துள்ளனர்.

ஜனாதிபதி செயலக உயரதிகாரிகளுடன் கலந்துரையாடியதைத் தொடர்ந்து கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடாத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் புலம்பெயர் முதலீட்டாளர் மாட்டின் ஜெயராஜ், 'தற்போதைய சூழலில் சந்திப்புகளும் கலந்துரையாடல்களும் ஆக்கபூர்வமாகவும் நம்பிக்கை தரக்கூடிய வகையிலும் அமைந்துள்ளன. அதனால் பொருளாதார ரீதியில் மிகவும் சிரமமான நிலையில் பயணித்துக் கொண்டிருக்கும் எமது தாய்த்திருநாட்டில் ஜனாதிபதியின் அழைப்பினை அடிப்படையாகக் கொண்டு எமது பைனஸ் நிறுவனத்தின் ஊடாக நல்ல பல திட்டங்களை முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம். எனவே புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என அனைவரும் அச்சம் களைந்து இச்சந்தர்ப்பத்தில் தாய்த்திருநாட்டில் முதலீடுகளை மேற்கொண்டு நாட்டைக் கட்டியெழுப்ப முன்வர வேண்டும்' என்று அழைப்பு விடுத்திருக்கிறார்.



**சிவபாதம் விக்னேஷ்வரன்**
நிறைவேற்று அதிகாரி, பைனஸ் நிறுவனம்

இச்செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட பைனஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் பி. ஜோன் வசந்தபாலன், 'எமது நிறுவனத்தின் தலைவரும் நிறைவேற்று அதிகாரியுமான சிவபாதம் விக்னேஷ்வரனின் எண்ணக்கருவுக்கு அமைய இவ்வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவும் அதன் ஊடாக தாய்த்திருநாட்டைத் தன்னிறைவு அடையச் செய்வதற்கும் உதவி ஒத்துழைப்புகளை நல்கவும் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டார். இந்நிறுவனத்தின் மற்றொரு பணிப்பாளரான என்.எம்.எம். சபீஹ்ஹும் இச்செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தார்.

இதேவேளை சுவிட்சர்லாந்து நாட்டை தலைமையகமாகக் கொண்டுள்ள இந்நிறுவனத்தின் தலைவரும் நிறைவேற்று அதிகாரியுமான சிவபாதம் விக்னேஷ்வரன் விஷேட அறிக்கையொன்றை விடுத்து பொருளாதார நெருக்கடியில் இருந்து தாய்நாட்டைக் கட்டியெழுப்ப முன்வருமாறு புலம்பெயர் இலங்கையருக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

அவ்வேண்டுகோளில், 'தற்பொழுது எமது புலம்பெயர் உறவுகளின் ஒத்துழைப்புடன் தாயக உறவுகளுக்கு உதவும் முகமாக பைனஸ் என்ற நிறுவனத்தினை ஆரம்பித்து தலைமை தாங்கி வருகின்றேன். இந்நிறுவனத்தினூடாக இலங்கையில் வாழும் தமிழ் பேசும் வடக்கு, கிழக்கு மக்களின் பொருளாதாரத்தினை கட்டியெழுப்பும் முகமாக சிறு கைதொழில் முயற்சியாளர்களுக்கு நிதிமூலங்களை வழங்கி அவர்களை ஊக்கப்படுத்துவது எமது நிறுவனத்தின் பிரதான நோக்கமாகும்.

தற்பொழுது தாய்த்திருநாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியான சூழலில் எமது புலம்பெயர் உறவுகளின் ஒத்துழைப்பானது மிகவும் அத்தியாவசியமானதாகும். எனவே இந்த இக்கட்டான நிலையில் புலம்பெயர் உறவுகள் எமது பைனஸ் நிறுவனத்தினூடாக தங்கள் முதலீடுகளை தாயக உறவுகளுக்கு வழங்க முன்வரவேண்டும்' எனக் கேட்டுள்ளார்.

புலம்பெயர் முதலீட்டாளர் மார்டின் ஜெயராஜ் ஜேர்மனியில் இருந்து தாயகத்திற்கு வருகை தந்துள்ள நிலையிலும் பைனஸ் நிறுவனத் தலைவர் சிவபாதம் விக்னேஷ்வரன் சுவிட்சர்லாந்தில் இருந்தபடியும், பொருளாதார நெருக்கடியில் இருந்து தாயகத்தை மீட்டெடுக்க முதலீடுகளைச் செய்ய முன்வருமாறு புலம்பெயர் இலங்கையருக்கு விடுத்திருக்கும் அழைப்பும் வேண்டுகோளும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இவ்வழைப்பானது புலம்பெயர்ந்துள்ள இலங்கையர் மத்தியில் புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் உருவாக்க வழிவகுப்பதோடு அவர்கள் மத்தியில் முதலீடு செய்வதற்கான ஆர்வத்தையும் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

தற்போதைய சூழலில் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் விவசாயம், கடற்றொழில் மற்றும் சுயதொழில் துறைகளில் முதலீடுகளை மேற்கொள்வது குறித்து பைனஸ் நிறுவனம் கவனம் செலுத்தியுள்ளது. குறிப்பாக விவசாயத் துறையில் முதலீடுகளை மேற்கொள்வதன் ஊடாக நாட்டின் விவசாயப் புரட்சிக்கு பங்களிக்க எதிர்பார்ப்பதாக மார்டின் ஜெயராஜ் தெரிவித்திருக்கிறார்.

குறிப்பாக சோளம் பயிர்ச்செய்கையில் முதலீடு செய்து, அதன் ஊடாக கோழித் தீவனம், மாட்டுத் தீவனம் மற்றும் திரிபோஷா உள்ளிட்டவற்றை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து தன்னிறைவு அடைய முடியும். இதன் ஊடாக கால்நடை தீவன இறக்குமதிக்காக வருடாந்தம் செலவிடப்படும் பெருந்தொகை அந்நியச் செலாணியை மீதப்படுத்திக் கொள்ளலாம். இதேவேளை மரவள்ளி செய்கையில் முதலீடுகளை ஆரம்பித்துள்ள போதிலும் அதனை விஸ்தரிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள அவர், மரவள்ளி கிழங்கை மாவாக்கி ஐரோப்பிய சந்தைக்கு ஏற்றுமதி செய்வதை நோக்கமாகக் கொண்டிருப்பதாகவும் அங்கு ஆபிரிக்கர்கள் மத்தியில் மரவள்ளி கிழங்கு மாவுக்கு நல்ல கேள்வி உள்ளது. அதாவது இலங்கையருக்கு அரிசி எவ்வாறு பிரதான உணவாக உள்ளதோ அதே போன்று ஐரோப்பிய நாடுகளுக்கு புலம்பெயர்ந்துள்ள ஆபிரிக்கர்களின் பிரதான உணவாக மரவள்ளி கிழங்கு மா விளங்குகிறது. இதனை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலையொன்றை பத்து கோடி ரூபா செலவில் வவுனியாவில் அமைக்கும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன' எனவும் கூறினார்.

இவை இவ்வாறிருக்க, இலங்கைக்கு தேவையான காகிதாதிகளை உற்பத்தி செய்து கொள்வதற்கு தேவையான மூலப்பொருட்களைப் போதியளவில் உள்நாட்டில் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகள் காணப்படுகின்றன. அதனால் வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையில் முதலீடுகளை மேற்கொள்வது குறித்தும் பைனஸ் நிறுவனப் பிரதிநிதிகள் ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளனர். இப்பின்னணியில் புலம்பெயர் முதலீட்டாளர் மார்டின் ஜெயராஜ் உள்ளிட்ட புலம்பெயர் முதலீட்டாளர்கள் வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையை நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

அதேநேரம் ஜனாதிபதியின் அழைப்பினை அடிப்படையாகக் கொண்டு மேலும் பல புலம்பெயர் இலங்கை முதலீட்டாளர்கள் எதிர்வரும் நாட்களில் தாயகத்திற்கு வருகை தரவிருப்பதாக நம்பமாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆகவே பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்க முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளின் ஒரங்கமாக புலம்பெயர் முதலீட்டாளர்கள் தாயகம் திரும்புவதும் முதலீடுகளில் ஆர்வம் காட்டுவதும் பெரிதும் வரவேற்கத்தக்கவையாகும். இது நாட்டின் பொருளாதார மீட்சிக்கும் மறுமலர்ச்சிக்கும் வித்திடும். பொருளாதார நெருக்கடிச் சூழலில் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிறுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள அழைப்புக்கு கிடைத்துள்ள பிரதிபலன்களே இவை.



**மர்லின் மரிக்கார்...**

---



# கஜிமாவத்தையை தீயிட்டது யார்?

**வஜிர லியனகே...**
தமிழில்: **எம்.எஸ். முஸப்பிர்**
(புத்தளம் விசேட நிருபர்)

அனேகமானோரின் பெயர்களுக்கு முன்னால் ஊரின் பெயரை இணைத்துக் கொள்ளும் வழக்கம் எமது சமூகத்தில் காணக் கூடிய ஒன்றாகும். விஷேடமாக தேரர்களின் பெயருக்கு முன்னால் பிறந்த ஊரைக் காணக்கூடியதாக இருக்கும். மடிகே பஞ்சாசிக, மாதுலுவாவே சோபித மற்றும் வல்பொல ராஹுல போன்றன அவ்வாறான பெயர்கள்தான். வல்பொல ராஹுல தேரர் பிரேமதாச பிரதமராக இருந்த காலத்தில் ஊர் ஒன்றுக்கு சூட்டப்பட்ட பெயருக்கு எதிர்ப்பைத் தெரிவித்தார். அந்த ஊரின் பெயர் "ஸ்டேடியம் கம" வாகும். அந்த கிராமம் சுகததாச விளையாட்டு மைதானத்தை விரிவாக்கும் போது அப்புறப்படுத்தப்பட்ட குடிசைவாசிகளுக்காக அமைக்கப்பட்டது.

"பிரதமரே, அந்த ஊரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் துறவறம் பூண்டு தேரரானால் "ஸ்டேடியம் கமவுக்கு ராஹுல கம" என்றல்லவா பெயர் சூட்ட வேண்டும். இப்படி ஒரு பெயரைச் சூட்ட முடியுமா?" என ராஹுல தேரர் ஒருநாள் பிரதமர் ஆர். பிரேமதாச கலந்து கொண்டிருந்த கூட்டம் ஒன்றில் மண்டபத்திலிருந்தோரை நோக்கிக் கேட்டார்.

கஜிமாவத்தையில் ஏற்பட்ட தீ அனர்த்தம் தொடர்பில் தகவல் சேகரிக்கச் சென்றபோது எமக்கு அத்தோட்டத்திற்கு கஜிமாவத்தை என்ற பெயர் எப்படி வந்தது என்பதை அறிந்து கொள்வதே முதல் நோக்கமாகவிருந்தது. அங்கு வசிக்கும் பெரும்பாலானோர் அதனை அறிந்திருக்கவில்லை. எனினும் கடைசியில் முதியவர் ஒருவர் அத்தோட்டத்திற்கு கஜிமாவத்தை என்ற பெயர் எவ்வாறு வந்தது என்பதை விபரித்தார்.

"கஜிமா என்பது ஜப்பான் பெயராகும். களனி பாலத்தின் வேலைகளை மேற்கொள்வதற்காக ஜப்பானைச் சேர்ந்த கம்பனி ஒன்று இங்கு வந்தது. இந்த தோட்டத்தில்தான் இரும்பு, கருங்கல் போன்றன களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. இங்கு ஜப்பானியர்கள் தங்குவதற்காக சீமெந்தினால் சில வீடுகள் அமைக்கப்பட்டன. அந்த வேலைகளைச் செய்த பெக்கோ ஸ்கவேட்டர் டிப்பர் போன்ற வாகனங்களில் அந்த நிறுவனத்தின் பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. அந்த நிறுவனத்தின் பெயர் கஜிமா. கஜிமா லொறிகள் நிறுத்தப்பட்ட இடம் கடைசியில் கஜிமாவத்தையாகிப் போனது.

கஜிமாவத்தையில் தீ அனர்த்தம் ஏற்பட்ட போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இருந்தது கஜிமா நிறுவனம் அமைந்துள்ள ஜப்பானில். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஜப்பானில் இருந்து கொண்டு கஜிமாவத்தையில் ஏற்பட்ட தீ அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு விஷேட வேலைத்திட்டங்களை ஏற்பாடு செய்யுமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

அதனடிப்படையில் கொழும்பு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாதம்பிட்டி கிராம உத்தியோகத்தர் பிரிவின் கஜிமாவத்தை வீட்டுத் தொகுதியில் ஏற்பட்ட தீ அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்தவர்களுக்கு நிவாரணங்களை வழங்குதல் மற்றும் அவர்களுக்கான அடுத்த கட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பில் விஷேட மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவின் தலைமையில் கடந்த புதன்கிழமை காலை கொழும்பு மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இதன் போது, இந்த தீ அனர்த்தத்தினால் 71 வீடுகளைச் சேர்ந்த 306 பேர் இடம்பெயர்ந்துள்ளமை தெரியவந்துள்ளது. இடம்பெயர்ந்த 306 பேர்களுள் 200 பேர் வயது வந்தவர்கள் என்பதோடு, மீதி 106 பேரும் சிறுவர்களாகும். தற்போது இடம்பெயர்ந்தவர்கள் மோதரை உயன சனசமூக நிலையத்திலும், களனிநதி விகாரையிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், கொழும்பு மாநகர சபை, மாதம்பிட்டி கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸார், முப்படைகளின் பங்குபற்றல் மற்றும் ஒத்துழைப்புடன் இடம்பெயர்ந்தவர்களுக்காக உணவு பானங்கள் உள்ளிட்ட வசதிகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருவது இந்தக் கூட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டது.

கஜிமாவத்தைக்கு நாம் சென்ற போது அங்கு முற்றாக தீக்கிரையான குடியேற்றத்தையே கண்டோம். இந்த அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் முதலில் தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டது அப்பிரிவுக்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தர் பிரதீப் பெரேராவுக்கு.

"உடனடியாக வீடுகளின் மின்சார விளக்குகளை அணைக்குமாறு கிராம அதிகாரி கூறினார். உடனடியாகவே வீடுகளிலிருந்த சிறுவர்களை வெளியேற்ற உதவியது அவர்தான்"

2007ம் ஆண்டு முதல் தொட்டலங்க கஜிமாவத்தையில் இடைநிலை முகாம் ஒன்று நகர அபிவிருத்தி அதிகார சபையினால் முன்னெடுத்துச் செல்லப்பட்டதோடு, 2014ம் ஆண்டு இறுதியாகும் போது அங்கு வசித்த அனைவருக்கும் வீடுகள் வழங்கப்பட்டு முடிக்கப்பட்டதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர இந்தக் கூட்டத்தின் போது சுட்டிக்காட்டினார். எனினும் 2015ம் ஆண்டிலிருந்து அவ்வப்போது சட்டவிரோத குடியிருப்பாளர்களால் இந்தக் காணிகள் கைப்பற்றப்பட்டதாகவும் நகர அபிவிருத்தி அதிகார சபை இங்கு சுட்டிக் காட்டியது. கடந்த இரண்டு வருடங்களுக்குள் இங்கு மூன்று சந்தர்ப்பங்களில் தீ அனர்த்தம் ஏற்பட்டதாகவும், இச்சம்பவங்கள் தொடர்பில் முறையானதும், பாரபட்சமற்றதுமான விசாரணைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இந்தக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது.

இதற்காக பாராளுமன்ற உறுப்பினர் ஓய்வுபெற்ற மேஜர் பிரதீப் உந்துடே மற்றும் கொழும்பு மாவட்டச் செயலாளர் பிரதீப் யசரத்ன ஆகியோரின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு, கொழும்பு பிரதேச செயலாளர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம், வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளர், அரச இரசாயன பகுப்பாய்வாளர், பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர், அப்பிரதேச பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் மாதம்பிட்டி பிரிவின் கிராம உத்தியோகத்தர் ஆகியோரை உள்ளடக்கியவாறு இந்தக் குழுவினால் ஏழு கிழமை நாட்களுக்குள் குறித்த சம்பவம் ஏற்பட்டதற்கான காரணம், அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகள், அங்கு வசிப்போருக்கான முன்மொழியப்பட்ட நிவாரணங்கள் தொடர்பில் துரித அறிக்கையினை ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் சமர்ப்பிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்துள்ள அனைத்து பாடசாலை மாணவர்களை வரும் திங்கட்கிழமை தொடக்கம் வழமை போன்று பாடசாலைக்கு அனுப்புவதற்குத் தேவையான புத்தகங்கள், பயிற்சிக் கொப்பிகள், பாடசாலைச் சீருடை மற்றும் காலணிகளை பெற்றுக் கொடுப்பதற்கும், கர்ப்பிணித் தாய்மார்கள், தாய்மார்கள் மற்றும் பெண்களின் அனைத்து சுகாதார வசதிகளையும் பூரத்தி செய்து கொடுப்பதற்கும், சமைத்த உணவுகளைத் தொடர்ச்சியாக வழங்குவதற்கும் தற்காலிக தங்குமிடங்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த தீ அனர்த்தம் ஏற்பட்ட பிரதேசத்தை அவதானித்த போது அங்கு சீமெந்தினால் நிர்மாணிக்கப்பட்ட எந்த வீடும் அங்கிருக்கவில்லை என்பதை அறிந்து கொள்ள முடிந்தது. அவ்வீடுகள் அனைத்துமே பல கைகளால் அமைக்கப்பட்ட வீடுகளாகும். தகரம் அல்லது தகரங்களினால் மறைக்கப்பட்ட சில வீடுகளையும் அங்கு காண முடிந்தது. அனேகமான வீடுகளின் கூரை தகரங்களால் அமைக்கப்பட்டிருந்தது. தீயினால் ஏற்பட்ட சேதங்களுள் தொலைக்காட்சிகள், பிள்ளைகளின் விளையாட்டுப் பொருட்கள், துணி துவைக்கும் இயந்திரங்கள் என்பவற்றோடு பாதி எரிந்த திருமண புகைப்படங்களும் அடங்கியிருந்தன.

"இங்கு உதவி செய்வதாகக் கூறிக் கொண்டு வந்தவர்களுள் சில மோசடிக்காரர்கள் முதலில் தூக்கியது எரிந்த வீடுகளிலிருந்த கேஷ் சிலிண்டர்களைத்தான். சிலர் அலுமாரிகளினுள் இருந்த பணத்தை அலுமாரிகளை உடைத்து எடுத்திருந்தார்கள். உயிர்ப் பயத்தினால் வீட்டிலிருந்தவர்கள் சிறுவர்களைத் தூக்கிக் கொண்டு தப்பி ஓடியிருந்தனர்"

இத் தீ அனர்த்தம் தொடர்பில் கொழும்பு மாவட்டச் செயலாளர் பிரதீப் யசரத்னவிடம் வினவினோம்.

மோதரை கஜிமாவத்தை வீட்டுத் தொகுதியில் இடம்பெற்ற தீ அனர்த்தம் தொடர்பில் ஆராய்ந்து பார்த்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார். தற்போது அங்கு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் இடைத்தங்கல் முகாம் ஒன்று அமைக்கப்படுகின்றது. இந்த தோட்டத்தில் தற்போது 220 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 1000க்கும் மேற்பட்டவர்கள் வாழ்கின்றார்கள். இங்கு வசிக்கும் பெரும்பாலோனோர் சட்டவிரோத குடியிருப்பாளர்கள்.

நாம் கஜிமாவத்தையை சென்றடைந்த போது அங்கு கைவிடப்பட்டிருந்த பாரிய மண்டபம் ஒன்றை துப்புறவு செய்து அங்கு மக்களைத் தற்காலிகமாகத் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அத்தோட்டத்தில் வசிப்பவர்கள் அங்குள்ள வீடுகளின் எண்ணிக்கை தொடர்பில் முரண்பாடான தொகைகளைக் கூறியதால் நாம் கஜிமாவத்தை பிரிவுக்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தர் பிரதீப் பெரேராவிடம் வினவினோம்.

கடந்த ஒன்றரை வருடத்தினுள் இந்த வீட்டுத் தொகுதியானது தீ அனர்த்தத்திற்கு உள்ளாகியிருப்பது இத்தோடு மூன்றாவது தடவையாகும். 2001ம் ஆண்டில் இடம்பெற்ற தீ அனர்த்தத்தில் 27 வீடுகள் சேதங்களுக்குள்ளாகின. அங்கு வசிக்கும் பெரும்பாலானோர் சட்டவிரோத குடியிருப்பாளர்களாகும். நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் இங்கு இடைத்தங்கல் முகாம் ஒன்று நடாத்திச் செல்லப்படுகின்றது. இங்கு வசிக்கும் சிலர் அரசாங்கத்தின் மூலம் இரண்டு மூன்று வீடுகளைப் பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள். நிரந்தமான வீடுகளைப் பெற்றுக் கொண்டிருந்தாலும் அவர்கள் இத்தோட்டத்திலேயே வசிக்கின்றார்கள். கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் இங்கு 160 வீடுகளே இருந்தது. நகர அபிவிருத்தி அதிகார சபை தலையிட்டு அவற்றில் 60 வீடுகள் அப்புறப்பட்டன. எனினும் கடந்த கொரோனா காலப்பகுதியில் இத்தோட்டத்தில் சட்டவிரோத நிர்மாணங்கள் அதிகரித்தன.

இந்த கஜிமாவத்தையில் தமக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளைத் தமக்கு வழங்காமல் காலம் கடத்துவதாக அதிகமானோர் நகர அபிவிருத்தி அதிகார சபை மீது குற்றம் சுமத்துகின்றனர்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீரவிடம் நாம் இவ்விடயம் தொடர்பில் வினவினோம்.

2007, 2008ம் ஆண்டுகளில் தெமடகொடை வீடமைப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்திய காலப்பகுதியில் அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் தற்காலிகமாக கஜிமாவத்தை தோட்டத்தில் குடியமர்த்தப்பட்டார்கள். அன்று தொடக்கம் இன்று வரையிலும் இந்த நிலத்தை இடைத்தங்கல் முகாமாக பயன்படுத்துகின்றோம். இங்கு வசிக்கும் அனைவருக்கும் 2014ம் ஆண்டில் வீடுகளை வழங்கி இந்த தோட்டத்தை முற்றாகவே விடுவித்தோம். தற்போது தற்காலிக முகாம் தேவையில்லை. தேவையான சந்தர்ப்பங்களில் மக்களை தங்க வைப்பதற்காக போதியளவுக்கு இங்கு வீடுகள் உள்ளன. முன்னர் வீடுகளை வழங்கியவர்களின் பெயர்ப்பட்டியலும் உள்ளது.

நகர அபிவிருத்திய அதிகார சபையினால் 20 குடும்பங்ளே இங்கு குடியமர்த்தப்பட்டுள்ளன. ஏனைய 200 குடும்பங்களும் சட்டவிரோத குடியிருப்பாளர்களாகும். 2015ம் ஆண்டின் பின்னர் இத்தோட்டத்தில் சட்டவிரோத குடும்பங்கள் குடியேறின. நகர சபையினால் இந்த அனைத்து வீடுகளுக்கும் இலக்கங்கள் வழங்கப்பட்டு மின்சாரம் நீர் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் அவர்கள் அனைவரும் வாக்காளர் பட்டியலிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். என்றாலும் இவ்வாறு வீடுகளை வழங்குவதானால் 2 இலட்சம் வீடுகளாவது வழங்க வேண்டும். கொழும்பில் இவ்வாறான தோட்ட வீடுகள் உள்ளன. எனினும் அடிக்கடி தீ அனர்த்தம் ஏற்படுவது கஜிமாவத்தையில் மாத்திரமேயாகும்.

**கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வது உள்ளிட்ட முக்கியமான முடிவுகளை எடுக்கும் போது பாராளு–மன்றத்தில் உள்ள சகல கட்சிகளின் பங்களிப்பையும் பெற்றுக் கொள்ளும் நோக்கில் உருவாக்கப்பட்ட தேசியப் பேரவையின் முதலாவது கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.**



# நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான சிறந்ததொரு ஆரம்பம்!



## நாட்டு நலனுக்கான கொள்கைகளைத் தயாரிக்கும் போது, அனைத்துத் தரப்பினரினதும் கருத்துக்களையும் உள்வாங்கிக் கொள்வதற்கு கிடைத்துள்ள வாய்ப்பு!

## தேசியப் பேரவையின் முதலாவது கூட்டத்தில் அரசாங்க, எதிரணி தரப்பிலிருந்து கிடைத்துள்ள வரவேற்பு

சபாநாயகரும், தேசியப் பேரவையின் தலைவருமான மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன கடந்த 20 ஆம் திகதி கொண்டுவந்த பிரேரணைக்கு அமைய தேசியப் பேரவையை அமைக்கும் தீர்மானம் பாராளுமன்றத்தில் எதிர்ப்பு எதுவும் இன்றி நிறைவேற்றப்பட்டது. இதற்கமைய கடந்த 23 ஆம் திகதி இதற்கான உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியலை சபாநாயகர் பாராளுமன்றத்துக்கு முன்வைத்திருந்தார்.

இதன் தொடர்ச்சியாக தேசியப் பேரவையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தை வியாழக்கிழமை நடத்தத் தீர்மானித்திருந்தனர். அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, ஆளும் கட்சியின் முதற்கோலாசான் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் லக்ஷ்மன் கிரியல்ல, அமைச்சர் டிரான் அலஸ், பாராளுமன்ற உறுப்பினர்களான அசங்க நவரத்ன, ரவூப் ஹக்கீம், ரிஷாட் பதியுதீன், மனோ கணேசன், பழனி திகாம்பரம், ஜீவன் தொண்டமான், சிசிர ஜயக்கொடி, நாமல் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சாகர காரியவசம், அலி சப்ரி ரஹீம், ரோஹித அபேகுணவர்தன, வஜிர அபேவர்தன, சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

தேசியப் பேரவையானது பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாக 35 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்குமென அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், 23 உறுப்பினர்களின் பெயர்கள் மாத்திரமே முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் முதலாவது அங்குரார்ப்பணக் கூட்டத்தில் 15 உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்களில் கலந்து கொள்ள விருப்பதால் இதில் பங்கேற்க முடியாது என்பதை அறிவித்திருந்தார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் சபாநாயகருக்கு அறிவித்திருந்தார்.

முதலாவது கூட்டத்தில் இரு உபகுழுக்களை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால தேசியக் கொள்கைகளை வகுப்பதற்கான வழிகாட்டுதல்கள் தொடர்பான பாராளுமன்றத்தின் பொதுவான முன்னுரிமைகளைத் தீர்மானிப்பது மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பான குறுகிய மற்றும் மத்தியகால நிகழ்ச்சித் திட்டத்தை உருவாக்குவது தொடர்பில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது என்பனவே இந்த உபகுழுக்கள் அமைக்கப்படுவதற்கான நோக்கங்களாகும்.

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால தேசியக் கொள்கைகளை வகுப்பதற்கான வழிகாட்டுதல்கள் தொடர்பான பாராளுமன்றத்தின் பொதுவான முன்னுரிமைகளைத் தீர்மானிப்பது, பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பாக குறுகிய மற்றும் நடுத்தரகால பொதுவான அதிகுறைந்த நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய உடன்பாட்டுக்கு வருவது, அமைச்சரவை அமைச்சர்கள், தேசியப் பேரவை, விசேட குழுக்களின் தவிசாளர்கள் மற்றும் இளைஞர் அமைப்புக்களின் இளைஞர் அவதானிப்பாளர்கள் ஆகியோர் விசேட கூட்டங்களுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது போன்றவை தேசியப் பேரவையின் நோக்கங்களாக இருக்கும்.



அது மாத்திரமன்றி, தேசியப் பேரவையானது துறைசார் மேற்பார்வைக் குழுக்கள், அரசாங்க நிதி பற்றிய குழு, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு, அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, வங்கித் தொழில் மற்றும் நிதிச்சேவைகள் பற்றிய குழு, வழிவகைகள் பற்றிய குழு, பொருளாதார உறுதிப்படுத்தல் குழு, அத்துடன் அரசாங்கக் கணக்குகளைக் கட்டுப்படுத்தும் ஏதேனும் குழு ஆகியவற்றிலிருந்து அறிக்கைகளைக் கோருவதற்கான தத்துவங்களைக் கொண்டிருக்கும்.

நாடு தொடர்பில் எடுக்கப்படும் முக்கியமான தீர்மானங்கள் குறித்து முன்னுரிமையுடன் ஆராய்வது இதன் நோக்கமாக இருக்கும். அது மாத்திரமன்றி போராட்டக்காரர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய வேலைத்திட்டங்களையும் இது முன்னெடுக்கும்.

எந்தவொரு நபரையும் தேசியப் பேரவையின் முன்னிலையில் அழைத்து கருத்துக்களைக் கேட்பதற்கும், விசாரிப்பதற்கும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாராளுமன்ற அமர்வு வாரத்திலும் வியாழக்கிழமை கூடுவதற்கு தேசியப் பேரவை தீர்மானித்துள்ளது.

ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான சிறந்ததொரு வாய்ப்பாக இது அமைந்துள்ளது எனப் பிரதமர் தினேஷ் குணவர்த்தன குறிப்பிட்டார்.

இது சிறந்ததொரு ஆரம்பமாகும் என இதில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் பலரும் கருத்தைத் தெரிவித்திருந்தனர். சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பான யோசனைகள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், முதற்கட்டமாக அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய தேசியப் பேரவை அமைந்துள்ளது எனலாம்.

கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட தன்னிச்சையான தீர்மானங்கள் மற்றும் ஒருதலைப்பட்சமான முடிவுகளால் நாடு எதிர்கொண்டுள்ள சவால்களை ஒரு படிப்பினையாக எடுத்துக் கொண்டே எதிர்கால செயற்பாடுகள் அமைய வேண்டும்.

எனவே நாட்டின் சார்பில் கொள்கைகளைத் தயாரிக்கும் போது அனைத்துத் தரப்பினரதும் கருத்துக்களையும் செவிசாய்த்து குறிப்பாக துறைசம்பந்தப்பட்டவர்களையும் அதில் உள்வாங்கிக் கொண்டு செல்வது காலத்தின் தேவையாகும். இந்த அடிப்படை விடயங்களையும் அரசியல்வாதிகள் கருத்தில் கொண்டு செயற்படுவது அனைருக்கும் நன்மையளிப்பதாக அமையும்.





**சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பான யோசனைகள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், முதற்கட்டமாக அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய தேசியப் பேரவையின் ஆரம்பம் சிறந்ததொரு சமிக்ஞை**

பி.ஹர்ஷன்...

---

# செல்வாக்குமிக்க உலகத் தலைவர்களில் பிரதமர் மோடி முதலிடம் பிடித்த காரணம்!

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மீது உலகநாடுகள் பலவற்றின் மக்களுக்கு அதிக ஈர்ப்பு உள்ளது. அதற்குக் காரணம் இல்லாமலில்லை. இந்தியாவை வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு வருவதற்கு நரேந்திர மோடி செயற்படுத்தி வருகின்ற மு–ற்போக்கான திட்டங்களே இதற்குப் பிரதான காரணம் ஆகும்.**

உலகெங்கும் கொவிட் தொற்று பேரிடர் நிலவிய போதிலும், இந்தியாவை வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு வந்திருக்கின்றார் பிரதமர் நரேந்திர மோடி. பொருளாதார வளர்ச்சியைப் பொறுத்தவரை இந்தியா தற்போது உலகில் ஐந்தாவது இடத்தில் உள்ளது. பிரித்தானியாவையும் முந்தியபடி இந்தியா உலகில் 5 ஆவது இடத்துக்கு வந்து விட்டமை சமீபத்திய ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த வெற்றிக்குக் காரணம் பிரதமர் நரேந்திர மோடிதான் என்பதில் சந்தேகமில்லை. அவர் வகுத்துள்ள நவீன திட்டங்களாலேயே உலக அரங்கில் இந்தியா ஐந்தாவது இடத்துக்கு வந்திருக்கின்றது. நரேந்திர மோடியின் திட்டங்கள் உலகளவில் பாராட்டுப் பெற்றுள்ளன. நவீன இந்தியாவின் உருவாக்கத்துக்கு நரேந்திர மோடியின் திட்டங்களே வழிவகுத்துள்ளன.

இது ஒருபுறமிருக்க, பிரபல்யம் மிக்க உலகத் தலைவர்கள் தொடர்பில் சமீபத்தில் நடத்தப்பட்ட மதிப்பீட்டாய்வில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு மீண்டும் முதலாமிடம் கிடைக்கப் பெற்றுள்ளது.' மோர்னிங் கன்சல்ட் பொலிட்டிகல் இன்டலிஜன்ட்' என்ற அமைப்பு நடத்திய சர்வதேச ஆய்விலேயே நரேந்திர மோடி தெரிவு செய்யப்பட்டுள்ளார். பிரபல்யம் மிக்க உலகத் தலைவர்களில் அதிகூடிய 75 வீத மதிப்பீடு அவருக்குக் கிடைத்துள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி எவ்வாறு முதலிடம் பிடித்தார்? இதற்கான காரணமும் இப்போது வெளியாகி உள்ளது.

சென்னை டிவிஎஸ் எமரால்ட் ஹோம்ஸின் பிரம்மாண்ட பண்டிகை கால தள்ளுபடி

'மோர்னிங் கன்சல்ட்' எனும் அரசியல் உளவு நிறுவனம் பல்வேறு தரவுகள் குறித்த விபரங்களை வழங்கி வருகிறது. இதற்காக அவ்வப்போது அந்த நிறுவனம் உலகம் முழுவதும் மதிப்பீட்டு ஆய்வு மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் கடந்த ஓகஸ்ட் 17 முதல் ஓகஸ்ட் 23 வரை ஒவ்வொரு நாட்டில் உள்ள தலைவர்களுக்கும் அந்த நாட்டில் உள்ள தலைவர்களுக்கான செல்வாக்கு தொடர்பாக 'மோர்னிங் கன்சல்ட்' எனும் அமைப்பு ஆய்வு மேற்கொண்டது. இந்த ஆய்வின் முடிவிலேயே பிரதமர் மோடியின் செல்வாக்கு உச்சத்தில் இருப்பது தெரியவந்துள்ளது.

பிரதமர் நரேந்திர மோடிக்கு இந்தியாவில் 75 சதவீத மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். 2022 ஜனவரி மற்றும் 2021 நவம்பரில் வெளியான பட்டியலிலும் முதலிடம் பிடித்த நரேந்திர மோடி தற்போது 3 ஆவது முறையாக மீண்டும் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார். மேலும் உலகளவில் செல்வாக்கு மிகுந்த தலைவராகவும் நரேந்திர மோடி மாறியுள்ளார்.

மோடிக்கு அடுத்தபடியாக மெக்சிகோ அதிபர் அண்ட்ரஸ் மானுவல் லோபஸ் ஒப்ராடோர் 2 ஆவது இடத்தில் உள்ளார். 3 ஆவது இடத்தில் இத்தாலி பிரதமர் மரியோ ட்ராகி உள்ளார். பிரேசில் அதிபர் போல்சனாரோ 4ஆம் இடத்தில் உள்ளார். அமெரிக்க அதிபர் ஜோ பைடன் 5 ஆவது இடத்திலும், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ 6ஆவது இடத்திலும், ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா 7 ஆவது இடத்திலும் உள்ளனர். பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் 8 ஆவது இடத்தில் உள்ளார்.

இந்நிலையில் பிரதமர் நரேந்திர மோடி எப்படி முதலிடம் பிடித்தார் என்பது பற்றிய விபரமும் வெளியாகி உள்ளது. அதன்படி இந்தியாவில் கொரோனா பரவலை பிரதமர் நரேந்திர மோடி சிறப்பாக கட்டுப்படுத்தி உள்ளதாக மக்கள் கூறியுள்ளனர். குறிப்பாக உலக மக்கள்தொகையில் 2 ஆவது இடத்தில் இருந்தாலும் அவரது செயல்பாட்டை மக்கள் அதிகமாக பாராட்டி நரேந்திர மோடிக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

மேலும் 72 சதவீதத்துக்கும் அதிகமான மக்கள் பிரதமர் நரேந்திர மோடி நாட்டை சரியான திசைக்கு அழைத்து செல்கிறார் என கருத்துக் கணிப்பில் கூறியுள்ளனர். கொரோனா காலத்தில் உலக நாடுகள் அதிக சிரமத்தை சந்தித்தாலும் கூட பிரதமர் மோடி அரசு சரியான வகையில் செயல்பட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நடந்து முடிந்த கணிப்பீட்டின்படி தினமும் 20 ஆயிரம் பேரிடம் கருத்துப் பெறப்பட்டது.

பிரதமர் நரேந்திர மோடிக்கு உலக அரங்கில் சக்திவாய்ந்த, செல்வாக்கு மிக்க குரல் உள்ளது. உலக அரங்கில் இந்தியாவின் குரலையும் நிலைப்பாட்டையும் உலகத் தலைவர்கள் மதிப்பதற்கு நரேந்திர மோடியே காரணமாவார்.

வெளிப்படையாக இந்தியா உலக அரங்கில் நம்ப முடியாத முக்கியமான மற்றும் செல்வாக்குமிக்க நாடு ஆகும். உலகில் மிகவும் கொந்தளிப்பு நிலவி வரும் இன்றைய நிலையில், இந்தியாவுடனான உலகின் நல்லெண்ணம் வேகமாக வளர்ந்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

“உலகம் வேகமாக மாற்றமடைந்து வருகிறது. உலகம் நவீனத்தை நோக்கி முன்னேறுகின்றது. இந்த மாற்றத்துக்கு ஏற்ப இந்தியாவை கொண்டு செல்லக் கூடிய தலைவராக நரேந்திர மோடி திகழ்வதாக உலகத் தலைவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

உலகில் மாறிவரும் சவால்கள் மற்றும் சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் வகையில் புதிய புதிய செயற்றிட்டங்களை நரேந்திர மோடி செயற்படுத்தி வருகின்றார். அதேவேளை ஏனைய நாடுகளுடன் இந்தியா பேணி வருகின்ற நல்லுறவும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்.



**இந்தியாவிலும் 75 சதவீத மக்களால் விரும்பப்படும் பிரதமர்**

எஸ்.சாரங்கன்...

# நெருக்கடியிலிருந்து இலங்கையை மீட்பதற்கு குவியும் சர்வதேச ஆதரவு!

## உலகத் தலைவர்கள் பலருடனும் ஜனாதிபதி நேரடி சந்திப்பு

வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

**நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்குப் பல்வேறு முயற்சிகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. அரசியல் ரீதியாக ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த ஒரு பக்கம் முயற்சிகள் எடுக்கப்பட்டு வரும் நிலையில், கடன் மறுசீரமைப்பு, சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.**



சர்வதேச நாடுகளுடன் காணப்படும் நட்புறவுகளை வலுப்படுத்தி அவற்றின் பூரண ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முழு முயற்சியுடன் ஈடுபட்டிருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

பிரிட்டிஷ் மகாராணி எலிசபத் இறுதிச் சடக்கிற்காக பிரித்தானியா சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரித்தானியாவின் மன்னர் சார்ள்ஸ், பொதுநலவாய செயலாளர் நாயகம் உள்ளிட்ட உலகத் தலைவர்களைச் சந்தித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு பல்வேறு உலகத் தலைவர்களுடன் சந்திப்புகளை நடத்தி இலங்கையுடன் இணைந்து செயற்படுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.


ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காக ஜப்பான் சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு சிங்கப்பூர் பிரதமரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வருமாறு அழைப்பு விடுத்திருந்த ஜனாதிபதி, இரு நாட்டுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

அடுத்தவருடம் இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள வருகை தருமாறும் சிங்கப்பூர் பிரதமருக்கு இதன்போது அழைப்பு விடுக்கப்பட்டது.

ஜனாதிபதியின் இந்த ஜப்பான் விஜயத்தின் போது அந்நாட்டின் பிரதமர் ஃபுமியோ கிஷிடா மற்றும் ஜப்பானிய சக்கரவர்த்தி நருஹிதோ ஆகியோரைச் சந்தித்து இரு நாட்டு ஒத்துழைப்புக்கள் குறித்துக் கலந்துரையாடியிருந்தார்.

ஜப்பானின் வெளிவிவகார அமைச்சர் யோஷிமாசா ஹயாஷியைச் சந்தித்த போது, சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் பேச்சுவார்த்தையின் முன்னேற்றத்தை அவர் வரவேற்றிருந்தார்.

வழங்குனர்களுடன் நடத்தப்படும் கடன் மறுசீரமைப்புப் பேச்சுவார்த்தையில் ஜப்பான் முன்னணி பங்கை வகிக்க தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.



அத்துடன், இலங்கையின் கடந்த ஆட்சியில் பல முதலீட்டுத் திட்டங்களை இரத்துச் செய்ததைத் தொடர்ந்து ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டிருந்தது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விளக்கம் தெரிவித்திருந்ததுடன், அந்த முதலீட்டுத் திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பதில் ஆர்வம் காட்டுவதாகவும் கூறியிருந்தார்.

## சர்வதேசத்துடன் கசப்புணர்வுகளை அகற்றி, நல்லெண்ணத்தை வலுப்படுத்துவதில் ஜனாதிபதி ரணில் கூடுதல் அக்கறை



இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையில் நீண்டகால நட்புறவு காணப்பட்ட போதும், கடந்த அரசாங்கத்தின் காலத்தில் ஜப்பானின் முதலீடுகள் நிராகரிக்கப்பட்டமையால் இரு நாட்டுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டிருந்தது. இருந்தபோதும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னர் பிரதமராகப் பதவியேற்றிருந்த காலத்திலிருந்து இரு நாட்டுக்கும் இடையிலான உறவைப் பலப்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தார்.

இது தொடர்பில் நடைபெற்ற தொடர்ச்சியான கலந்துரையாடல்களையடுத்து இலங்கையின் கடன் மறுசீரமைப்பு விடயத்தில் ஒருங்கிணைப்பாளராகச் செயற்பட விருப்பம் தெரிவித்த ஜப்பான், தொடர்ச்சியான உதவிகளை அறிவித்திருந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தலைவரான ஜே.ஆர். ஜயவர்த்தன ஜப்பானோடு நெருக்கமான உறவுகளைப் பேணி வந்திருந்தார். இதனை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் வலுப்படுத்தியிருப்பதாகவே தோன்றுகிறது.

ஜப்பான் மாத்திரமன்றி பல்வேறு உலக நாடுகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்புகளைப் புதுப்பித்து முடிந்தளவான ஒத்துழைப்புக்களைப் பெற்று வருகின்றார்.

பிரித்தானிய விஜயத்தின் போது அங்குள்ள புலம்பெயர்ந்துவாழ் இலங்கையர்களைச் சந்தித்து நாட்டின் முன்னேற்றத்துக்கும், பொருளாதார மீட்சிக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தார். இந்தக் கோரிக்கையை பல புலம்பெயர்ந்து வாழ் சமூகத்தினர் சாதகமாகப் பார்த்திருப்பதாகவே தெரிகிறது. ஏற்கனவே ஒரு சில புலம்பெயர் முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வந்து முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்த பேச்சுக்களை ஆரம்பித்துள்ளமை சிறந்தொரு விடயமாகவே காணப்படுகிறது.

இது தவிரவும், சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற சர்வதேச உதவி வழங்கும் அமைப்புக்களுடனான இணைப்புக்களும் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. பிலிப்பைன்ஸின் மணிலா நகரில் நடைபெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கி ஆளுநர்களின் 55 ஆவது வருடாந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டிருந்தார்.

கொவிட் 19 தொற்று மற்றும் உக்ரைன் யுத்தம் காரணமாக ஏற்பட்ட உலகப் பொருளாதார ஸ்திரமின்மையின் பாதக விளைவுகள் காரணமாக உணவு, எரிபொருள் மற்றும் உரம் என்பவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன. இந்நிலைமையானது பாரிய சுமையாக மாறியுள்ளதாக இம்மாநாட்டில் உரையாற்றியிருந்த ஜனாதிபதி சுட்டிக்காட்டத் தவறவில்லை.

'உணவு மற்றும் எரிபொருள் விலைகளின் அதிகரிப்பு நடுத்தர வர்க்கத்தினரின் வளர்ச்சியை குறைத்துள்ளதுடன், இந்து சமுத்திர பிராந்திய நாடுகளில் வசிக்கும் நடுத்தர குடும்பங்களின் வாழ்க்கை முறையில் தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

“பெரும் பொருளாதார அழுத்தங்களுக்கு மத்தியில், நாட்டின் கடன் நிலைத்தன்மையை மீளமைப்பதற்கு முன்னெப்போதும் இல்லாத வகையில் இலங்கை முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. மேலும் கடனை நிலைநிறுத்துவதற்கான இந்த முயற்சிகளுக்கு அனைத்து தரப்பினரும் ஆதரவளிப்பார்கள் என எதிர்பார்க்கிறோம்.

இந்த ஆழ மற்றும் அழுத்தமான மறுசீரமைப்புகளை மேற்கொள்ளும் அதேவேளை சமூகத்தில் அதிகம் பாதிக்கப்படக் கூடிய தரப்பினர் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. அதற்கேற்ப சமூகப்பாதுகாப்பிற்கு அதிக நிதி மற்றும் வளங்களை ஒதுக்குவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

எமது பொருளாதாரத்தை இன்று நாம் ஸ்திரப்படுத்தியுள்ளோம். நாம் எவ்வாறு இந்த நெருக்கடியை தீர்க்கிறோம் என்பதை பல நாடுகளைப் போலவே பங்குதாரர்களும் உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றனர்” என ஜனாதிபதி அங்கு கூறியிருந்தார்.

இலங்கையின் உண்மையான நிலைமை நாட்டு மக்களுக்கும், உலக நாடுகளுக்கும் எடுத்துச் சொல்லப்பட வேண்டும் என்பதில் ரணில் விக்கிரமசிங்க ஆரம்பம் தொட்டே உறுதியாக இருந்தார். ஜனாதிபதியாகப் பதவி ஏற்பதற்கு முன்னர் பிரதமராகப் பதவி வகித்தபோது நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து ஒவ்வொரு பாராளுமன்ற அமர்வு வாரத்திலும் தெளிவுபடுத்தியிருந்தார்.

உண்மை மறைக்கப்பட்டு மக்களை ஒரு மாயத்தோற்றத்தில் வைத்திருக்கத் தேவையில்லையென்பது அவருடைய நிலைப்பாடாக இருந்தது. இவ்வாறான பின்னணியில் இலங்கை தற்பொழுது எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பு நாடப்பட்டு வருகிறது.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் உதவியைப் பெற்றுக் கொள்ள பணியாளர்கள் மட்டத்தில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுவதா, இல்லையா என்பது தொடர்பில் குழப்பம் நிலவிய காலகட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கமே உறுதியான முடிவை எடுத்து சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்களைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் சென்றது.

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச இராஜதந்திர ஆளுமைக்குக் கிடைத்துள்ள வெற்றி!

இந்தப் பேச்சுவார்த்தைகள் சாதகமான நிலைக்குச் செல்வதற்குத் தலைமைத்துவம் வகிப்பதிலும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடத்தக்க பங்கினை வகித்துள்ளார். இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கள் குறித்து இணக்கப்பாடு எட்டப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதும் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் தொகையைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும். இதற்கான முயற்சிகளை அரசாங்கம் வெற்றிகரமாக முன்னெடுத்து வருகிறது.


இது ஒருபுறமிருக்க அரசியல் ரீதியாகவும் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன் ஒரு அங்கமாக பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கியதாக தேசிய பேரவை அமைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் பாராளுமன்ற குழுக்கள் பலப்படுத்தப்பட்டு வெளிப்படைத் தன்மையான முறையில் செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.



## ஜப்பான், சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், ஐ.நா, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, புலம்பெயர் இலங்கையர் சமூகம் போன்ற பல்வேறு தரப்புகளிலிருந்தும் இலங்கை மீது பெருகும் ஆதரவு

# அற்புத அனுபவங்கள், திகில் தகவல்களை தரும் ஹற்றன் சிங்கமலை சுரங்கவழிப் பாதை

இலங்கை புகையிரத பாதைகளில் மிகவும் விசாலமானதும் அற்புதமான திகில் அனுபவங்களை தரும் சிங்கமலை சுரங்கம் உலகில் பேசப்படும் ஒரு பிரதான சுரங்க பாதையாகும்.



புகையிரத பயணம் என்றால் எமது வாழ்வில் பெரியோர் முதல் சிறியோர் வரை மறக்க முடியாத அனுபவங்களையும் மகிழ்ச்சியையும் தரும் ஒன்றாகும். அதிலும் மலையக புகையிரத பயணம் முற்றிலும் வித்தியாசமானதும் கலைத்துவமிக்கதும் ஆகும்.

இதற்கு பிரதான காரணமாக அமைவது மலையக புகையிரத பாதையில் அமைந்துள்ள சுரங்க வழி பாதைகளும், இயற்கை காட்சிகளும் எழில் கொஞ்சும் மலை பிரதேசங்களில் அமைந்துள்ள தேயிலை மலைகளும், நீர் வீழ்ச்சிகள், சரிவுகள் வளைவுகள் நிறைந்த மிகவும் ரம்மியமான பாதைகள் என்றால் அது மிகையாகாது இதில் குறிப்பாக புகையிரத பயணம் என்றாலே எமது கண்முன் தோன்றுவது சுரங்க வழி பாதைகள்.

சிங்கமலை சுரங்கம் உலகில் பேசப்படும் ஒரு பிரதான சுரங்கப் பாதையாகும்.

கொழும்பிலிருந்து பதுளை வரையுள்ள புகையிரத பாதையில் சுமார் 44 சுரங்கங்கள் உள்ளன.



இதில் மிக நீண்ட சுரங்க பாதையாக இருப்பது நுவரெலியா மாவட்டத்தில் ஹற்றன் நகருக்கும் கொட்டகலை நகருக்கும் 108 4/3 மைல் கல்லுக்கும் 109 4/1 மைல் கல்லுக்கும் இடையில் அமைந்துள்ள 14 இலக்க சிங்கமலை சுரங்கபாதை. இது ஹற்றனில் ஆரம்பித்து கொட்டகலையில் முடிகிறது.

பார்ப்பவர்களுக்கு இதில் என்ன விசேஷம் என்று எண்ணத் தோன்றும். ஆனால் அற்புதங்கள் நிறைந்த அனுபவம் தரும் பாதை தான் சிங்கமலை சுரங்கம்.

ஆங்கிலேயர் காலத்தில் அமைக்கப்பட்ட குறித்த சுரங்க வழி பாதை சுமார் 1844 அடி நீளமும் 18 அடி அகலமும் கொண்டது. இந்த நீண்ட சுரங்க வழிபாதை வழியாக புகையிரதங்கள் மட்டுமன்றி, கொட்டகலை பகுதியில் உள்ள எரிங்டன், யுலிபீல்ட், கொட்டகலை, தகரமலை, தொப்பி தோட்டம் உள்ளிட்ட பல தோட்டங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள், பாடசாலை மாணவர்கள், தொழிலாளர்கள் இந்த சுரங்க வழி பாதை வழியாக ஹற்றன் நகருக்கும் ஹற்றன் நகரில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கும் வருகை தருகின்றனர்.

இருள் நிறைந்த பாதுகாப்பற்ற பாதையில் அச்சமின்றி, உயிரை துச்சமாக மதித்தே வருகிறார்கள். இந்த சுரங்க வழி பாதையில் ஏனைய சுரங்க வழி பாதையினை விட மாறுபடுவதற்கு காரணம் இந்த சுரங்க வழி பாதையின் நடுவில் ஒரு பெரிய வளைவு காணப்படுவதும் இதனை கடப்பதற்கு 25 நிமிடங்கள் வரை எடுப்பதும் அடிக்கடி அபூர்வமான மாறுபட்ட ஓசைகள் தோன்றுவதும் காரணம் என இதனை கடக்கும் பலர் தெரிவிக்கின்றனர்.

காதல் முரண்பாடுகள், வாழ்க்கையில் விரக்தியடைந்தவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் ஒரு இடமாக இது காணப்படுவதாகவும் இதனால் இதில் அடிக்கடி பயங்கரமான அமானுசிய சத்தங்கள் சில நேரங்களில் கேட்பதாகவும் இவ்வாறான சம்பவங்கள் நிகழும் போது ஒரு சில தினங்கள் செல்லும் வரை நெஞ்சில் பயம் இருப்பதாகவும் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.



- **கொழும்பிலிருந்து பதுளை வரையுள்ள புகையிரத பாதையில் சுமார் 44 சுரங்கங்கள் உள்ளன.**
- **இருள் நிறைந்த பாதுகாப்பற்ற பாதையில் அச்சமின்றி, உயிரை துச்சமாக மதித்தே செல்கின்றனர்...**
- **காதல் முரண்பாடுகள், வாழ்க்கையில் விரக்தியடைந்தவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் ஒரு இடமாகவும் இருக்கிறது**

ஆரம்பத்தில் இந்த சுரங்கத்தினை கடப்பதற்கு பந்தங்கள் விற்பனை செய்யப்பட்டதாகவும் தற்போது தொழிநுட்ப வளர்ச்சியின் காரணமாக டோச் லைட்களையும், செல்லிடப்பேசிகளையும் பயன்படுத்தி கடப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 150 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த குறித்த சுரங்க பாதை 1865 – தொடக்கம் 1871 ஆண்டு காலப்பகுதியில் அப்போதை சிலோன் புகையிரத சேவையில் தலைமை அதிகாரியாக பணியாற்றிய சேர் கில்போட் லின்சி மோல்சுவத் என்பவரால் எந்த வித தொழில்நுட்ப வசதியும் இல்லாத காலகட்டத்தில் கருங் கல்லினை குடைந்து இந்த சுரங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.



இந்த சுரங்கம் உருவாக்குவதற்கு பெரும்பாலும் இந்திய வம்சாவளியை சேர்ந்த தமிழர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனர் என்பதற்கு அந்த சுரங்கப்பகுதியில் உள்ள கருங்கற்களில் அவர்களது பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ள கற்கள் சான்று பகிர்கின்றன.

மிகவும் ரம்மியமான சூழலில் காட்டுப் பகுதியில் சிங்கத்தின் முகத்தின் தோற்றமுடைய ஒரு மலைப்பாங்கான பிரதேசத்தில் இது அமைந்துள்ளதனால் இதற்கு சிங்கமலை சுரங்கம் என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

எது எவ்வாறான போதிலும் அதிகமான மக்கள் கடக்கும் பிரதான பயண பாதையாக இது காணப்படுகின்றது.

இந்த பாதையில் மிகவும் ஆபத்துக்கள் காணப்படுகின்றன. குறிப்பாக பாடசாலை மாணவிகள், இளம் யுவதிகள் எவ்வித பாதுகாப்பும் இன்றி கடும் இருட்டில் ஒரு ஒளி பந்தத்தின் துணையுடன் மாத்திரம் தன்னந்தனியே செல்கின்றனர். அதிகமானவர்கள் பொருளாதார நெருக்கடி காரணமாக அதிக பணம் பொது போக்குவரத்திற்கு செலவிட வேண்டியுள்ளதனாலும் அதிக வறுமை காரணமாகவும் தமது உயிரை துச்சமாக மதித்து இவ்வாறு பயணிக்கின்றனர்.

இவ்வாறு இருட்டில் பயணிப்பவர்களின் பாதுகாப்பு கருதி சுரங்கத்தினுள் குறைந்தது மின் விளக்குகளையாவது பொருத்தி கொடுத்தால் பேருதவியாக இருக்குமென பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது இவ்வாறிருக்க ஹற்றன் பகுதிக்கு நீர் பாசன பிரதேசமாக குறித்த சுரங்கப்பகுதி காணப்படுகின்றது. ஹற்றன் புகையிரத நிலையத்திற்கும் புகையிரத நிலைய விடுதிகளுக்கும் பிரதான குடிநீர் பெற்றுக்கொடுக்கும் பிரதேசமாகவும் இந்த பகுதி காணப்படுகின்றன.

இதை விட இந்த சுரங்கத்தில் ஆயிரக்கணக்கான மழைக்குருவி கூடுகள் காணப்படுகின்றன. சுரங்கத்தின் மேலுள்ள காட்டுப்பகுதியில் காட்டுக்கோழிகள் மான், மறை, முயல், பன்றி, சிறுத்தை உள்ளிட்ட எமது நாட்டிக்கு உரித்தான அரிய வகை தாவரங்களும் பறவைகளும் வாழ்கின்றன. ஆகவே இந்த பிரதேசத்தினை ஒரு சுற்றுலா பிரதேசமாக விருத்தி செய்வதற்கான வசதிகள் காணப்படுவதும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமே.

இது குறித்து பொது மக்கள் கருத்து தெரிவிக்கையில்,...

இந்த சுரங்கத்தின் வழியாக பல ஆண்டுகளாக பயணஞ் செய்வதாகவும் இதில் பயணிப்பதற்கு ஆரம்பத்தில் அச்சம் காணப்பட்ட போதிலும் தற்போது எவ்வித அச்சமும் கிடையாது என தெரிவிக்கின்றனர்.



முன்பெல்லாம் புகையிரம் வரும் போது ஒலி எழுப்புவதாகவும் இப்போது அவ்வாறு ஒலி எழுப்புவதில்லை என்றும் அதிக வேகத்தில் பயணிப்பதாகவும் இது மிகவும் ஆபத்தானது எனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதே நேரம் சனி ஞாயிறு தினங்களில் பாடசாலை மாணவர்கள் இந்த சுரங்கத்தினை தவறாக பயன்படுத்துவதாகவும் இதனால் ஏனைய மாணவர்கள் மற்றும் இளைஞர் யுவதிகள் சீரழிவதற்கு வழி சமைப்பதாகவும் பலர் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே இது குறித்து உரிய அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும் எனவும் பலர் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஹற்றன் விசேட நிருபர்

---

ஆ.ரமேஸ்



# தொழிலாளர் இடைவிலகலால் பாரிய சிக்கலில் தோட்டங்கள்

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி பெருந்தோட்ட துறையில் பெரும் பாதிப்பை வருங்காலத்தில் ஏற்படுத்துவதற்கான சாதக நிலைமைகள் தற்போது மெல்ல உருவெடுத்துக் கொண்டு வருகின்றது. அதில் பிரதான காரணியாக தொழிலாளர் இத் துறையை விட்டு விலகிச் செல்லுதல் அதிகரித்துள்ளது. அதனால் நாட்டுக்கு பெரும் வருமானத்தை ஈட்டித்தரும் பெருந்தோட்ட தொழிலில் வருங்காலத்தில் தொழிலாளர்களின் பற்றாக்குறை பூதாகரமாக உருவெடுக்கலாம் என தோன்றுகிறது.

200 வருட காலத்தை எட்டியுள்ள தேயிலை தொழில்துறை இன்று ஒவ்வொரு தோட்டப்பகுதிகளிலும் அருகிவருவதை அவதானிக்க கூடியதாக காணப்படுகிறது.

இந்த நிலையில் பெருந்தோட்ட தொழில் துறையில் தேயிலை பயிர்ச்செய்கையில் தம்மை தொழிலாளியாக ஈடுபடுத்தி வாழ்வாதார தொழிலாக முன்னெடுத்து வரும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே செல்கின்றது.

இவ்வாறு தொழிலாளர்கள் குறைந்து செல்வதற்கு பிரதான காரணங்கள் பல உண்டு.

இதில் வருமானம் குறைவு, இத் தொழில் துறையை முகாமைத்துவம் செய்பவர்கள் தொழிலாளர்கள் மீது திணிக்கும் கெடுபிடிகள், தொழிலாளர்கள் உரிமை விடயங்களில் வஞ்சிக்கப்படுதல், சலுகை குறைபாடு என அடுக்கி கொண்டு செல்லப்படும் பல பிரச்சினைகள் உண்டு.

- **வெளி வேலைகளில் உழைக்கும் அதிக வருமானத்தை சட்டவிரோத மதுபானத்–துக்கு செலவழிக்கும் ஆண்கள்....**
- **பொருளாதார நெருக்கடியினால் மேலும் மோசமடையும் தொழிலாளர்களின் வாழ்–வாதாரம்...**

இவ்வாறு நாளுக்கு நாள் பல்வேறு கெடுபிடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்ற தொழிலாளர்களுக்கு தேயிலை தொழில் துறையில் வெறுப்பு ஏற்பட்டு நாளாந்தம் குடும்ப சுமைக்கு ஏற்ற வருமானத்தை ஈட்டிக்கொள்ளக்கூடிய மாற்று தொழில்களை தேடிச் செல்ல வேண்டிய நிலைக்கு தொழிலாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

அதேநேரத்தில் தோட்டத் துறையில் எட்டு மணிநேரத்திற்கு அதிகமாக தொழிலாற்றி ஆயிரம் ரூபாவுக்கு குறைவான நாள் சம்பளத்தை பெற்றுக் கொள்வதற்கு அப்பால் நாளாந்தம் 2000/=ரூபாவுக்கு அதிகமான வருமானம் வரக்கூடிய விவசாய காணிகளில் வேலை,



ஹோட்டல்களில் வேலை உட்பட கூலி வேலைக்காக தொழிலாளர்கள் சென்று விடுகிறார்கள்.

இருப்பினும் நமது நாட்டில் காணப்படும் தொழில் துறைகளில் நாளாந்த வருமானத்தில் அதி குறைவான வருமானத்தை பெற்றுக் கொள்பவர்கள் தோட்டத் தொழிலாளிகள் என்பதற்கும் மாற்றுக் கருத்தில்லை.

உடல் ரீதியாக கஷ்டப்பட்டு தொழில் செய்பவர்கள் தோட்ட தொழிலாளர்கள் என்பது யாவரும் அறிந்த விடயம்.

இந்த நிலையில் தமது வருமானத்தை அதிகரித்து கொள்வதற்காகவும், குடும்பத்தை வறுமையில் இருந்து பாதுகாக்கவும் தொழிலாளர்கள் பலர் தோட்ட தொழிலில் இடைவிலகி மாற்று தொழிலுக்கு செல்கின்றனர்.

இன்னும் சிலர் தொழிலில் இடைவிலகி நாளாந்தம் கிடைக்கும் வருமானத்தில் சிறிய தொகையை வீட்டுக்காகவும் பாரிய தொகையை தமது உடல் வலியை போக்க மதுவுக்கும் செலவு செய்து வருகின்றனர்.

இந் நிலையில் தோட்ட தொழிலை இழந்து மாற்று இடங்களுக்கு நாளாந்த வருமானத்திற்கென செல்லும் தொழிலாளர்களின் உழைப்பை தோட்டப்பகுதிகளில் ஒரு சிலர் சுரண்டும் நிலையும் உருவாகியுள்ளது. அதாவது பிரதான நகரில் இருந்து தூரப் பிரதேச தோட்டங்கள் பல மலையகத்தில் காணப்படுகிறது.

இவ்வாறு காணப்படும் தோட்டங்களில் ஒரு சிலர் தொழிலாளர்களின் நாளாந்த உழைப்பை சுரண்டும் வகையில் சட்ட விரோத மது விற்பனையை செய்து வருவதுடன், இவர்கள் விற்பனக்கு கொண்டு வரும் சட்ட விரோத மதுவுக்கு

உழைக்கும் சில தொழிலாளர்கள் அடிமையாகி தமது உழைப்பை வீண் விரயம் செய்து வருகின்றனர்.

இது இன்று நேற்று உருவான பிரச்சினை அல்ல தோட்டப்பகுதியில் காலம் காலமாகவே இடம்பெற்று வரும் பாரிய பிரச்சினை என்றும் சொல்ல முடியும். ஆனால் இதை மாற்றியமைத்து,சேமிப்பு என்ற பழக்க வழக்கத்தை தொழிலாளர்களிடம் கொண்டு செல்கின்ற போது தோட்ட பெண்கள் சேமிப்பில் ஆர்வம் காட்டினாலும் குடும்ப பெண்கள் சேமிப்பதை ஆண்கள் எடுப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உடபுஸ்ஸலாவை பிரதேசத்தில் உள்ள தோட்டங்கள் சிலவற்றில் சட்டவிரோதமான கசிப்பு விற்பனை செய்யப்படுவதாகவும்,இதனால் எமது ஆண்கள்,இளம் சமூகத்தினர் கசிப்புக்கு அடிமையாகி நாளாந்தம் உழைக்கும் வருமானத்தை கசிப்புக்கு இரையாக்குகின்றனர்.

அதனடிப்படையில் உடப்புஸ்ஸலாவை ஒல்டிமார் தோட்டத்தின் பிரிவான ஊவா பரனகம, அம்பஸ்தோவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாம்பரத்தை மற்றும் கீரியகொலை ஆகிய தோட்டங்களில் வழமைக்கு மாறாக சட்ட விரோத மதுபான பாவனைக்கு இளைஞர்களும் அடிமையாகி உழைக்கும் பணத்தை கசிப்பு குடிக்கவே செலவு செய்து பாரிய பொருளாதார பாதிப்புக்கும் ஆளாகி வருவதாக தோட்ட பெண்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக குடும்ப கஷ்டம்,குடும்ப பிணக்கு, அடி, தடி,பொலிஸ் பிரச்சினை என பல்வேறு துன்பங்களுக்கு தோட்ட பெண்கள் முகம் கொடுத்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் தும்பவத்தை தோட்டப் பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாகவும், அதை கீரியகொலை தோட்டத்தில் மறைவிடம் ஒன்றில் விற்பனை செய்யப்படுவதாகவும் தோட்ட பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து தொழிற்சங்கங்கள், பொலிஸ் நிலையங்கள், சமூக தொண்டு நிறுவனங்களின் கவனத்திற்கு கொண்டு வந்த போதிலும் இன்னும் சரியான தீர்வு கிட்டவில்லை,

எனவே இந்த பிரச்சினைக்கு பொலிசார் மூலம் தீர்வு கிடைக்கப் பெற வேண்டும். பொலிஸாரால் சட்டவிரோத மதுபானம் தயாரிப்போர், விற்பனை செய்வோர் கைதுசெய்து தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும். இதனால் தோட்ட வேலையில் இருந்து விலகி அதிக வருமானத்தை ஈட்டி அதை சட்டவிரோத மதுபானத்துக்கு செலவு செய்யும் பாரிதாப நிலையில் இருந்து தொழிலாளரை மீட்கலாம்.

# உலகத் தமிழாராய்ச்சி மாநாடு எங்கே, எப்போது?

(செப்டெம்பர் 18 இதழ் தொடர்)

இலங்கையில் உலக தமிழாராய்ச்சி மாநாட்டு இலங்கை கிளையொன்று 80களில் இயங்கிவந்துள்ளது. அக்காலத்திலேயே இதில் பிரிவுகளும் பிளவுகளும் காணப்பட்டன. குரும்பசிட்டி கனகரட்ணத்தின் பண்பாட்டு அமைப்பும் சில காலம் ஒரு கிளையாக இயங்கியுள்ளது. இறுதியாக பேரா



இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 1968 இல் சென்னையில் நடைபெற்றபோது முதல்வர் அறிஞர் அண்ணாத்துரை, ஜனாதிபதி ஜாகீர் ஹுசைன், தமிழக ஆளுனர் உஜ்ஜல் சிங்

சிரியர் பத்மநாதன் மற்றும் குமரன் பதிப்பு இல்லத்தின் உரிமையாளர் க. குமரன் செயலாளராக இருந்துள்ளனர். 90 களின் பின் இவ்வமைப்பு காணாமற் போனது. 2000 மிலேனிய காலத்திலும் பின்னர் 2010 மற்றும் 2020 வரையிலும் எவ்வித அமைப்பும் இங்கே கிளையாக இயங்கியதில்லை.

## ஆளரவமற்றுக் கிடந்த இலங்கைக் கிளை கிளம்பி வந்தது எப்படி?

இக்கட்டுரையாளரான நான் 2013ஆம் ஆண்டு உலக தமிழியல் மாநாடு ( லண்டன்), செம்மொழி மாநாடு 2009 (கோவை), 9வது உலக தமிழாராச்சி மாநாடு 2015 (கோலாலம்பூர் மலேசியா) ஆகியவற்றில் கலந்து கொண்ட போதும், சென்னை தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பிராந்திய மாநாடுகளான மூன்று மாநாடுகளில் கலந்து கொண்ட போதும், இலங்கையில் எவ்வித கிளை அமைப்பும் இயங்கி வந்ததாக நான் அறியவில்லை. 2019 இல் 10வது உலக தமிழாராய்ச்சி நடைபெற்ற போதும் இலங்கை கிளை இயக்கத்தில் இல்லை. இருவர் அல்லது மூவர் தனிப்பட்ட முறையிலேயே மாநாட்டில் கலந்து கொண்டனர்.

2015இல் ஒன்பதாவது தமிழாராச்சி மாநாடு மலேசியா கோலாலம்பூரில் நடைபெற்ற போது அதில் 19 பேர் இலங்கை சார்பாகக் கலந்து கொண்டனர். இவர்களில் பலர் ஒன்றிணைந்து இலங்கை குழு என்ற ஓர் சந்திப்பினையும் நடாத்தி ஒரு புகைப்படமும் எடுத்தனர்.

**தான்தோன்றித்தனமாக யாரும் உரிமை கோர முடியாது. இக்கடிதத் தலைப்பில் இறந்தவர்களது பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, இலங்கை பிரஜைகளாக இல்லாதவர்களது பெயர்களும் காணப்படுகின்றன. இதில் கவனிக்கப்பட வேண்டிய விடயம் யாதெனில் இதுவரை உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ஒரு கட்டுரை கூட சமர்ப்பிக்காதவர்களின் பெயர்களும் பட்டியலில் காணப்படுவதாகும்.**

கலந்து கொண்டவர்களில் சிலர் புலம் பெயர்ந்த நாடுகளைச் சேர்ந்த இலங்கைத் தமிழர்களாவர். இவை எல்லாம் நடந்த போது இலங்கைக் கிளை எங்கே இருந்தது? இலங்கைக் கிளை ஆற்றிய விடயங்கள் யாவை? ஏன் இலங்கைக் கிளை இயங்கவில்லை? இவை பற்றி நாம் நிறையவே கலந்துரையாட வேண்டும். விமர்சனத்துக்கும் உள்ளாக்க வேண்டும்.

இந்த நிலையில் தான் சர்ஜா மற்றும் சிங்கப்பூரில் 11வது மாநாடு என்ற அறிவித்தல் வந்தது. வந்தவுடன் இலங்கை கிளையொன்றும் திடீரென முளைத்துள்ளது.

30வருடத்திற்கு முன் இருந்த சிலரும் இலங்கை பல்கலைகழகங்களில் தமிழ்த் துறைச் சார்ந்தவர்களினதும் பெயர்களைக் கொண்ட கடிதத் தலைப்பும் (letter head) தயாரிக்கப்பட்டு உலகத்திற்கு ஒற்றுமையை வலியுறுத்தியுள்ளனர்! 11வது மாநாடு பற்றிய இவர்களது அபிப்பிராயம் பக்கசார்பாகவும் காணப்படுகின்றது.



முதலாவது கோலாலம்பூர் மாநாட்டில் பேராசிரியர் டி.பறோ, பேராசிரியர் தனிநாயகம் அடிகளார், கலாநிதி மாதவ சாஸ்திரி, பண்டிட் ஜே.பி ரட்ணம் மற்றும் பேராசிரியர் குய்ப்பர்

இக்கிளையமைப்பு இதுவரை உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளில் கலந்து கொண்டவர்களைக் கொண்டு அமைக்கப்பட்டதாக இவர்களது ஒற்றுமையை வலியுறுத்தும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளில் கலந்து கொண்ட எனக்கு இப் புதிய கிளை பற்றி எவ்வித அறிவித்தலும் அனுப்பப்படவில்லை.

எனவே மேல் விவரங்களுக்காக கடிதத் தலைப்பில் காணப்பட்ட பெயர்களுடைய சிலரை தொடர்பு கொண்டு வினவிய போது இவ்வாறான கூட்டம் ஒன்று நடைபெறவில்லை என்றும் ஆனால் தமது பெயர்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும் கூறினர். ஆனால் இவ்வாறானதொரு அமைப்பு அல்லது கிளையானது அவசியமானதே!.

இக்கடிதத் தலைப்பில் தமிழ்த்துறை சார்ந்தோர் பெயர் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் தமிழ்த் துறைச் சாரா தமிழ் ஆய்வாளர்கள், இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள், பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். தமிழ் என்பது எல்லோருக்கும் பொதுவானதொன்றாகும்.

தான்தோன்றித்தனமாக யாரும் உரிமை கோர முடியாது. இக்கடிதத் தலைப்பில் இறந்தவர்களது பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, இலங்கை பிரஜைகளாக இல்லாதவர்களது பெயர்களும் காணப்படுகின்றன. இதில் கவனிக்கப்பட வேண்டிய விடயம் யாதெனில் இதுவரை உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ஒரு கட்டுரை கூட சமர்ப்பிக்காதவர்களின் பெயர்களும் பட்டியலில் காணப்படுவதாகும்.

11வது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு சார்ஜாவிலா? சிங்கப்பூரிலா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்!. இந்நிலையில் 12வது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு இந்தியா தமிழ்நாடு சென்னையில் நடைபெறும் என மற்றொரு விளம்பரம் தற்பொழுது தமிழ் நாட்டு செய்திகளில் வெளியாகியுள்ளது. எனவே, இவற்றைக் கட்டுப்படுத்த சர்வதேச ரீதியில் ஒரு சிறந்த முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்பு சகலரையும் இணைப்பதாக அமைக்கப்பட வேண்டும்.

உலகில் பல்வேறு நாடுகளில் பணியாற்றி வரும் தமிழறிஞர்கள், ஆய்வாளர்கள் மற்றும் படைப்பாளர்களை ஒருங்கிணைத்து தமிழ் ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டும்.

ஏனெனில் தமிழாய்வை ஒருமுகப்படுத்தவும் அதன் முலம் மொழியை வளப்படுத்தவும் தமிழறிஞர்கள் கூடி நடத்தும் உலக மாநாடே தமிழாய்வு மாநாடுகளாகும்.

'11ஆம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு தொடர்பாக சில ஐரோப்பிய நாடுகளுக்கும், மத்தியகிழக்கு நாடுகளுக்கும் அறிவித்தல்களை அனுப்பி உள்ளோம்.

நானும் இது குறித்து சில நாடுகளுக்கு செல்ல இருக்கிறேன். ஒவ்வொரு நாட்டில் இருந்தும் தமிழறிஞர்கள், மொழி வல்லுனர்கள், தமிழ் அமைப்புகள் மற்றும் சங்களில் இருந்து எவ்வளவு பேராளர்களை அழைப்பது போன்ற விடயங்கள் குறித்து செயற்குழுவில் விவாதித்து IATR தலைவர் டான்ஸ்ரீ மாரிமுத்து அறிவிப்பார்' என்று ஒரு அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, நான்தான் உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் தலைவர் என்று, தமிழகத்தைச் சேர்ந்த முனைவர் மு.பொன்னவைக்கோ அறிவித்திருப்பதோடு அந்த மன்றத்தின் 11ஆவது மாநாட்டை நடத்தும் பொறுப்பு தன்னிடமே உள்ளது' என்றும் தெரிவித்துள்ளார். என்ன புதுசு புதுசாக குழப்பங்கள் என்கிறீர்களா? என்னதான் ஆகப் போகிறது என்பதை பொறுத்திருந்து தான் பார்ப்போமே!



ஆர். மகேஸ்வரன்,...
நூலகர் பேராதனை பல்கலைக்கழகம் ...

# பாரம்பரியம் நிகழ்ச்சியில் "உ॰்॰வத்துல் இஸ்லாம்" சிங்கள நிகழ்ச்சி நினைவுகள்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் நாளை மறுதினம் செவ்வாய் (04.10.2022) இரவு 8.15 மணியளவில், ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சியில் உஃவத்துல் இஸ்லாம் சிங்கள நிகழ்ச்சியின் பாரம்பரிய நினைவுகள் பதிவாகின்றன.

முஸ்லிம் சேவைக்கு பாரிய பங்களிப்புகள் நல்கிய பிரபல சிரேஷ்ட ஒலிபரப்பாளரும், அறிவிப்பாளரும், மாதர் மஜ்லிஸ் முன்னாள் தயாரிப்பாளருமான கலாபூஷணம் புர்கான் பி இப்திகார், குறிப்பிட்ட இந்நிகழ்ச்சிக்கு கூடுதலான பங்கினை வழங்கிய முன்னாள் ஹமீத் அல் ஹுசைனி கல்லூரி ஆசிரியர் கலாபூஷணம் ஹனீமா இஷாக் ஆகியோர் இணைந்து பாரம்பரியம் நிகழ்ச்சியில் தங்களது அனுபவங்களைப் பதிவு செய்கிறார்கள்.





சிங்கள மொழியில் ஆர்வம் கொண்டோரின் மொழித்திறனை மேம்படுத்தும் நோக்கில், "உஃவத்துல் இஸ்லாம்" நிகழ்ச்சி முஸ்லிம் சேவையின் முன்னாள் தயாரிப்பாளர் மர்ஹூம் எம்.ஏ.முஹம்மத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது.

1957 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி இரவு 09.45 க்கு நேரடி நிகழ்ச்சியாக இந்நிகழ்ச்சி முதலாவதாக ஒலிபரப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சி குறித்து இலங்கை பாராளுமன்றத்திலும், பேசப்பட்டமை இந்நிகழ்ச்சியின் ஜனரஞ்சகத்துக்கு ஒரு சான்றாகிறது.

வாராவாரம், அரைமணிநேர சஞ்சிகை நிகழ்ச்சியாக, பேச்சு, சிறுகதை, நாடகம், உரையாடல், மணிமொழிகள், இஸ்லாமிய கீதங்கள், பெண்களுக்கான ஆக்கங்கள் என இன்னோரன்ன நிகழ்ச்சிகளை உள்ளடக்கியதாக ஒலிபரப்பாகியது. இந்நிகழ்ச்சிக்கு, சிரேஷ்ட சிங்கள நிகழ்ச்சி அதிகாரியும், ஒலிபரப்பாளருமான காலஞ்சென்ற தேவிஸ் குருகேயின் ஆதரவும் அப்போது கிடைத்தமை தனிச்சிறப்பு எனலாம். இந்நிகழ்ச்சி வாயிலாக இன உறவுக்கு ஒரு பாலம் அமைத்து, முஸ்லிம் சேவை பாதுகாத்து வந்த தனித்துவமான பாரம்பரியம் இது எனில் அது மிகையாகாது. முஸ்லிம் சேவையின் சிங்கள பாரம்பரியத்தினை சுமந்து வரும் இப்பாரம்பரியம் நிகழ்ச்சி தொடரினை, எம்.எஸ்.எம்.ஜின்னா தொகுத்தளிக்க, முஸ்லிம் சேவை பணிப்பாளர் எம்.ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு தேர்வான சுயாதீன அறிவிப்பாளர்கள் விபரம்

தகுதியும் திறமையும் வாய்ந்த இளைஞர் யுவதிகள் தமிழ் ஒலிபரப்பை மேலும் மேம்படுத்துவதற்காக, கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவின் பணிப்புரைக்கமைய கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் N.A.I. நளின் குமார நிஸ்ஸங்கவின் நெறிப்படுத்தலில், பிரதி பணிப்பாளர் நாயகம் (நிகழ்ச்சிப்பிரிவு) மயூரி அபேசிங்கவின் மேற்பார்வையில், தமிழ்ச்சேவை பணிப்பாளர் ஆர்.கணபதிப்பிள்ளையின் வழிகாட்டலில் இணைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ்ச்சேவை மற்றும் பிராந்திய சேவைகளான யாழ் எப்.எம், மலையக சேவை, பிறை எப்.எம் என்பவற்றிற்கு வரலாற்றில் அதிகூடிய இளைஞர், யுவதிகள் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவின் முயற்சியின் பயனாக சேவைக்காக இணைத்துக் கொள்ளப்பட்டிருப்பது இதுவே முதற் தடவையாகும் என்று தமிழ்ச்சேவை பணிப்பாளர் ஆர். கணபதிப்பிள்ளை தெரிவித்தார்.

### யாழ் எப் எம்

| தொடர் இலக்கம் | பெயர் |
|---|---|
| 01 | கந்தையா கலீபன் |
| 02 | கெலஸ்டியா ஜேசுதாசன் |
| 03 | யு.சங்கீத் |
| 04 | தனப்பிரியா அம்பலவாணர் |
| 05 | நிலானி சந்திரகுமார் |
| 06 | புஷ்பராணி ரவீந்திரன் |
| 07 | ஏ.விநோதவன் |

### பிறை எப் எம்

| தொடர் இலக்கம் | பெயர் |
|---|---|
| 01 | ஜலாலுடீன் பாத்திமா ஷில்மியா |
| 02 | ஜமால்டீன் மொஹம்மட் சமீர் |
| 03 | அஸ்வத்கான் பாத்திமா பர்வின் |
| 04 | லோரா ஷர்மிகா தர்மகுலசிங்கம் |
| 05 | அம்சார் மொஹம்மட் இன்சாப் |
| 06 | ரபீக் ரிப்கா |
| 07 | எம்.எவ்.பாஷிரா |

### மலையக சேவை

| தொடர் இலக்கம் | பெயர் |
|---|---|
| 01 | விஜயசேகரன் திலக்ஷனா |
| 02 | கிருஷ்ணமூர்த்தி தில்ருக்ஷி |
| 03 | எஸ்.மஜீவனா |
| 04 | செல்லதுரை தமயந்தி சந்திகா |
| 05 | கே.ரஜனி |
| 06 | சுந்தர்ராஜ் கோபிகா |
| 07 | சந்திரகுமார் அக்ஷயா |
| 08 | சாமிவேல் கிருஷாந்தினி |
| 09 | இன்பராஜா தனீஷா |
| 10 | மகாலிங்கம் பிரியா |
| 11 | எஸ்.என்.டில்ருக்ஷி |
| 12 | சுபாஷினி குமரகுரு |
| 13 | செல்லமுத்து ஷிரோமி |
| 14 | மனோஷியா திருமேனி |
| 15 | கே.ஜீவிதா |
| 16 | ஜி.பிரியாந்தனி |
| 17 | ரவிந்திரன் ஜனுக்ஷா |
| 18 | ரவிந்திரன் ரசிகா |
| 19 | சாம்பவி அந்தனி முருகதாஸ் |
| 20 | என்.ஷனுஜா |
| 21 | நாயகர் லிங்கேஸ்வரி |
| 22 | செல்வராஜ் நளாயினி |
| 23 | எஸ்.பிரவீணா |
| 24 | மதுஷா மகாலிங்கம் |
| 25 | எம்.என்.எப்.சாஜிதா |
| 26 | எம்.ஜே.அஸ்மா ஷெரீன் |
| 27 | சத்தியமூர்த்தி பாலசுப்ரமணியம் |

### தமிழ்ச்சேவை

| தொடர் இலக்கம் | பெயர் |
|---|---|
| 01 | சக்தீஷ்வர்யா கணேசன் |
| 02 | இளையதம்பி மிம்மி ஷர்மிளா |
| 03 | உதயகுமார் சங்கீதா |
| 04 | மொஹம்மட் உவைஸ் பாத்திமா ரம்லா |
| 05 | தாரணி மயில்வாகனம் |
| 06 | புத்திரசிகாமணி யசோதரை |
| 07 | சுப்பையா ஸ்ரீ நாகவாணிராஜா |
| 08 | பிரகலாதன் பிரதீபன் |
| 09 | எம்.ஐ.மொஹம்மட் இன்ஷாப் |
| 10 | ராஜ்குமார் சதுர்ஜன் |
| 11 | லைலா அக்ஷியா |
| 12 | நிருக்ஷனா ஜெயகுமார் |
| 13 | தாரணி அங்கப்பன் |
| 14 | வீரையா சுதாகரன் |
| 15 | எம்.ரி.எம் ஜம்சீத் |
| 16 | இந்திரகுமார் டில்ஷானி |
| 17 | எம்.சி.நஜிமுதீன் |
| 18 | சி.எம்.எம்.சுபௌ |
| 19 | ரவிச்சந்திரன் அம்சத்வனி |
| 20 | வேலினி சிங்காரவேலாயுதம் |
| 21 | தங்கராஜா பிரமிளா |
| 22 | ரி. கீதனா |
| 23 | பி.விதுர்ஷன் |
| 24 | மரியா ஷிராணி என்டன் ரஜ்னித் |
| 25 | ஜி.மிதுலாஷினி |
| 26 | சசிகுமார் மதுஷா |
| 27 | இஷ்ரா இஸ்மத் |
| 28 | திவ்யா ராஜகோபால் |
| 29 | டப்ள்யு.ஏ.டி.டி விதான ஆரச்சி |
| 30 | நிஷான் துஜா பாலசுப்ரமணியம் |
| 31 | ரவிச்சந்திரன் பூஜா அமந்தி |
| 32 | விஜயரட்ணம் துளசிகா |
| 33 | கிருத்திகா சக்திவேல் |
| 34 | பாரதி பாலசுப்ரமணியம் |
| 35 | சதீஷன் கனகசுந்தரம் |
| 36 | பி.எனட் |
| 37 | ஆர்.நர்த்திகா |
| 38 | ரி.கம்சிகா |
| 39 | ஹசனியா பானு |
| 40 | ஏ.ஏ.பைசான் யாக்கூப் |
| 41 | நிவ்லா ரசீத் |
| 42 | சி.முரளிதரன் |
| 43 | தேவசகாயன் றொட்னி |
| 44 | கிருஷ்ணசாமி தினோஷா |
| 45 | இராமசந்திரன் செந்தில்நாதன் |
| 46 | அக்ஷாயினி சுப்ரமணியம் |
| 47 | எஸ்.ஹம்சபிரியா |
| 48 | வடிவேல் தரணீஸ்வர் |
| 49 | லிருப்தா நவீந்திரன் |
| 50 | புஹாரி மொஹிடீன் கியாஸ் அஹமட் |
| 51 | ஷஸ்ரி பாரிப் |
| 52 | உதயகுமார் வத்ஷாலன் அஜய் |
| 53 | ஆர் .கௌசல்யாதேவி |
| 54 | கண்ணன் வித்தியகலா |
| 55 | காயத்ரி கோபிசுதன் |
| 56 | நிருபிதா பொன்னுதுரை |
| 57 | வடிவேல் சந்திரன் |
| 58 | ஏ.ரி. சின்னராஜா |

# ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

# வெற்றிடங்கள்

## அவசர சிகிச்சைப் பிரிவிற்கான அவசர மருந்துகள் நிபுணர் பதவி

## (Post of Consultant in Emergency Medicine for Emergency Treatment Unit [ETU])

பின்வரும் பதவிக்காக விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

**தகைமைகள்** : கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் (PGIM) அவசர மருந்துகள் MD சபைச் சான்றிதழ் சகிதம் அரசாங்க அல்லது தனியார்துறை வைத்தியசாலையின் நிபுணத்துவ மருத்துவ அதிகாரி.

**வயது** : விண்ணப்பதாரர்கள் 50 வயதிற்குக் குறைவானவர்களாகவிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** : ரூபா 118,800-12x3645-162,540/- மாதாந்தம்.

மேற்படி சம்பளத்திற்கு மேலதிகமாக அரசாங்கத் துறையினருக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளும் மற்றும் சபையினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.

சேவைக்கு அமர்த்துவதற்கான நியதிகள்: நிரந்தரம் மற்றும் ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலாகும்.

அரச சேவையில் உள்ள ஊழியர்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனக் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும். அதன் பிரதியை நேரடியாக அனுப்பலாம். விண்ணப்பதாரர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைமையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

நியமனத்தை வழங்கும் / வழங்காமல் விடும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும்.

2022-03-02ஆம் திகதி இது தொடர்பிலான முன்னைய விளம்பரத்தின் பிரகாரம் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களும் கவனத்திற் கொள்ளப்படும்.

விண்ணப்பதாரர்கள் 2022-10-17ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது முழுமையான சுய தரவுகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு (02) சான்று பகர்வோரின் பெயர்களுடன் தமது விண்ணப்பங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**
2022 செப்டெம்பர் 28ஆம் திகதி.

# அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

# அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் தொழில் வாய்ப்புகள்

SMIB, தேசத்தின் முதன்மையான வீடமைப்பு வங்கியாக, வங்கியின் செயற்பாட்டை மறுசீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது, இது வாடிக்கையாளர்களுக்கு மிகவும் திருப்திகரமான மற்றும் பல்வேறு சேவைகளை வழங்கும் நிறுவனமாகும். அதுபோல, பின்வரும் தலைமைத்துவப் பதவிகளுக்கான பொருத்தமான தகுதிகள் மற்றும் அனுபவத்துடன் வணிக இலக்குகளை அடைவதற்கு ஆற்றல் மிக்க தலைமைப் பாத்திரங்களை வெளிப்படுத்தி முழு அர்ப்பணிப்புடன் செயற்படும் அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்களை நாங்கள் அழைக்கிறோம்.

## முறைமை பகுப்பாய்வாளர் / நிகழ்ச்சித் திட்டமிடுநர் (பொது செயலிகள்)

## System Analyst/Programmer (General Applications)

**முக்கிய பொறுப்புகள்:**

- செயலி முறைமைகளின் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி
- தேவைப்பாடுகளின் பகுப்பாய்வு மற்றும் புதிய தீர்வுகளை அபிவிருத்தி செய்தல்
- புதிய செயலிகள் மற்றும் கருவிகளை அமுல்படுத்துதல்
- முறைமை பரிசீலனை
- Trouble shooting issues
- தொழில்நுட்ப ஆவணங்களைப் பராமரித்தல்

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட கணனி விஞ்ஞானப் பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட எண்கணிதம், புள்ளிவிபரவியல் பட்டம் அல்லது கணனி முறைமை வடிவமைப்பில் இலத்திரனியல் சகிதமான டப்ளோமா (குறைந்தபட்சம் இரண்டு வருடங்கள்) அல்லது வியாபார முகாமைத்துவ தேசிய நிறுவனம் (NIMB) அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் இதற்குச் சமமான தகைமை.

**அனுபவம்**

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தகவல் தொழிலநுட்பத் துறையில் ஒட்டுமொத்தமாக 4 ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். இதில் குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் நிகழ்ச்சித் திட்டமிடுநராகவிருத்தல் வேண்டும். வங்கி அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் உள்ள அனுபவத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும். அபேட்சகர்கள் சிறந்த தொடர்பாடல் பிரத்தியேக திறனைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**சம்பளம்**

சம்பள அளவு: ஒரு மாதத்திற்கு வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் சகிதம் ரூபா **62,060 – 980 x 20 - 81,660**. (10% கொடுப்பனவு, வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் வாடகைக் கொடுப்பனவு) இதன் பிரகாரம் மாதாந்த மொத்தச் சம்பளம் அண்ணளவாக இருக்கும்.

வயது: 52 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே ஒரு அரச துறை நிறுவனத்தில் வேலை செய்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)

**பொது நிபந்தனைகள்**

தேர்வு முறை - வங்கியின் ஆட்சேர்ப்பு கொள்கை மற்றும் நடைமுறைக்கு ஏற்ப விண்ணப்பங்கள் அழைக்கப்படும்.

நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

**பிற நன்மைகள்**

- ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 15% தொழில் வழங்குநரால் பங்களிப்புச் செய்யப்படும் மற்றும் பணியாளரால் 10% பங்களிப்புச் செய்தல் வேண்டும். வங்கி ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு (ETF) பங்களிப்புச் செய்யும்.
- வருடாந்த போனஸாக இரண்டு மாத சம்பளம்.
- சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட பிறகு சலுகை விகிதத்தில் வீடமைப்புக் கடன்கள்
- வங்கியின் மருத்துவத் திட்டத்தின் கீழ் நன்மைகள்
- பயன்படுத்தப்படாத மருத்துவ விடுமுறைக்கான கொடுப்பனவுகள்

**விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் - 18/10/2022**

**விண்ணப்பிக்கும் முறை**

ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் தங்கள் கல்வி/ தொழில்சார் சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் இரண்டு தொழில்சார் உறவினரல்லாத சான்றுபகர்வோரின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பு எண்களை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

அனைத்து விண்ணப்பங்களும் மிகவும் இரகசியமாகப் பேணப்படும் என்பதுடன் எந்தவிதமான ஆதரவு பெற முயல்தல் தகுதியற்றதாக கருதப்படும். ஆட்சேர்ப்பு தெரிவை ஒத்திவைத்தல் அல்லது இரத்துச் செய்தல் அல்லது வேறு எந்த நடவடிக்கையும் மற்றும்/அல்லது இந்த ஆட்சேர்ப்புக்கான தேர்வு மூலப் பிரமாணங்களை மாற்றும் உரிமையை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. பணிப்பாளர் சபையின் தீர்மானம் இறுதியானதாகவும் மற்றும் உறுதியானதாகவும் இருக்கும்.

**விண்ணப்பங்களை Careers@smib.lk மூலமாக மட்டுமே அனுப்பப்படல் வேண்டும்.**

# அலவ்வ பிரதேச சபை

## 2023ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்ட வரவு செலவு அறிக்கை

அலவ்வ பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டிற்கான வரைவு வரவு செலவு அறிக்கையானது, 2022 செப்டம்பர் 30 முதல் 2022 ஒக்டோபர் 11 வரை (அரச விடுமுறை நாட்கள் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் தவிர்ந்த) அலுவலக நேரங்களில் அலவ்வ பிரதேச சபையின் அலுவலகத்தில் பொது மக்களின் பரிசீலனைக்காக வைக்கப்பட்டுள்ளதென, பிரதேச சபை வரவு செலவு அறிக்கையை அமுலாக்கும் சட்டத்தின் 10.2(ஆ) இன் பிரகாரம் பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**பத்மாலேத்தேவ**
**தலைவர்**
**அலவ்வ பிரதேச சபை**

**2022 செப்டம்பர் 23ஆம் திகதி**
**அலவ்வ பிரதேச சபை**
**அலவ்வ.**

# உடனடியாக வேலைவாய்ப்பு

01. விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் வடிவமைத்தல் நிர்வாகி (Sales Marketing and Designing Executive)
02. காசாளர் (Cashier)
03. தகவல் பதிவு இயக்குநர் (Date Entry Operator)
04. செயலாளர் (Secretary)

- டிப்ளோமா அல்லது சந்தைப்படுத்தலில் உயர்தரக் கல்வி
- வலை வடிவமைப்பு மற்றும் மென்பொருள் பற்றிய அறிவு
- குறித்த துறையில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம்
- ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் சிறந்த அறிவு
- வயது வரம்பு 45

கொழும்பு மற்றும் அதற்கு அருகில் உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.

விருப்பமுடையோர் உங்கள் சுயவிபர கோவையை ஆங்கில மொழியில் விண்ணப்பித்து இந்த வேலை தேவை என குறிப்பிட்டு topurgentvacancy@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு ஒக்டோபர் 05ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவும்.

**தொலைபேசி எண்: 0718 702 466**
**மின்னஞ்சல்: topurgentvacancy@gmail.com**
**Only around Colombo/ No. 69, Ceylinco House**

# நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

## அரசாங்க இலத்திரனியல் பெறுகை (e-GP) செயலகம்

# பிரதி செயற்றிட்டப் பணிப்பாளரை ஆட்சேர்த்தல்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழுள்ள GP முறைமையை அமுல்படுத்துவதற்கு அரசாங்க இலத்திரனியல் பெறுகை செயலகத்திலுள்ள (e-GP) செயலகம்) பின்வரும் பதவிக்காக பொருத்தமான தகைமை மற்றும் அனுபவம் வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 1. பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் (PS2) - 01 பதவி

**மாதாந்தக் கொடுப்பனவு (அனைத்தும் உள்ளடங்களாக) ரூபா 84,000.00**

**வயதெல்லை: 62 வயதிற்குக் குறைவானவர்கள்**

**தகைமைகள்:**

1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி/ இலத்திரனியல் / செயற்றிட்ட முகாமைத்துவம் அல்லது தகவல் தொழில்நுட்பத் துறையில் வெற்றிகரமாக இளமாணிப் பட்டத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

மேற்குறிப்பிடப்பட்ட துறைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதற்குச் சமமான பட்டத் தகைமை.

**அல்லது**

மேற்குறிப்பிடப்பட்ட துறைகளில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஒரு தொழில்சார் தகைமை / இணை அங்கத்துவம்

**அத்துடன்**

முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 7 வருட காலம் தகைமைக்குப் பின்னரான அனுபவம் இதில் 3 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலானதாக இருத்தல் வேண்டும்.

2) நாடு முழுவதற்குமான அரசாங்க சேவையில் 1ஆம் வகுப்பு அதிகாரி அல்லது இயைபுடைய துறையில் நிகரான நிலைமை.

அத்துடன் 1ஆம் வகுப்பு பதவியில் 2 வருட கால அனுபவம்.

தகவல் தொழில்நுட்ப செயற்றிட்ட முகாமைத்துவம், அரசாங்க பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நிர்வாகம் சிறந்த அறிவாற்றல் மற்றும் உள்நாட்டு/ வெளிநாட்டு நிதியிடல் திட்டங்களில் அனுபவம் வாய்ந்த அபேட்சகர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தெரிவு முறை:**

இயைபுடைய தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் குறும்பட்டியலிடப்படும் அபேட்சகர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

**ஆட்சேர்த்தல் அடிப்படை:**

ஒரு வருடத்திற்கான ஒப்பந்த அடிப்படையில். (செயற்றிறனின் அடிப்படையில் நீடிக்கப்படலாம்) விதிகள் மற்றும் நிபந்தனைகள்:

தொடர்புடைய நியமனத்திற்கு 2019-03-16ஆம் திகதி 01/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் சகல நிபந்தனைகளும் பிரயோகிக்கப்படும்.

கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் சகிதம் அபேட்சகரின் அனுபவத்திற்கான தகுதி சாட்சிகளை 2022-10-10ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு மட்டும் அனுப்பவும்.

**egphr@promise.lk**

**பணிப்பாளர்,**
e-GP **செயலகம்,**
**2ஆம் தளம், புதிய கட்டிடம்,**
**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு.**
2022-10-02.

# துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு

## இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை

## கேள்வி கோரல் - IFB-SP/2022-08

### சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் கேட்போர் கூடத்திற்கான கரையான் கட்டுப்பாட்டு சிகிச்சை

### (ANTI –TERMITE TREATMENT)

1. சிவில் விமான சேவைகள் அதிகார சபை சார்பில் திணைக்களப் பெறுகைக் குழுத் (DPC) தலைவரினால் இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் கேட்போர் கூடத்திற்கான கரையான் கட்டுபாட்டு சிகிச்சையை வழங்குவதற்காக தகைமை வாய்ந்த தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
2. 2022 ஒக்டோபர் மாதம் 04ஆம் திகதி முதல் 2022 ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுல் எழுத்து மூல வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்ததன் பின் மீளளிக்கப்படாத ஆயிரத்து ஐந்நூறு (1500.00) (வெட் இன்றி) ரூபா கட்டணத்தைச் இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபைக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தி கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
3. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் கட்டுநாயக்க, மினுவங்கொட வீதி, இல. 152/1, சிவில் விமான சேவைகள் சூழல் ஆராய்ச்சி மற்றும் செயற்றிட்டப் பிரிவின் 0112358824 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. கேள்விகளைச் சமர்ப்பிக்கும் அனைத்து கேள்விதாரர்களினாலும் ஐம்பதாயிரம் (50,000.00) ரூபாவுக்கான இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் பெற்றுக்கொண்ட பிணை முறியொன்றை வைப்புச் செய்தல் வேண்டும். கேள்விகள் திறக்கப்படும் நாள் முதல் 90 நாட்களுக்கு கேள்விப் பிணை முறி செல்லுபடியாதல் வேண்டும்.
5. கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று 2022 ஒக்டோபர் மாதம் 04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கட்டுநாயக்க, மினுவங்கொட வீதி, இல. 152/1, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையில் இடம்பெறும்.
6. 2022 ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் கட்டுநாயக்க, மினுவங்கொட வீதி, இல. 152/1, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவருக்கு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளைக் கிடைக்கச் செய்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் கேட்போர் கூடத்திற்கான கரையான் கட்டுப்பாட்டுச் சிகிச்சை'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
7. கேள்வியைக் கையளிப்பதற்கு தகைமை பெறும் நிறுவனத்தினால் முழு ஒப்பந்தப் பெறுமதியின் 05% பெறுமதியான இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பெயரில் பெற்றுக்கொண்ட நிபந்தனைகளற்ற செயற்றிறன் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். எதிர்பார்க்கப்படும் செயற்றிறன் மட்டத்திலான சேவை கிடைக்காவிட்டால் அதை அறவிட்டுக் கொள்ளும் உரிமையை இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
9. 2022 ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான காலம் முடிவடைந்தவுடன் உடன் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை,**
**இல. 152/1, மினுவாங்கொட வீதி,**
**கட்டுநாயக்க.**




# பெறுகை அறிவித்தல்

## இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் – மிஹிந்தலை

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் இந்தப் பல்கலைக்கழகத்தின் பின்வரும் சிற்றுண்டிச்சாலைகளை நடாத்திக்கொண்டு செல்லுதல் (காலை / பகல் / இரவு உணவு வழங்குவதற்கு இயலுமானவர்கள்) தொடர்பில் குறைந்தபட்சம் மூன்று வருடகால அனுபவத்தைக் கொண்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. மருத்துவ மற்றும் சமாந்தர விஞ்ஞான பீடத்தின் பேராசிரியர் பிரிவின் சிற்றுண்டிச்சாலை (அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பேராசிரியர் பிரிவு)
02. விவசாயப் பீட மாணவர் நிலைய சிற்றுண்டிச்சாலை (புளியங்குளம் வளாகம்)
03. விவசாயப் பீட பேராசிரியர் உபசேன சிற்றுண்டிச்சாலை (புளியங்குளம் வளாகம்)
04. விகாரமகாதேவி விடுதி சிற்றுண்டிச்சாலை (மிஹிந்தலை வளாகம்)
05. சங்கமித்தா விடுதி (மிஹிந்தலை வளாகம்)
06. தொழில்நுட்ப பீடம் கிரிகல (மிஹிந்தலை வளாகம்)

இதன் பிரகாரம் மேற்கூறிய சிற்றுண்டிச்சாலைக்கு பல்கலைக்கழகத்தினால் 75kg அளவு எரிவாயு பெறுமதிக்கான பணம், ஒரு ஊழியருக்கு 15000.00 ரூபாவாகும் வகையில் 03 அல்லது 04 ஊழியர்களுக்கான (மாணவர்கள் எண்ணிக்கையின் பிரகாரம்) சம்பளம், சிற்றுண்டிச்சாலையை நடாத்திக் கொண்டு செல்வதற்கான கட்டிடம், மின்சாரம், நீர் மற்றும் ஊழியர்களுக்கான தங்குமிட வசதி என்பன இலவசமாக வழங்கப்படும் என்பதுடன் தேவையான அடிப்படை உபகரணங்களும் வழங்கப்படும். (கிரிகல்லுக்கு எரிவாயு பற்றுச்சீட்டு, ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் தங்குமிட வசதிகள் என்பன கிடைக்காது என்பதுடன் மின்சாரம் மற்றும் நீர் வசதிகள் வழங்கப்படும்).

மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 5000.00 ரூபா தொகை மற்றும் மீளளிக்கப்படும் 3000.00 கேள்விக் கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022.10.04ஆம் திகதி முதல் பொதுவான அலுவலக நேரங்களில் பல்கலைக்கழகத்தின் மாணவர் சேவை பிரிவிலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விலைக்கோரல்கள் சமர்ப்பிக்கப்படும் விடயத்தை தெளிவாக கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். அனுபவத்தை உறுதி செய்வதற்குத் தேவையான ஆவணங்கள் மற்றும் கேள்விதாரரின் புகைப்படமொன்றை சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.

முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பதிவாளர், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹிந்தலை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

2022-10-18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கேள்விப் படிவங்களைக் கிடைக்கச் செய்தல் வேண்டும் என்பதுடன் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு கேள்விப்படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மிஹிந்தலை இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அலுவலகத்தில் 2022-10-18ஆம் திகதி பி.ப. 2.15 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இதில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது தெளிவுபடுத்திக்கொள்ளல் தேவையாயின் இந்த பல்கலைக்கழகத்தின் மாணவர் சேவை பிரிவின் உதவிப் பதிவாளர் (மாணவர் சேவை) அவர்களிடமிருந்து பின்வரும் தொலைபேசி இலக்கத்தில் விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 025-2266577) இந்த விடயம் தொடர்பில் பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**பதிவாளர்,**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹிந்தலை.**
2022-09-28.

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams

**கடந்த காலத்தில் நாட்டில் எங்கு பார்த்தாலும் வரிசைகள்தான் காணப்பட்டன. எரிபொருள் முதல் அத்தியாவசியப் பொருட்கள் வரை அனைத்தையும் பெற்றுக்கொள்வதில் வரிசைதான் காணப்பட்டது என்கிறார் ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார். தினகரன் வாரமஞ்சரிக்கு அவர் வழங்கிய நேர்காணலில் அந்த யுகத்தை முடிவுக்கு கொண்டு வந்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் என்கிறார். நேர்காணலின் முழுவிபரம்.....**



# வரிசை யுகத்தை முடிவுக்கு கொண்டுவந்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே

## இரத்தினபுரி மாவட்ட ஐ.தே.க அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார்

**ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் என்ற ரீதியில் எவ்வாறான பணிகளை இரத்தினபுரி மாவட்டத்தில் இதுவரை காலம் முன்னெடுத்துள்ளீர்கள்?**

நான் முதல் முறையாக 2020ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐ.தே.கவின் சார்பில் இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிட்டேன். அப்போது ஐ.தே.க மிகவும் வலுவிழந்து காணப்பட்ட காலப்பகுதியாகும். என்றாலும் கட்சி என்னை நம்பி அளித்த பாரிய பொறுப்பை நிறைவேற்றும் நோக்கில் குறித்த தேர்தலில் நான் போட்டியிட்டதுடன், பன்னிரெண்டாயிரதுக்கும் அதிகமான வாக்குகளையும் பெற்றேன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு அடுத்தபடியாக நான்தான் கட்சியில் அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்றேன். இரத்தினபுரி மாவட்ட தமிழ் மக்கள் என்மீது வைத்த அந்த நம்பிக்கைக்கு நன்றி கூறுவதுடன், இன்றும் அவர்களுக்கு உண்மையாக பணியாற்றி வருகிறேன்.

கொரோனா காலப்பகுதியில் எனது தனிப்பட்ட நிதியில் ஆயிரக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் வழங்கினேன். நான் எப்போதும் கட்சி பேதம் பார்ப்பதில்லை. இந்திய வம்சாவளி மக்கள் அனைவருக்கும் பொதுவானதாக எனது உதவிகள் இருக்கும். கொரோனா காலப்பகுதியில் நான் முன்னெடுத்த உதவித்திட்டங்கள் தொடர்பில் இரத்தினபுரி மாவட்ட மக்களுக்கு நன்றாகத் தெரியும். அதனால் அங்கு பாரம்பரியமாக அரசியல் செய்து மக்களை ஏமாற்றிய நபர்களை விட்டு இன்று மக்கள் என்னுடன் கைகோர்த்துள்ளனர்.

அதேபோன்று பல வறுமையான குடும்பங்களுக்கு நான் தனிப்பட்ட ரீதியில் உதவிகளை செய்துள்ளேன். இதனை நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விளம்பரப் படுத்திக்கொள்ளவில்லை. மாவட்டத்தில் பல பாடசாலைகளுக்கும் உதவிகளை செய்துள்ளேன். மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வையும் பெற்றுக்கொடுத்துள்ளேன். நாம் அதிகாரத்தில் இல்லாத சந்தர்ப்பத்தில் இவ்வாறு எனது உதவித் திட்டங்களை முன்னெடுத்திருந்தேன். தற்போது எமது ஜனாதிபதி தெரிவாகியுள்ளார். நிச்சயமாக எதிர்காலத்தில் பல திட்டங்களை மக்களுக்காக முன்னெடுப்பேன்.

**இரத்தினபுரி மாவட்டத்தில் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தாலும் தற்போது உங்கள் ஆட்சியால் பொறுப்புமிக்க பதவியில் இருக்கின்றீர்கள். இது தொடர்பில் என்ன நினைக்கின்றீர்கள்?**

பல தசாப்தங்களாக ஐ.தே.கவுக்கு ஜனாதிபதி பதவி கிடைத்திருக்கவில்லை. தற்போதைய ஜனாதிபதியின் கீழ் பல சந்தர்ப்பங்களில் நாட்டின் ஆட்சியை நாம் கைப்பற்றியிருந்த போதிலும் அந்த அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் மாற்றுக் கட்சிகளின் ஜனாதிபதிகளே அதிகாரத்தில் இருந்தனர். அதனால் எம்மால் பல முக்கிய தீர்மானங்களை எடுத்து பணியாற்ற முடியாது போனது. பல சந்தர்ப்பங்களில் மக்கள் எடுத்த தவறான தீர்மானங்களால் இன்று நாட்டின் பொருளாதாரம் அதளபாதாளத்தில் உள்ளது.

இந்த நாட்டின் பொருளாதாரத்தை தலைநிமிர்த்தி நாமும் உலக நாடுகளுடன் போட்டிபோட வேண்டும் என்ற ஒற்றை சிந்தனையில் செயல்படும் ஒரே நபர் ரணில் விக்கிரமசிங்கதான். அவருக்கான முழுமையான வாய்ப்பை மக்கள் கடந்த காலத்தில் வழங்கியிருக்கவில்லை. தற்போதைய இக்கட்டான நிலையில்தான் அவர் நாட்டின் ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ளார். அவர் மீண்டும் நாட்டை உயர்ந்த நிலைக்கு கொண்டுசெல்வார். அதற்கான செயல்பாடுகளை இன்று மக்கள் நேரில் காண்கின்றனர். ஜனாதிபதிக்கு உலகம் முழுவதும் கிடைக்கும் வரவேற்பை அனைவரும் பார்க்கின்றனர்.

ஜனாதிபதி மற்றும் எமது கட்சியில் எனக்குள்ள தொடர்புகள் ஊடாக இரத்தினபுரி மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதே எனது முதன்மை குறிகோளாகவுள்ளது. அதற்கான அனைத்து பணிகளையும் நான் முன்னெடுத்து வருகிறேன்.

எமது மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில் அரசாங்கத்தினதும் ஜனாதிபதியினதும் கவனத்துக்கு கொண்டுசென்றுள்ளேன். சமூர்த்தி வழங்கும் புதிய நடைமுறையில் இரத்தினபுரி மாவட்ட தோட்டப்புற மக்களுக்கும் முன்னுரிமை வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளேன். அதேபோன்று மாவட்டத்தில் காணப்படும் பாடசாலைகள், மாணவர்களது பிரச்சினை குறித்து கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமாருடன் அண்மையில் கலந்துரையாடினேன். உறுதியாக கல்விப் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்குவதாக அவர் கூறினார்.

அதேபோன்று ஜனாதிபதியின் செயலாளராக உள்ள எமது கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தனவுடன் மாவட்டத்தில் தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியுள்ளேன். நிச்சயமாக நான் மக்கள் எதிர்பார்க்கும் பணிகளை எதிர்காலத்தில் செய்ய உள்ளேன்.

**உங்களின் தேர்தல் கால வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுமா?**

நான் எப்போதும் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியே பழக்கப்பட்டுள்ளேன். செய்ய முடியாத வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றும் மோசமான எண்ணங்களும் என்னுள் இல்லை. இதனால்தான் நான் தேர்தலில் தோல்வியடைந்திருந்தாலும் மக்கள் இன்றும் என்னோடு கைகோர்த்து செயல்படுகின்றனர். பாராளுமன்றத்தில் எமது கட்சிக்கு ஒரு ஆசனம் மாத்திரமே உள்ளது. பெரும்பான்மையான அமைச்சுப் பதவிகள் பொதுஜன பெரமுன வசம்தான் உள்ளன. ஜனாதிபதி மாத்திரமே எமது கட்சியை சார்ந்தவர். நாம் இணைந்து பயணிக்க வேண்டியுள்ளது. ஆகவே, என்னால் முடிந்த அனைத்து விடயங்களையும் எமது மக்களுக்கு செய்வேன்.

**ஐ.தே.கா வின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் என்ற ரீதியில் உங்கள் மாவட்டத்தில் முன்னெடுக்கவுள்ள அபிவிருத்தி திட்டங்கள் யாவை?**

பாரிய அபிவிருத்திட்டங்களை செய்யக்கூடிய நிலையில் நாட்டின் பொருளாதாரம் இல்லை. நாம் இக்கட்டான காலப் பகுதியில் பயணிக்கிறோம். அந்நிய செலாவணி கையிருப்பு தொடர்பில் பல சிக்கல்கள் உள்ளன. எரிபொருள், எரிவாயு மற்றும் மக்களுக்கான அத்தியாவசியத் தேவைகளை பூர்த்தி செய்வதே ஜனாதிபதியின் முதன்மை இலக்காக உள்ளது. சர்வதேச நாயண நிதியம் உட்பட எமது கடன் வழங்குனர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறோம்.



இந்த இக்கட்டான காலப்பகுதியை நாம் கடக்க வேண்டியுள்ளது. அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் மீண்டும் எமது பொருளாதாரம் வழமைக்கு திரும்பும் என ஜனாதிபதி கூறியுள்ளார். இந்தக் காலப்பகுதியில் மக்களுக்கு தேவையான அத்தியாவசிய விடயங்களை பெற்றுக் கொடுப்பதே எமது முதன்மையான பணியாகும். அபிவிருத்திப் பணிகள் குறித்து தற்போது எதனையும் கூற முடியாது. ஆனால், நாடு வழமைக்கு திரும்புவது கட்டாயம். பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க ஐ.தே.க திட்டமிட்டுள்ளது.

**நாட்டில் பொருளாதார சுமையை குறைக்கவும் நாட்டை அபிவிருத்தி பாதைக்கு கொண்டு செல்லவும் ஐ.தே.காவின் புது திட்டங்கள் ஏதும் உள்ளனவா?**

ஆம். பல திட்டங்களை ஐ.தே.க வைத்துள்ளது. ஐ.தே.கவின் திட்டம் என்பது ஜனாதிபதி எடுக்கும் தீர்மானங்கள்தான்.

கடந்த காலத்தில் நாட்டில் எங்கு பார்த்தாலும் வரிசைகள்தான் காணப்பட்டன. எரிபொருள் முதல் அத்தியாவசியப் பொருட்கள் வரை அனைத்தையும் பெற்றுக்கொள்வதில் வரிசைதான் காணப்பட்டது. அந்த யுகத்தை ஜனாதிபதி முடிவுக்கு கொண்டுவந்துள்ளார். மக்களின் பொருளாதார சுமையை குறைக்க இதுதான் ஜனாதிபதியின் முதன்மை திட்டமாக இருந்தது. அதில் நாம் வெற்றி கண்டுள்ளோம். இன்று மக்கள் வரிசை நிற்கும் நிலை மாற்றப்பட்டுள்ளது. இதற்கு அடுத்தகட்ட பணி அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைத்து பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதாகும்.

அதற்கான கொள்கைகளை ஜனாதிபதி வகுத்துள்ளார். சிங்கப்பூர், ஜப்பான், இந்தியா உட்பட பல நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செய்துகொள்ள ஜனாதிபதி பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார். அவரது அண்மைய வெளிநாட்டு விஜயங்களின் போது இவை தொடர்பில் பேசப்பட்டதை நாம் அனைவரும் அறிவோம்.

அதேபோன்று வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலாத்துறையை மீளக் கட்டியெழுப்ப அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ ஊடாக பல்வேறு செயல்பாடுகளை முன்னெடுக்க ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார். அத்திட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எல்லாவற்றுக்கும் அப்பால் நாட்டை உணவு உற்பத்தியில் தன்னிறைவடைந்த நாடாக மாற்றுவது ஜனாதிபதியின் முக்கிய இலக்காக உள்ளது. அதேவேளை, நாட்டின் ஏற்றுமதியையும் அதிகரிப்பதும் அவரது பிரதான தீர்மானமாகும். இந்த விடயங்கள் ஒவ்வொன்றாக நடைமுறைப்படுத்தப்படும் போது நாடு மீண்டும் சுபீட்சத்தை நோக்கி நகரும்.

**மறைமுகமாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை ஐ.தே.க பாதுகாப்பதாக சிலர் கூறுகின்றனரே இதில் எந்தளவு உண்மையுள்ளது?**

பொதுஜன பெரமுனவை பாதுகாப்பதற்கு ஜனாதிபதி அதிகாரத்துக்கு வரவில்லை. அவரது நோக்கம் நாட்டையும் நாட்டு மக்களையும் வளர்ச்சிப்பாதைக்கு கொண்டுசெல்வதாகும். அதற்கான பணிகளைதான் அவர் முன்னெடுத்துவருகிறார்.


பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் ஜனாதிபதிக்கு ஆதரவை வழங்குவதில்லை. பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையான வாக்குகளால்தான் அவர் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார். எனவே, பொதுஜன பெரமுனவை இணைத்துக் கொண்டுதான் பயணிக்கவேண்டுடியுள்ளது. பொதுஜன பெரமுனவை பாதுகாப்பது என்பது முட்டாள்தனமான கருத்து மக்களுக்கு நன்மைகளை பெற்றுக்கொடுக்க எவர் வேண்டுமானாலும் ஜனாதிபதியுடன் கைகோர்த்து செயல்படலாம். அதனால்தான் அவர் சர்வக்கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

(04 ஆம் பக்கம் பார்க்க)



## ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 23

மூத்த எழுத்தாளர் தி. ஞானசேகரன்




# இலக்கியத் திறனாய்வுத் துறைக்கு புதிய ஒளிபாய்ச்சிய பேராசிரியர் கைலாசபதி

"இலக்கியத் திறனாய்வுத் துறைக்கு புதிய ஒளிபாய்ச்சியவர் என்ற ரீதியில் பேராசிரியர் க. கைலாசபதி முக்கியத்துவம் பெறுகிறார். அவரது திறனாய்வுப் போக்குகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம் (1) தமிழ் இலக்கியப்பரப்பில் ஏறத்தாழ எல்லாக்காலகட்ட இலக்கியங்களையும் சங்ககாலம் தொடக்கம் இக்காலம்வரை கருத்தில் கொண்டு ஆய்வில் ஈடுபட்டார் (2) மார்க்சிய அறிவியல் தளத்தில் நின்று தமிழ் இலக்கியங்களையும் அவற்றின் சமுதாயச் சூழலையும் காலகட்டங்களாக வகைப்படுத்தினார் (3) இலக்கியத்தில் சமூகவியல் நோக்கிற்கு அழுத்தம் கொடுத்தார். (4) ஒப்பியல் இலக்கிய ஆய்வினை மேற்கொண்டார் (5) இலக்கியங்களை வரலாற்றுச் சூழலில் பொருத்தி நோக்கினார் (6) ஈழத்தில் தேசிய இலக்கியம் என்னும் கருதுகோளை முன்வைத்து எழுத்தாளர்களை ஊக்குவித்தார். இவ்வாறு இலக்கியம், இலக்கியத் திறனாய்வுத் துறைகளில் அவரின் பங்களிப்பு மகத்தானது என்பதை மறக்கமுடியாது. தமிழில் மார்க்சிய அடிப்படையிலான பார்வையை ஒரு திட்டப்பாங்கான முறையில் தமிழ் நூல்பரப்பு முழுவதையும் கருத்தில் கொண்டு கட்டமைத்து வெளியிட முற்பட்டவர்களுள் முதல்வர் என்று கைலாசபதியைக் கூறலாம்" எனக் குறிப்பிட்டுள்ளார் கலாநிதி முல்லைமணி வே. சுப்பிரமணியம். (ஞானம் ஒக்ரோபர் 2003 பக்:21)

பேராசிரியர் கைலாசபதி மலேசியா கோலாலம்பூரில் 05.04.1933இல் கனகசபாபதி தில்லைநாயகி தம்பதிக்கு மகனாகப் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை மலேசியாவில் பெற்ற இவர் 1945இல் இலங்கை வந்து யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும் பின்னர் கொழும்பு றோயல் கல்லூரியிலும் பயின்றவர். தொடர்ந்து பேராதனைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து தமிழும் மேலைத்தேய வரலாறும் ஆகியவற்றைப் பாடமாகக் கொண்டு இளங்கலை (சிறப்பு) பட்டத்தை 1957இல் பெற்றார். அக்காலத்தில் பெயர்பெற்ற தமிழ்ப் பேராசிரியர்களான க. கணபதிப்பிள்ளை, வி. செல்வநாயகம், சு. வித்தியானந்தன் ஆகியோருடைய வழிகாட்டல் இவருக்குக் கிடைத்தது.

பட்டம் பெற்றபின் கொழும்பில் புகழ்பெற்ற "லேக்ஹவுஸ்" பத்திரிகை நிறுவனத்தில் இணைந்து பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டார். இந்நிறுவனம் வெளியிட்டுவந்த தமிழ் நாளேடான தினகரனிலேயே இவர் பணிபுரிந்தார். இவரது திறமை இவருக்கு அப்பத்திரிகையின் ஆசிரியர் பதவியைப் பெற்றுக் கொடுத்தது. தினகரன் பத்திரிகையில் பொறுப்பாசிரியராக 1957முதல் 1961வரை பணியாற்றினார். அக்காலத்தில் தினகரனை ஓர் இலக்கிய இதழாக ஆற்றிய பெருமை பேராசியருக்கே உரியது.




பின்னர் அங்கிருந்து விலகிய அவர் கல்வித் துறையில் புகுந்தார். கலாநிதிப் (முனைவர்) பட்டம் பெறுவதற்காக பர்மிங்காம் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து, "Tamil Heroic Poetry" என்னும் தலைப்பில் ஆய்வு செய்து பட்டம் பெற்றார்.

பின்னர் இலங்கை பல்கலைக் கழகத்தின் வித்தியலங்கார வளாகத்தில் தமிழ் மற்றும் இந்து சமயப் பீடத்துக்குத் தலைவராகப் பணியாற்றினார்.

பேராசிரியர் 1964இல் மாணிக்க இடைக்காடரின் மகள் சர்வமங்களத்தைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு சுமங்களா, பவித்திரா ஆகியோர் புதல்விகளாவர்.

1974ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாண வளாகம் ஆரம்பிக்கப் பட்டது. அதன் முதல் தலைவராக 19 ஜுலை 1974இல் நியமனம் பெற்றார். 31, ஜுலை 1977வரை இப்பதவியில் இருந்து திறம்படப் பணியாற்றினார்.

கைலாசபதி பல்கலைக்கழகத்தில் இருக்கும்போதே முற்போக்கு இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். 1956இல் இலங்கையில் ஒரு பெரும் அரசியல் மாற்றம் ஏற்பட்டது. தொழிலாளர் வர்க்கத்தின் உதவியுடன் தேசிய மத்தியதர வர்க்கத்தினர் ஆட்சியைக் கைப்பற்றினர். இடதுசாரிக் கொள்கைகளை அரசாங்கம் ஆதரித்தது. இடதுசாரிக் கருத்துகள் மக்கள் மத்தியிலும் செல்வாக்குப் பெற்றன. இக்கால கட்டத்திலேதான் கைலாசபதியும் ஒரு பட்டதாரியாக சமூகத்தில் காலடி எடுத்து வைக்கிறார். இடதுசாரி இயக்கங்கள் தோன்றின. இதில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் ஒன்றாகும். இலங்கையின் முற்போக்கு எழுத்தாளர்களை இவ்வியக்கம் ஆதரித்தது. மக்களுக்காக இலக்கியம் படைத்தார்கள். இலக்கியத்தில் ஓர் உத்வேகம் கிளம்பியது. முற்போக்கு எழுத்தாளர்களின் தத்துவமேதையாக விளங்கினார் கைலாசபதி. இவர், பல்கலைக்கழக விரிவுரையாளராக பதவியேற்றபின் பல்கலைக்கழக மாணவர் மத்தியிலும் முற்போக்கு கருத்துக்களையும் எண்ணங்களையும் பரப்பினார்.

தமது கருத்துக்களைப்பரப்புவதற்கு தேசிய ஜனநாயக முற்போக்குச் சக்திகளை அரவணைத்துச் செல்வது பேராசிரியரின் முக்கிய பண்புகளில் ஒன்றாகவிருந்தது. அவர் பத்திரிகையாளராகத் தொழிற்பட்ட காலத்திலும்சரி பின்னர் பல்கலைக்கழக விரிவுரையாளராக கடமையாற்றிய காலத்திலும்சரி தன்னைச்சுற்றி ஓர் இலக்கியக் குழுவை அமைத்துக் கொள்வதில் முக்கிய கவனம் செலுத்திவந்துள்ளார்.

பேராசிரியரின் தமிழ் இலக்கியம் குறித்த ஆய்வு முயற்சிகளை நோக்குகின்றபோது, அவற்றினை அவர் வரலாற்று அடிப்படையிலும் சமூகவியல் அடிப்படையிலுமே ஆய்வு செய்தார் என்பது புலனாகிறது. அவரது ஆய்வுப் போக்கின் அடிநாதமாக இயக்கவியல் பொருள் முதல்வாதக் கண்ணோட்டம் திகழ்ந்தது. பழந்தமிழ் இலக்கியப் பரிச்சயமும் நவீன இலக்கிய நோக்கும் பேராசிரியரிடம் தெளிவாகக் காணப்பட்டமையே அவரால் தமிழ் இலக்கிய வராலற்றின் மாற்றப் போக்கினை இனங்கண்டு ஆய்வு செய்யக் கூடியதாக இருந்தது. அவை சமகாலச் சமூகப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு ஆதர்சனமாக அமைந்தன எனலாம்.

இவர் கலாநிதிப் பட்டத்துக்காகச் செய்த ஆய்வு நூலாக வெளியிடப்பட்ட Tamil heroic Poetry என்ற நூல், பழந்தமிழ் இலக்கியம் பற்றிய மிக முக்கியமான நூலாகும். கைலாசபதியின் சாதனைகளில் சிகரமாகத் துலங்குவதுதான் Tamil Heroic Poetry – தமிழிலக்கியத்தில் வீரயுகப் பாடல்கள் என்ற ஆங்கிலநூல். இவ்வாய்வில் சங்கப் பாடல்களை பண்டைய கிரேக்க இலக்கியங்களுடன் ஒப்புநோக்கியுள்ளார். இந்த ஒப்புநோக்கின் ஊடாக சங்கப்பாடல்கள் எழுந்த காலப்பகுதியை தமிழரின் வீரயுகம் என்றும் அப்பாடல்கள் வாய்மொழிப் பாடல்களாக உருவானவை என்றும் முடிவு செய்தார். வரலாற்றுப் பார்வை, வர்க்கச்சார்பு அழகியல் அக்கறை என்ற நிலைநின்று அவர் ஆய்வுகளை வெளிப்படுத்தியுள்ளார்.

கைலாசபதிக்கு முன் தமிழிலக்கியத்தை ஆராய்ந்தவர்கள் பெரும்பாலும் இலக்கியத்தை ஒரு கலையாக்கம் என்ற வகையில் கண்டு அதன் அழகியற் கூறுகள், அவை வாசகர் உள்ளத்தில் ஏற்படுத்தும் அனுபவம், உணர்ச்சி என்பவற்றைப் பற்றிய கருத்தையே கொண்டிருந்தனர். கவிதையில் கற்பனை உத்தி நடை கட்டமைப்பு இலக்கிய வகைமைகள் என்பன பற்றிப் பேசுவதையே திறனாய்வின் செயற்பாடு என்ற கருத்தைக் கொண்டிருந்தனர்.

தமிழ்த்திறனாய்வில் அழகியலுக்கு நிகராக அரசியலுக்கு, உள்ளடக்கத்திற்கு முக்கியம் வழங்கப்படல்வேண்டும் என்ற கருத்தை பேராசிரியர் கைலாசபதி கொண்டிருந்தார். அதற்கமைய பண்டைய இலக்கியங்களை சமுதாய வரலாற்றுப் பகைப்புலத்தில் பொருத்திப்பார்க்க முற்பட்டார். தமிழிலக்கியத்திற்கும் சமுதாயத்திற்குமுள்ள உறவை விஞ்ஞன ரீதியாக, தர்க்க ரீதியாக ஆய்வு செய்தவர்களில் முக்கிய இடத்தைப் பெறுகிறார் கைலாசபதி. கலை இலக்கியம் என்பவற்றின் சமுதாய உறவு நிலை, சமுதாய வரலாற்றியக்கத்தில் அவற்றின் பங்கு, படைப்பாளிகளின் வரலாற்றுப் பாத்திரம் என்பன தொடர்பாக அவர் ஆழமாகச் சிந்திப்பதற்கு அவருடைய மார்க்சியத் தளம்தான் காரணம்.

பழந்தமிழ் இலக்கியப் பரிச்சயம் கொண்டிருந்த பேராசிரியர், இருபதாம் நூற்றாண்டின் நவீன இலக்கிய முன்னோடியாகவும் திகழ்ந்தார். நவீன கால இலக்கியத்துக்கு அவர் ஆற்றிய பங்களிப்பினை பின்வருமாறு வகுத்துக் கூறலாம் (1) இலக்கியத்தில் தூய அழகியல்வாதத்திற்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்தமை (2) பண்டித வாதத்திற்கு எதிரான போராட்டத்தை, தேசிய இலக்கியக் கோட்பாட்டுத்தளத்தை நிறுவியமை (3) ஒப்பியல் நோக்கின் அடிப்படையில் தமிழ் இலக்கியத்தை ஆய்வு செய்தமை (4) மக்கள் இலக்கியத்துக்கான ஒரு புதிய தலைமுறையை உருவாக்கியமை ஆகியன பேராசிரியர் கைலாசபதி நவீன இலக்கியத்திற்கு ஆற்றிய முக்கிய பங்களிப்புகளாகத் திகழ்கின்றன.

தமிழ் இலக்கியத் திறனாய்வுத் துறையிலே இவராற்றிய பணி ஈழத்துக்கு மட்டுமன்றித் தமிழுலகம் முழுவதற்குமே முன்னோடியாகக் கருதப்படுகின்றது.

இவர் பல நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவரது ஆக்கங்கள், தமிழ் இலக்கியத் துறையை மட்டுமன்றி, சமயம், பண்பாடு, சமுதாயம், அரசியல் போன்ற பல துறைகளையும் சார்ந்திருந்தது.

பாரதிமீது மிகுந்த ஈடுபாடுகொண்டவராகத் திகழ்ந்த கைலாசபதி அவர்பற்றிய ஆய்விலும் அதிக அக்கறை செலுத்தினார். பாரதியியல் என்ற சொல்லினைத் தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்திய வராகவும் கைலாசபதி விளங்கினார்.

மிக இளம் வயதிலேயே மாணவர்கள், அறிஞர்கள் மத்தியில் மட்டுமன்றிப் பொதுமக்கள் மத்தியிலும் புகழ்பெற்ற இவர், 49வது வயதில் 1982 டிசம்பர் மாதம் 6ஆம் திகதி காலமானார்.

## பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# அதிகரித்துச் செல்லும் வறுமை நிலை புள்ளிவிபரத் திணைக்களம் கூறும் தகவல்கள்

இலங்கையின் தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள இற்றைப்படுத்தபட்ட உத்தியோகபூர்வத் தரவுகளின் படி கடந்த செப்டெம்பர் மாதத்தில் இலங்கையின் பணவீக்கம் 69.8 சதவீதம் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாண்டின் ஜனவரி மாதத்தில் இது 14.2 சதவீதமாகப் பதிவாகியிருந்தது. இவ்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட பணவீக்கத்துடன் ஒப்பிடுகையில் இது நான்கு மடங்கு அதிகரிப்பாகும். அதே வேளை உணவுப்பொருள்களின் விலை அதிகரிப்பை அளவிடும் உணவுப் பணவீக்கம் இதே காலப்பகுதியில் 25 சதவீதத்தில் இருந்து 94.9 சதவீதமாக அதிகரித்திருந்தது. இது மூன்று மடங்கு அதிகரிப்பாகும்.

நாட்டில் குறுகிய காலத்துக்குள் பணவீக்கமானது சடுதியாக அதிகரித்துச் சென்றுள்ள அதே வேளை அதன் பொருளாதார வளர்ச்சி சடுதியான வீழ்ச்சியைப் பதிவு செய்திருக்கிறது. 2022இன் ஜூலை, ஓகஸ்ட், செப்டெம்பர் ஆகிய மாதங்களை உள்ளடக்கிய மூன்றாம் காலாண்டில் இலங்கைப் பொருளாதாரம் முன்னைய ஆண்டின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் 8.4 சதவீத எதிர்க்கணிய வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. அதாவது பொருளாதாரம் 8.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது என்பது இதன் கருத்தாகும். இதனால் மக்களின் வருமானங்கள் வீழ்ச்சியடைந்துள்ளன. நிரந்தர வருமானங்கள் உழைப்போரின் வருமானங்கள் மாறாத போதும் நாட்டின் தலைக்குரிய வருமானத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மக்களின் வருமானங்கள் வீழ்ச்சியடையும் அதேவேளை விலைகள் பாரியளவில் அதிகரிப்பதால் மக்களின் கொள்வனவு செய்யும் ஆற்றல் மிக மோசமாகப்பாதிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக 2022 ஜனவரியில் 14.2 ரூபா கொடுத்து வாங்கிய ஒரு பொருளுக்கு செப்டெம்பரில் 69.8 ரூபா கொடுத்து வாங்கவேண்டியிருக்கும். அதனால் கையில் உள்ள சிறியளவு வருமானத்தைக் கொண்டு முன்னரைப்போல

**உலக வங்கி இலங்கை தொடர்பில் ஒக்டோபர் மாத வறுமை மற்றும் ஒப்புரவு பற்றிய செய்திக்குறிப்பில் தற்போதைய நிதி நெருக்கடி காரணமாக இலங்–கையின் வறுமை நிலை 2022இல் 25.6 சதவீதமாக அதிகரிக்கும் என எதிர்வு கூறியுள்ளது.**

| காலம் | வறுமைக்கோடு ரூபா |
|---|---|
| 2020 | 7395 |
| 2021 | 7913 |
| 2020 | |
| ஜனவரி | 8923 |
| பெப்ரவரி | 9020 |
| மார்ச் | 9284 |
| ஏப்ரல் | 10230 |
| மே | 11219 |
| ஜூன் | 12444 |
| ஜூலை | 13138 |

| 2022 மாதங்கள் | பணவீக்க வீதம் | உணவுப்பணவீக்கம் |
|---|---|---|
| ஜனவரி | 14.2 | 25.0 |
| பெப்ரவரி | 15.1 | 25.7 |
| மார்ச் | 18.7 | 30.2 |
| ஏப்ரல் | 29.8 | 46.6 |
| மே | 39.1 | 57.4 |
| ஜூன் | 54.6 | 80.1 |
| ஜூலை | 60.8 | 90.9 |
| ஓகஸ்ட் | 64.3 | 93.7 |
| செப்டெம்பர் | 69.8 | 94.9 |

தேவையானளவு பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியாது. அதுவே வறுமைக் கோடு என்ற எண்ணக்கருவினாலும் விளக்கப்படுகிறது. இலங்கையில் வாழும் ஒரு நபர் குறைந்த பட்ச உணவுத்தேவையைப் பூர்த்தி செய்து வாழ ஆகக் குறைந்தது மாதம் ஒன்றிற்கு 7395 ரூபா தேவையென 2020 இல் மதிப்பிடப்பட்டிருந்தது. பெறக்கூடியதாக உள்ள இற்றைப்படுத்தபட்ட தரவுகளின் படி கடந்த ஜூலை மாதத்தில் இலங்கையில் ஒருவர் உயிர்வாழ 13138 ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி வருமானங்களில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதோடு உயிர்வாழ அவசியமான குறைந்த பட்ச பணத்தின் அளவு அதிகரித்துள்ளது. ஓகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் இதனளவு மேலும் அதிகரித்திருக்கும். அதன் காரணமாக நாட்டில் வறுமை நிலை தீவிரமாக அதிகரிக்கும்.

உலக வங்கி இலங்கை தொடர்பில் ஒக்டோபர் மாத வறுமை மற்றும் ஒப்புரவு பற்றிய செய்திக்குறிப்பில் தற்போதைய நிதி நெருக்கடி காரணமாக இலங்கையின் வறுமை நிலை 2022இல் 25.6 சதவீதமாக அதிகரிக்கும் என எதிர்வு கூறியுள்ளது. இதனால் 2021 2022 காலப்பகுதியில் இலங்கையர்களில் இருபத்தைந்து இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் வறுமையில் வீழும் அதேவேளை இது இலங்கையை 2009 ஆண்டில் காணப்பட்ட வறுமை மட்டத்திற்கு மீண்டும் கொண்டு செல்லும் எனவும் உலக வங்கி கூறுகிறது. இலங்கை மக்களில் சுமார் 40 சதவீதத்தினர் போதியளவு உணவைப் பெற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை என சர்வதேச கணிப்பீடுகள் கூறுகின்றன. இலங்கையின் சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணித்தாய்மார் மத்தியில் போசாக்கின்மை அதிகரித்துள்ளது என ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் கூறியதை பிழையென அரசு கூறியது. இதே போல வறுமை பற்றிய தரவுகளையும் அரசு மறுக்கக் கூடும். ஆனால் தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள தகவல்கள் எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்பது போல் உண்மையை உரத்துக் கூறுகின்றன. தமது சொந்தத் தகவல்களை எவ்வாறு மறுக்க முடியும்?

---



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# இத்தாலியின் தீவிர வலதுசாரிகளது எழுச்சி ஐரோப்பிய ஐக்கியத்தை தகர்க்குமா?

**உலக வரலாற்றின் தொட்டிலாக ஐரோப்பாவே துலங்குகிறது. வரலாற்றுக் காலத்திலும் அதன் பின்னரும் அதற்கான தனித்துவத்தை ஐரோப்பா பேணிவருகிறது. மாற்றங்களும் புரட்சிகளும் போராட்டங்களும் மறுமலர்ச்சிகளும் கண்டுபிடிப்புகளும் தொழில் நுட்பமும் ஐரோப்பாவை மையப்படுத்தியதாகவே உள்ளது. கருத்தியலும் சிந்தனை மாற்றமும் ஐரோப்பாவிலிருந்தோ எழுச்சியடைகிறது. உலக நாகரீகத்தின் தோற்றத்தில் பிறகண்டங்கள் முதன்மை பெற்றாலும் நவீனத்துவத்தை நோக்கிய அசைவு அனைத்துமே ஐரோப்பாவை மையப்படுத்தியதாகவே உள்ளது. அறிவியல் தொழில்நுட்பத்தின் வேர் ஐரோப்பியரிடமிருந்தே உலகளாவிய தளத்திற்கு பரவியது. அத்தகைய ஐரோப்பாவில் தோன்றியதே பாசிசமும் நாசிஸமும். இத்தாலியையும் ஜேர்மனியையும் மையமாகக் கொண்டு அத்தகைய சிந்தனை எழுச்சி பெற்று அழிவுக்குள்ளாகியது. அத்தகைய கருத்தியல் தோன்றிய இத்தாலியில் மீளவும் தீவிர வலதுசாரிகளது ஆட்சி சாத்தியமாகியுள்ளது. இக்கட்டுரையும் இத்தாலியில் இரண்டாம் உலக போருக்கு பின்னர் ஆட்சியை கைப்பற்றியுள்ள தீவிர வலதுசாரிகளது எழுச்சியையும் அதன் பிரதிபலிப்புகளையும் தேடுவதாக அமையவுள்ளது.**

ஐரோப்பாவில் நான்காவது பொருளாதார சக்தியாகத் திகழ்ந்த இத்தாலி கொவிட்19 தொற்றுக்கு பின்னர் பாரிய நெருக்கடியை எதிர்கொண்டு வருகிறது. இத்தாலியின் பொருளாதார நிலை மோசமடைந்து வருவதாக குற்றச்சாட்டுகள் எழுந்ததை அடுத்து முன்னாள் பிரதமர் மரியோ டிராகி பதவியை இராஜினாமா செய்தார். அதனை அடுத்து நடந்த தேர்தலில் ஜோர்ஜியா மெலோனி தலைமையிலான கூட்டணி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியுள்ள நிலையில் பிரதமராக பதவியேற்கவுள்ளார். அவரது கட்சியான இத்தாலிய சகோதரர் கட்சி (Brother's of Italy) 26 சதவீத வாக்குகளைப் பெற்று கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைக்க திட்டமிட்டுள்ளது.

லீக் கட்சி மற்றும் போர்ஜா இத்தாலிய கட்சியுடன் கூட்டணி அமைக்கும் ஜோர்ஜியா மெலோனி தீவிர வலதுசாரியாக இனங்காணப்பட்டுள்ளார். மீளவும் முசோலினின் வாரிசுகள் ஆட்சிக்கு வந்துவிட்டதாக ஐரோப்பிய ஊடகங்கள் கருத்து தெரிவித்துள்ளன. ஆனால் அத்தகைய தீவிர வலதுசாரி எனும் அடையாளத்தை தவிர்க்க மெலோனி அதிகம் முயல்வதாக பிபிசி தனது செய்தியறிக்கையில் தெரிவித்துள்ளது. எது எவ்வாறாக அமைந்தாலும் இத்தாலியின் வரலாற்றில் முதல் பெண் பிரதமர் என்பதுடன் முசோலினிக்கு பின் எழுச்சி பெற்ற தீவிர வலதுசாரியாகவும் தேசியவாதியாகவும் மெலோனி அடையாளப்படுத்தப் படுகிறார். அதற்கான அடிப்படையை அவர் இத்தாலிய மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளார்.

குறிப்பாக மெலோனி தனது இளமைக் காலத்திலேயே முசோலினி ஆதரவுபெற்ற சமூக இயக்கத்தில் இணைந்து அரசியல் பணியை ஆரம்பித்திருந்தார். இத்தாலியின் தலைநகரான ரோம் புறநகர் பகுதியில் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த மெலோனி 15 வது வயதில் அச் சமூக இயக்கத்தின் மாணவ பிரிவில் பிரதான உறுப்பினராக விளங்கினார். அது மட்டுமன்றி 19 வயதில் செய்தி ஊடகம் ஒன்றுக்கு பேட்டியளிக்கும் போது இத்தாலியின் முன்னாள் சர்வாதிகாரி பெனிட்டோ முசோலினி ஒரு சிறந்த அரசியல்வாதி எனவும் இத்தாலிய நாட்டுக்காக அவர் செய்தவை எல்லாம் நன்மைகளே என்றும் புகழ்ந்து கருத்துத் தெரிவித்தார். இவையே மெலோனியை தீவிர வலதுசாரியாகவும் முசோலினியின் ஆதரவாளராகவும் வெளிப்படுத்தியுள்ளது.

இவற்றைக் கடந்து மெலோனியின் ஐரோப்பா பொறுத்த கொள்கை அதிக குழப்பமானதாகவே காணப்படுகிறது. ஆரம்பத்தில் ஐரோப்பிய ஐக்கியத்தை நிராகரித்த மெலோனி பின்னர் தனது நிலையை மாற்றிக் கொண்டார். இருந்த போதும் ஐரோப்பாவின் ஐக்கியம் பற்றிய கொள்கையில் மெலோனி முரண்பாடுடையவராகவே செயல்பட வாய்ப்புள்ளதாக தெரியவருகிறது. காரணம் அவர் கூட்டணி வைத்துள்ள லீக் கட்சியினரும் போர்ஜா இத்தாலிக் கட்சியினரும் ஐரோப்பாவின் ஐக்கியத்திற்கு எதிரான நிலையைக் கொண்டவர்கள் என்பது முக்கியமான தகவலாகும். இது மட்டுமல்ல சுவீடனிலும் ஹங்கேரியிலும் பிரான்ஸிலும் தீவிர வலதுசாரிகளது எழுச்சி கடந்த காலங்களில் முதன்மை பெற்றுவருகிறது. மெலோனியின் வருகையை பிரான்ஸின் ஜனாதிபதி தேர்தலில் இரண்டாவது நிலையைப் பெற்ற மரின் லூபென் மற்றும் எரிக் செமூர் போன்ற தீவிர தேசிய வாதிகள் வரவேற்றுள்ளனர்.



இத்தாலிய பிரதமர்
ஜோர்ஜியா மெலொனி

ஐரோப்பா வேறு திசையை நோக்கி நகர்கிறதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. குறிப்பாக பொருளாதார நெருக்கடி ஒருபக்கம் அமைய மறுபக்கத்தில் தீவிரத் தன்மைகளும் தேசம் மீதான பற்றுக் கொண்ட தேசியவாதிகளது எழுச்சியும் தவிர்க்க முடியாது முதன்மை பெற ஆரம்பித்துள்ளது.

1930 களில் ஐரோப்பாவின் நிலையை மீளவும் ஐரோப்பா பெற்றுவிடுமா என்ற கேள்வி அதிகம் முதன்மைப்படுத்தப்படுகிறது. ஜேர்மனியினதும் இத்தாலியினதும் எழுச்சிக்கு பின்னால் அப்போது நிலவிய பொருளாதார நெருக்கடியும் முதலாம் உலக போரும் காரணமாக தெரிந்தது. அவ்வாறே ரஷ்ய உக்ரைன் போர் ஐரோப்பாவின் பொருளாதாரத்தை அதிகம் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. அப்போது பாஸிஸ்டுகளின் எழுச்சி போல் தற்போது நவபாஸிஸ்டுகளது எழுச்சி ஆரம்பித்துள்ளதாக தெரிகிறது. அவ்வாறாயின் உலகம் மீளவும் ஒரு போருக்குள் நகர வாய்ப்புள்ளதாக தெரிகிறது. அதனையே ரஷ்யாவின் தத்துவவாதி அலெக்சாண்டர் டுகின் அண்மையில் தெரிவித்திருந்தார்.

ஈரோசியாவின் பேரரசாக ரஷ்யாவை உருவாக்கும் சிந்தனையுடன் செயல்படும் டுகின் ரஷ்ய ஜனாதிபதி புடினின் தத்துவ ஆசிரியராகவும் விளங்குகிறார். அவரது வார்த்தையில் உலகப் போரின் விளிம்பில் மேற்குக்கூட்டணியும் ரஷ்யாவும் இருப்பதாகவும் அது அணுவாயுதப் போருக்கான அழிவை நோக்கி நகரும் எனவும் தெரிவித்துள்ளார். உக்ரைனில் ரஷ்யாவின் தோல்வி அணுவாயுதத்தின் ஆபத்தை மறந்து செயல்படுகின்ற நிலையை ஏற்படுத்தும் என எச்சரித்துள்ளார்.

மெலோனியின் வருகை அதிக நெருக்கடியை ஐரோப்பாவுக்கு தோற்றுவிக்க வாய்ப்புள்ளதாக தெரிகிறது. குறிப்பாக உக்ரைன் மீதான ரஷ்யாவின் போரை ஆரம்பத்தில் ஆதரித்த மெலோனி பின்னர் தனது கொள்கையை மாற்றிக்கொண்டார். ஆனால் முசோலினியை ஆதரிக்கும் ஒருவர் நிச்சயம் புடினையும் ஆதரிக்க வாய்ப்பு அதிகமுண்டு. ஏற்கனவே பிரான்ஸின் ஜனாதிபதி வேட்பாளர் லுபென், புடினின் ஆதரவாளராக விளங்கினார் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அத்தகைய ஆதரவே அவரை தோற்கடித்ததாகவும் செய்திகள் உண்டு. ஆனால் மெலோனி அதில் வெற்றிகரமானவராகவே விளங்குகிறார்.

மெலோனியின் வெற்றியானது ஐரோப்பாவுக்கு தலைமை தாங்கும் அமெரிக்காவுக்கு அதிக ஆபத்தானதாகவே அமையும். பிரிட்டனும் அமெரிக்காவும் அதிக நெருக்கடியை எதிர்கொள்ள வாய்ப்புள்ளது. இரண்டாம் உலக போருக்கு பின்னர் முழுமையாக அமெரிக்காவின் இருப்பும் உலக ஆளுகையும் ஐரோப்பாவை மையப்படுத்தியதாகவே அமைந்திருந்தது. ஹிட்லர் முசோலினியின் தோல்வி அமெரிக்காவுக்கான வாய்ப்பினை அதிகப்படுத்தியதுடன் ஐரோப்பாவை ஆளும் வலுவையும் அதன் மூலம் உலகத்தை ஆளும் திறனையும் அமெரிக்கா பெற்றுக்கொண்டது. அதற்கு நெருக்கடி ஏற்பட வாய்ப்புள்ளது. ஆனால் அமெரிக்கா, பிரிட்டன் கூட்டணி இலகுவில் அத்தகைய வாய்ப்பினை மெலோனிக்கு வழங்கிவிடாது. தற்போது ரஷ்யாவுக்கு எதிரான அமெரிக்கப் போரை ஐரோப்பியர்களே நிகழ்த்துகிறார்கள். அப்போரின் சுமை முழுவதும் ஐரோப்பியருக்கானதாக உள்ளதே அன்றி அமெரிக்கர்களுக்கானதாக இல்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

ஐரோப்பாவின் ஐக்கியமானது அமெரிக்காவுக்கானதன்றி ஐரோப்பாவுக்கானதாக அமையும் போதே மெலோனி போன்ற தலைவர்களது எழுச்சி அவசியமானதாகிறது. ரஷ்ய, ஐரோப்பிய எரிவாயு மற்றும் பெற்றோலிய பரிமாற்றத்திற்கான நோர்ட்ஸ்ட்ரீம் குழாய்களை தகர்த்தது அமெரிக்கா என்பதை ஐரோப்பிய அரசுகள் விளங்கிக் கொள்ள முயலும் போதே ஐரோப்பா ஐரோப்பாவாக எழுச்சி பெற வாய்ப்பு உருவாகும். அத்தகைய செயலை ரஷ்யா மேற்கொண்டதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள போதும் அதற்கான ஆதாரங்கள் தெளிவாக இல்லாதுள்ளது என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

அடுத்து இத்தாலிக்குள் குவியும் மேற்காசிய அகதிகளால் பாரிய நெருக்கடியை எதிர் நோக்கியுள்ள இத்தாலியின் போக்கினை மெலோனி மாற்றுவார் என்பது அவரது நகர்வுகளில் தெரிகிறது. கடல்வழியாக இத்தாலியை நோக்கி நகரும் மேற்காசிய நாட்டவருக்கு எதிராக மட்டுமன்றி அகதிகள் தஞ்சம் கோரும் குடியேற்றவாசிகள் மீதான அவரது நடவடிக்கை தனித்துவமானதாக அமைய வாய்ப்புள்ளது. ஏற்கனவே பாஸிஸ்டுக்கள் அகதிகளுக்கு எதிராக தீவிரவாத உணர்வுகளை வெளிப்படுத்திவருகிறார்கள் என்பது நினைவு கொள்ளத்தக்கது.

எனவே ஐரோப்பாவுக்குள் மெலோனியின் ஆட்சியானது பெண்களது எழுச்சியை காட்டுவதாக அமைந்தாலும் அதுவும் தீவிர வலதுசாரிக் கொள்கையாளர்களாலேயே முடியும் என்பதையும் உணர்த்துகிறது. பிரித்தானியா, ஜேர்மனி போன்ற நாடுகளைத் தொடர்ந்து இத்தாலியிலும் பெண் தலைமைதாங்கும் அரசியல் செயல்பாடு எழுந்துள்ளது. ஆனால் அத்தகைய எழுச்சிக்குப் பின்னால் ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடியே காரணம் எனவும் தீவிர வலதுசாரிகளது எழுச்சியே அடிப்படையானது எனவும் கருதமுடியும். எதுவாயினும் ஐரோப்பாவில் மெலோனியின் எழுச்சி மாற்றத்தை நோக்கி நகரப் போகிறது என்பதை அடையாளப்படுத்துகிறது. அது உலக ஒழுங்கை மாற்றும் திறனை மேலும் அதிகரிக்க வாய்ப்பினைத் தரக்கூடியதாகவே அமையும்.

# காவிய காலத் திரைப்படம் 'பொன்னியின் செல்வன்'



## கோலிவுட்டில் அறிமுகமாகும் ஷாம் பெனாண்டோ

பிரபல தொழிலதிபரும் திரைப்பட தயாரிப்பாளருமான அல்லிராஜா சுபாஸ்கரனின் தயாரிப்பில் உருவாகியிருக்கும் மிக பிரமாண்டமான காவியத் திரைப்படம் 'பொன்னியின் செல்வன்' .

இது 1,000 ஆண்டுகளுக்கு முன் இடம் பெற்ற தமிழ் வரலாற்று புனைக்கதையை திரையில் காட்டும் ஒரு முயற்சியாகும். இது செப்டெம்பர் 30 ஆம் திகதி இலங்கையில் திரையிடப்பட்டது.

கல்கி கிருஷ்ணமூர்த்தியின் 1955 ஆம் ஆண்டு படைக்கப்பட்ட நாவலைத் தழுவி அதே தலைப்புடன் எடுக்கப்பட்டுள்ள இத் திரைப்படத்தை, புகழ்பெற்ற இயக்குனர் மணிரத்னம் இயக்கியுள்ளார். திரைப்படத்தின் முக்கிய கதாபாத்திரங்களில் விக்ரம், ஐஸ்வர்யா ராய் பச்சன், திரிஷா, ஜெயம் ரவி, கார்த்தி, பிரபு, ஆர். சரத்குமார், இலங்கையைச் சேர்ந்த ஷாம் பெனாண்டோ உள்ளிட்ட நடிகர்கள் நடித்துள்ளனர். இப்படத்திற்கு ஒஸ்கார் விருது நாயகன் இசைப்புயல் ஏ. ஆர். ரஹ்மான் இசையமைத்துள்ளார்.

நீண்டகாலமாக இந்த கதையை திரைப்படமாக்க வேண்டுமென்ற இயக்குனர் மணிரத்னத்தின் கனவை, 2019 ஆம் ஆண்டில் சுபாஸ்கரனின் லைகா புரொடக்‌ஷன்ஸ் நிறுவனம் நனவாக்கியுள்ளது.




பொன்னியின் செல்வன் திரைப்படமானது, சோழப் பேரரசரான முதலாம் ராஜராஜ சோழன் (கி.பி. 947 கி.பி 1014) எனும் புகழ்பெற்ற அருள்மொழிவர்மனின் ஆரம்ப கால கதையைச் சொல்வதனால், இலங்கை இரசிகர்களுக்கு எதிர்பார்ப்பு மிக்க ஒரு திரைப்படமாக விளங்குகின்றது.

இலங்கை கி.பி. 993 முதல் 1070 வரை சோழப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்ததாக அறியப்படுவதனால், இக்கதையை தழுவிய நாவலின் ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி, தனது நாவலுக்கான தகவல்களை சேகரிக்க ஒரு சில தடவைகள் இலங்கைக்கு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நாவல் இன்றும் தொடர்ச்சியாக பாராட்டப்படுவதோடு, அதன் இறுக்கமான கதைக்களம், தெளிவான கதை மற்றும் சோழப் பேரரசின் அதிகாரப் போராட்டம், சூழ்ச்சிகள் சித்தரிக்கப்பட்ட விதம் ஆகியவற்றிற்காக பல்வேறு விமர்சனங்கள் மற்றும் பாராட்டுகளையும் பெற்றுள்ளது. இந்நாவலானது, கடந்த 70 ஆண்டுகளாக தமிழ்நாட்டிலும்/ தென்னிந்தியாவிலும் மறுக்கமுடியாத சிறந்த விற்பனைக்குள்ளான நாவல்களில் ஒன்றாக இருந்து வருகிறது.



இலங்கையை பிறப்பிடமாகக் கொண்ட தயாரிப்பாளரும், பிரபல தொழிலதிபரும் லைகா புரொடக்‌ஷன்ஸ் நிறுவனத்தின் தலைவருமான அல்லிராஜா சுபாஸ்கரன், 2.0, RRR, டான், சீதா ராமம், புஷ்பா, தர்பார், கத்தி உள்ளிட்ட பல தமிழ் மொழி பாக்ஸ் ஆபிஸ் வெற்றிப் படங்களை தயாரித்தவராவார்.

ஸ்ரீ லங்கா பிரீமியர் லீக் (SLPL) தொடரின் 'ஜப்னா கிங்ஸ்' அணியின் உரிமையாளராகவும் உள்ள அல்லிராஜா சுபாஸ்கரன். கடந்த 2011 ஆம் ஆண்டில் 'வருடத்தின் சிறந்த சர்வதேச தொழில்முனைவோர்' விருது உள்ளிட்ட பல விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

காவியத் திரைப்படமான பொன்னியின் செல்வன் திரைப்படத்தில் இலங்கையைச் சேர்ந்த ஷாம் பெனாண்டோ, 5ஆம் மிஹிந்து அரசரின் கதாபாத்திரத்தின் மூலம் கோலிவுட் சினிமாவில் அறிமுகமாகின்றார். இலங்கை தொலைக்காட்சி, திரைப்படம், நாடகம் மற்றும் குரல் நடிகராக ஷாம் விளங்குகின்றார். இவர் 'ஒப நெத்துவ ஒப எக்க', 'பிரேமய நம்', 'தெவன விஹங்குன்' போன்ற திரைப்படங்களில் நடித்து பிரபலம் பெற்றவராவார். லைகா புரொடக்‌ஷன்ஸ் லங்கா நிறுவனத்தின் பொன்னியின் செல்வன் திரைப்படம், EAP நிறுவனத்தின் அனைத்து Savoy/ EAP திரையரங்குகளிலும், நாடளாவிய ரீதியில் 75 இற்கும் அதிகமான திரையரங்குகளிலும் திரையிடப்படுகின்றது.

---


யாழ். பல்கலைக்கழக அங்கீகாரம் பெற்ற

# 'வி. என். மதிஅழகன் சொல்லும் செய்திகள்'


வி. என். மதிஅழகன்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முன்னாள் பிரதிப் பணிப்பாளர்நாயகம் வி. என். மதிஅழகன் எழுதிய 'வி. என். மதிஅழகன் சொல்லும் செய்திகள்' என்ற கருவி நூலை ஊடக பட்டப்படிப்பு மாணவர்களின் உசாத்துணை நூல்களில் ஒன்றாக யாழ்ப்பாண பல்கலைக்கழகம் அங்கீகரித்துள்ளது.

ஊடக கற்கைகள் துறை அதன் இளமாணிப் பட்டப்படிப்பு பாடவிதானத்தில் 'வானொலித் தயாரிப்பும் முன்வைப்பும்' (Radio Production and Presentation – General Degree (CMC 32013) and Honours Degree (CMCH 31023) பாடஅலகின் வழி 'வி. என். மதிஅழகன் சொல்லும் செய்திகள்' நூல் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சி. ரகுராம் அறிவித்துள்ளார்.







கலாநிதி சி. ரகுராம்

ஊடகத்துறையில் பல்பரிமாணம் கொண்ட வி. என். மதிஅழகன் அதில் தமது பொன்விழா ஆண்டில் பிரவேசித்துள்ள வேளையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இலங்கை தொலைக்காட்சி வரலாற்றில் செய்தி வாசிப்புக்கென உத்தியோகபூர்வமாக தெரிவு செய்யப்பட்ட முதலாவது தமிழ் செய்தி வாசிப்பாளரான வி. என். மதிஅழகன், வானொலி, தொலைக்காட்சி செய்தித்துறையில் அனுபவம் பெறுவதற்கு முன்னர் தினபதி, சிந்தாமணி பத்திரிகை ஆசிரிய பீடத்தில் பணியாற்றியவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்திப் பிரிவில் செய்தி மற்றும் நடப்பு விவகாரத் தயாரிப்பாளராக சேவையாற்றிய அனுபவம் மிக்கவர். கனேடிய ரி.வி.ஐ தொலைக்காட்சி நிறுவன செய்திப்பிரிவு ஆலோசகராகவும் விளங்கியவர்.

'வி. என். மதிஅழகன் சொல்லும் செய்திகள்' நூல் இலங்கை ஒலி – ஒளிபரப்பு வரலாற்றில் வெளியான முதலாவது கருவி நூல் என துறைசார்ந்த விற்பன்னர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---

# பண்ணையில் ஒரு மிருகம்

## நொயல் நடேசனின் நாவல் ஒரு வாசிப்புப் பகிர்வு

இந்நாவலைக் கையில் எடுத்த போதே அதன் அட்டைப்பட வடிவமைப்பு யாரையும் கவரக் கூடிய விதத்தில் இருந்ததை உடனடியாக அவதானிக்க முடிந்தது. வாசகர்களை இந்நாவலின் கருப்பொருளை அறியத்தூண்டும் விதத்தில் வடிவமைக்கப்பட்ட ஓவியமும் அதன் தலைப்பும் தனித்துவத்துடன் விளங்கி, நாவலின் இறுதி வரையும் எந்தத் தொய்வும் இன்றி இந்நாவலை இழுத்துச் செல்கின்றது என்றால் மிகையாகாது.

இந்நாவலானது, இதன் ஆசிரியர் தாயகத்தின் போர்காலச் சூழலில் இருந்து வெளியேறி 1980களின் நடுப்பகுதியில் தென்னிந்தியாவில் பண்ணை ஒன்றில் கால்நடை வைத்தியராகப் பணி புரிந்த காலப்பகுதியில் அவருக்கு கிடைத்த அனுபவங்களின் அடிப்படையில் படைக்கப்பட்டிருக்கிறது. வாழ்வின் புனைவல்லாத, நிஜமான சம்பவங்களை அடிப்டையாகக் கொண்ட கருத்துச்செறிவோடு எழுதப்பட்டிருப்பதால், வாசிக்கும் ஆர்வத்தை இறுதி வரை தக்க வைத்து, வாசகர்களுக்கு தான் பணி புரிந்த பண்ணையையும் அதனோடு தொடர்பான மாந்தர்களையும் அவர் தம் வாழ்வியலையும் தத்ரூபமாகக் காட்சிப்படுத்திப் போக முடிந்திருக்கிறது.

இந்நாவலில் படைக்கப்பட்டிருக்கும் இக்கதையின் மாந்தர்களும் அவர்களைச் சுற்றியுள்ள சமூகக் கட்டுமானங்களும் அவர்கள் அதன் வழியே அனுபவித்த சவால்களும் சஞ்சலங்களும், வர்க்க வேறுபாடுகளும், சாதீய ஒடுக்குமுறைகளும், ஆண் பெண் சமத்துவமற்ற தன்மைகளும் இந்நாவலின் உரையாடல்கள் வழியே தெளிவாகவும், எள்ளல் கலந்த நகைச்சுவை இழையோடலோடும் இலகுவான மொழி நடையில் வெளிப்படுகிறது.

இதன் உரையாடல்கள் பலவும் வர்க்க வேறுபாடுகள், சாதீய நிலைப்பாடுகள் நிலை குறித்த மாற்றுக் கருத்துகளுக்கும் வழி சமைத்திருக்கிறது. இலங்கையில், அதாவது நொயல் நடேசனின் தாயகத்தில் கூட தமிழகத்துக்குச் சற்றும் குறையாத சாதீய கட்டமைப்புகளும் அதன் வழி சார்ந்த வலிகளும் விரவிக் கிடந்தாலும், அன்றாட கிராமத்து பண்ணை வாழ்வில் சாதி குறித்த பிளவுகள் கொடூரமாக வெளிப்படுத்தப்படும் போது, கதை சொல்லியாகிய நாவலாசிரியர் அதனைப் பல தளங்களிலும் நின்று, துல்லியமாக வெளிப்படுத்திப் போகிறார்..

இந்நாவல் முழுவதும் கதை சொல்லியான நாவலாசிரியர் இப்பண்ணையின் அழகையும் அதன் நடைமுறை சட்டதிட்டங்களையும் வெகுவாக ரசித்து, அதனை மற்றவர்களும் ரசித்து வசிக்கும்படிக்கு தத்ரூபமாக எழுதியிருப்பதால் வாசகர்கள் தம்மையும் பண்ணையோடு இணைந்து எடுத்துச் செல்ல ஏதுவாக கதையின் ஓட்டம் அமைந்திருக்கிறது.

இந்த நாவலில் கட்டமைக்கப்பட்டுள்ள பத்து அத்தியாயங்களில் ஒன்று அங்கு பண்ணையில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கும் மூன்று சிறுவர்கள் பற்றியது. வறுமையும், சரியான குடும்ப அமைப்பும் பாதுகாப்புமின்றி மிகக் குறைந்த ஊழியத்தில் வேலை பார்க்கும் இச்சிறுவர்களின் பாதுகாப்புக் குறித்து, இந்நாவலாசிரியர் தனது வதிவிட உரிமை சார்ந்த சட்ட திட்டங்களால் தானும் எதுவும் செய்ய முடியாதிருப்பது பெரும் துயரமாகிறது.

மாட்டுத் தொழுவத்தில் வேலை பார்க்கும் ராசு, ராமு, சுப்பு என்னும் மூன்று பதின்ம வயது ஆண் குழந்தைகளுக்கு பாலியல் ரீதியில் நடந்த வன்புணர்வு குறித்து பையன்கள் என்ற அத்தியாயம் பேசிக் செல்கிறது. எந்த விதமான விடுமுறையோ அல்லது ஓய்வோ இன்றி, அந்தப் பண்ணையில் அவர்கள் தொடர்ச்சியான கடும் உடல் உழைப்பைக் கொடுப்பவர்களாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறார்கள். வறுமையின் நிமித்தம் தமது விளையாட்டு பருவத்தையும், கல்வியையும் தொலைத்தது மாத்திரமன்றி பாலியல் வன்புணர்வுக்கும் உள்ளாகியிருக்கும் இச்சிறுவர்கள் எதிர்காலத்தில் தம்மை எல்லா விதத்திலும் குரூரமாக வதைத்த இந்தச் சமூகத்தை எவ்வாறு நோக்குவார்கள், அவர்களும் அதே போல தம்மைச் சுற்றியிருக்கும் சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்யக்கூடுமோ என்கின்ற வினாக்களையும் நாவலாசிரியர் வெளிப்படுத்தினாலும் அவரால் பெரிதாக ஒரு மாற்றத்தையும் அங்கு தோற்றுவிக்க முடியாதவாறு அவரது கையறு நிலை ஓங்கி நிற்கிறது.

பெண்களினதும் பெண் குழந்தைகளினதும் பாலியல் ரீதியான வன்முறைகளை அதிகமாகப் பேசியும் கேட்டும் பழகிய எமக்கு ஆண் குழந்தைகளின் பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகம் பேசப்படுவதில்லை என்றே தோன்றுகிறது.

இந்தியாவில் மட்டுமல்ல எந்தத் தேசத்திலும் குழந்தைகள் பாதுகாக்கப்படவேண்டும். அவர்கள் சட்டரீதியாகப் பாதுகாக்கப்படவேண்டும் என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் இருக்கப் போவதில்லை.

இங்கு பிரித்தானியாவில் பாடசாலைகளில் ஆசிரியர்கள் வாயிலாக குழந்தைகள் பாதுகாப்புச் சட்டமும், அதனைச் சரிவரப் பேணுவதற்காக ஆசிரியர் பயிற்சியும் கடுமையாக நடைமுறையிலுள்ளன. பிரித்தானியாவில் பயிற்றப்பட்ட ஆசிரியையாக பணி புரியும் என்னைப் போன்றவர்களுக்கு இப்படியான சம்பவங்கள் அதிர்ச்சியையும், ஆதங்கத்தையும் இக்குற்றத்தை இழைத்தவர் மேல் ஆத்திரத்தையும் தோற்றுவிப்பது இயல்பானதென்றே தோன்றுகிறது.

இங்கிலாந்து கல்வித்துறையே இங்கு குழந்தைகளின் பாதுகாப்பு எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்கான கொள்கைகள், சட்டம், சட்டரீதியான வழிகாட்டுதல்களை தலையாய கடமையாகக் கொண்டுள்ளது. இங்கு அதனோடு இணைந்து சேவை புரிபவர்களாக இருப்பவர்கள் ஒவ்வொரு நகரங்களிலுமுள்ள நகர சபைகளும் அதன் பாடசாலைகளுமே. ஒரு ஆசிரியரே ஒரு குழந்தையைப் பாதுகாக்கும் படிமுறையில் முதன்மையானவராய் இருக்கிறார். இதற்கான தொடர்ச்சியான பயிற்சிகள் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இவ்வாறான சட்டநடைமுறைகள் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் செயற்படுத்தப்படும் போது இவ்வாறான குழந்தைகள் பாலியல் வன்முறைகள் கணிசமான அளவு குறையலாம் என்றே தோன்றுகிறது. இதற்கு அந்நாட்டு அரசுகள் தமது சட்டங்களை வலிமைப்படுத்த வேண்டும் அல்லது புதிதாக சட்டங்களை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும். இந்நாவலில் இப்படியான ஆண் குழந்தைகளின் பாலியல் வன்முறையைப் பேசிச் செல்வது இது குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவது மெச்சத் தக்கதொன்றாகவே பார்க்க வேண்டும்.

இனி மேற்கொண்டு இந்நாவலில் வருகின்ற கதையைத் தொடர்ந்தோமானால் பண்ணைக்கு ஒரு கால்நடை மருத்துவராக நாவலாசிரியர் வருவதற்கு முன்னரே பண்ணையில் இறந்து போன ஒரு இளம்




பெண்ணின் மரணம் கொலையா அல்லது தற்கொலையா அல்லது தற்செயலா என்ற பலத்த கேள்வியுடன் அவரின் பண்ணை வாழ்வையும் தன் பணியையும் அப்பண்ணையில் கொண்டு செல்ல வேண்டியதாயிருக்கிறது.

அப்பெண்ணின் மரணம் குறித்த மர்மத்துக்கும் அவள் வேலை பார்த்த அந்த பண்ணையில் தொடர்ந்தும் வேலை பார்க்கும் கதை மாந்தர்களுக்கும் தொடர்பு இருக்கலாம் என்ற ஒரு பரபரப்பை இந்நாவலின் சம்பவங்கள் ஏற்படுத்திச் செல்கின்றன.

புனைவில்லா இந்நாவலில், எதற்காக நாவலாசிரியர் ஒரு அமானுஷ்யமான ஒரு பெண்ணின் ஆவியை, அதுவும் அப்பண்ணையில் இறந்த கற்பகத்தின் ஆவியை மிக இயல்பாக உலாவ விடுகிறார் என்பது இறுதிவரை ஒரு புதிராகவே இருக்கின்றது.

அந்தப் பெண் கற்பகம் இப்பண்ணையில் தான் இறக்க முன்பும் இறப்பின் பின்பும் நடந்த நடக்கின்ற விடயங்களை கால்நடை வைத்தியருக்குச் சொல்லிச் செல்வது அதீதமான கற்பனையா அல்லது மாயா யதார்த்தம் என்ற போர்வையா என்பதும் வாசகர்களுக்கு , புனைவில்லாத இந்நாவலின் கதைக்கரு குறித்த சந்தேகத்தை ஏற்படுத்தலாம்.

உதாரணமாக கற்பகம், அப்பண்ணையில் வசிக்கின்ற ஒரு பசுவிற்கு கர்ப்பம் தரிக்கும் வேளை வந்துவிட்டதை கதை சொல்லியான கால் நடை மருத்துவருக்கு சொல்லுவதும், அவர் அதை உறுதிப்படுத்துவது உட்பட தன் கொலை, கொலையாளி பற்றிய சில விடயங்களை கூறுவது போலான சில சம்பவங்கள் நாவலின் புனைவல்லாத கதைக்கருவின் நம்பகத் தன்மையை கேள்விக்குப் படுத்துவதாய் உள்ளது. ஒரு கட்டத்தில், நாவலின் இறுதிப் பகுதியில் கதை சொல்லியான நாவலாசிரியர் இந்தக் கொலை பற்றி காவல்துறை மீண்டும் தலையிட்டு ஆராய்ந்து குற்றமிழைத்தவர்களைத் தண்டிக்க வேண்டும் என்று ஒரு கடிதம் காவல்துறைக்கு எழுதுவதாக இருக்கிறது.

எந்த ஆதாரமுமில்லாது, வெறும் ஆவி வந்து பேசியதிலிருந்தும் அது சொல்வதை நம்புவதிலிருந்துமே நாவலாசிரியர் இந்தக் கொலை விவகாரத்தை விசாரிக்க வேண்டும் என்று கேட்பதை, காவல்துறை நம்ப வேண்டும் என்ற எதிர்பார்ப்பு சரியானதாகவும் இங்கு தெரியவில்லை.

இருந்த போதிலும் நம்மில் பலருக்கு சில அதிசயிக்கத்தக்க, புரிந்து கொள்ள முடியாத சில விடயங்கள், அமானுஷமான சம்பவங்கள் நடந்திருக்கலாம். அவற்றைப் பற்றி எவருடனும் வெளிப்படையாகப் பேசுவதற்கு எம்மில் பலருக்குத் தயக்கம் ஏற்படுவதுண்டு. கடவுள் மறுப்பாளர்கள் உட்பட பலரும் இவ்விடயத்தில் தம் அதிருப்தியைத் தெரிவிக்கவும் இடமுண்டு. இவ்வேளையில் நாவலாசிரியர் தனக்குச் சரியெனப் பட்ட கருத்தை அப்படியே வாசகர்களுக்குத் தந்திருப்பது பாராட்டத் தக்கது.



பூங்கோதை...
பிரித்தானியாவிலிருந்து ...

# கவிதை மஞ்சரி

கிருஷா

kavithaimanjari@gmail.com



# சிறுவர் தினம்

அருலானந்தம் ஞா. பிரகாஷ் கந்தப்பளை

தவம் இருந்து
பெற்றெடுத்தேன்
உன்னை " நீ?
பிறக்கும் போது
பெயர் ஒன்றையும்
இன அடையாளத்தையும்
பெற்று
கொள்கிறாய்.....

பெற்றோரை
தெரிந்து கொள்ள
அவர்களின் பாதுகாப்பை
பெறுகிறாய்....

நீ துள்ளி
விளையாடும்
போதும் உன்
கள்ளகபடமில்லா
சிரிப்பை பார்க்க
இரு கண்கள்
போதாது .....

காலை பொழுது
எழுத்து கல்வியை
கற்றிடு
மாலை நேரத்தில்
விளையாட
கற்றுக்கொள் .....

பெரியோரை
மதித்திடு
நற்செயல்களை
சிந்தித்து
மனசாட்சிற்க்கு
கட்டுப்பட்டு
வாழ பலகிடு.....

எதிலும் பதற்றம்
காட்டாமல் அனைத்து
காரியத்திலும்
வெற்றி வாகை
சூடு.....

உன்
உரிமைக்காகவும்
உன்னை
மகிழ்விற்கவும்
இந்த சிறுவர்
தினம்
கொண்டாட்டம்......

## விளையும் பயிரும் விளைந்த மரமும்

உசனார் எம்.பஷீர்,
ஏறாவூர்.

சிறகடிக்கும் சிட்டுக்களாய்
சிதறிய முத்துக்களாய்
சிந்தையை துலக்கிட
சித்திரமாய் வந்தோரே

விந்தையில்லா எண்ணமதில்
வினையில்லா நிலை கொண்டு
விளைந்திடும் பயிராய்
விரைந்திட வந்தோரே

நாளைய தேசத்தின்
நல்லரசரும் நீங்களே
நானிலத்தில் கனவானாய்
நாணயமானோரும் நீங்களே

முதியவர்கள் நாங்களென
முகவரியை முழுதாயமைத்து
அனுபவங்களின் ஆசானாய்
ஆசீர்வாதம் தருவோரே

தலைமுறையின் வளர்ச்சிக்கு
தரமாய் வழியமைத்திட
உரமாயிருந்து
உபதேசம் புரிவோரே

வலிகள் நீங்கி நல்
வழிகள் கண்டிட
விழிகளால் நீங்கள்
வியாபித்து நிற்கிறீர்கள்

அறிவுரையும், ஆலோசனையும்
செறிவாகத் தெறிக்க விட்டு
தெரிவாக்கிய நெறிகள்
தெவிட்டாத கனிகள்

## எப்பொழுதும்...

அறூபா அஹ்லா

பிரிவுகள்
எப்பொழுதும்
வலிக்கும்...

நினைவுகள்
எப்பொழுதும்
தொடரும்...

பாசங்கள்
எப்பொழுதும்
பொழியும்...

வேஷங்கள்
எப்பொழுதும்
களையும்...

தோல்விகள்
எப்பொழுதும்
கசக்கும்...

வெற்றிகள்
எப்பொழுதும்
இனிக்கும்...

பிழைகள்
எப்பொழுதும்
திருத்தும்...

சரிகள்
எப்பொழுதும்
வழிநடாத்தும்...

வாழ்க்கை
எப்பொழுதும்
மாறும்...

வாழ்வோம்
எப்பொழுதும்
மகிழ்வாய்...

## முதியோர் இல்லங்கள்

ஏரூர் எம்.ரி.எம்.அன்ஸார்



வலிகளைத் தாங்கியே
பெற்றெடுத்தாள் அன்னை
களிப்புக்களைக் காட்டியே
வளர்த்தெடுத்தாள் உன்னை
சலிப்பும் கொள்ளாது
நீஉயர ஏணியானாள்
விழிப்புணர்வுடன் நீயும்
வாழ்ந்திட தேனீயானாள்

இரவும் பகலுமாய்
உழைத்திடும் தந்தை
உறவும் வாழ்ந்திட
மெழுகுவர்த்தியாகும் விந்தை
வரவும் இல்லையெனில்
கலங்கிடும் சிந்தை
வரமாக வந்தவரே
எங்களின் தந்தை

கனவைத் தொலைத்தே
காலங்களை வென்றவர்கள்
நினைவாய்ப் பிள்ளைகளை
நெஞ்சில் சுமந்தவர்கள்
வினையை விலக்கியே
விடிவைத் தந்தவர்கள்
இணையே இல்லையே
இவர்களுக்கு உலகில்

முதுமையை அடைந்தாலும்
அவர்களே நம்முயிர்
பதுமையாய்க் காப்பதே
பிள்ளைகளின் செயல்
புதுமை என்றாலும்
பெற்றோர்முன் தோற்றிடும்
வெறுமை ஆக்கிடுவோம்
முதியோர் இல்லங்களை..!

## ஏதிலிகள்

இணுவில் வாகீசன்



தாலிக்கனவுகள்
நிறைவேறவில்லை
முதிர்கன்னி

அம்மா என்றழைப்பார்
யாருமில்லை
முதியோரில்லதாய்

அம்மா என்றழைக்க
யாருமில்லை
அநாதையில்ல சிறுமி

அரசவைத்தியசாலை
மருந்தேற்றிய உடல்
பேருந்துதரிப்பிட யாசகன்

தர்மம் செய்யுங்கள் அம்மா
கோயிலில் கோபுரமருகே
கோயில் யாசகர்கள்

இல்லை, முடியாது, ஏன் உதவி
வெறுப்புடன் கடந்து செல்லும்
நவநாகரிக மனிதர்கள்



## அம்மா

எம் ராமதாஸ்
இறம்பொடை

நூறு சொந்தம் வந்து
இங்க பந்தமின்னு நின்னாலும்
ஈரத்துக்கே ஈரம் சேர்க்கும்
ஒனக்கேது ஈடுயென....

அம்மா...

மனசுடைஞ்சி போகும் நேரம்
உம்மடிமேல தலைய வெச்சி
மல்லாக்கா படுத்துக்கிட்டு
முகம் பார்க்கும் வேளையில...

ஓடிருமே துன்பமெல்லாம்....

ஒத்தமுட்டி அரிசிவெச்சி
ஆளுக்கா பங்குப்போட்டு
உருட்டி ஊட்டயில
ஊருவரும் வாயிலெச்சி....

உருவாஞ்சுருக்கு போட்டு
தூணுல தொட்டிக்கட்டி
தூங்க வெச்ச அந்த சொகம்
ஓம் மடியில இருக்குதும்மா

திட்டி திட்டி தீத்துப்புட்டும்
திங்காம தூங்காதன்னு
திங்கயிலும் ஏசுவியே அப்பக்கூட...
தீராது ஓம் பாசம் மட்டும்...

அம்மியில அரைச்செடுத்த
அரைவாசி சம்பலயும்
கொண்டிருக்கும் உந்தன் கைய
நக்குறப்போ சொகம் இருக்கே...

அம்மா........

அம்மா என்ற சொல்லு
சரித்திரம் கொண்ட சொல்லு
ஆயுள் வர நீண்டிச்சின்னா...
துன்பமே இல்ல பாரு....

நீட்டி நிமிர்ந்து விட்டு
நித்திரை கொள்ளும் நேரம்
நீங்காத உன் நெனப்பு
நித்தம் நித்தம் கொல்லுதும்மா....

ஊரகந்து நானு
வேலைக்கு வரும் போது

போய்வாரே என்று சொல்லி
பொறப்பட்டு வரும் நேரம்
பத்திரமா போடானு
வாசலில நின்னிங்கலே....

பின்னாடி திரும்பாமா
வெரசாக நானந்தே...
திரும்பி உன்ன பாத்தனின்னா...
திரும்பி போக மாட்டேனம்மா....

கண்ணீருக்கு மொழியிருக்கு
அதுக்குள்ள நீரிருக்கு
நீருக்குள்ள ஈரத்துல
என்னோட உசுரிக்கு....

அம்மா......

## நவராத்திரி மகிமை



வி.அபிவர்ணா
முல்லைத்தீவு.

நவம் என்றால் ஒன்பது ஆகும்
ராத்திரி என்பது இரவுகள் ஆகும்
நவமும் ராத்திரி
இணைந்தே வந்ததே
நவராத்திரி எனவே
நல்லோர் சொல்வர்
மகிஷன் என்றொரு
அரக்கன் தவமிட்டு

வரமொன்று பிரம்மன்
தரவென்று கேட்க
வரமதன் பொருளெது
கூறுக என்றான்
யாதொரு இறப்பும்
எனக்கினி வேண்டாம்
தந்திடு உடனே என்றான் மகிஷன்

தந்தேன் வரமே மகிழ்வாய்
இனிமேல்
என்றிட்ட பிரம்மன்
விண்ணகம் சென்றான்
மகிஷனின் ஆட்டம்
மண்ணகம் விண்ணகம்
புயலென நெருப்பென
கொடுமை செய்தது

தேவர்கள் அம்பாள்
வசம் வந்து கேட்க
சக்தியாய் தேவியாய்
அழகொடு சென்று

மெல்ல சிரித்தாள்
என்னைப் போரில்
வெல்பவன் எவனோ?
அவனே என்னை
மணப்பவன் எனவே
அம்பாள் சொல்ல
சிரித்தான் மகிஷன்

நான் வரமாட்டேன்
என்றொரு தினமொரு
படையை அனுப்ப
வெகுண்டாள் அன்னை
தினமொரு வடிவொடு
அரக்கரை அழித்தாள்
இறுதியில் மகிஷனை
அழித்தே சிரித்தான்

துர்க்கையில் தொடங்கி
சாமுண்டிஸ்வரி
தொடர்ந்து
மகிஷாசூரமர்த்தினியாக
மகிஷனை அழித்து
மூவுலகு காத்த
முக்கண்ணார் பாதியை
இக்கணம்
பணிந்தே இகத்தினை
வெல்வோம்

## தென்னிலங்கை வாசம்

முபர்ரிஜ்

தென்னிலங்கை வாசம்
காலி வீதி எங்கும் வீசும்
கடலோரக் காற்று
காதோரம் பேசும்

பேருந்தின் ஓரம்
புகையிரதம் ஊரும்
கடலோரம் சாரும்
பாதை பார்க்க வாரும்

உல்லாசப் பயணம்
சல்லாப விடுதி
பொல்லாத ஆசை என
எல்லாமே யிங்கு கைக் கூடும்

வானுயர் தென்னைகள்
வளைந்து வளரும்
கண்கவர் கடற்கரைகள்
காண இங்கு வாரும்


பெந்தொட்ட பலபிட்டிய
கின்தொட்ட ஹிக்கடுவ
உணவடுன கொக்கல
மீரிஸ்ஸ டிக்வல்ல
காலி தால்ப எங்கும்

குளித்துக் களிக்க
நீந்தி மகிழ
முருகை பார்க்க
கடலாமை காக்க
கடலோரம் வாரும்

மது ஜின் வளவ
மாணிக்க நில்வளவ என
நீண்டு செல்லும் கங்கைகள்
அதில்
நீந்திச் செல்லும் மீனினங்கள்
காண இங்கு வாரும்

தோணி எடுத்து
துடுப்பு வலித்து
தீவு கடந்து
கண்டல் காண
தென்னிலங்கை வாரும்

வாழ்வில் ஒருமுறையேனும்
கண்டு உழல
உண்டு மகிழ
தென்னிலங்கை வாரும்



## புதிது காண்போம்

நிலாவெளியூர் கெஜதர்மா

“விலையேறிப்போச்சு”
“விலையேறிப்போச்சு” – என்றே
வீதியெங்கும் நாளும் பேச்சு
“உலையேறி நாளாச்சு”
“உலையேறி நாளாச்சு” – என்றே
ஊரெங்கும் தினமும் பேச்சு
நிலையிதானதற்கு காரணிதானென்ன என்றே
நினைத்துப் பார்த்திடல் தகும்
இலவசமாயிங்கு பற்பல இருப்பதும்
இதற்கோர் காரணி ஆமோ
இலங்கையின் பிரச்சினை இன்னும்
இலகுவாய்த் தீரா ததோ
இருப்பவரிட மிருந்து இல்லாதோர்க்கு
எடுத்தெதுவும் கொடுக்கா ததோ
இருப்பவரே என்றும் இல்லாதவரை
கூலியாய் வைத்திருப் பதுவோ
பொருளாதாரம் சிலரிடமே என்றும்
புதைந்து கிடப் பதுவோ
வருங்காலமென்றும் வளமாய் திகழ
வகையெது? புதிது காண்போம்

## கவிஞர்கள் கவனத்துக்கு...

கவிதை மஞ்சரிக்கு கவிதைகள் அனுப்பும் வாசகர்கள் தயவு செய்து 15 - 18 வரிகளுக்கு மேற்படாமல் தமது கவிதைகளை எழுதி அனுப்ப வேண்டும். பொருட்சுவை, சொற் சிக்கனம், கருப் பொருளை நெற்றியடியாக சொல்லுதல், ஆற்றோட்டமான நடை என்பன கவிதைக்கான அடிப்படை இலக்கணம், ஒரு விஷயத்தை சுருக்கமாக, நறுக்கென சொல்வதே கவிதை.

வளவளவென நீண்டு செல்லும், பொருளற்ற கவிதைகள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டா. ஒரு கவிதையின் பொருள் ஒன்றுக்கு மேற்பட்டதாக இருக்கக் கூடாது. இளங்கவிஞர்கள் புதிய உத்திகளை பயன்படுத்த முன்வர வேண்டும். ஏனெனில் கவி பழகும் இளங் கவிஞர்களுக்கான நடை முற்றமே கவிதை மஞ்சரி.

- ஆசிரியர்



## மௌனப்பூனை

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

இரவுக்கயிற்றில் மெதுவாய் நடக்கிறது
மௌனப் பூனை

பனிக்குடங்கள் உடைந்து
பூக்களாய்க் கைகள்
நீள்கின்றன கனவில்
இருப்பினும்
புன்னகைக்க மறந்து

ரணங்களின் புதைகுழிகளில்
காற்றுக்குமிழிகள்
வந்து வந்து வெடிக்கின்றன
கண்ணீரும் இல்லை
கண்களில்
அதே மௌனம்

பூகம்பங்களும்
புன்னகைகளும்
பரிதாபங்களும்
பாசத்துளிகளும்
மாறிமாறி
தறிகெட்டு அலையும்
நடுநிசிப் பொழுது

அழுகையின் பிரலாபங்கள்
தலையணையில் புதைய
வலியின் வதையில்
பிரிவின் துகள்கள்
எங்குமே நிரம்பி
இருதயத்தை அடைத்து
வீங்கச் செய்ய

இராப்பொழுது முழுதும்
விழித்தே கிடக்கிறது
மௌனப் பூனை
விழித்திரையில் உன் விம்பங்களோடு
பிரிவின் பரிசை
ரசித்து உண்டு
தனியாக

# World Vision
## வேள்ட் விஷன் லங்கா

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வாகனத்தை விற்பதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| உருப்படி இலக்கம் | பதிவு இலக்கம் | வாகன வகை | ஆண்டு | வாகன தரிப்பிடம் |
|---|---|---|---|---|
| 01 | WP KQ - 8464 | HYUNDAI SANTAFE | 2011 | வேள்ட் விஷன் லங்கா (தலைமை அலுவலகம்) இல. 619/8, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 09. |

**பரீட்சிப்பது மற்றும் விலைமனுக்களை வழங்கல்**

மேலுள்ள வாகனத்தை 2022 ஒக்டோபர் மாதம் 07 மற்றும் 08 ஆம் திகதிகளில் மு.ப. 9.30 தொடக்கம் பி.ப. 4.00 மணி வரை மேற்குறிப்பிட்ட இடத்தில் பரீட்சிக்க முடியும் என்பதோடு வாகனம் ஒன்றுக்காக அனைத்து விபரங்களும் அடங்கிய விலைமனு ஆவணம் ஒன்றை மீளளிக்கப்படாத கொடுப்பனவாக 2,000/- ரூபாவை செலுத்தி வாகன தரிப்பிடத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.



කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

**කෘෂිකර්ම අමාත්‍යාංශය**
**கமத்தொழில் அமைச்சு**
**Ministry of Agriculture**

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் - கமத்தொழில் அமைச்சு**
**IDA Credit No.: 5873 LK**

# பெறுகை அறிவித்தல்

## வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களுக்கு குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் (Mini Sprinkler Irrigation Systems) மற்றும் சொட்டு நீர் நீர்ப்பாசன முறைமைகளை (Drip Tape Irrigation Systems) வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP) கிரயச் செலவிற்காக 58.63 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களுக்கு குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் (Mini Sprinkler Irrigation Systems) மற்றும் சொட்டு நீர் நீர்ப்பாசன முறைமைகளை (Drip Tape Irrigation Systems) வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் என்பவற்றிற்கு ஒப்பந்தத்தின் கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.
2. வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களுக்கு குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் (Mini Sprinkler Irrigation Systems) மற்றும் சொட்டு நீர் நீர்ப்பாசன முறைமைகளை (Drip Tape Irrigation Systems) வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் எனும் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின், செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கிறார்.

| விபரங்கள் | ஒப்பந்த இலக்கம் | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| மட்டக்களப்பு மாவட்டத்தில் மலர்யாகட்டுவில் இடைக்கால மிளகாய் பயிர்ச்செய்கைக்கு Drip Tape நீர்ப்பாசன முறைமை மற்றும் Cavendish வாழைச் செய்கைக்கு 150 எண்ணிக்கையான குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் | LK-MOA-PMU-273618-GO-RFB | 990,000.00 | 15,000.00 |
| மொனராகலை மாவட்டத்தில் இடைக்கால மிளகாய் பயிர்ச்செய்கைக்கு Drip Tape நீர்ப்பாசன முறைமை மற்றும் Cavendish வாழைச் செய்கைக்கு 300 எண்ணிக்கையான குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் | LK-MOA-PMU-277646-GO-RFB | 1,980,000.00 | 25,000.00 |
| யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இடைக்கால மிளகாய் பயிர்ச்செய்கைக்கு Drip Tape நீர்ப்பாசன முறைமை மற்றும் புளி வாழைச் செய்கைக்கு 100 எண்ணிக்கையான குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் | LK-MOA-PMU-273984-GO-RFB | 660,000.00 | 7,500.00 |
| முல்லைத்தீவு மாவட்டத்தில் முத்தையன்கட்டுவில் மிளகாய் பயிர்ச்செய்கைக்கு 225 எண்ணிக்கையான Drip Tape நீர்ப்பாசன முறைமை | LK-MOA- PMU-273897-GO-RFB | 1,080,000.00 | 10,000.00 |
| முல்லைத்தீவு மாவட்டத்தில் இடைக்கால மிளகாய் பயிர்ச்செய்கைக்கு Drip Tape நீர்ப்பாசன முறைமை மற்றும் மாதுளம் செய்கைக்கு 100 எண்ணிக்கையான குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் | LK-MOA-PMU-273932-GO-RFB | 660,000.00 | 7,500.00 |
| முல்லைத்தீவு மாவட்டத்தில் இடைக்கால மிளகாய் பயிர்ச்செய்கைக்கு Drip Tape நீர்ப்பாசன முறைமை மற்றும் கோழிகுட்டு வாழைச் செய்கைக்கு 250 எண்ணிக்கையான குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் | LK-MOA- PMU-273948-GO-RFB | 1,650,000.00 | 15,000.00 |
| யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இடைக்கால மிளகாய் பயிர்ச்செய்கைக்கு Drip Tape நீர்ப்பாசன முறைமை மற்றும் மாம்பழச் செய்கைக்கு (படிநிலை II) 200 எண்ணிக்கையான குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் | LK-MOA- PMU-273993-GO-RFB | 1,320,000.00 | 10,000.00 |

3. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, பெறுகை திணைக்களத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து 0777419521 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம் மற்றும் 2022-10-06ஆம் திகதியிலிருந்து 2022-10-26ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பின்வரும் முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவானது செயற்றிட்டத்தின் நிதியிடல் முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
6. 2022-10-26ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 2022-10-26ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியில் தாமாக வருகை தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி என்பன தனித்தனியான உறைகளில் இடப்பட்டு 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என தபாலுறைகளில் குறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் வேறொரு தபாலுறையில் இட்டு முத்திரைக்குறி பொறித்து அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் ''வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களுக்கு குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் (Mini Sprinkler Irrigation Systems) மற்றும் சொட்டு நீர் நீர்ப்பாசன முறைமைகளை (Drip Tape Irrigation Systems) வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
8. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி: 0112696086 அல்லது 0777419521**
**திகதி: 2022-10-02**



பாதுகாப்பு அமைச்சு
**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்**

# விலைமனுக்கோரல்

## ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக அரங்க கட்டிடத்திற்காக முன்மொழியப்பட்ட ஒலி எதிர்ப்பு கதவுகளை நிறுவுதல், வழங்கல், கட்டுதல் மற்றும் நிறுவுதல்

**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்**
**ஒப்பந்த இலக்கம் : KDU/PRO/RP&SERVICE(AUD)/ 06/2022**

1. இரத்மலானை, ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பல்கலைக்கழக திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தவிசாளரினால், **ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக அரங்க கட்டிடத்திற்காக முன்மொழியப்பட்ட ஒலி எதிர்ப்பு கதவுகளை நிறுவுதல், வழங்கல், கட்டுதல் மற்றும் நிறுவுவதற்காக** தகுதிவாய்ந்த மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

2. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2022.10.03** ஆம் திகதியிலிருந்து **2022.10.26** ஆம் திகதி வரை **மு.ப.09.00 மணியிலிருந்து பி.ப.15.00** மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத ரூ.12,500/- கட்டணத்துடன் **ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பணிப்பாளர் (ஏற்பாட்டியல்), இரத்மலானை** எனும் முகவரியில் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

3. மனு ஆவணங்களை மேற்குறிப்பட்டுள்ள முகவரியில் **2022.10.03 முதல் 2022.10.26** ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் **0900 மணி முதல் 1500 மணி வரை** சரிபார்க்கலாம் **(தொலைபேசி - 0710219449, தொலைநகல் - 011-2632430).**

4. முத்திரையிடப்பட்ட மனுக்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.

5. **2022.10.27 ஆம் திகதி மு.ப.10.00** மணிக்கு **இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில்** மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.

6. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **பணிப்பாளர் (ஏற்பாடடியல்), இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி-0710219449 / 011-2632430** தொலைநகல் 011-2632430, **directorlogistics@kdu.ac.lk / ocrepair@kdu.ac.lk** மற்றும் **www.kdu.ac.lk/ocls/tender-notices** பார்வையிடலாம். **விலைமனுக்கோரல்)**

தவிசாளர்,
திணைக்களத்தின் பெறுகைக் குழு,
ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்,
இரத்மலான, இலங்கை.



# வேலை வாய்ப்பு

இலங்கையின் பாரிய சில்லறை வலையமைப்பிற்கு

## பிரதி பொது முகாமையாளர் - செயற்பாடுகள்

**தகைமைகள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல், வியாபார முகாமைத்துவம் அல்லது வர்த்தகம் ஆகியவற்றில் பெற்ற பட்டதாரிப் பட்டமொன்று.
மற்றும்
உரித்தான துறையில் பட்டப்பின் தகைமைப் பட்டம் (முதுமாணி) அல்லது பதவிக்கு உரித்தான விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவகத்தின் முழுமையான/ இணைந்த அங்கத்துவம்.
மற்றும்
ஏதேனும் கூட்டுத்தாபனம், சட்ட ரீதியான சபை அல்லது புகழ்பெற்ற வணிக ஸ்தாபனத்தில் 05 வருடங்கள் மூத்த முகாமையாளர் தரத்திலும் மொத்தமாக குறைந்தது 15 வருடங்கள் முகாமையாளர் தரத்துடைய அனுபவத்தை கொண்டிருத்தல்
2. பதவியின் விடயப்பரப்பிற்கு உரித்தான அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவகத்தின் முழுமையான அங்கத்துவம்.
மற்றும்
ஏதேனும் கூட்டுத்தாபனம், சட்ட ரீதியான சபை அல்லது புகழ்பெற்ற வணிக ஸ்தாபனத்தில் 05 வருடங்கள் மூத்த முகாமையாளர் தரத்திலும் மொத்தமாக குறைந்தது 15 வருடங்கள் முகாமையாளர் தரத்துடைய அனுபவத்தை கொண்டிருத்தல்

## பிரதி பொது முகாமையாளர் - பொறியியல்

**தகைமைகள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட சிவில் அல்லது பொறிமுறை அல்லது மின் ஆகிய துறை ஒன்றில் இளமாணிப் பட்டம் அல்லது IESL இன் இணை அங்கத்துவத்துடன் IESL இல் பாகம் I/II/III
அத்துடன்
சார்ந்த துறையில் பட்டப்பின்படிப்பு பட்ட தகைமை (முதுமாணி)
மற்றும்
கூட்டுத்தாபனமொன்றில், நியதிச்சட்டசபையொன்றில்/ நிறுவனம் அல்லது புகழ்வாய்ந்த தனியார்துறை நிறுவனமொன்றில் ''நிருவாக மட்டத்தில்'' ஆகக் குறைந்தது 15 வருட அனுபவத்தில் 5 வருடங்கள் உறுதிப் படுத்தப்பட்ட முன்னைய பணி அனுபவத்துடன் சிரேஷ்ட நிருவாக மட்டத்தில் இருத்தல் வேண்டும்.
2. பதவியின் விடயப்பரப்பிற்கு உரித்தான அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவகத்தின் முழுமையான அங்கத்துவம் (IESL)
மற்றும்
ஏதேனும் கூட்டுத்தாபனம், சட்ட ரீதியான சபை அல்லது புகழ்பெற்ற வணிக ஸ்தாபனத்தில் 05 வருடங்கள் மூத்த முகாமையாளர் தரத்திலும் மொத்தமாக குறைந்தது 15 வருடங்கள் முகாமையாளர் தரத்துடைய அனுபவத்தை கொண்டிருத்தல்

**சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்:**
அடிப்படை சம்பளம்: ரூபா 150,000/= (செயல்திறன் கொடுப்பனவு ரூபா 75,000/=, போக்குவரத்து கொடுப்பனவு 50,000/= மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு மற்றும் அரசாங்க சுற்றறிக்கைகளின்படி பதவிக்கு பொருந்தும் தகவல் தொடர்பாடல் கொடுப்பனவு )

**வயது:** 35 வயதுக்கு குறையாதவராகவும் 60 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**நியமனத்தின் பண்பு:** EPF மற்றும் ETF இற்கு உரித்தான ஒப்பந்த நியமனம்

**பொருத்தமான அபேட்சகர்கள் பின்வருவனவற்றை கொண்டிருத்தல் வேண்டும்:**
- மதிப்பீடு, மதிப்பாய்வு மற்றும் தரவை விளக்கும் திறனுடன் சிறந்த பகுப்பாய்வு, சிக்கல்களை தீர்க்கும் பண்பு மற்றும் ஏற்பாட்டுத் திறன்களை பெற்றவராகவும் சிறந்த சுய ஊக்கம் கொண்ட வராகவும் இருத்தல் வேண்டும்.
- வலுவான தலைமைத்துவ தகைமைகள், ஒருவருக்கு ஒருவர் தொடர்புகொள்ளும் திறன்களை கொண்டிருத்தல்.
- சிறந்த IT திறன்களை நிரூபிக்க முடியுமாக இருத்தல் வேண்டும்.
- பல தரப்புக் குழுக்களுக்கு தலைமை வகித்த மற்றும் வழிநடத்திய நிரூபிக்கப்பட்ட திறமை. மனித மற்றும் ஏனைய வளங்களை முறையாக அமர்த்திய மற்றும் திறமையாக முகாமைத்துவம் செய்த அனுபவம்.

**அனைத்து விண்ணப்பதாரர்களும்,**
- இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.
- பதவியின் கடமைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கு மற்றும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் கடமையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- சிறந்த ஆளுமையுடைய நபராக இருத்தல் வேண்டும்.

நீங்கள் சரியான தகைமைகள் மற்றும் அனுபவத்தை பெற்றவராக இருந்தால், சான்றிதழ்களின் பிரதிகளுடன் உங்களது சுய விபரக்கோவையை கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது **vacancies@lankasathosa.org** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு, இந்த விளம்பரம் வெளியான 10 நாட்களுக்குள் அனுப்பவும். (கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்/ மின்னஞ்சலின் **"Subject"** பகுதியில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்)

(தேர்வு செய்யப்பட்ட அபேட்சர்களுடன் மாத்திரமே நிறுவனம் தொடர்புகொள்ளும்)

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

தலைவர், லங்கா சதொச லிமிட்., 5ஆம் மாடி
இல.27, சதொச செயலகக் கட்டிடம்,
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

සතොස

# வேலைவாய்ப்பு

## 308 வெற்றிடங்கள்

முன்னணி நிதி நிறுவனத்திற்கு விற்பனை நிறைவேற்று அதிகாரிகள், விற்பனை மேம்பாட்டு அதிகாரிகள் உடனடியாக சேர்த்துக் கொள்ளப்படுவர். (கொழும்பு புறநகர்) அழையுங்கள் 0773627519. 057231

## 309 வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி

தொழிற்சாலை கணக்காளர் (ஆண்) களுத்துறை, வாத்துவவில் உ ள்ள ஓர் முன்னனி உணவு உற்பத்திக் கம்பனிக்கு தேவை. இறுதிக் கணக்கு வரை முடிக்கக்கூடியவராக இருத்தல், கணக்கியலில் குறைந்தபட்சம் 5 வருட அனுபவம். வயது 30 முதல் 50 இ ற்கு இடையில். வேலை நேரம் மு.ப. 8.00 முதல் பி.ப. 6.30 (திங்கள் முதல் சனி வரை) தேவைப்படின் தங்குமிடம் வழங்கப்படும். Email: sajithacrc@gmail.com தொ.பே. 07 7 25 55 58 6/ 07 64 15 11 89 057516

## 312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

கழிவு நீர் சுத்திகரிப்பு நடத்துநர் (Waste Water Treatment Plant Operators) வத்தளையில் அமைந்துள்ள எமது துணி உற்பத்தித் தொழிற்சாலைக்கு 5 வருட அனுபவமுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நடத்துநர் (Waste Water Treatment Plant Operators) தேவை. இலவச தங்குமிட வசதி மற்றும் சகாய விலையில் மூன்று வேளை உணவு பெற்றுக் கொள்ளும் வசதி. மேலதிக விபரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரிக்கு நேரில் வரவும். இல. 18 வெளியமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொடர்புகளுக்கு 076 6200300. 058095

டிங்க ர், பெயின்டர்கள் தேவை. தங்குமிடம் உண்டு. துஷார மோட்டர் இன்ஜினியரிங், கொஹுவல, நுகே கொட. 0777252876. 056765




## 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

பெண் உதவியாளர்கள், வீட்டுப் பணி ப்பெண்கள் மற்றும் சுத்திகரிப்பாளர்கள் தேவை. வயது 18 முதல் 30. அனுபவம் தேவையில்லை. சிறந்த சம்பளம். தொடர்பு 75/ 1, W.A. சில்வா மாவத்த, வெள்ளவத்தை, கொழும்பு6. அழையுங்கள் 0112591169, 0777452 447, 0755091 379. (வட்ஸ் அப் 07609 09458), 056258

## 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

அனுபவமுள்ள கொத்து, ரைஸ் பாஸ்மார் தேவை. நிட்டம்புவ 0741010787. 057611

பேஸ்றி குக்/ உதவியாளர்/ பானங்கள் மற்றும் இனிப்புப் பண்டங்களில் தோ்ந்தவர்கள்/ பொதியிடுபவர்கள் கண்டியிலுள்ள ஓர் உற்பத்தியகத்திற்கு தேவை. (ஆண்/பெண்) dwelgamage@yahoo.com 074-2740030. 057760

மாலபே ஹோட்டலுக்கு ரொட்டி பாஸ் தேவை. 076 7 6 2 6 242, 076 8 8 8 6 636. 057512

## 323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்

கொள்ளுப்பிட்டி, மைல்போஸ்ட் அவென்யூவில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்திற்கு அலுவலக சுத்திகரிப்பு மற்றும் தேநீர் தயாரிப்பதற்கு ஆண்/பெண் ஊழியர்கள் உடனடியாக சேர்த்து க் கொள்ளப்படுவர் . அழையுங்கள். 077 3627519. 057237

# காணி/தோட்டம்

## 601 சொகுசு வசிப்பிடங்கள்/ வீடுகள் தொடர் வீடுகள் விற்பனைக்கு

ஏக்கல, மிலேனியம் விலா கட்டிடத் தொகுதி வலயம் II இல் ஆடம்பர வீடு விற்பனைக்கு. அழையுங்கள் 0773951560 நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள உங்களது சொத்துக்களை விற்பனை செய்வதற்கு நம்பிக்கையுடன் ஏற்கப்படும். 057948

## 607 எஸ்டேட் விற்பனைக்கு

அகலவத்த பதுரலிய நெடுஞ்சாலைக்கு மிக அண்மையில் இரம்மியமான புறநகர சூழலில் அமைந்துள்ள தேயிலை, இறப்பர், கறுவா மற்றும் கவா, மில்ல, மஹோகனி போன்ற பெறுமதி மிக்க மரங்களுடன் கூடிய 11 1/2 ஏக்கர் மற்றும் 3 1/ 2 ஏக்கர் கூடிய 15 ஏக்கர் காணி. நெடுஞ்சாலையிலிருந்து மூன்று வழிகளில் காணிக்கு நுழையலாம். நெடுஞ்சாலைக்கு மிக அண்மையில் உள்ளது. துண்டிகளாகவும் கவனிக்கப்படும். சூரியசக்தி வியாபாரமொன்றிற்கு, தொழிற்சாலையொன்றிற்கு விடுமுறை விடுதியொன்றிற்கு ஏற்றதாகும். 0112727523/ 0779317513/ 0779158816. 057301




# சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

தெஹிவளை, களுபோவில வீடுகள் மற்றும் காணிகள் விற்பனைக்கு உண்டு. 7 பேர்ச் 3 படுக்கை அறைகள், 02 குளியலறைகள் 40 மில்லியன். 6 பேர்ச் 4 படுக்கையறைகள், 03 குளியலறைகள் 46 மில்லியன் . 8 பேர்ச் 3 படுக்கையறைகள், பழைய வீடு 32 மில்லியன். 10 பேர்ச் 3 படுக்கையறைகள் 40 மில்லியன். 9 பேர்ச் 5 படுக்கையறைகள், 3 குளியலறைகள் 48 மில்லியன். New Land Agent 10 பேர்ச் 4 படுக்கையறைகள், 3 குளியலறைகள் 57 மில்லியன். 0773438833. 057702

## 618 வீடு சொத்து களுத்துறை மாவட்டம் விற்பனைக்கு

பாணந்துறை 19 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட மூன்று மாடி வீட்டுடன் காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2022.10.16 இற்கு முன். விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 25 மில்லியன் 0773427535. 057489

## 619 வீடு சொத்து குருணாகல் மாவட்டம் விற்பனைக்கு

அளவ்வ, கொஸ்ஸின்ன வீதியில் அமைந்துள்ள 07 பேர்ச் தென்னை பயிரிடப்பட்ட நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2022.10.16 இற்கு முன் விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழு ம்பு02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 38.5 மில்லியன் 0773427535. 057488

## 620 வீடு சொத்து புத்தளம் மாவட்டம் விற்பனைக்கு

வென்னப்புவ 71.5 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட வீட்டுடன் காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2022.10.16 இற்கு முன். விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 35.8 மில்லியன் 0773427535. 057487

## 621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

கண்டி ஹுலுகங்க 157.7 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட வீடு விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2022.10.16 இற்கு முன். விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 12.8 மில்லியன் 0773427535. 057485

கண்டி, திகன வீதி 12.1 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட பாதி முடிக்கப்பட்ட மூன்று மாடி வீடு விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2022.10.16 இற்கு முன். விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 9.7 மில்லியன் 0773427535. 057480

## 624 வீடு சொத்து அநுராதபுரம் மாவட்டம் விற்பனைக்கு

கெப்பட்டிகொல்லாவ, ஹொரவபொத்தான பிரதான வீதியிலிருந்து 100M தூரத்தில் 48 பேர்ச்சஸ் இடம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு இலக்கம் 0714759515. 056980

## 628 வீடு சொத்து கேகாலை மாவட்டம் விற்பனைக்கு

தெரணியகல, 434 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2022.10.16 இற்கு முன். விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 4.7 மில்லியன். 0773427535. 057478

## 630 வீடு சொத்து காலி மாவட்டம் விற்பனைக்கு

எல்பிட்டிய, எத்கந்துவ 377.6 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2022.10.16 இற்கு முன். விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 24 மில்லியன் 0773427535. 057482



## 632 வீடு சொத்து ஹம்பாந்தோட்ட மாவட்டம் விற்பனைக்கு

எம்பிலிப்பிட்டிய 300 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட வீட்டுடன் காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2022.10.16 இற்கு முன். விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 26.28 மில்லியன் 0773427535. 057483

திஸ்ஸமஹாராமம், கதிர்காமம் வீதி 17 1 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2022.10.16 இற்கு முன். விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 34.2 மில்லியன் 0773427535. 057481

தினகரன் வாரமஞ்சரி திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

# திருமண சேவைகள்

## மணமகள்

கம்பஹா மாவட்ட கௌரவமான முஸ்லிம் பெற்றோர் 2000இல் பிறந்த 5'2" கொழும்பு MLC இல் உயர் தரம் முடித்த அக்குவைனாஸ் கல்லூரியில் ஆங்கில டிப்ளோமா மற்றும் AAT இறுதி யாண்டு தம் இளைய மகளுக்கு தொழிற்றகைமையுள்ள அல்லது வர்த்தகம் புரியும் துணையைத் தேடுகின்றனர். வட்ஸ்அப் 0775405063 இற்கு குடும்ப விபரங்களை அனுப்பவும். அல்லது 0112432051 (நீடிப்பு 278). B187476

---

கமி நவீகரண வியாபதிய
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD · IDA | WORLD BANK GROUP

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் - கமத்தொழில் அமைச்சு
IDA Credit No.: 5873 LK

# பெறுகை அறிவித்தல்

## வவுனியா, அம்பாறை மற்றும் பதுளை மாவட்டங்களிலுள்ள சோளச் செய்கை செயற்றிட்டங்களுக்கு நீர்ப்பாசன முறைமைகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP) கிரயச் செலவிற்காக 58.63 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை வவுனியா, அம்பாறை மற்றும் பதுளை மாவட்டங்களிலுள்ள சோளச் செய்கை செயற்றிட்டங்களுக்கு நீர் நீர்ப்பாசன முறைமைகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் என்பவற்றிற்கு ஒப்பந்தத்தின் கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.
2. வவுனியா, அம்பாறை மற்றும் பதுளை மாவட்டங்களிலுள்ள சோளச் செய்கை செயற்றிட்டங்களுக்கு நீர் நீர்ப்பாசன முறைமைகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் எனும் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின், செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கிறார்.

| விபரங்கள் | ஒப்பந்த இலக்கம் | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| வவுனியா மாவட்டத்திற்கு (1 ஏக்கர்) 50 எண்ணிக்கையான தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் | LK-MOA-PMU-314663-GO-RFB | 480,000.00 | 5,000.00 |
| அம்பாறை மாவட்டத்திற்கு (1 ஏக்கர்) 50 எண்ணிக்கையான தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் | LK-MOA-PMU-314670-GO-RFB | 480,000.00 | 5,000.00 |
| பதுளை மாவட்டத்திற்கு (1 ஏக்கர்) 50 எண்ணிக்கையான தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் | LK-MOA-PMU-314677-GO-RFB | 480,000.00 | 5,000.00 |

3. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, பெறுகை திணைக்களத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து 0777419521 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம் மற்றும் 2022-10-04ஆம் திகதியிலிருந்து 2022-10-25ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பின்வரும் முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவானது செயற்றிட்டத்தின் நிதியிடல் முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
6. 2022-10-25ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 2022-10-25ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியில் தாமாக வருகை தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி என்பன தனித்தனியான உறைகளில் இடப்பட்டு 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என தபாலுறைகளில் குறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் வேறொரு தபாலுறையில் இட்டு முத்திரைக்குறி பொறித்து அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் ''வவுனியா, அம்பாறை மற்றும் பதுளை மாவட்டங்களிலுள்ள சோளச் செய்கை செயற்றிட்டங்களுக்கு நீர் நீர்ப்பாசன முறைமைகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
8. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி: 0112696086 அல்லது 0777419521**
**திகதி: 2022-10-02**

---

சமூக வலுவூட்டல் அமைச்சின்,
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்,
தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின்,
வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
இணைந்து செயற்படுத்துகின்ற
ஜப்பான் வேலைவாய்ப்பிற்காக ஈடுபடுத்துகின்ற வேலைத் திட்டத்தின்,
ஜப்பான் மொழி பாடநெறியில்,

# ஜப்பான் மொழி

கற்பிப்பதற்கு உங்களையும்
அழைக்கின்றோம்....!



இலங்கையில் உள்ள ஒரு இலட்சம் இளைஞர், யுவதிகளை ஜப்பானில் வேலைவாய்ப்பிற்கு தயார்படுத்துவதனை இலக்காகக் கொண்டு ஜப்பான் மொழியினை கற்பிப்பதற்காக மாவட்ட மட்டத்தில ஜப்பான் மொழி உளவாளர்களை பதிவு செய்து கொள்வதற்காக நீங்களும் இன்றே விண்ணப்பியுங்கள்.


**தகைமை:**

- வயது 23 – 55 வருடங்களுக்கு உட்பட்டிருத்தல்.
- பட்டத்துடனான ஜப்பான் மொழி தொடர்பான ஒரு வருட அனுபவம் அல்லது ஜப்பான் மொழி N1 – N4 திறமையுடனான கற்பித்தல் தொடர்பான ஒரு வருட அனுபவம்
- ஆரம்ப கட்ட ஜப்பான் மொழி பரீட்சை (JET Exam) இற்காக கற்பித்தல் மேலதிக தகைமைகளாக கருத்தில் கொள்ளப்படும்.

2022 ஒக்டோபர் 10 ஆம் திகதிக்கு முன்னர் தங்களால் தயாரிக்கப்பட்ட சுயவிபர விண்ணப்பப் படிவத்தினை கடித உறையின் இடது பக்கத்தில் "ஜப்பான் மொழி உளவாளர்" என குறிப்பிட்டு கீழ் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் எமக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி: பணிப்பாளர் நாயகம்,
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்,
1 வது கட்டம், 4 ஆம் மாடி,
செத்சிறிபாய, பத்தரமுல்ல

மேலதிக விபரங்களுக்கு: 0112807013 / 0714398763 / 0714409990
(மு.ப 8.00 தொடக்கம் பி.ப 4.00 வரை)




## மேஷம்

உங்கள் ராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் புரட்டாசி மாதம் 16 ஆம் திகதி (03/10/2022) கன்னி ராசியில் சஞ்சாரம் செய்கிறார். அது அவருக்கு உச்ச வீடு. விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து சேருவர். கடன் சுமை குறையும். உற்றார் உறவினர்கள் உங்கள் மீது சுமத்திய பழி அகலும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு திருப்தி தரும். பலமுறை முயற்சித்தும் வேலை கிடைக்கவில்லையே என்று ஆதங்கப்பட்டவர்களுக்கு நல்ல வேலை அமையும். கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்வீர்கள். அதிர்ஷ்ட திகதி அக்டோபர் 3 ,4 அதிர்ஷ்ட நிறம் சிவப்பு .

## ரிஷபம்

புரட்டாசி மாதம் 16ஆம் திகதி (03/10/2022) கன்னி ராசியில் புதன் சஞ்சாரம் செய்கிறார். அங்கு அவர் உச்சம் பெறுகிறார். உங்கள் ராசிக்கு 2 ,5 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் உச்சம் பெறுவது நன்மைதான். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். குடும்ப பிரச்சினை படிப்படியாக தீரும். கொடுக்கல் வாங்கலில் கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அதிர்ஷ்ட திகதி அக்டோபர் 5, 6 அதிர்ஷ்ட நிறம் பச்சை

## மிதுனம்

புரட்டாசி மாதம் 16ஆம் திகதி (03/10/2022) கன்னி ராசியில் புதன் சஞ்சாரம் செய்கிறார் . அங்கு உச்சம் பெறுகிறார். உடல் ஆரோக்கியம் சீராகும். உள்ளத்தில் அமைதி கிடைக்கும். கடன் சுமை பாதிக்குமேல் குறையும். நீண்ட நாள் எண்ணங்கள் நிறைவேற போதுமான வருமானம் கிடைக்கும். படிப்பில் ஏற்பட்ட தடை அகலும். விலகி இருந்த உறவினர்கள் இப்பொழுது மீண்டும் வந்து இணைவர். வீடு வாங்கும் திட்டங்கள் நிறைவேறும். தாயின் உடல்நலம் சீராகும். சுகஸ்தானம் பலமடைந்து இருக்கும். இந்த நேரத்தில் சுகங்களும் சந்தோஷங்களும் தானாக வந்து சேரும். அதிர்ஷ்ட திகதி அக்டோபர் 7,8 அதிர்ஷ்ட நிறம் இளஞ்சிவப்பு .

## கடகம்

புரட்டாசி மாதம் 16ஆம் திகதி (03/10/2022) கன்னி ராசியில் புதன் சஞ்சாரம் செய்கிறார் . அங்கு அவர் உச்சம் பெறுகிறார். மேலும் அங்குள்ள சூரியனுடன் புதன் இணைவதால் புத ஆதித்ய யோகம் உருவாகிறது. எனவே கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். வழக்குகள் சாதகமாகும். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். அதிகார வர்க்கத்தினர் உறுதுணையாக இருப்பர். சுப விரயங்கள் அதிகரிக்கும். அதிர்ஷ்ட திகதி அக்டோபர் 3, 9 அதிர்ஷ்ட நிறம் நீலம் .

## சிம்மம்

புரட்டாசி மாதம் 16ம் திகதி (03/10/2022) கன்னி ராசியில் புதன் சஞ்சாரம் செய்கிறார். உங்கள் ராசிக்கு தன லாபாதிபதி புதன். கன்னி ராசி என்பது புதனுக்கு சொந்த வீடு மட்டுமல்லாமல் உச்ச வீடும் ஆகும். எனவே தனாதிபதி உச்சம் வரும் இந்த நேரம் தனவரவு அதிகரிக்கும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். மங்கல ஓசை மனையில் கேட்க வழி பிறக்கும். தங்கு தடைகள் தானாக விலகும். அட்டமத்து குருவின் ஆதிக்கத்தால் சிறுசிறு பிரச்சினைகள் வந்தாலும் அதை சமாளித்து விடுவீர்கள். உத்தியோகத்தில் சம்பள உயர்வு, பணி உயர்வு கிடைக்கும். அதிர்ஷ்ட திகதி அக்டோபர் 2, 11 அதிர்ஷ்ட நிறம் செம்மஞ்சள் .

## கன்னி

புரட்டாசி மாதம் 16ஆம் திகதி (03/10/2022) கன்னி ராசியில் புதன் சஞ்சாரம் செய்கிறார். உங்கள் ராசிநாதன் உங்கள் ராசியிலேயே உச்சம் பெறும் இந்த நேரம் அற்புதமான நேரமாகும். எடுத்த காரியங்கள் வெற்றியாகும். இனிய சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். பணிபுரியும் இடத்தில் உங்கள் கருத்துக்களை மேலதிகாரிகள் ஏற்றுக்கொள்வர். பயணங்கள் பலன் தரும். பணப்பற்றாக்குறை அகலும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரலாம். பிள்ளைகள், மனைவிக்கு வேலை கிடைத்து வருமானம் அதிகரிக்கும். அதிர்ஷ்ட திகதி அக்டோபர் 2,3 அதிர்ஷ்ட நிறம் மஞ்சள் .

## துலாம்

புரட்டாசி மாதம் 16ம் திகதி (03/10/2022) கன்னி ராசியில் புதன் சஞ்சாரம் செய்கிறார். அங்கு அவர் உச்சம் பெறுகிறார். உங்கள் ராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் உச்சம் பெறும் பொழுது நன்மையும் தீமையும் கலந்தே நடைபெறும். பாக்கிய ஸ்தானத்திற்கு அதிபதியான புதன் அதிபதியாக விளங்குவதால் பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட வகையில் எடுத்த முயற்சி வெற்றி தரும். பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். வீட்டைப் பழுது பார்ப்பது விவசாயத்தை கவனிப்பது போன்றவற்றில் ஈடுபடுவீர்கள். அதிர்ஷ்ட திகதி அக்டோபர் 2,5 அதிர்ஷ்ட நிறம் சாம்பல்.

## விருச்சிகம்

புரட்டாசி 16 ஆம் திகதி (03/10/2022) கன்னி ராசியில் புதன் சஞ்சாரம் செய்கிறார். அங்கு அவர் உச்சம் பெறுகிறார். இது ஒரு பொற்காலமாகும். லாபாதிபதி புதன் உச்சம் பெற்று தொழில் ஸ்தானாதிபதி சூரியனுடன் இணைந்து இருக்கிறார். குருவின் பார்வை அவர்கள் மீது பதிவதால் தொட்ட காரியங்கள் வெற்றியாகும். உத்தியோகத்தில் சம்பள உயர்வு , பதவி உயர்வு ஏற்படும். தொழில் தொடங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். அதிர்ஷ்ட திகதி அக்டோபர் 2,3 அதிர்ஷ்ட நிறம் ரோஸ் .

## தனுசு

புரட்டாசி மாதம் 16ஆம் திகதி (03/10/2022) கன்னி ராசியில் புதன் சஞ்சாரம் செய்கிறார் . அங்கு அவர் உச்சம் பெறுகிறார். உங்கள் ராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் உச்சம் பெறும் இந்த நேரம் யோகமான காலம் ஆகும். திருமண வாய்ப்புகள் கைகூடும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். புதன் கேந்திராதிபத்திய தோஷம் பெற்ற கிரகம் ஆக இருந்தாலும் தொழில் ஸ்தானத்தில் உச்சம் பெறும் பொழுது தொழில் வளம் சிறப்பாக இருக்கும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கும். அதிர்ஷ்ட திகதி அக்டோபர் 5, 6 அதிர்ஷ்ட நிறம் கருநீலம் .

## மகரம்

புரட்டாசி மாதம் 16ஆம் திகதி (03/10/2022) கன்னி ராசியில் புதன் சஞ்சாரம் செய்கிறார். அங்கு அவர் உச்சம் பெறுகிறார். உங்கள் ராசிக்கு 6 ,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் உச்சம் பெறுவது யோகம் தான். பாகிஸ்தானம் பலம் அடைகிறது. நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்ய இயலும். உத்தியோகத்தில் திறமைக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கும். அதிர்ஷ்ட திகதி அக்டோபர் 2,7 அதிர்ஷ்ட நிறம் நீலம் .

## கும்பம்

புரட்டாசி 16 ஆம் திகதி (03/10/2022) கன்னி ராசியில் புதன் சஞ்சாரம் செய்கிறார். அங்கு அவர் உச்சம் பெறுகிறார். பஞ்சம அஷ்டமாதிபதியான புதன் உச்சம் பெறுவது நன்மைதான். இழப்புகளை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் வந்து சேரும். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். பிள்ளைகளின் சுபச் சடங்குகள் நடைபெறுவதில் கவனம் செலுத்துவீர்கள். வாகன மாற்றம் செய்ய முன்வருவீர்கள். அதிர்ஷ்ட திகதி அக்டோபர் 2,3 அதிர்ஷ்ட நிறம் மஞ்சள் .

## மீனம்


புரட்டாசி மாதம் 16ஆம் திகதி (03/10/2022) கன்னி ராசியில் புதன் சஞ்சாரம் செய்கிறார். அங்கு அவர் உச்சம் பெறுகிறார். உங்கள் ராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் உச்சம் பெறுவதால் இல்லத்தில் சுப காரியங்கள் நடைபெறும். கரைந்த சேமிப்புகளை ஈடு கட்டுவீர்கள். வெளிநாட்டுப் பயணத்தில் இருந்த தடை அகலும். ஒரு சிலருக்கு வீடு மாற்றங்கள் ஏற்படலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த பதவி உயர்வு கிடைக்கும். அதிர்ஷ்ட திகதி அக்டோபர் 2,5 அதிர்ஷ்ட நிறம் பச்சை .




சீரங்கன் பெரியசாமி
ஓய்வுநிலை பணிப்பாளர், விவசாயத் திணைக்களம்

# வீட்டுத் தோட்டம் அமைப்பதால் பல நன்மைகளைப் பெறலாம்

எமக்குத் தேவையான உணவுப் பொருட்கள், மருத்துவ மூலிகைகள், விலங்குணவுகள், அரிமரங்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்ளக் கூடிய சிறியதொரு உற்பத்தி அலகாக வீட்டுத்தோட்டங்களை நாம் கருத முடியும். பொதுவாக வீட்டுத் தோட்டம் என்பது வீட்டைச் சூழவோ அல்லது வீட்டிற்கு மிக அண்மையிலோ காணப்படும் ஓர் உற்பத்தி அலகாகும். வீட்டுத்தோட்டம் என்பது பல பயிர்களையும், விலங்குகளையும் உற்பத்தி செய்யும் சிறியதொரு அலகாகும். எனினும் எமக்குக் கிடைக்கக் கூடிய வளங்களைப் பொறுத்து, குறிப்பாக நிலப் பரப்பிற்கேற்ப நாம் நாளாந்தம் பெற்றுக் கொள்ளும் உணவுப் பொருட்களினதும், வேறு பொருட்களினதும் அளவுகள் வேறுபடலாம். எமக்கு கிடைக்கக் கூடியதாக உள்ள வளங்களிற்கேற்ப நாம் வீட்டுத்தோட்டங்களை அமைத்துக் கொள்ள முடியும். நிலமிருப்பின் நிலத்தில் நடலாம். இல்லாவிடில் பைகளில், சிறிய சாடிகளில் வளர்க்கலாம் அல்லது நீரில் பயிரிடலாம்.



நவீன விவசாய அறிவுடன்

நிலமற்றவர்கள், மாடி வீடுகளில் வாழ்பவர்கள் என ஒவ்வொருவரும் அவரவர் வசதிக்கமைய சிறியதொரு வீட்டுத்தோட்டத்தை அமைத்து பயன் பெற்றுக் கொள்ள முடியும். இக்கட்டுரைத் தொடரில் இது பற்றிய பல

விபரங்களை நீங்கள் அறிந்து கொள்ள முடியும்.

**வீட்டுத்தோட்டத்தின் நன்மைகள்**

நாட்டின் இன்றைய நிலைமையில் உணவிற்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதன் காரணமாக மக்களது போசாக்கு நிலைமை மிகவும் மோசமான நிலைமையை அடைந்துள்ளது. இந்நாட்டில் 79 வீதமான குடும்பங்கள்

போசணை எதனையும் கவனத்திற் கொள்ளாது, குறைந்த விலையிலுள்ள உணவுகளையே தற்போது நுகர்கின்றனர். 37சத வீதமான குடும்பங்களின் உணவுப் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. 40 வீதமான குடும்பங்கள்

தங்களது உணவு வேளைகளை குறைத்துள்ளனர். இவற்றின் விளைவாக நாட்டின் போசாக்கு நிலைமை மிகவும் மோசமான நிலைமையை அடைந்துள்ளது. ஆனால் வீட்டுத் தோட்டங்களில் எம்மால் இயலுமானவற்றை உற்பத்தி செய்து கொள்ள

முடியுமாயின் இந்த நிலைமைகளை ஓரளவிற்கேனும் சீர் செய்து கொள்ள முடியும். ஒரு வீட்டுத் தோட்டத்தை நிலைபேறாகப் பராமரிக்கும் போது நாளாந்தம் தேவைப்படும் உணவில் ஒரு பகுதியையேனும் பெற்றுக் கொள்ள முடியும். இதனை விட இன்னொரு முக்கியமான விடயம் வீட்டுத்தோட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் கீரைகள், பழங்கள் போன்றவற்றை நுகர்வதன் மூலம் நாளாந்தம் நமக்கு சிபாரிசு செய்யப்பட்ட விட்டமின்கள், கனிபொருட்கள் போன்றவற்றை ஓரளவிற்கேனும் நாம் பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

வீட்டுத்தோட்டங்களில் உணவுப் பயிர்களிற்கு மேலதிகமாக இட வசதியைப் பொறுத்து கோழிகள், கால்நடைகள் போன்றவற்றை வளர்க்கும் போது முக்கிய போசாக்கான புரதத் தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள

முடியும். உதாரணமாக பத்து நாட்டுக் கோழிகளையேனும் வளர்க்கும் போது நாளாந்தம் ஐந்து முட்டைகளையேனும் ஒரு குடும்பம் பெற்றுக் கொள்ள முடியும்.

**எப்போதும் பசுமையான மரக்கறிகளையும், ஏனைய உணவுகளையும் பெறலாம்**

கடைகளிலோ அல்லது சந்தைகளிலோ வாங்கும் போது பெரும்பாலும் உணவுப் பொருட்களை அறுவடை செய்து பல நாட்கள் கடந்திருக்கும். ஆனால் எமது வீட்டுத்தோட்டங்களில் இவற்றை இயலுமான வரை உற்பத்தி செய்து கொள்ளும் போது எப்போதும் நாம் பசுமையான மரக்கறிகளையும், பழங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். வீட்டுத்தோட்டங்களை உயிருள்ள உணவுக் களஞ்சியங்கள் என்று கூட நாம் அழைக்க முடியும்.

**நஞ்சற்ற உணவுகள்**

வர்த்தக நோக்கத்திற்காக செய்கைபண்ணப்படும் தோட்டங்களில் பீடை நாசினிகள் போன்ற விவசாய இரசாயனங்களைப் பிழையாகப் பயன்படுத்துவதன் காரணமாக ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும். ஏனெனில் விவசாய இரசாயனங்களை நாம் பயன்படுத்துவதில்லை.

★ மூலிகைத் தாவரங்களும், வாசனைத் திரவியங்களும் ஒரு வீட்டுத் தோட்டத்தினைப் பராமரிக்கும் போது அதில் பல்வேறு வகையான மூலிகைத் தாவரங்களையும் இலகுவாகப் பயிரிட்டுக் கொள்ள முடியும். இதனால் சில நோய்களுக்கு எமது வீடுகளிலேயே தேவையான மருத்து மூலிகைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இஞ்சி, மஞ்சள், ஏலம் போன்றவற்றைப் பயிரிட்டுக் கொள்வதன் மூலம் எமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும்.



★ தட்டுப்பாடான காலங்களில் உணவுப் பொருட்களிற்கு அதிகளவில் செலவிட வேண்டியதில்லை மரக்கறிகள், பழங்கள் போன்றன சில பருவகாலங்களில் குறைவாகவே உற்பத்தி செய்யப்படுகின்றன.

இதனால் அவற்றின் விலை ஆகாயத்தை எட்டி விடும். ஆனால் ஒரு வீட்டுத்தோட்டத்தை தொடர்ச்சியாக நிலைபேறாகப் பராமரிக்கும் போது இவ்வாறு அதிகளவில் செலவிட வேண்டிய தேவை ஏற்படாது. எனவே செலவையும் மீதப்படுத்திக் கொள்ள முடியும். உதாரணமான பச்சை மிளகாய், தக்காளி போன்றவற்றை குறிப்பிட முடியும்.

★ உயிரியல் பல்லினத்தன்மை வீட்டுத்தோட்டங்களில் எப்போதும் நாம் பல பயிர்களை செய்கை பண்ணும் போது ஒரு அலகு

நிலப்பரப்பில் அதிக எண்ணிக்கையான தாவரங்கள் காணப்படும். இது எமது தோட்டங்களில் உயிரியற் பல்லினத் தன்மையையும் அதிகரிக்கும். பொதுவாக வீட்டுத்தோட்டங்களில் நாம் பாரம்பரிய இனங்களை நடுவதால் பல்லினத்தன்மை மிக அதிகளவிற் காணப்படும். உதாரணமாக கத்தரி, தக்காளி போன்ற பயிர்களில்

எத்தனை வகையான உள்நாட்டு வர்க்கங்கள் உள்ளன. வீட்டுத்தோட்டங்களில் மரக்கறிகள், பழங்கள், வாசனைப் பயிர்கள் போன்றவற்றிற்கு மேலதிகமாக உள்நாட்டு கிழங்கு வகைகள், கீரைப் பயிர்கள் போன்றவற்றை நட்டுப் பராமரிப்பதால் பல்லினத் தன்மையான தானாவே இத்தோட்டங்களில் மிக அதிகளவிற் காணப்படும். இதனால் உணவுப் பாதுகாப்பும் உறுதி செய்யப்படும்.

**நுண் சுற்றாடால்**

எமது வீடுகளுக்கருகே தோட்டங்களைப் பராமரிக்கும் போது எம்மைச் சுற்றியுள்ள நுண் சூழல் நன்கு விருத்தியடையும். எப்போதும் குளிர்ச்சியான தன்மையை நாம் உணரக் கூடியதாக இருப்பதோடு, மனதிற்கும் இதமானதாக அமையும். வீட்டைச் சுற்றி மரஞ் செடிகள் போன்ற செறிவாகக் காணப்படுவதன் காரணமாக

பல்வேறு வகையான பறவைகள் இங்கு தமது வாழ்விடங்களை அமைத்துக் கொள்ள முயற்சிக்கும். இது நமது பறவைகளின் பல்லினத்தன்மையையும் விருத்தி செய்ய உதவும். பீடை நாசினியாகவும் இவை செயல்படும்.

**மீள் சுழற்சி செய்யப்படும் கழிவுகள்**

வீடுகளிலும், அதன் சுற்றாடலிலும் சேரும் சிதைவடையக் கூடிய அதாவது உக்கக் கூடிய கழிவுகளை கூட்டெருவாக்கி அதனைப் பயன்படுத்தக் கூடியதாயிருப்பதால் கழிவுகளை மீள்சுழற்சி செய்து கொள்ள முடியும்.

**வளமாகும் மண்**

தொடர்ச்சியாக ஒரு வீட்டுத்தோட்டத்தை நிலைபேறாக நாம் பராமரிக்கும் போது, அதன் மண் வளம் நன்கு விருத்தியடையும். பொருத்தமான மண் காப்பு நடவடிக்கைகளைப் பயன்படுத்தி வீட்டுத்தோட்டங்களைப் பயிரிடும்

போது மண்ணரிப்பில் இருந்து மண்ணைப் பாதுகாத்துக் கொள்ளவும் முடியும்.

**மன அமைதியும், உடற் பயிற்சியும்**

நாளாந்தம் வீட்டுத்தோட்டங்களைப் பராமரிக்கும் பணிகளில் ஈடுபடும் போது மனதிற்கு அமைதி கிடைப்பதோடு, வேலை செய்வதன் காரணமாக உடலிற்கு பயிற்சியும் கிடைக்கும்.

இன்றை உலகில் நாம் நாளாந்தம் முகம் கொடுக்கும் மன அழுத்தங்களை தவிர்த்துக் கொள்ள முடியும். இதனால் எம்மை அறியாமலே

நாம் உளரீதியாக நல்ல பலாபலன்களைப் பெற்றுக் கொள்ள முடியும். இது எமது பல நோய்களை இயற்கையாகவே கட்டுப்படுத்திக் கொள்ள உதவும்.

★ பரிசோதனைக் களமாகும் வீட்டுத்தோட்டங்கள்

வர்த்தகப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கு ஆர்வமுள்ள ஆனால் இதில் போதியளவான அறிவும், அனுபவமும் இல்லாதவர்கள் வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கையில் முதலில் ஈடுபடுவதன் மூலம் அனுபவத்தையும்,

அறிவையும் பெற்றுக் கொள்ள உதவும். இதன் மூலம் அவர்கள் வர்த்தகப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் போது இந்த அறிவும், அனுபவமும் உதவும். இதனைத் தவிர தாம் பல்வேறு ஊடகங்களில், தனிப்பட்ட முறையிலும்

அறிந்து கொள்ளும் நவீன அல்லது பாரம்பரிய பயிர்ச்செய்கை முறைகளை எவ்விதமான பொருளாதார இழப்பும் இல்லாது இந்த வீட்டுத்தோட்டங்களில் பரிசோதித்துப் பார்த்துக் கொள்ள முடியும்.

சிறுவர்கள் வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் போது சுற்றாடல் பற்றிய புரிந்துணர்வு

ஏற்படுவதோடு, பல புதிய விடயங்களையும் அவர்கள் அறிந்து கொள்ள முடியும்.

**பொருளாதார நன்மைகள்**

மேற்குறிப்பிட்ட அனைத்து வகையான நன்மைகளையும் விட மிகப் பிரதானமாக எமக்கு நாளாந்தம் ஏற்படும் பொருளாதாரச் சுமையை ஓரளவிற்கேனும் குறைத்துக் கொள்ள முடியும்.

மேலதிகமாக உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களை ஏனையோரிற்கு விற்பனை செய்வதன் மூலம் சிறிதளவு வருமானத்தையேனும் பெற்றுக் கொள்ள முடியும்.

இது எமது பொருளாதார அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்யும். மேலதிகமாக உற்பத்தி செய்யப்படும் பொருட்களை அயலவர்களிற்கு வழங்கும் போது அவர்களிடையே ஒரு புரிந்துணர்வு ஏற்பட்டு எமது வாழ்வும் அர்த்தமுள்ளதாக விளங்கும். இதற்கு நாம் பணப் பெறுமதியையும் குறிப்பிட முடியாது.

**வளங்களின் உச்சப் பயன்பாடு**

நல்லதொரு வீட்டுத்தோட்டத்தைப் பராமரிப்பதன் மூலம் எமக்குக் கிடைக்கும் வளங்களை உச்ச அளவிற் பயன்படுத்திக் கொள்ள முடியும். உதாரணமாக சூரிய ஒளி, காணிகள், சுற்று மதில்கள், வேலிகள், மழை

நீர், வீட்டு மாடிகள் போன்ற எல்லா வளங்களையும் மிகச் சிறந்த முறையில் பயன்படுத்தி எமது வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ள முடியும்.இந்தக் கட்டுரைத் தொடரில் அடுத்தடுத்த வாரங்களில் வீட்டுத்தோட்டங்களை எவ்வாறு அமைப்பது, எவ்வாறு பராமரிப்பது, காணி நிலமற்றவர்கள் எவ்வாறு வீட்டுத் தோட்டங்களை அமைத்துக் கொள்வது நவீன நுட்பங்கள்எவை என்பது பற்றிய பல விபரங்களை தெளிவாக அறிந்து கொள்வோம்.

# அருந்ததி நிறுவனம் மட்டுநகரில் இம்மாதம் நடத்தவிருக்கும் 'மாற்று மோதிரம்' கண்காட்சி

## தினகரன், வாரமஞ்சரி ஊடக அனுசரணை



திருமண சேவை மற்றும் மணப்பெண் அலங்காரக் கலைகளை நடத்தி வருகின்ற அருந்ததி நிறுவனம் இம் மாதம் 15 ஆம் திகதி மட்டக்களப்பில் உள்ள அஞ்சனா கிராண்ட் பலஸ் ஹோட்டலில் 'மாற்று மோதிரம்' என்ற பெயரிலான நிகழ்ச்சியொன்றை நடத்தவிருப்பதாக அந்நிறுவனத்தின் பணிப்பாளர் கே. மேகலா தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சிக்கு தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகைகள் ஊடக அனுசரணை வழங்குகின்றன. கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அருந்ததி நிறுவனத்தின் பணிப்பாளர் மேகலா :




கடந்த வருடம் கொழும்பு பி.எம்.ஐ.சி.எச் இல் மிகப் பிரமாண்டமாக இந்த மாற்று மோதிரம் கண்காட்சியை நடத்தினோம். அதன் பின்னர் யாழ்ப்பாணத்திலும் நடத்தி பெண் திறமையாளர்கள் பலரையும் இந்துறையில் வெளிக்கொண்டு வந்துள்ளோம். சுயதொழில் முயற்சியாளர்களான பெண்களுக்கு நாங்கள் கைகொடுத்து வருகின்றோம். கடந்த வரும் கொவிட் 19 தொற்று காரணமாக இத்துறை சார்ந்தவர்களின் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது. தற்பொழுது புதிய வடிவிலான மணப்பெண் அலங்காரங்கள் நவீன முறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதனை கருத்திற் கொண்டு மேலும் இத்துறை சார்ந்தவர்களை ஊக்குவிக்கும் முகமாக இத்துறையை எனது அருந்ததி நிறுவனம் மீள ஆரம்பித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள இத்துறை சார்ந்தவர்களது வேண்டுகோளின் பேரில் இக் கண்காட்சியை நடத்த திட்டமிட்டுள்ளோம். இச்சந்தர்ப்பத்தில் மட்டக்களப்பில் கேக் கண்காட்சியும் நடைபெறும். அத்துடன் திருமண சேவை, கொட்டுமேளக் காட்சி, மாற்றுமோதிரம் காட்சிகள் மேடையேற்றப்படும்.என மேனகா தெரிவித்தார். இந்த ஊடக மாநாட்டில் தினகரன், வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், ஏற்பாட்டாளர் கருணாகரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(அஷ்ரப் ஏ சமத்)

# இலங்கையில் இரத்த தானத் திட்டத்தை மீள ஆரம்பித்துள்ள Brandix



மக்கள், புவி மற்றும் சமூகங்களின் மீது அக்கறை கொண்டு, தனது ஆடை உற்பத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் Brandix, 2022 ஆம் ஆண்டுக்கான இரத்த தானத் திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இலங்கை மக்களின் சுகாதார நலனுக்கு ஆதரவளிக்கும் அரணாகத் திகழும் Brandix, "மாபெரும் கூட்டாண்மை இரத்த தானம் செய்யும் நிறுவனம்" எனும் வகையில், இந்த ஆண்டிலும் தனது புத்துணர்வான ஊழியர்களினூடாக பெருமளவு இரத்தத்தை தானமாக வழங்கக்கூடியதாக இருக்குமென எதிர்பார்க்கின்றது.

தேசிய இரத்த மாற்றீட்டுச் சேவைக்கு தொடர்ச்சியாக இரத்த விநியோகம் எந்தளவு முக்கியமானது என்பதை புரிந்து கொண்டு, Brandix இனால் 13 வருட காலமாக, வருடாந்தம் இரத்த தான நிகழ்வு முன்னெடுக்கப்படுகின்றது.

கடந்த இரண்டு வருடங்களில் நிலவிய தொற்றுப் பரவலுடனான சூழ்நிலை காரணமாக இந்தத் திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இலங்கையில் 23 பகுதிகளில் 35000 க்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்ட பகுதிகளில் இந்த ஊழியர் ஈடுபாட்டுத் திட்டம் முன்னெடுக்கின்றது. இந்தத் திட்டத்தை ஊழியர்கள் சுயமாக முன்வந்து முன்னெடுப்பதுடன், மற்றுமொருவரின் உயிருக்கு உதவும் மனப்பாங்கில் ஆதரவளிக்கப்படுகின்றது.

நெருக்கடியான காலப்பகுதியை இலங்கை கடந்த வண்ணமுள்ள நிலையில், நாட்டின் மருத்துவக் கட்டமைப்பில் அதிகளவு தேவைகள் நிலவுகின்றன.

இந்தக் காலப்பகுதியில் தேசிய இரத்த மாற்றீட்டுச் சேவையினால் இரத்த தானத்துக்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில், Brandix இன் புத்துணர்வான ஊழியர்கள் தாமாக முன்வந்து இந்த மனித நேய செயற்பாட்டில் பங்களிப்பு வழங்கியிருந்தனர்.

# மக்கள் நலன் சார் சமூகநல திட்டங்களில் கால் பதிக்கும் Yara Global pvt. Ltd






இலங்கையின் பிரபல வர்த்தக நிறுவனமான Yara Global pvt. Ltd மக்கள் நலம் சார்ந்த சமூக நலத்திட்டங்களை முன்னெடுக்கும் பணிகளில் இறங்கி இருக்கின்றது.

இலங்கையின் வர்த்தகத் துறையில் முன்னணி நிறுவனமாக திகழும் 'யாரா', கல்வி உட்பட வறிய குடும்பங்களுக்கு உதவுவதில் தன்னை அர்ப்பணித்து செயல்படுகின்றது.

வறுமை கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களில் உள்ள மாணவர்களுக்கு உதவும் விசேட திட்டத்தை முன்னெடுத்து வரும் இந்த நிறுவனம், முதியோர் நலம்பேணும் விசேட வேலை திட்டங்களிலும் இறங்கி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.



கொழும்பு 4, பம்பலப்பிட்டி, 36 ஏ, shrubbery gardens தலைமையகமாக கொண்டு இயங்கும், Yara Global Pvt Ltd நிறுவனம் சமூக செயல் திட்டங்களோடு வியாபாரத்திலும் மக்கள் மனங்களில் முத்திரை பதித்துள்ளது.

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில், அண்மையில் ஏழை, எளியோருக்கு மதியநேர உணவு வழங்கி வைக்கப்பட்டது. கொழும்பு லயன்ஸ் கழகமும், யாரா குளோபல் பிரைவேட் லிமிடெட் நிறுவனமும் இந்த வேலை திட்டத்திற்கு அனுசரணை வழங்கியிருந்தன.

# தனது நான்காவது ஆண்டுவிழாவை கொண்டாடியது Colombo City Centre




Colombo City Centre அதன் நான்காவது ஆண்டுவிழாவை செப்டெம்பர் 19 ஆம் திகதி கொண்டாடியதோடு, அதற்காக பல சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. ஆண்டுவிழாவுக்கு முந்தைய வார இறுதியில், ஏராளமான மக்கள் CCC க்கு வருகை தந்ததோடு, அவர்கள் குடும்பத்துடன் மிகவும் மகிழ்ச்சியாக பொழுதை கழித்தனர். இங்குள்ள விற்பனை நிலையங்களில் பிரத்யேக ஆண்டுவிழா சலுகைகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

4 வருட வெற்றிகரமான பயணத்தை நினைவுகூரும் வகையில் 4வது ஆண்டுவிழாவை திருவிழாவாக CCC கொண்டாடியதோடு, அதற்கான ஏற்பாடுகள் மிகவும் சிறப்பாக செய்யப்பட்டிருந்தன. ஊஊஊ நிர்வாகம் மற்றும் இங்குள்ள விற்பனை நிலைய உரிமையாளா்கள் உத்தியோகபூர்வமாக கேக் வெட்டும் நிகழ்வில் பங்குபற்றியதோடு, வணிக நிலையங்களை நடத்தும் சமூகத்தினருக்கு கடந்த 4 ஆண்டுகள் அவர்கள் வழங்கிய பங்களிப்பிற்காக சிறப்பு பாராட்டுகள் வழங்கப்பட்டன.

இந்த ஆண்டுவிழாவுடன் இணைந்து, செப்டம்பர் 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் ஆண்டுவிழா கருப்பொருளின் கீழ் ஒவ்வொரு 4 மணி நேரத்திற்கு ஒருமுறை சீட்டிழுக்கப்பட்டு 4 அதிர்ஷ்டசாலிகளுக்கு மதிப்புமிக்க பரிசுகள் வழங்கப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றியாளர்களுக்கு செப்டம்பர் 19, 2022 திங்கள் அன்று அவர்களுக்குறிய பரிசுகள் வழங்கப்பட்டன. செப்டம்பர் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை "En Route" வழங்கிய துயணண இசையை ரசித்தவாறே Playtrix இல் ஆடம்பர உணவை சுவைக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

மேலும், இதில் கலந்துகொண்ட அனைத்து பெண்களுக்கும் ஞாயிற்றுக்கிழமை மாலை வேலையில் Playtrix இலவசமாக இனிப்பு வழங்கியது. ஆண்டுவிழா நிமித்தம் அனேகமான கடைகள் சிறப்பு தள்ளுபடிகளை வாடிக்கையாளா்களுக்கு வழங்கினார்கள்.

# திறமையான மாணவர்களுக்கு நிவாரணங்கள் வழங்கும் SLTC பல்கலைக்கழகம்



நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமையின் காரணமாக, வெளிநாட்டில் உயர் கல்வியைத் தொடர்வது எனும் பல இளைஞர்களின் கனவு எதிர்மறையான தாக்கத்துக்கு முகங்கொடுத்துள்ளது. வெளிநாட்டுக் கல்விக்காக செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையும் சுமார் 90% ஆக குறைந்துள்ளதுடன், உள்நாட்டு அரச சாராத உயர் கல்விக்கான கேள்வும் பாரிய தடங்கல்களுக்கு முகங்கொடுத்துள்ளது.

SLTC ஆய்வு பல்கலைக்கழகத்தின் ஸ்தாபக தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரஞ்சித் ரூபசிங்க கருத்துத் தெரிவிக்கையில், "தற்போது நிலவும் சூழல், இலங்கையில் காணப்படும் அரச சாராத உயர் கல்விச் சேவைகளை வழங்கும் நிலையங்களை சோதிப்பதாக அமைந்துள்ளது. அவர்கள் இளைஞர்களுக்கு ஆதரவளிக்க முன்வர வேண்டிய காலம் இதுவாகும். இதன் பிரகாரம், தற்போதைய சவால்களுக்கு முகங்கொடுக்க SLTC தயாராக இருப்பது மாத்திரமன்றி, இளைஞர்களின் வாழ்க்கையில் உண்மையில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய பங்களிப்பை வழங்கவும் தயாராகவுள்ளது என்பதை பெருமையுடன் அறியத்தருகின்றோம்." என்றார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், "ஐக்கிய இராஜ்ஜியம், நியுசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் முன்னணி பல்கலைக்கழகங்களுடன் கல்விசார் பங்காண்மையை SLTC கொண்டுள்ளது. SLTC ஆய்வு பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் முன்னெடுக்கும் முதல் இரண்டு வருட காலகற்கையை, தமது பல்கலைக்கழகங்களில் முதல் இரண்டு வருடங்களுக்கு பயில்வதற்கு நிகரானதாக கருதுகின்றன. இதனால் SLTC மாணவர்களுக்கு, எமது கல்வியகத்தில் தமது உயர் கல்வியை ஆரம்பித்த முதல் நாளிலிருந்து சர்வதேச தரம் வாய்ந்த கல்வியைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், எமது கல்வியகத்தில் முதல் இரண்டு வருட காலத்துக்கான கற்கையை பூர்த்தி செய்த பின்னர், தமக்கு விருப்பமான பல்கலைக்கழகத்துக்கு மாறிக் கொள்வதற்கு அவசியமான சர்வதேச நியமங்களையும் கொண்டிருப்பார்கள்." என்றார்.

# ASTM தரத்துடனான எரிபொருள் உற்பத்தியில் Eco Tablets



உலகெங்கிலும் அனைத்து விதமான எரிபொருள் சார்ந்த நடவடிக்கைகளும் ASTM தர நியமங்களுக்கமைய மேற்கொள்ளப்படுவதோடு அது விமானங்களுக்கான எரிபொருள், கப்பல்களுக்கான எரிபொருள், விண்வெளி பயணத்துக்கான எரிபொருள், பெற்றோல், டீசல் மற்றும் சாதாரண எரிபொருளுக்கும் ஏற்புடையதாகும்.

ASTM தரச் சான்றிதழ் மற்றும் நெனோ தொழில்நுட்பத்துடன் கூடிய Eco Tablets ஐ உரிய மாத்திறைக்கு சாதாரண எரிபொருளுடன் கலப்பதன் மூலம், சாதாரண எரிபொருள் ASTM தரத்துடனான எரிபொருளாக மாறி வாகனத்தின் எரிபொருள் வினைத்திறனை அதிகரித்து வாகனத்தையும், பணத்தையும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்கும் வாய்ப்பு வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கின்றது. மசகு எண்ணெய் சுத்திகரிப்பின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற பெற்றோல் மற்றும் டீசல் மோட்டார் வாகனங்களுக்கு அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது. இச் செயற்பாட்டின் மூலம் சூப்பர் டீசல் மற்றும் சூப்பர் பெற்றோல் உற்பத்தி செய்யப்படுவதில்லை. சாதாரண எரிபொருளுடன் சேர்க்கப்படுகின்ற எரிபொருள் சேர்க்கைகள் காரணமாக எரிபொருளின் தரம் உயர்த்தப்பட்டு சாதாரண எரிபொருள் சூப்பர் எரிபொருள் அல்லது பிரீமியர் எரிபொருளாக மாறுகின்றது.

உதாரணமாக பெற்றோல் சுத்திகரிக்கப்பட்டதை தொடர்ந்து ஒக்டேன் பெறுமதி 92 அல்லது 95 ஆக தயாரிப்பதற்கு ஒக்டேன் பூஸ்டர் சேர்க்கையொன்றை உரிய அளவில் கலக்க வேண்டும். வளர்ந்த நாடுகள் இச் செயற்பாட்டை யுளுவுஆ பிரமானங்களுக்கமைய மேற்கொண்டாலும் எம்மை போன்ற நாடுகள் இச் சேர்க்கைகள் விலை அதிகம் என்பதாலும் ASTM பிரமாணங்கள் தொடர்பாக வாடிக்கையாளர்களுக்கு புரிதல் இல்லாமையினாலும் இச் சேர்க்கைகளை சேர்த்தாலும் உரிய அளவில் சேர்ப்பதற்கு தயக்கம் காட்டுகின்றன.

ASTM மற்றும் மேற்படி செயற்பாடு தொடர்பான மேலதிக விபரங்களை Auto Mobile துறை சார்ந்த பொறியியலாளர்கள் மற்றும் அறிஞர்களிடமிருந்து மாத்திரமே அறிந்து கொள்ள முடியும்.

# ODEL Mall Kandy ஐ ஆரம்பிக்கிறது சொஃப்ட்லொஜிக் நிறுவனம்




சொஃப்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ் பிஎல்சி ஆனது தனது புத்தம்புதிய சில்லறை விற்பனை நிர்மாணமான 'ODEL Mall Kandy' ஐ ஆரம்பித்துள்ளது.

விசாலமான 91,414 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட ODEL Mall, இலங்கை மலைநாட்டின் தலைநகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள கண்டியின் மிகவும் விரும்பப்படும் அதிநவீன, உயர்தர வாழ்க்கை முறை ஷொப்பிங் இடமாக மாறத் தலைப்பட்டுள்ளது.

இலக்கம் 377, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, பேராதனை வீதி, கண்டி என்ற முகவரியில் அமைந்துள்ள இந்த ODEL Mall, சொஃப்ட்லொஜிக் இன் மிகவும் பிரபலமான வர்த்தகநாமங்களான ODEL (உலகப் புகழ்பெற்ற சர்வதேச மற்றும் உள்ளூர் இலச்சினைகளின் தயாரிப்பு வரிசையைக் கொண்டுள்ள இலங்கையின் முதன்மையான நவநாகரிகம் மற்றும் வாழ்க்கை முறை சில்லறை விற்பனையாளர்) அடங்கலாக மிகவும் போற்றப்படுகின்ற வர்த்தகநாமங்களைக் கொண்டிருக்கும்.

அத்துடன், Baskin Robbins (உலகில் 50 க்கும் மேற்பட்ட நாடுகளில் இயங்கும் உலகின் மிகப்பெரிய விசேடமான ஐஸ்கிரீம் சங்கிலி), GLOMARK (நாட்டின் நவீன சில்லறை வர்த்தகத் துறையில் புரட்சியை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இலங்கையின் முதல் உத்வேகமளிக்கும் உலகளாவிய சந்தை) மற்றும் POPEYES (அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட முன்னணி துரித உணவுச் சங்கிலி) ஆகியனவும் இங்கு இடம்பெறவுள்ளன.

இந்த சில்லறை வணிக வளாகமானது, கண்டியில் முதன்முறையாக, GLOMARK மற்றும் POPEYES என வேகமாகப் பிரபலமடைந்து வருகின்ற இரண்டு வர்த்தகநாமங்களை அறிமுகப்படுத்தவுள்ளது. GLOMARK பல்பொருள் அங்காடியானது உங்கள் வீட்டிற்குத் தேவையான உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் பெறப்படுகின்ற பரந்த அளவிலான அத்தியாவசியப் பொருட்களையும், வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தும் வகையில் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட தனித்துவமான ஷொப்பிங் அனுபவத்தையும் கொண்டிருக்கும். இந்த பல்பொருள் அங்காடி அதன் தனித்துவமான வாடிக்கையாளர் அனுபவத்தின் நீட்டிக்கப்பட்ட வடிவமாக Bakes உடன் ஒரு கஃபே அனுபவத்தையும் வழங்குகிறது. POPEYES அன் தனித்துவமான, மென் சமையல் முறை கலைக்காக பெயர்பெற்று விளங்குகின்றது. அங்கு புத்தம் புதிய, உள்நாட்டில் பெறப்பட்ட கோழி இறைச்சியானது அதன் தனியுரிமம் கொண்ட சுவையூட்டிகள் மற்றும் மசாலாப் பொருட்களின் கலவையுடன் 12 மணி நேரம் ஊற வைக்கப்படுகிறது, அதன் பிறகு கையால் அடித்து, பிரட் செய்து, ஒரு வெளியே ஒரு மொருமொருப்பான மேலோட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டு உள்ளே சாறு வடிவம் கொண்டதாக இருக்கும். அமெரிக்காவின் லூசியானாவில் தனது ஆணிவேர்களைக் கொண்டுள்ள இது, வாடிக்கையாளர்களின் சுவை மொட்டுகளை முழுமையாக நலச்செழுமை பெறச் செய்கின்றது.

# பிலீவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்

## (Believers Eastern Church)

இலங்கையில் கிறிஸ்தவ சபைகள் பல அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இவற்றில் சிலவற்றின் வழிபாடுகள், அச்சபைகளை உருவாக்கிய நாடுகளில் கடைப்பிடிக்கப்படும் வழிபாட்டு முறைகளை கொண்டதாகவும் அல்லது எமது நாட்டுக்குப் பொருத்தமான வழிபாட்டு முறைக



ளைக் கொண்ட சபைகளும் தேவாலயங்களுக்கும் இயக்கப்படுகின்றன. அவ்வாறு இலங்கையில் 1993 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதே Believers Eastern Church ஆகும். இச்சபை அல்லது இந்த வழிபாட்டு முறை கீழைத்தேய "ஒத்தடொக்ஸ்" கலாசாரத்தை ஒத்ததாகும்.

இதில் இந்தியன் ஒத்தடொக்ஸ், சிரியன் ஒத்தடொக்ஸ் போன்ற வழிபாட்டு முறைகளில் "பிலிவர்ல் ஈஸ்டர்ன் சேர்ச்" சிரியா நாட்டின் சிரியன் ஒத்தடொக்ஸ் வழிபாட்டு வழிமுறைகளை கொண்டதாகும்.

பிலீவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச் (முன்னர் பிலீவர்ஸ் சர்ச்) என்பது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஓரியண்டல் புராட்டஸ்டன்ட் தேவாலயமாகும், இது உலகெங்கிலும் உள்ள சபைகள் மற்றும் திருச்சபைகளைக் கொண்டுள்ளது. இது ஆசியாவிற்கான நற்செய்தி அமைச்சகத்தின் ஒரு கிளையாகும்.

தேவாலயம் இப்போது ஒரு எபிஸ்கோபல் ஆளுகையைப் பின்பற்றுகிறது.இது கிறிஸ்துவை தேவாலயத்தின் தலைவராகக் கொண்டுள்ளது (கொலோ 1:18) ஆனால் ஆயர்கள் மற்றும் நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் அதன் பெருநகரத்திற்கும் மற்றும் பெருநகரத்தின் வாரிசுகளுக்கும் அடிபணிய வேண்டும் என்று சத்தியம் செய்ய வேண்டும்.

இது ஆயர்களின் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது, சினோட், ஒரு மத்திய பிஷப் "சமமானவர்களில் முதன்மையானவர்" என்ற கௌரவப் பட்டத்தை வைத்து, சுவிசேஷ கிறிஸ்தவக் கோட்பாட்டைப் பின்பற்றுகிறார். விசுவாசிகள் கிழக்கு தேவாலயம் தென்மேற்கு இந்தியாவில் கேரள மாநிலத்தில் நிர்வாக ரீதியாக அமைந்துள்ளது. 2015 இல், தேவாலயம் 33 மறை மாவட்டங்களாக மறுசீரமைக்கப்பட்டதாக அறிவித்தது.பிலீவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்சின் கூற்றுப்படி, நூறு மொழிகளைப் பேசும் 10 நாடுகளில் 3.5 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் அதன் உறுப்பினர்களைக் கொண்டுள்ளனர். தேவாலயத்தில் 30 ஆயர்கள் உள்ளனர், மேலும் பெருநகர பிஷப் மோரன் மோர் அதானசியஸ் யோஹான் மெட்ரோபொலிட்டன் (முன்னர் கே. பி. யோஹன்னன் என்று அழைக்கப்பட்டார்).

பிலீவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்சில் பயன்படுத்தப்படும் வழிபாட்டு முறை "பிரார்த்தனைகள், வேதாகம வாசிப்புகள் மற்றும் தேவாலயத்தின் நைசீன் அல்லது அப்போஸ்தலர்களின் நம்பிக்கையின் ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவற்றை உள்ளடக்கியது.மூன்று வருட சுழற்சியைக் கொண்ட திருத்தப்பட்ட



அருட் தந்தை கல்யாணப்பிரிய (VICER GENERAL)

பொது விரிவுரையிலிருந்து வாசிப்புகள் வந்துள்ளன. பிலீவர்ஸ் சர்ச் மேற்கத்திய கிறிஸ்தவத்தின் வழிபாட்டு காலண்டரைக் கடைப்பிடிக்கிறது, உதாரணமாக தவக்காலத்தை கடைப்பிடிக்கிறது.பிலீவர்ஸ் சர்ச் ஞானஸ்நானம் மற்றும் புனித ஒற்றுமையின் சடங்குகளை நிர்வகிக்கிறது. Believers Eastern Church 1993 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டாலும் 2003 ஆம் ஆண்டே இதன் கோட்பாடுகள், வழிபாட்டு முறைகளுடன் விருத்தியடைய தொடங்கியது. இச்சபையின் ஆயர் இல்லம்,கொழும்பு மறை மாவட்டம், இல.54,ஜயசூரிய மாவத்தை கந்தானையில் அமைந்துள்ளது. இங்குள்ள பேராயரின தலைமையிலேயே இலங்கையிலுள்ள 42 தேவாலயங்களும் கண்காணிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன. இது புனித பேதுரு பேராலயம் என அழைக்கப்படுகிறது.



வணக்கத்துக்குரிய பேராயர் கீ வர்கீஸ் மோர் மகரியோஸ்

இச்சபை கீழைத்தேய வழிபாட்டு மற்றும் கலாசாரங்களைக் கொண்டு இயங்கும் சபையாகும். இவற்றின் தேவாலங்களும் ஏனைய கிறிஸ்தவ தேவாலயங்களை ஒத்ததாகவே அமைக்கப்பட்டுள்ளன. திருப்பலி முறைகளும் ஏனைய சபைகளை ஒத்ததாகவே நடத்தப்படுகின்றன. வேண்டுதல் வழிபாட்டின் போது ஆயரும் மக்களும்

### கொழும்பு மறைமாவட்ட பேராயர் இல்லத்தால் 42 தேவாலயங்கள் நிர்வகிக்கப்படுகின்றன



புனிதரை நோக்கி மன்றாடுவதே இதன் சிறப்பாகும். பிலீவர்ஸ் ஈஸ்டர்ன் சேர்ச்சின் பேராயர் இல்லம் 1996 ஆம் ஆண்டு கந்தானையில் ஆரம்பிக்கப்பட்டது.சிங்களம், தமிழ், பரங்கியர் என்று அனைத்து மக்களையும் கொண்ட சபையாகும்.

எந்த வேறுபாடுகளும் காட்டப்படுவதில்லை.தேவாலயத்தில் சிங்கள மொழியில் நடக்கும் பூஜைகளை தமிழர்களும் இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூடிய வகையிலும் தமிழ் மொழியில் நடக்கும் பூஜைகளில் சிங்களவர் இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூடிய வகையிலும் வழிபாட்டு முறைகள் அமைக்கப்பட்டுள்ளன.இதன் வழிபாட்டு முறைகள், யாரும் விரும்பி ஏற்றுக் கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. அநேக கிறிஸ்தவ சபைகளில் காணப்படும் உதவி செய்து ஆட்களை சேர்த்துக் கொள்ளும் முறைகளில் இருந்து இது வேறுபட்டதாகவே காணப்படுகிறது.இச்சபைகளில் இணைந்து கொள்ளும் அனைவரும் ஒரு குடும்பத்தில் இருப்பதை போல் உணர்வர்.உதவிகளை செய்து சபைக்கு ஆட்களை சேர்த்துக் கொள்ளும் ஒரு குற்றச்சாட்டு சில கிறிஸ்தவ சபைகளுக்கு உண்டு. ஆனால் எம்மால் அப்படி செய்வே முடியாது.ஒருவருக்கு உதவிகள் தேவை என்றால் அரச நிறுவனங்களுக்கூடாகவே தேவையை குறிப்பிட்டு கடிதம் மூலம் அறிவித்தாலே உதவிகளை பெற்றுக் கொள்ள முடியும் என்று Believers Eastern Church பேராயர் குறிப்பிடுகிறார். பிலீவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச் பல்வேறு சமூகத் திட்டங்களில் ஈடுபட்டுள்ளது மேலும் "சமூகத்திற்கான அதன் மனிதாபிமான சேவைக்காக" பாராட்டப்பட்டது.

தேவாலயத்தின் சமூக சேவை வறுமை ஒழிப்பு மற்றும் வயது வந்தோருக்கான கல்வியறிவை ஊக்குவித்தல்.பிலீவர்ஸ் ஈஸ்டர்ன் தேவாலயத்தில் நம்பிக்கையின் பாலம் (BOH) என்ற குழந்தை மேம்பாட்டுத் திட்டமும் உள்ளது.குழந்தைகளுக்கு இலவச கல்வி, சத்தான உணவு மற்றும் பள்ளி பொருட்களை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு உதவுகிறது.

பசித்தவனுக்கு உணவு வழங்குவதைவிட அவனுக்கு உணவை தேடிக் கொள்வதற்கான வழியை அமைத்து கொடுப்பதே எமது நோக்கமாகும். கந்தானை பிரதேசத்தை அண்மித்த பகுதியிலுள்ள பொல்பித்து மூக்கலான சிங்கள கனிஷ்ட வித்தியாலயத்திற்கு சுற்று மதில் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதி மாணவர்களுக்கு பாதுகாப்பற்ற பகுதியாக இருந்துள்ளது.

இவ்வாறான இன, மத, மொழி தேமற்ற சமூக சேவைகளை பிலீவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச் முன்னெடுத்து வருகிறது.அரசு அனுசரணையுடனேயே தமது சமூக சேவைகளை முன்னெடுப்பதாக போதகர் எச்.டி.கல்யான பிரிய (VICER GENERAL) குறிப்பிடுகிறார். இவர்கள் உதவி செய்வதோடு தமது சேவைகளை நிறுத்தி கொள்ளாமல் அதை மேற்பார்வையும் செய்கின்றனர்.

ஸ்ரீ...

# தெல்தோட்டை ஊடக மன்ற ஏற்பாட்டில் அருள்வாக்கி அப்துல் காதிர் நினைவுப் பேருரை

எந்த நாட்டிலே சிறந்ததொரு ஊடக கலாசாரம் காணப்படுகிறதோ அந்த நாடு ஜனநாயக விழுமியங்களைப் பேணக்கூடிய பண்பாடான படித்த சமூக கட்டமைப்பைக் கொண்ட நாடாகத் திகழும். அவ்வாறே சிறந்த ஊடக கலாசாரத்தைப் பேணும் பிரதேசமும் அங்கு வாழும் சமூகமும் கூட விழுமிய சமூகமாக மிளிரும்.

இன்று ஊடகம் சம்பந்தப்படாத எந்தவொரு துறையும் கிடையாது எனும ளவிற்கு ஊடகத்தின் செல்வாக்கு எம் வாழ்வின் சகல துறைகளிலும் செல்வாக்கு செலுத்தி வருகிறது. இந்தப் பின்னணியில் எமது தெல்தோட்டைப் பிரதேசமும் பல்துறைகளிலும் முன்னணி வகிக்க இந்த ஊடக வகிபாகம் ஆழமாக உணர்த்தப்பட வேண்டியிருக்கிறது.

தெல்தோட்டை ஊடக மன்றம் சிறந்ததொரு ஊடக கலாசாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கோடு உருவாக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கிறது.

- **ஊடக அபிவிருத்திப் பிரிவு;**

தெல்தோட்டை பிரதேசத்தில் ஊடக கலாசாரத்தினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இந்த பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

பிரதேச பாடசாலைகளில் ஊடகக் கல்வியினை அறிமுகம் செய்து, அதனை அபிவிருத்தி செய்வதற்கு பங்களிப்பு செய்வது இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், தெல்தோட்டை பிரதேசத்தின் உண்மைத்தன்மையினை வெளியுலகிற்கு எடுத்துச் செல்வதற்கு களம் அமைத்துக் கொடுப்பதும் இப்பிரிவின் நோக்கமாகும். அதேபோல், அருள்வாக்கி அப்துல் காதிர் கலை, இலக்கியக் கழகம் வருடாந்தம் அருள்வாக்கி அப்துல் காதர் புலவர் நினைவுப் பேருரையினை நடாத்துவதே இந்த கழகத்தின் பிரதான பொறுப்பாகும்.

அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நினைவுப் பேருரையினை நடாத்துவதற்கான நோக்கங்கள் வருமாறு,













- அருள்வாக்கி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு இளம் சமூகத்தினரை ஊக்குவித்தல்.
- அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் தொடர்பான பல தகவல்கள் எமது பிரதேசத்தில் இருந்தும் கூட அவற்றை சரியாக பயன்படுத்திக் கொள்வதற்கான முறையான ஏற்பாடுகள் இல்லை. ஆகவே அதனை நிவர்த்தி செய்தல்.
- அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் இஸ்லாமிய தமிழ் இலக்கியத்துக்கு ஆற்றிய அரும்பெரும் பணிகளை அடுத்த பரம்பரைக்கு எடுத்துச் செல்லல்.
- புலவரை ஜனரஞ்சகப்படுத்தியவர்களை இனங்கண்டு அவர்களை கௌரவித்தல்.

மேலும் ஆய்வுப் பகுதிகளை இனங்கண்டு அவற்றில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஊக்குவிப்பதே இந்த பிரிவின் பிரதான பணியாகும். இங்கு தெல்தோட்டை பிரதேசத்தினை மையமாகக் கொண்ட ஆய்வுப் பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேலும், ஆய்வுக்கட்டுரைகளை எழுதி அதனை பிரசுரிப்பதற்கு வாய்ப்பளிப்பதும் ஆய்வரங்குகளை ஏற்பாடு செய்வதும் இதன் பிரதான செயற்பாடுகளாகும்.

இவ்வாறு கட்டமைக்கப்பட்ட முறையில் தமது பணிகளை முன்னெடுத்துச் செல்கின்ற தெல்தோட்டை ஊடக மன்றமானது தொடர்ந்தும் நன்னோக்கோடு தெல்தோட்டை பிரதேச *முன்னேற்றத்துக்காய்* உழைத்துக் கொண்டிருக்கின்றது.

தெல்தோட்டையிலுள்ள சமூக நோக்கம் கொண்ட அனைத்து அமைப்புக்களையும், வளங்களையும் ஒன்றிணைத்து அதனூடாக தெல்தோட்டையினை சகல விதத்திலும் அபிவிருத்தி அடைந்த பிரதேசமாக மாற்றுவது எமது அமைப்பின் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும். குறிப்பாக ஊடகத்துறை சார் ஆளுமைகளை உருவாக்குவதும் இதன் செயற்பணிகளில் ஒன்றாகும். மேலும், எழுத்து துறையில் சாதிக்க துடிக்கும் ஆளுமைகளை இனங்கண்டு அவர்களின் எழுத்தாற்றலை வெளியுலகிற்கு கொண்டு வரும் பணியினையும் இம்மன்றம் மேற்கொண்டு வருகின்றது.

மலை நாட்டின் எழில்மிகு பிரதேசமான தெல்தோட்டை நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கிறது. அதே போன்று, இந்த மண் வரலாற்றில் பல துறைகளில் பல்வே*று ஆளுமைக*ளையும் ஈன்றெடுத்திருக்கிறது.

அதனால் இந்த வருடத்திற்கான அருள்வாக்கி அப்துல் காதிர் நினைவுப் பேருரையினை 'தெல்தோட்டை – புதியதோர் மாற்றத்தை நோக்கி (எமது வளமே எமது பலம்)' என்ற கருப்பொருளில் நடாத்துவதற்கு மன்றம் தீர்மானித்தது எனலாம்.

**சி.எம்.எம்.சுபைர்,**
தலைவர்,
தெல்தோட்டை ஊடக மன்றம்

தினகரன் வாரமஞ்சரி

# BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 I 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

SOLAR MINI STREET LIGHT
48 COB
RS. 3,750/-
SOLAR INDOOR WORK LIGHT
Rs. 5750/-
50W SOLAR INDOOR BULB
Solar Charging
USB Charging
RS. 4,900/-
SOLAR STREET LIGHT
Rs. 5750/-
0777 80 65 42
SOLARX

## WANTED

නිවසටම පැමිණ මිලට ගනු ලැබේ
Rolex, Omega, Swiss, Branded Watches, Diamond Jewellery, 21K, 18K, 14K, 12K Jewellery Items & Silvers, Old Notes, Antique Furniture
Reg. No WLL 5244
විශ්වාසයෙන් ගනුදෙනු කරන්න
රිදී, ඉතාලි වලින් ගෙන්වන ලද හැඩි ගැරුප්පු (Arjanthu) උපරිම මිලට
We buy Pawned Gold Jewellery Items
0776 562 382, 0777 077 333

## NEW DESIGN MINI MULTI CHAFF CUTTER

கொம்போஸ்ட் உர உற்பத்திக்கான புல் துண்டாக்கும் இயந்திரம்
Steel Handle Shovel
சவல்
Wire Netting 1/2"x 1/2"
கம்பி வலை
Power - 2.2-3.0 kw (Single phase)
Motor - 3 hp
Speed - 2800 rpm/min
Voltage - 220V
Electric machine
NICAM TRADERS
191, Mahavidyala Mawatha, Colombo 13.
0714 096 484
0776 650 040

## Fuel Pumps & Fuel Dispensers

Tel: 011-7397777
Rs. 6900/= Upwards
IN STOCK



Submersible Pump
Barrel Pump
Fuel Transfer Pump
12V/24V OIL PUMP SET
SINCE 1930
ALLIED TRADING INTERNATIONAL (PVT) LTD
# 301 OLD MOOR STREET, COLOMBO 12
0778446666 WhatsApp alliedint@eureka.lk

தினகரன் வாரமஞ்சரி

## திருமண சேவைகள்

உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும

classified@lakehouse.lk

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்

அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342

## SATURDAY /SUNDAY BUFFET LUNCH

SPECIALLY FOR COVID - 19
SPECIAL HEALTH SECURITY MEASURES ARE IN PLACE

DAY OUTING SPECIAL OFFERS
SPEND YOUR DAY JUST FOR Rs 2950/-



Sea Shine Beach Hotel

* Welcome Drink
* Well Spread Buffet Lunch & Dessert
* Evening Tea with Piece of Cake
* One Rest Room Complimentary for Over 25 Pax
* Swimming Pool with Kids Play Area
* No Corkage for Hard Liquor & Beer

Comfortable 51 Rooms, Reception Hall, Conference Rooms, with modern facilities, Eastern/ Western & Chinese Cuisine, Swimming Pool
WE UNDERTAKE WEDDINGS, PARTIES, SEMINARS & DAY OUTINGS
10 min. to Colombo Airport
15 min. to Colombo City
Overlookong Colombo Harbour City
212, BOPITIYA ROAD, USWETAKEIYAWA, WATTALA.
Tel: + 94 112 985 555, 0114 328 422 Fax: 2 793 060
HOTLINE : 0773 404 975, 0773 633 979
Email: info@seashinebeach.com Web: www.seashinebeach.com

## Advertise Here

வாரமஞ்சரி BUDGET adz

5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT

Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

## 2 STOREY HOUSE FOR SALE MEGODA KOLONNAWA

Nearly 30 Perch, 3 Bedrooms, 1 Bathroom, AC Room, Clear Deeds, Very close to super markets & city areas
GREAT PLACE FOR A FAMILY
Price 275 Lakhs (Negotiable)
CONTACT - 0710 535 782

## Thalis

Indian Vegetarian Cuisine

கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் உணவகத்தை தொடர்ந்தும் வெற்றிகரமாக நடாத்த நல்லாசி வழங்கிய இறைவனுக்கும் பெரும் ஆதரவு வழங்கிய எமது வாடிக்கையாளர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

ANNIVERSARY CELEBRATIONS 8th ANNIVERSARY

INDIAN Vegetarian Cuisine

8 வது அகவையில் காலடி பதிக்கும் உங்கள்



TR Thalis
Indian Vegetarian Cuisine




நிபுணத்துவம் வாய்ந்த சமையற்கலை வல்லுனர்களின் கைப்பக்குவத்துடன் வாடிக்கையாளர்கள் கேட்கும் உணவை அவர்கள் மலரும் நினைவாக மாற்றுவதற்காகவே மிகவும் பிரத்தியேகமாக உணவுகள் தயாரிக்கப்படுகின்றன.

## Thalis Restaurant (Pvt)Ltd

No. 155 Park Road, Colombo - 05.
(A\C, Pure Indian Vegetarian Cuisine)
(Dubai, Sharjah, Doha, London)
Hotline: +94 11 2 586 000
Tel: +94 11 2 507 788, +94 11 2 586 464, Fax: +94 11 2 326 854

வாரமஞ்சரி BUDGET adz



## LUXURY HOUSE FOR SALE

MEGODA KOLONNAWA
7 Rooms, 2 bathrooms, 21 Perch,Very close to all supermarkets and city limits
Clear deeds
Price 320 Lakhs (Negotiable)
CONTACT - 0766 084 365

PREMIUM PROPERTIES FOR SALE OR LONG LEASE AT THE EDGE OF

## GALLE RD AT DEHIWALA, MOUNT LAVINIA

30+37= 67 P contiguous , 14,619 sq ft in total in 4 Commercial / Residential house type building complex. Fully air conditioned and fully tiled. Landscaped and paved. High boundary walls and CCTV. All facilities are available in addition to a 100 Kva Power Generator with automatic transfer switches. Fully wired for Computers. 16 vehicle parks.Galle Rd entry/exit as well as two entry gates from Sylvester's Rd. Absolute ownership. Suitable for many purposes. High futuristic value. Rare land parcel.

Price Rs. 230M + 210M = Rs 440 Million (negotiable). Sale of each block i.e either 30P Or 37P (2 buildings in each property) shall be considered. Not a distress sale.

Must see property!

WhatApp Dilantha @ 0777 760 599

## Advertise Here

5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT

Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

# வெற்றிடங்கள்

## வரையறுக்கப்பட்ட GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனம்

(புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் இணை நிறுவனம்)

### 01) பிரதான நிறைவேற்று அதிகாரி (HM 2-1)

**வெளிவாரி மற்றும் உள்வாரி விண்ணப்பதாரர்கள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பொறியியல்/ விஞ்ஞானம் அல்லது வியாபார நிர்வாகத்தில் இளமாணிப் பட்டம்.

   **அத்துடன்**

   பொறியியல் / விஞ்ஞானம்/ வியாபார நிர்வாகத்தில் பட்டப் பின்படிப்புப் பட்டம் (Masters) அல்லது முகாமைத்துவத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் கூட்டுவர்த்தக அங்கத்துவம்

   **அத்துடன்**

   முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 10 வருட அனுபவம் இருக்க வேண்டும் அதில் 05 வருட காலம் முகாமைத்துவ மட்டத்தில் (MM) நிருபணமான சாதனைப் பதிவு மற்றும் ஆரம்பப் பட்டத்தைப் பெற்ற பின்னர் கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனமொன்றில் முகாமைத்துவ அனுபவத்துடன் இருக்க வேண்டும்.

2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பொறியியல்/ விஞ்ஞானம் அல்லது வியாபார நிர்வாகத்தில் இளமாணிப் பட்டம்.

   **அத்துடன்**

   பொறியியல்/ விஞ்ஞானம் அல்லது வியாபார நிர்வாகத்தில் PHD பட்டம் அல்லது

   **அத்துடன்**

   ஆரம்பப் பட்டத்தைப் பெற்றதன் பின், கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனமொன்றின் நிரூபிக்கப்பட்ட சாதனை மற்றும் முகாமைத்துவ அனுபவத்துடன் முகாமைத்துவ மட்டத்தில் (MM) குறைந்தபட்சம் 05 வருட கால அனுபவம்.

   பல-ஒழுங்கு குழுக்களை வழிநடத்துவதற்கும் தலைமை தாங்குவதற்கும் நிரூபிக்கப்பட்ட திறன்.

   மனித வளங்கள் மற்றும் பிற வளங்களை முறையாக வரிசைப்படுத்தல் மற்றும் திறமையான முகாமைத்துவத்தில் அனுபவம்.

- **வயது :** 35 வயதுக்கு குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

  **சம்பள அளவு :** (HM 2-1) - ரூ. 91,645.00 மற்றும் நிறுவனத்தால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகள்

### (02) செயற்பாடுகள் பணிப்பாளர் (சுரங்கம்) (HM 1-1)

**வெளிவாரி அபேட்சகர்கள் (1 மற்றும் 2 அத்துடன் 4 அல்லது 1 மற்றும் 3 அத்துடன் 4)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட சுரங்கப் பொறியியல் / மண் ஆராய்ச்சி பொறியியல் ஆகியவற்றில் விஞ்ஞான இளமாணிப் பட்டம்.
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட சுரங்கப் பொறியியல் / பூமி வளங்கள் பொறியியல் துறையில் பட்டப் பட்டப்படிப்பு தகுதி (Masters)
3. பதவிக்கு இயைபான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவம்
4. கூட்டுத்தாபனம் / சபை / நியதிகள் சபை / நிறுவனம் / புகழ்பெற்ற தனியார் நிறுவனத்தில் சுரங்கப் பொறியியல் துறைக்கு தொடர்புடைய "முகாமைத்துவ நிலை"யில் குறைந்தபட்சம் பத்து (10) வருடகால அனுபவம்.

**உள்வாரி அபேட்சகர்கள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகுதிகளைப் பெற்றிருத்தல்
2. சுரங்கப் பொறியியல் / மண் ஆராய்ச்சி பொறியியல் துறையில் பட்டப் பின்படிப்பு பட்டம் சகிதம் பதவியுடன் தொடர்புடைய சுரங்கப் பொறியியல் துறையில் முகாமைத்துவ வகுதியில் (MM 1-1) 1ஆம் வகுப்பு பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

### (03) செயற்பாடுகள் பணிப்பாளர் (புவிச்சரிதவியல்) (HM 1-1)

**வெளிவாரி அபேட்சகர்கள் (1 மற்றும் 2 அத்துடன் 4 அல்லது 1 மற்றும் 3 அத்துடன் 4)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட புவிச்சரிதவியலில் விஞ்ஞான இளமாணிப் பட்டம்.
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட புவிச்சரிதவியலுக்கு இயைபான துறையில் பட்டப் பட்டப்படிப்பு தகுதி (Masters)
3. பதவிக்கு இயைபான புவிச்சரிதவியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவம்
4. கூட்டுத்தாபனம் / சபை / நியதிகள் சபை / நிறுவனம் / புகழ்பெற்ற தனியார் நிறுவனத்தில் புவிச்சரிதவியல் துறைக்கு தொடர்புடைய ''முகாமைத்துவ நிலை"யில் குறைந்தபட்சம் பத்து (10) வருடகால அனுபவம்.

**உள்வாரி அபேட்சகர்கள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகுதிகளைப் பெற்றிருத்தல்
2. புவிச்சரிதவியல் துறையில் பட்டப் பின்படிப்பு பட்டம் சகிதம் பதவியுடன் தொடர்புடைய புவிச்சரிதவியல் துறையில் முகாமைத்துவ வகுதியில் (MM 1-1) 1ஆம் வகுப்பு பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

### 04) நிதிப் பணிப்பாளர் (HM 1-1)

**வெளிவாரி அபேட்சகர்கள் (1 மற்றும் 2 அத்துடன் 4 அல்லது 1 மற்றும் 3 அத்துடன் 4)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம் / கணக்கியலில் இளமாணிப் பட்டம்.
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் / நிதியிலுக்கு இயைபான துறையில் பட்டப் பட்டப்படிப்பு தகுதி (Masters)
3. பதவிக்கு இயைபான கணக்கியல் / நிதித் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவம்
4. கூட்டுத்தாபனம் / சபை / நியதிகள் சபை / நிறுவனம் / புகழ்பெற்ற தனியார் நிறுவனத்தில் கணக்கியல் / நிதித் துறைக்கு தொடர்புடைய ''முகாமைத்துவ நிலை"யில் குறைந்தபட்சம் பத்து (10) வருடகால அனுபவம்.

**உள்வாரி அபேட்சகர்கள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகுதிகளைப் பெற்றிருத்தல்
2. கணக்கியல் / நிதியியல் துறையில் பட்டப் பின்படிப்பு பட்டம் சகிதம் பதவியுடன் தொடர்புடைய கணக்கியல் / நிதியியல் துறையில் முகாமைத்துவ வகுதியில் (MM 1-1) 1ஆம் வகுப்பு பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

### 05) மனித வளங்கள் மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் (HM 1-1)

**வெளிவாரி அபேட்சகர்கள் (1 மற்றும் 2 அத்துடன் 4 அல்லது 1 மற்றும் 3 அத்துடன் 4)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட மனிதவள முகாமைத்துவம் / பொது நிர்வாகம் / பொது முகாமைத்துவம் / வியாபார முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் என்பவற்றில் இளமாணிப் பட்டம்.
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட மனிதவள முகாமைத்துவம் / பொது நிர்வாகம் / பொது முகாமைத்துவம் / வியாபார முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் என்பவற்றிற்கு இயைபான துறையில் பட்டப் பட்டப்படிப்பு தகுதி (Masters)
3. பதவிக்கு இயைபான மனிதவள முகாமைத்துவம் / பொது நிர்வாகம் / பொது முகாமைத்துவம் / வியாபார முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் எனும் துறைகளில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவம்
4. கூட்டுத்தாபனம் / சபை / நியதிகள் சபை / நிறுவனம் / புகழ்பெற்ற தனியார் நிறுவனத்தில் மனிதவள முகாமைத்துவம் / பொது நிர்வாகம் / பொது முகாமைத்துவம் / வியாபார முகாமைத்துவம் / வியாபார நிர்வாக துறைக்கு தொடர்புடைய ''முகாமைத்துவ நிலை"யில் குறைந்தபட்சம் பத்து (10) வருடகால அனுபவம்.

**உள்வாரி அபேட்சகர்கள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகுதிகளைப் பெற்றிருத்தல்
2. மனிதவள முகாமைத்துவம் / பொது நிர்வாகம் / பொது முகாமைத்துவம் / வியாபார முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் எனும் துறைகளில் பட்டப் பின்படிப்பு பட்டம் சகிதம் பதவியுடன் தொடர்புடைய கணக்கியல் / நிதியியல் துறையில் முகாமைத்துவ வகுதியில் (MM 1-1) 1ஆம் வகுப்பு பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

- சம்பள அளவு (02, 03, 04 மற்றும் 05)

  HM 1-1 - ரூ. 80,295.00 மற்றும் நிறுவனத்தால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகள்

- வயது (02, 03, 04 மற்றும் 05)

  35 வயதுக்கு குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**பதவிக்குரித்தான பொதுவான நிபந்தனைகள்**

➢ தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் தமது அடிப்படைச் சம்பளத்தின் 8% ஊழியர் சேமலாப நிதிக்கு வழங்குதல் வேண்டும். நிறுவனத்தினால் 12% மற்றும் மேலதிகமாக ஊ.ந.பொ.நிதியத்திற்கு 3% மும் பங்களிப்புச் செய்யப்படும்.

➢ அரசாங்க சேவை / நியதிகள் சட்டச் சபை விண்ணப்பதாரர்கள் தமது நிறுவனத்தின் தலைமையின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

➢ விண்ணப்பதாரர் தொடர்பாக உறுதிசெய்து கொள்வதற்காக உறவினரல்லாத இருவரின் முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்தை விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

கல்வித் தகைமைகள், அனுபவம், தொழில்சார் தகைமைகள் மற்றும் ஏனைய இயைபுடைய சான்றிதழ்களின் புகைப்படப் பிரதியை விண்ணப்பத்துடன இணைத்து அனுப்புதல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு சுய தரவுகளுடனான தமது விண்ணப்பப்படிவத்தை பின்வரும் முகவரிக்கு 20.10.2022ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். குறும் பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனம்,**
**இல. 190/A, ரணவீர கட்டிடம்,**
**ஸ்டேன்லி திலகரத்ன மாவத்தை,**
**நுகேகொட.**



## எமது தேசத்திற்கும் அதனது மக்களுக்கும் செழுமையைப் பெற்றுத்தர நாம் ஒரு பயணத்தில் இருக்கின்றோம். நீங்கள் அதனொரு பங்காளராக இருக்க விரும்புகிறீர்களா???

இலங்கையின் முன்னணி அரச அபிவிருத்தி வங்கியான பிரதேச அபிவிருத்தி வங்கியானது நாடு முழுவதும் 272 கிளைகள் மற்றும் 3000 இற்கும் மேற்பட்ட திறமைமிக்க ஊழியர்களை கொண்டு செயற்படுகின்றது என்பதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களுக்கு தேவையான தகைமைகளுடன், சிறந்த தலைமைத்துவ பண்புகளுடைய, முன்னனுபவமுள்ள தொழில் வல்லுனர்களிடமிருந்து, விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### உதவி பொது முகாமையாளர் - நிதி
### உதவி பொது முகாமையாளர் - நிதி முகாமைத்துவம்

**முக்கிய தகைமைகள்**

1. CA/CIMA/ACCA அங்கத்துவம்
   (அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்ற பட்டம் அல்லது பட்டப்பின்படிப்பு அல்லது வங்கியியல் தொடர்பான தொழில்சார் தகைமைகள் மேலதிக தகைமைகளாக கொள்ளப்படும்.)
2. 03 வருட சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் அனுபவத்துடன் வங்கி நிதித் துறையில் 08 வருட அனுபவத்துடன் ஒட்டு மொத்தமாக 15 வருட வேலை அனுபவம்.
3. வயது 50 வருடங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும்.

**ஊதியம்**

தெரிவு செய்யப்படும் அபேட்சகருக்கு வங்கித் துறை தராதரங்களுக்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளப் பொதி ஒன்று வழங்கப்படும்.

### உதவி முகாமையாளர் - நிதி (ஒப்பந்த அடிப்படையில்)

**முக்கிய தேவைப்பாடுகள்**

1. CA/CIMA/ACCA அங்கத்துவம்
   (அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்ற பட்டம் அல்லது பட்டப்பின்படிப்பு அல்லது வங்கியியல் தொடர்பான தொழில்சார் தகைமைகள் மேலதிக தகைமைகளாக கொள்ளப்படும்.)
2. வங்கி அல்லது நிதித்துறையில் ஆகக்குறைந்தது 02 வருட அனுபவம்.
3. பகுப்பாய்வு திறன் மற்றும் அறிக்கையிடல் திறமைகள் இருக்க வேண்டும்.
4. வயது 30 வருடங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும்.

**ஊதியம்**

இப்பதவி நியமனம் ஆரம்பத்தில் ஒரு வருட கால ஒப்பந்த அடிப்படையிலானதாகும். முதலாம் வருட காலப்பகுதியை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் அபேட்சகர் இரண்டாம் வருடத்திற்கு கவனத்தில் கொள்ளப்படுவார். ரூபா 100,000/- நிரந்தர மாதாந்த கொடுப்பனவாக ஒப்பந்த காலப்பகுதியினுள் செலுத்தப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

தயவு செய்து உங்களது பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை, சிபாரிசு செய்யக்கூடிய உறவினரல்லாத இருவரின் தொடர்பு கொள்ளக் கூடிய விபரங்களுடன் careers@rdb.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 2022.10.14 ஆம் திகதிக்கு முன்னர் மின்னஞ்சல் விடயத்தில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

இவ் ஆட்சேர்ப்பை இரத்துச் செய்தல் மற்றும் ஒத்திவைத்தல் அல்லது குறும்பட்டியலிடப்பட்ட அபேட்சகர்களை மாத்திரம் அழைப்பது வங்கியின் உரிமையாகும்.

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank
"BBB" Negative ICRA Lanka

பிரதான மனிதவள அதிகாரி
பிரதேச அபிவிருத்தி வங்கி.
இல.933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி.
0112 42 52 62 | www.rdb.lk

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்**

**AHEAD செயற்றிட்டம்**

Uva Wellassa University

### தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பதில் பெருமை கொள்வோம்

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகமானது தேசிய வளத்தை மையப்படுத்தி அதற்கான மேலதிக செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதுடன் பட்டப்படிப்பு, நிபுணத்துவம், கூட்டுறவு என்பனவற்றின் புதிய போக்குகளையும் ஏற்படுத்துகின்றது. பல்கலைக்கழக கல்விசார் திட்டங்கள் கவனமாக வடிவமைக்கப்பட்டு தங்கள் தொழில் வழங்குநருக்கு பெறுமதி சேர்க்கும் தேர்ச்சி வாய்ந்த புதிய மாணவர் பரம்பரையை முன்கொணர்கின்றது. தேசிய ரீதியிலான இப்பாரிய முயற்சியில் நீங்களும் ஓர் அங்கத்தவராகலாம்.

### பெறுகை அறிவித்தல்

பின்வருவனவற்றை வழங்குவதற்காக தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பெறுகைக் குழுத் தலைவர் விலைமனுக்களைக் கோருகின்றார்.

| விளக்கம் | கேள்வி இலக்கம் | விலைமனுப் பிணையின் பெறுமதி (ரூபாவில்) | மீளளிக்கப் படாத வைப்பிடல் (ரூபாவில்) | விலைமனு மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| பிரயோக விஞ்ஞான பீடத்திற்கு விரிவுரை மண்டபத்தை (படிநிலை IV) நிர்மாணித்தல் | UWU/AHEAD/RA1/FAS/NCB/WORKS/04 | 133,000.00 | 3,500.00 | 2022 ஒக்டோபர் 17ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு |

மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கான மீளளிக்கப்படாத கட்டணத்தை எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணிக்கிடையில் மேலே குறிப்பிட்டுள்ள ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக AHEAD/OTS அலுவலகத்திற்கு அல்லது இலங்கை வங்கியின் 82592579 என்ற கணக்கிலக்கத்திற்கு ரொக்கப் பணத்தில் நேரடியாக செலுத்திய பின்னர், இக்கொடுப்பனவிற்கான பணப்பற்றுச்சீட்டுடன் பெறுகைக்கான பிரதிப் பணிப்பாளருக்கு (AHEAD/OTS) எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் எந்தவொரு விலைமனுதாரரும் 2022 ஒக்டோபர் 14ஆம் திகதி பி.ப. 4.00 மணி வரை முழுமையான விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். http://www.uwu.ac.lk/procurement என்ற பல்கலைக்கழக இணையதளத்திலிருந்தும் விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்வோர், மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை 82592579 என்ற கணக்கிலக்கத்தையுடைய ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் AHEAD செயற்றிட்டத்தின் பெயரில் இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் கொடுப்பனவை மேற்கொள்ளலாம் என்பதுடன், பணப்பற்றுச்சீட்டு/ பணவைப்புத்துண்டு ஆகியவை பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் இணைக்கப்படல் வேண்டும். (விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.)

விலைமனுக்களை நிர்ணயிக்கப்பட்ட விலைமனுக்கள் 2022 ஒக்டோபர் 17ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன் அவைகள் அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுக்களைக் திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி, (அதிகாரமளிக்கப்பட்ட கடிதத்துடன்) சமுகமளிக்க அனுமதிக்கப்படுவார். கேள்விகளை முத்திரைக் குறியிடப்பட்ட தபாலுறையில் உள்ளடக்கி அதன் இடது பக்க மேல் மூலையில் இயைபுடைய கேள்வி இலக்கம் எழுதப்பட்டு பதிவுத் தபாலில் “தலைவர், செயற்றிட்ட பெறுகைக் குழு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பசறை வீதி, பதுளை” என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

மேலதிக விபரங்களை 055-3127378 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெறுகைக்கான பிரதிப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பல்கலைக்கழக பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்,**
**பதுளை.**
2022-10-02

Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adZ it's what you want Classified




For 15 Words Rs. 500/-
* Cost of each additional word Rs. 20/-

Ramani - 077 7 278 948 / Gayani - 011 2 429 342/ 343 / Piyumi - 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291

Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk

## மத்திய சுற்றாடல் அதிகார சபை

**நிறுவன/ஆய்வு**
**கூடங்களில் தொழில்நுட்ப ஆலோசனை வழங்குவது சம்பந்தமாக பதிவு செய்தல்**

மத்திய சுற்றாடல் அதிகார சபையானது 2023/2024ஆம் வருடத்திற்கான தொழிற்சாலைகள்/ ஆய்வு கூடங்களில் தொழில்நுட்ப ஆலோசனை வழங்குவது தொடர்பாக பதிவு செய்தல் மற்றும் வருடாந்த இற்றைப்படுத்தலுக்கான செயற்பாட்டை ஆரம்பித்துள்ளது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் எல்லைக்குட்பட்ட கைத்தொழில் சமூகத்திற்கு சுற்றாடல் மாசடைதலைக் கட்டுப்படுத்துவதற்கான தகவல்களை வழங்குவதன் மூலம் தொழில்நுட்ப உதவி மற்றும் வழிகாட்டல்களை இலகுபடுத்துவது இப்பதிவின் அடிப்படை நோக்கமாகும்.

பின்வருகின்ற பிரிவுகளுக்குட்பட்ட தகுதிவாய்ந்த நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- வளி, நீர், இரைச்சல், அதிர்வு மற்றும் வாயு மாசுபடுத்தலைக் கட்டுப்படுத்தல்
- அளவீடுகள் அல்லது நீரின் தரம், வளியின் தரம், இரைச்சல், அதிர்வு மற்றும் மண் போன்றவற்றின் ஆய்வுகள்

விண்ணப்பங்கள் மற்றும் பதிவு செய்வது தொடர்பான முழு விபரங்களையும் இணையத்தளம் www.cea.lk மூலம் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் நேர்த்தியான நிரப்பப்பட்ட தேவையான இணைப்பு ஆவணங்களுடன் கூடிய விண்ணப்பங்களை கீழ்வரும் விலாசத்திற்கு எதிர்வரும் 30.10.2022ம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**பணிப்பாளர் (சுற்றாடல் மாசடைதலைக் கட்டுப்படுத்துதல்)**
**சுற்றாடல் மாசடைதல் கட்டுப்படுத்தல் பிரிவு,**
**மத்திய சுற்றாடல் அதிகார சபை,**
**104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

**பணிப்பாளர் நாயகம்,**
**மத்திய சுற்றாடல் அதிகார சபை.**

**தொடர்புகளுக்கு:**
**தொலைபேசி: 011 2872278/ 011 2873447/011 2873448**
**071 2360756 - எம். ஜி. லச்சுமி**
**(உதவிப்பணிப்பாளர்)**
**தெலைநகல்: 011 2872605**
**மின்னஞ்சல்: lukshmi@cea.lk**

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD - IDA | WORLD BANK GROUP

**කෘෂිකර්ම අමාත්‍යාංශය**
**கமத்தொழில் அமைச்சு**
**Ministry of Agriculture**

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

**விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் - கமத்தொழில் அமைச்சு**

**IDA Credit No.: 5873 LK**

## பெறுகை அறிவித்தல்

### வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்ட கொத்தணிகளுக்கு (ASMP Clusters) உரங்களை (Urea, TSP, MOP) வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP) கிரயச் செலவிற்காக 58.63 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்ட கொத்தணிகளுக்கு உரங்களை (Urea, TSP, MOP) வழங்குதல் மற்றும் விநியோகித்தல் என்பவற்றிற்கு ஒப்பந்தத்தின் கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.
2. வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்ட கொத்தணிகளுக்கு உரங்களை (Urea, TSP, MOP) வழங்குதல் மற்றும் விநியோகித்தல் எனும் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின், செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கிறார்.

| விபரங்கள் | ஒப்பந்த இலக்கம் | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்ட (ISP மற்றும் EU) கொத்தணிகளுக்கு (ASMP Clusters) உரங்களை (Urea, TSP, MOP) வழங்குதல் மற்றும் விநியோகித்தல் | LK-MOA-PMU-316218-GO-RFB | 4,270,000.00 | 45,000.00 |

3. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, பெறுகை திணைக்களத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து 0777419521 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம் மற்றும் 2022-10-04ஆம் திகதியிலிருந்து 2022-10-25ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பின்வரும் முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவானது செயற்றிட்டத்தின் நிதியிடல் முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
6. 2022-10-25ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 2022-10-25ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியில் தாமாக வருகை தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி என்பன தனித்தனியான உறைகளில் இடப்பட்டு ‘மூலப்பிரதி’ மற்றும் ‘நகல்பிரதி’ என தபாலுறைகளில் குறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் வேறொரு தபாலுறையில் இட்டு முத்திரைக்குறி பொறித்து அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் ‘‘வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்ட கொத்தணிகளுக்கு (ASMP Clusters) உரங்களை (Urea, TSP, MOP) வழங்குதல் மற்றும் விநியோகித்தல்’’ எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
8. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி: 0112696086 அல்லது 0777419521**
திகதி: 2022-10-02

## குறுக்கெழுத்துப் போட்டி இல.31

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | ■ | 04 | 05 |
| ■ | 06 | ■ | 07 | 08 | ■ |
| 09 | 10 | 11 | 12 | 13 | ■ |
| 14 | ■ | 15 | ■ | ■ | 16 |
| 17 | ■ | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | ■ | ■ | 24 | ■ |

பெயர் ..........................................
வகுப்பு ..........................................
தொலைபேசி இல ..........................................
பாடசாலை பெயர் ..........................................
வதிவிட முகவரி ..........................................
..........................................

.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) இலங்கையில் விளைகின்ற வாசனைத் திரவியங்களில் இதுவும் ஒன்று. ஐரோப்பியர்கள் அக்காலத்தில் எமது நாட்டை ஆக்கிரமித்துக் கொள்ள விரும்பியதற்கு, இது போன்ற வாசனைத் திரவியங்கள் மீதான நாட்டமும் ஒரு காரணம்.
(2) எந்தவொரு பொருளினதும் அரைவாசிப்பங்கை இவ்வாறும் கூறலாம்.
(7) பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்ற நிலையம் இது. (தலைகீழான சொல்)
(9) பகலில் தோன்றி உலகுக்கு ஒளி தருவதால் இப்பெயர் வந்தது. உலகின் பிரதான சக்திமுதல்.
(18) ஒளி இல்லாது போனால் தோன்றுவது. வெளிச்சம் வந்தால் அகன்று விடும் இது. (தலைகீழான சொல்)
(22) தன்மை, பன்மைப் பெயர்ச்சொல். ( தலைகீழான சொல்)

### மேலிருந்து கீழ்

(2) தென்னந்தும்பு கொண்டு தயாரிக்கப்படுகின்ற இழை. தடிகளைப் பிணைத்துக் கட்டுவது, மிருகங்களை கட்டி வைப்பது போன்ற பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுவது இது. (தலைகீழான சொல்)
(4) யானையைப் பராமரிப்பவனையும், தேர் செலுத்துபவனையும் குறிக்கும் மரபுச்சொல்.
(7) பாட்டி, காகம் என்றதும் நினைவுக்கு வந்துவிடுகின்ற மற்றொரு சொல். (தலைகீழான சொல்)
(9) உங்களைப் போன்ற இளம் சிறார்கள், நூலில் கட்டி வானில் ஏற்றி மகிழ்வது.
(11) இனிப்புச் சுவை நிறைந்த உணவுப் பண்டம்.
(16) தாவரத்தின் முக்கிய அங்கம் இது. தாவரம் ஒளித்தொகுப்பு மூலம் உணவைத் தயாரிப்பதற்கு உதவுவது இது. (தலைகீழான சொல்)
(20) மாணவனுக்கு அறிவு ஊட்டுபவர் இவர். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 30

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01.சிறுத்தை 07. கணை 09. அடம்பன்
18. மாசு 21. புளி 23. பிள்ளை

**மேலிருந்து கீழ்**

02. பயறு 05. கனி 07. அணை 09. புலவன்
11. மாதம் 16. தம்பி 19. சுளை

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 29

### பாராட்டு பெறுவோர்

**1. அப்லல் அஹமத்**
தரம் 04, நாங்கல்ல மு.ம.வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**2. எம்.எப். அப்துல்லா**
தரம் 04, தல்துவ முஸ்லிம் மகா வித்தியாலயம்,
இல. 25, சீதாகம, குடாகம வீதி, அவிசாவளை.

**3. எம்.எம்.எம். அப்ராஸ்**
தரம் 04, மா/ சாஹிரா தேசிய கல்லூரி, மாத்தளை
இல. 37, கண்டி வீதி, வறக்காமுறை, உக்குவளை.

**4. கு. துவாரகன்**
தரம் 05, கமு/கார்மேல் பற்றிமா கல்லூரி
33A, சருவோதய வீதி, பெரிய நீலாவணை - 01A.

**5. டி. தகியா நூரி**
தரம் 07, அல் - முனவ்வறா க. பாடசாலை,
இல. 174/2, அல்முனவ்வறா வீதி,
அக்கறைப்பற்று - 04

**6. கே.டி அஹமட்**
தரம் 05, அக்/ ஆண்கள் வித்தியாலயம்,
இல. 132/2 முதலியார் வீதி,
அக்கரைப்பற்று - 04

**7. ஸீனத் தஹானி சாட்**
தரம் 10 B, க/பதியுதீன் மகளிர் கல்லூரி,
இல. 34/12, செமனரிவத்த வீதி,
தென்னக்கும்புர, கண்டி.

**8. எம்.எம். ஸஹ்றீஸ்**
தரம் 04, அல் - மதீனா வித்தியாலயம்,
76/C/1, அல் - ஹம்றா வீதி,
மருதமுனை - 04

குறுக்கெழுத்துப் போட்டி இல. 31
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

**தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு**

***தெளிவுரை :***
*மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும், அதுபோல் மக்களின் கற்றக் கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்.*

## எண்ணங்களை பொறுத்தே



அது ஒரு வெயில் காலம். மதிய வேளையில் வெயில் தாக்கம் மற்ற நாட்களை விடவும் உக்கிரமாக இருந்தது. தன் வியாபாரத்தை முடித்துக் கொண்டு ஒருவர் சாலை வழியாக நடந்து வந்து கொண்டு இருந்தார். வழி நெடுகிலும் மரம் ஒன்று கூட இல்லை. தூரத்தில் ஒரு மரம் அந்த வாலிபன் கண்ணுக்கு தெரிய வந்தது. சரி சற்று ஓய்வெடுத்து செல்லலாம் என மரத்தை நோக்கி வேகமாக நடக்க தொடங்கினான்.

மரத்தை நெருங்கியதும் இதமான சூழல் நிலவியது. உட்கார்ந்து இருந்த அந்த வாலிபர் சற்று தலையை மரத்தின் மீது வைத்து கண்ணை மூடினார். அப்பொழுது அந்த வழியாக ஒரு முப்பது வயது தக்க மனிதன் கடந்து செல்கிறார். வியர்வையால் நனைந்து அழுக்காயிருந்த சட்டை பார்த்து பகல் பொழுதே குடித்து விட்டு தூங்குறத பாரு என்று மனதிற்குள் நினைத்தவாறு சென்றான்.

அதன் பின்னால் வந்த மற்றொரு வாலிபர் அவரின் அயர்ந்த தூக்கத்தை பார்த்து வேலைக்கு செல்லாமல் வந்து மரத்தின் அடியில் தூங்கிக் கொண்டிருக்கிறான் என்று மனதில் எண்ணியவாறு கடந்து சென்றார். அப்பொழுது அதே வயது மதிப்புடைய வாலிபர் அங்கே வந்து மரத்தின் அடியில் அமர்ந்தார். உறங்கிக் கொண்டு இருப்பவரை பார்த்து தன் உழைப்பின் அசதியை போக்க தூங்கிக் கொண்டு இருக்கிறான் பார் என்று அவரை எழுப்பாமல் கடந்து சென்றார். இவ்வாறு தான் நம் அனைவருடைய எண்ணங்களும். நம் எண்ணங்கள் எப்படி இருக்கிறதோ, அதே தான் மற்றவர் மீது நம் பார்வையை வைக்கும் போது, நினைக்கும் போது, பேசும் போது வெளிப்படும்.

## இவ்வார மழலை



கிருக்ஷிதா

**சசிகுமார் / சசிகலா,**
யடியந்தோட்டை






**வி. தனிகா**
தரம் 08,
அலெக்சாண்டிரா கல்லூரி,
கொழும்பு.



**ஹசன்**
தரம் 11,
அலெக்சாண்டிரா கல்லூரி,
கொழும்பு.



**வி. தருண்**
தரம் 10,
அலெக்சாண்டிரா கல்லூரி,
கொழும்பு

## நல்ல மாட்டுக்கு ஒரு சூடு


*நல்ல மாட்டுக்கு ஒரு கூடு என்று முன்னோர்கள் கூறினார்கள். இன்றைய காலத்தில் தான் அவை நல்ல மாட்டுக்கு ஒரு சூடு என்று மறுவி நிற்கின்றது. அதாவது இதன் விளக்கம், சந்தையில் மாட்டை வாங்க நினைப்பவர்கள் மாடுகளின் தடத்தை வைத்து கவனித்து வாங்குவார்கள். அதாவது அது பதிக்கும் தடம் ஒரு சுவட்டை, கணித்து வாங்குவார்கள்.*

*நன்றான சுவட்டையோ அல்லது அழுத்தமான சுவட்டை பதிக்கும் மாடு தான் அதிக பலம் வாய்ந்ததாக இருக்கும். அதனால் ஒரு மாட்டின் சுவட்டை பார்த்தாலே மாட்டின் பலம் புலனாகும். ஆகையால் தான் மாட்டின் சுவட்டை வைத்து அதன் வலிமையையும் உடல் நலத்தையும் கணிப்பதற்காகவே இப்பழமொழி கூறி உள்ளார்கள்.*



## கைக்கூப்பி வணக்கம் செலுத்துகிறோம் ஏன்?

*ஒருவர் நம்மிடம் அறிமுகமாகும் பொழுது அவர கைகூப்பி வணக்கம் செலுத்தி வரவேற்பது வழக்கம். நம்முடைய பெரும்பாலான மக்களிடம் இது பழக்கமாக இருந்தாலும் மற்றவர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக அமைகிறது. இது மட்டுமல்லாமல் இதனுள் ஒரு அதிசயம் மறைந்திருக்கிறது. நாம் இரு கையை கூப்பி வணக்கம் செலுத்தும் போது நம்முடைய விரல்கள் பத்தும் ஒன்றாகின்றன.*



*இது நம் உடம்பில் இருக்கும் காது, கண், மூளைகளின் உணர்ச்சி புள்ளிகளை தூண்டுகின்றன. அதனால் நாம் ஒருவரை காணும் போது கை கூப்பி வரவேற்பது அவர்களை அதிக அளவில் நினைவில் வைத்துக் கொள்ள உதவுகிறது. இதனை நீங்கள் கல்யாண வரவேற்பில் மட்டுமல்லாமல் அனைத்து இடங்களிலும் செய்வது மற்றவர்களிடத்தில் மரியாதையை ஏற்படுத்தும்.*

## ஆறு அறிவு; தொல்காப்பிய விளக்கம்

*ஆறு அறிவு எவை என்பதை தொல்காப்பியம் தெளிவாக விளக்கி உள்ளது. ஓரறிவு தொடுதலால் உணர்வது, இரண்டறிவு தொடுதல் மற்றும் சுவைத்தல் உணர்வது, மூன்றாம் அறிவு தொடுதல், சுவைத்தல் மற்றும் முகர்தல் ஆகியவை ஆகும். நான்காம் அறிவு தொடுதல் சுவைத்தல், முகர்தல், பார்த்தல் என்பனவாகும். ஐந்தாம் அறிவு தொடுதல், சுவைத்தல், முகர்தல், பார்த்தல், கேட்டல் போன்றனவாகும். கடைசியாக ஆறாம் அறிவு என்பது தொடுதல் சுவைத்தல், முகர்தல், பார்த்தல் கேட்டல் மற்றும் சிந்திக்கும் அறிவு ஆகும் என்று தொல்காப்பியம் கூறுகிறது.*

## வாரம் ஒரு பெரியார்

## உலக கணித மேதை இராமானுஜன்



*சிறு வயதில் இருந்து யாருடைய உதவிகளும் இன்றி கணிதத் துறையில் பல சாதனைகளை செய்தவர் கணித மேதை இராமானுஜன். கணிதத்தின் மீது கொண்ட தீராத பற்று கொண்டவர் அவர். வறுமை அவரை வாட்டிய போதும் கணிதத்தை கைவிடவில்லை.*

*இந்தியாவில் தமிழ்நாடு ஈரோடு பகுதியைச் சேர்ந்தவர் இராமானுஜன். தந்தை பெயர் சீனிவாசன். தாயார் பெயர் கோமளம். டிசம்பர் 22,1887 இல் அவர் பிறந்தார். ஏப்ரல் 26, 1920 அன்று காலமானார்.*

*இராமானுஜன் உலகம் முழுவதிலும் கொண்டாடப்படுபவராவார். தமிழனின் புகழை உலகுக்கு உணர்த்திய உன்னத மேதையாவார். 20 ஆம் நூற்றாண்டில் உலகத்தை வியக்கச் செய்த ஒப்பற்ற கணித மேதையாகத் திகழ்ந்தார்.*

*மிகவும் சிக்கலான கணித தேற்றங்கள் 4000 இற்கு மேற்பட்டவற்றை உலகுக்கு வழங்கிய ஒப்பற்ற திறமைசாலியாவார். இராமானுஜன் இந்த உலகை விட்டு மறைந்து நூற்றாண்டுகள் கடந்தும் உலகிலுள்ள கணிதவியலாளர்களுக்கு ஓர் உத்வேகமாக இன்றும் திகழ்கின்றார்.*

*தனது வீட்டில் குடியிருந்த கல்லூரி மாணவர்களின் எஸ்.எல்.லோனி எழுதிய மேம்பட்ட கோணவியல் புத்தகத்தை வாங்கிப் படித்தார். அப்போது அவருக்கு வயது 11 ஆகும். தனது 13வது வயதில் அந்த புத்தகத்தை முழுவதும் கற்று தேர்ச்சி அடைந்தார்.*


*தன் குடும்ப வறுமை காரணமாக 20 ரூபா சம்பளத்திற்கு சென்னை துறைமுகத்தில் எழுத்தாளர் பணியில் சேர்ந்தார். எனினும் தவறாமல் கணிதத்தை பயிற்சி செய்து கொள்வார். இங்கிலாந்து அரசு இவரது திறமையைக் கண்டு வியந்தது. அவரை ரோயல் சொசைட்டி உறுப்பினராக தெரிவு செய்து பெருமைப்படுத்தியது. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பெலோஷிப் பதவியும் இவருக்கு கிடைத்தது.*

*மூன்று ஆண்டுகளில் 32 ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினார். கணிதத்தில் அவர் ஆற்றிய சாதனைகள் இன்றும் போற்றப்படுகின்றன. கும்பகோணத்தில் இவர் வாழ்ந்த வீடு தேசிய அருங்காட்சியகமாக உள்ளது. இவரது பிறந்த நாள் இந்தியாவில் கணிதத் தேசிய நாளாகக் கொண்டாடப்படுகின்றது.*

### அன்புள்ள மாணவச் செல்வங்களே!

**உலகில் பல்வேறு துறைகளிலும் பிரகாசித்த பெரியார்கள் பற்றிய சிறு தகவல்கள் வாரமொரு தடவை இப்பகுதியில் இன்று முதல் பிரசுரமாகின்றது. நீங்களும் உலகப் பெரியார் பற்றிய தகவல்களை எமக்கு அனுப்பி வைக்க முடியும். உங்கள் பெயர், வயது, பாடசாலை விபரங்களுடன் பிரசுரம் செய்வோம்.**

## பயன்மிகு ஆசான் ஆவோம்



**விதியின் தலைமகனை அழைத்து
விளையாடும் வீரர்கள் ஆவோம்
புதிய கவிதை கருகொண்டு
புதுமைக் கவிதைகள் செய்வோம்
நதியின் அயல் வழியே வளரும்
நாணலாய் கொள்கை கொள்ளோம்
மதியின் உயர் நுட்பம் கொண்டு
மலையகத்துக்காய் உழைப்போம்
நடுக்கிடும் குளிரூடே தினந்தினம்
நாட்டுக்கெமை யளித்தோம் இனி
முழங்கிடும் மலை வீழருவியாய் நாமும்
முழங்குவோம் புதிய உலகுக்காய்
எழுதாக் கரங்களில் நவநவ
ஏடுகள் தவழ்ந்திட வழிசெய்வோம்
பழுதிலா கல்வித் தளிர் முளைவிட
பயன்மிகு ஆசான் ஆவோம்**

**மொழிவரதன்**
கொட்டகல

## இணைபிரியா நண்பன்...!

*நான்போகு மிடமெல்லாம்
அவனும் வருகின்றான்
நானிருந்தால் அவனும்கூட
என்னோ டிருக்கின்றான்.*

*நானோட அவனும் சேர்ந்து
ஓடி வருகின்றான்
நான்நடந்தால் என்னோடு
அவனும் நடக்கிறான்.*

*பாடசாலை நான் போனால்
படிக்க தானும் வருகிறான்
பந்தடிக்க நானும் பாய்ந்தால்
அவனும் பாய்ந்து அடிக்கிறான்
குளிக்கும்போது அவனும்கூட
குளித்து மகிழ்கிறான்
உண்ணப்போனால் அவனும்வந்து
உண்ண அமர்கின்றான்.*

*உறங்கப்போனால் தானும்சேர்ந்து
உறங்க அடம் பிடிக்கிறான் நான்
விழித்தெழுந்தால் அவனும் உடன்
விழிப்படைந்து விடுகிறான்.*



*இருந்தபோதும் அவனாலென்றும்
எனக்குத் தொல்லையிலையே நான்
இருக்கும் வரை என்னோடவன்
நிழலாய் தொடரும் நண்பனே...!*

**ஷெல்லிதாசன்**
திருகோணமலை

# மஞ்சரி விளையாட்டு

# விளையாட்டு அரசியல்




இலங்கை கால்பந்து மைதானத்தை விடவும் வெளியே பரபரப்பு அதிகரித்திருக்கிறது. அடுத்த கால்பந்து நிர்வாகத்துக்கான போட்டி, அரசியல் தலையீடுகள், இடைக்கால நிர்வாகம், தேர்தல், ஊழல் என்று ஏகப்பட்ட சிக்கல்கள்.

அடிப்படையில் இலங்கை கால்பந்து நிர்வாகத்தின் பதவிக் காலம் கடந்த ஓகஸ்ட் 31ஆம் திகதி முடிவடைந்தது. அடுத்த நிர்வாகத்தை தேர்வு செய்வதற்கான வாக்கெடுப்பு இன்னும் நடத்தப்படவில்லை. தற்போதைய குழப்பத்திற்கான வேர் இதுதான்.

இந்த நிலையில் கால்பந்து சம்மேளனத்தின் அடுத்த தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும். ஆனால் தேர்தலை நடத்தும் திகதியிலும் குழப்பம் இருக்கிறது. ஒத்திவைக்கப்பட்ட தேர்தலை ஒக்டோபர் 23 ஆம் திகதி நடத்த இலங்கை கால்பந்து சம்மேளனம் தீர்மானம் நிறைவேற்றியது. இதற்கு சர்வதேச



கால்பந்து சம்மேளனம் மற்றும் ஆசிய கால்பந்து சம்மேளத்தின் ஒப்புதல் கிடைத்திருப்பதாகவும் அது குறிப்பிட்டது.

என்றாலும் செப்டெம்பர் 15 ஆம் திகதிக்குப் பின் கால்பந்து சம்மேளனத்தால் எடுக்கப்படும் அனைத்து முடிவுகளும் ரத்துச் செய்யப்படுவதாக சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் ஒன்று கடந்த செப்டெம்பர் 17ஆம் திகதி வெளியிடப்பட்டது. அதாவது அன்றைய திகதியுடன் கால்பந்து சம்மேளனத்தின் பதவிக்காலம் முடிவுறுவதாக அந்த வர்த்தமானி கூறியது.

என்றாலும் தமது நிர்வாகத்தின் பதவிக் காலம் ஓர் ஆண்டு மாத்திரம் என்பதை மறுக்கும் கால்பந்து சம்மேளத்தின் தலைவர் ஜஸ்வார் ஓமர், அது 2023 மே 31 ஆம் திகதியே முடிவடைய வேண்டும் என்கிறார்.

ஆனால் ஜஸ்வார் ஓமர் தற்போது தலைவராக இருக்கிறாரா என்பதே கடந்த வெள்ளிக்கிழமை (30) வரையில் குழப்பமாகவே இருந்தது. கால்பந்து சம்மேளனம் கலைக்கப்பட்டு புதிய நிர்வாகக் குழு ஒன்றை அமைப்பதற்கு விளையாட்டுத் துறை அமைச்சு தீர்மானத்திருப்பதான தகவல் கடந்த ஒருசில நாட்களாக உறுதி செய்யப்படாமல் உலவிக்கொண்டிருந்தது.

என்றாலும் எதற்குமே உறுதியான பதில் இல்லை. ஜஸ்வார் ஓமருக்கே அது குழப்பமாக இருக்கிறது. “எனது நிர்வாகம் பதவியில் இருக்கிறதா என்பது கூட எனக்குத் தெரியாமல் இருக்கிறது” என்று மூன்று நாட்களுக்கு முன் நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் குறிப்பிடுகிறார்.

இந்தக் குழுப்பம் தீவிரம் அடைந்தபோது ரீட் அவன்யுவில் இருந்த கால்பந்து இல்லம் கடந்த செப்டெம்பர் 23 ஆம் திகதி தொடக்கம் மூடப்பட்டிருக்கிறது. அதன் ஊழியர்களுக்கு சம்பளம் கூட கொடுக்கப்படவில்லை.

இந்த அலுவலகத்திற்குள் நுழைய ஜஸ்வார் ஓமர் நிர்வாகத்திற்கு அனுமதி அளிக்கக் கூடாது என்று பொலிஸில் கூட முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்கிறார் ஓமர். மாறி மாறி ஊழல் குற்றச்சாட்டுகள் வேறு.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் கால்பந்து சம்மேளத்தின் தேர்தல் நெருங்கி இருக்கும் நிலையில் அதில் போட்டியிடும் இரு குழுக்களுக்கு இடையிலான கயிறிழுப்பே தற்போதைய குழப்பதிற்கு அடிப்படை. இதில் அரசியல் சக்திகளின் பலப்பரீட்சையும் கலந்திருக்கிறது.

எப்படி இருந்தபோதும் சர்வதேச கால்பந்து சம்மேளனம் இதனை சாதாரணமாகப் பார்க்காது. நிலைமை மோசமடைந்தால் இலங்கைக்கு தடை விதிக்கக் கூட வாய்ப்பு இருக்கிறது.

இலங்கை கால்பந்தின் இயக்கம் என்பது முழுக்க முழுக்க சர்வதேச கால்பந்து சம்மேளனம் மற்றும் ஆசிய கால்பந்து சம்மேளனத்தை சார்ந்த ஒன்று. இவை இலங்கை கால்பந்துக்காக வருடத்திற்கு இரண்டு மில்லியன் டொலருக்கு மேல் செலவிடுகின்றன.

இலங்கையில் பாடசாலை மட்டத்தில் இருந்து தேசிய மட்டம் வரையான கால்பந்து விளையாட்டுக்கு இது தான் ஆதாரம். பயிற்சி அளிப்பது, போட்டியை நடத்துவது, நிர்வாக செயற்பாடுகள், வெளிநாட்டு பயணங்கள் எல்லாவற்றுக்கும் இந்தப் பணம் அவசியம்.

எனவே பிஃபா தடை வந்தால் இலங்கை கால்பந்தே ஸ்தம்பித்துவிடும். நிர்வாகம் செய்வதாக இருந்தாலும், அரசியல் செய்வதாக இருந்தாலும் அதனை மனதில் வைத்துக்கொள்வது நல்லது.

# 'மன்கட்' சரியா தப்பா?





பந்துவீச்சாளர் பந்தை தனது கையில் இருந்து விடுவிக்கும் வரை, பந்துவிச்சாளர் முனையில் இருக்கும் துடுப்பாட்ட வீரர் (Non striker) கோட்டைத் தாண்டக் கூடாது என்பது ஐ.சி.சி விதியில் தெளிவாக இருக்கிறது. என்றாலும் அவ்வாறு வெளியே செல்லும் வீரரை பந்தை வீசுவதற்கு முன்னர் பந்துவீச்சாளர் ஆட்டமிழக்கச் செய்வது இன்றும் கூட கிரிக்கெட் உலகில் தீர்க்கப்படாத வழக்கு.

இப்படி ஆட்டமிழக்கச் செய்யும் முறையை இத்தனை காலமும் நியாய மற்ற ஆட்டமுறை என்ற வகைப்படுத்தலின் கீழ் வைத்திருந்த ஐ.சி.சி ஒரு வாரத்துக்கு முன்தான் அதனை சாதாரண ரன் அவுட் வகைப்படுத்தலுக்கு மாற்றியது.

ஆனால் இந்த மாற்றம் நிகழ்ந்து ஒருசில நாட்களிலேயே மீண்டும் சர்ச்சை வெடித்திருக்கிறது. இத்தனை காலமும் ஆண்கள் கிரிக்கெட்டில்தான் இந்த குழப்பம் இருந்தது என்று பார்த்தால், இப்போது பெண்கள் கிரிக்கெட்டுக்கும் இது தொற்றிவிட்டது.

கடந்த செப்டெம்பர் 24ஆம் திகதி இங்கிலாந்துக்கு எதிரான லோட்ஸில் நடந்த மூன்றாவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற ஒரு விக்கெட் கைவசம் இருக்க 18 ஓட்டங்களை பெற வேண்டி இருந்தது.

44ஆவது ஓவரை வீசவந்த தீப்தி ஷர்மா அதன் மூன்றாவது பந்தை வீசவந்தபோது, பந்தை வீசுவதற்கு முன் துடுப்பாட்ட வீராங்கனை சார்லி டீன் முண்டியடித்துக் கொண்டு முன்னாள் ஓட, பந்து வீசுவதை நிறுத்தி ரன் அவுட் செய்துவிட்டார்.

இந்திய பெண்கள் ஒருநாள் தொடரை 3–0 என முழுமையாக கைப்பற்றினார்கள். தனது கன்னி அரைச்சதத்தை பெற்று இங்கிலாந்தை வெற்றி பெறச் செய்ய காத்திருந்த டீன் 47 ஓட்டங்களைப் பெற்று கண்ணீருடன் வெளியேறினார்.



தான் அநியாயமாக ஆட்டமிழக்கச் செய்யப்பட்டதாக டீன் நினைப்பதை அவரது கண்ணீர் காட்டிக் கொடுத்தது. ஆனால் இந்திய அணியின் வெற்றிக் கொண்டாட்டம் தனது பக்கம் நியாயம் இருப்பதை சொல்வது போல் இருக்கிறது.

இந்த ஆட்டமிழப்பு முறையின் நியாய, அநியாயங்களைத் தாண்டி இதன் சரச்சை முடிந்தபாடில்லை.

1947இல் சிட்னியில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்டில் இந்தியாவின் வீனு மன்கட், ஆஸி. துடுப்பாட்ட வீரர் பில் பிரௌனை கோட்டை வீட்டு வெளியே போனாதால் இந்த முறையில் ஆட்டமிழக்கச் செய்தது கிரிக்கெட் வரலாற்றில் முதல் சம்பவம். கிரிக்கெட் ஓட்டைக்குள் புகுந்து இப்படி ஒரு ஆட்டமிழப்பை செய்ததால் பெரும்பாலானோர் முகம் சுளித்தே மன்கட்டை பார்த்தனர். அன்று தொடக்கம் இந்த முறையிலான ஆட்டமிழப்பை மன்கட் என்று அழைப்பது வழக்கமாகிவிட்டது.

“இந்த ஆட்டமிழப்பு முறை முரண்பாட்டுக்குரியது. இதற்கு நான் ஆதரவாக இல்லை. ஆனால் இந்தியா அதற்கு வரவேற்பு அளிக்கிறது” என்கிறார் இங்கிலாந்து அணித் தலைவி ஆமி ஜோன்ஸ்.

ஆனால் நாம் புதிதாக ஒன்றும் செய்யவில்லை. அது ஐ.சி.சி விதியில் இருக்கிறது என்கிறார் இந்திய அணித் தலைவி ஹார்மன் பிரீத் கவுர்.

வழக்கமாகக் கிரிக்கெட் ஆடுபவர்கள் பந்துவீச்சாளர் முனையில் இருந்தால் பந்துவீச்சாளர் ஓடிவரும்போதே அதனோடு சேர்த்து ஓட்டம் பெறுவதற்கு முன்னோக்கி நகர்வது, இயல்பானது. அது தொன்றுதொட்டு இருந்து வரும் வழக்கம்.

“பந்து கையில் இருந்து விடுபடும்வரை நொான் ஸ்ட்ரைக்கர் கோட்டுக்குள் இருப்பது கடினமானது” என்கிறார் இங்கிலாந்து ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அலெக்ஸ் ஹேல்.

என்றாலும் “இது நீண்ட காலமாக கேள்வி எழுப்பப்படும் ஒன்று. ஆனால் இது போட்டி விதிகளில் இருப்பது. மன்கட் முறையில் ரன் அவுட் செய்ய முடியும். இது போட்டி விதியில் இருக்கிறது என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்” என்கிறார் இங்கிலாந்து முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் மொன்டி பெனிஸர்.

கிரிக்கெட்டில் மன்கட் முறை என்பது மிக அரிதாக நிகழும் ஒன்று. நூற்றாண்டு கடந்த டெஸ்ட் வரலாற்றில் இதுவரை நான்கு தடவையே நிகழ்ந்திருக்கிறது. அதுவே ஆடவர் ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் நான்கு தடவைகளே இடம்பெற்றிருக்கின்றன.

கடைசியாக 2014 ஆம் ஆண்டு எட்ஜ்பாஸ்டனில் இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் இலங்கை சுழற்பந்து வீச்சாளர் சச்சித்ர சேனநாயக்க, ஜோஷ் பட்லரை இந்த முறையில் ரன் அவுட் செய்தார். இது நடந்து எட்டு ஆண்டுகள் கடந்த போதும் சேனநாயக்க தனது செயலை இன்றும் கூட நியாயப்படுத்த வேண்டிய சூழலே இருக்கிறது.

இதுவே டி20 போட்டிகளில் இந்தப் போக்கு சற்று வேகமாக நிகழ்கிறது. குறுகிய வரலாற்றைக் கொண்ட டி20இல் இதுவரை மூன்று முறை மன்கட் அட்டமிழப்புகள் நிகழ்ந்துள்ளன.

பொதுவாக பந்துவீச்சாளர் தாம் பந்து வீசும்போது அந்த முனையில் இருக்கும் துடுப்பாட்ட வீரர் கோட்டை தாண்டிச் செல்லுபோதும் பந்துவீசுவதை நிறுத்திவிட்டு துடுப்பாட்ட வீரரையும் எச்சரித்து நடுவருக்கும் அதுபற்றி கூறுவார். தொடர்ந்து அந்த செயல் தீவிரம் பெற்றாலேயே இந்த சர்ச்சைக்குரிய முறையில் ஆட்டமிழப்பைச் செய்ய தைரியம் பெறுவார்.

> “இன்றும் கூட மன்கட் முறை என்பது ஜீரணிக்க முடியாத ஒன்றுதான். ஆடுகளத்தில் இருக்கும் எல்லா வீரர்களும் அதனை ஒரே மாதிரியாகப் பார்ப்பதில்லை. ஒருவருக்கு ஐ.சி.சி அங்கீகரித்த விதியாக இருந்தாலும் மற்றவருக்கு அது கிரிக்கெட் மாண்பையே கெடுக்கும் ஒன்று. அதுவே போட்டியின் சமநிலைப்போக்கை கெடுக்கிறது.”

1992இல் போர்ட் எலிசபத்தில் நடந்த தென்னாபிரிக்காவுடனான ஒருநாள் போட்டியில் பீட்டர் கேர்ட்ஸனை, கபில் தேவ் மன்கட் முறையில் ரன் அவுட் செய்தது எச்சரித்து எச்சரித்து முடியாத பட்சத்திலாகும். முந்தைய போட்டிகளில் இப்படி கோட்டை விட்டு வெளியே போக வேண்டாம் என்று கேர்ட்ஸனை குறிப்பிட்டு இரு முறை கபில் தேவ் எச்சரித்திருந்தார். முடியாதபோதே அவர் இதனைச் செய்தார்.

ஆனால் அப்போது கபில் தேவின் செயலுக்கு தென்னாபிரிக்க வீரர்களிடம் இருந்தும் ரசிகர்களிடம் இருந்தும் உடனடியாக மைதானத்திலேயே எதிர்ப்புக் கிளம்பியது. தென்னாபிரிக்க அணித்தலைவர் இரண்டு விரல்களைக் காட்டி கபில் தேவுக்கு எதிர்ப்பை வெளியிட்டதோடு இந்திய களத்தடுப்பாளர்களுடனும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

கேர்ட்ஸன் மைதானத்தை விட்டு வெளியேற மறுக்க கடைசியில் நடுவர் அவரை வெளியேறும்படி உத்தரவிட வேண்டி ஏற்பட்டது. இதற்காக கேர்ட்ஸனுக்கு அபராதமும் விதிக்கப்பட்டது.

இன்றும் கூட மன்கட் முறை என்பது ஜீரணிக்க முடியாத ஒன்றுதான். ஆடுகளத்தில் இருக்கும் எல்லா வீரர்களும் அதனை ஒரே மாதிரியாகப் பார்ப்பதில்லை. ஒருவருக்கு ஐ.சி.சி அங்கீகரித்த விதியாக இருந்தாலும் மற்றவருக்கு அது கிரிக்கெட் மாண்பையே கெடுக்கும் ஒன்று.

அதுவே போட்டியின் சமநிலைப் போக்கை கெடுக்கிறது. அதாவது பந்துவீச்சாளர் முனையில் இருக்கும் துடுப்பாட்ட வீரர் கோட்டை விட்டு வெளியேறும்போது ரன் அவுட் செய்வது கிரிக்கெட் மாண்புக்கு உகந்ததில்லை என்று ஒரு தரப்பு தவிர்க்கும் நேரத்தில் மற்றத் தரப்பு, அவ்வாறான ஆட்டமிழப்பு முறையைச் செய்தால் போட்டியின் முடிவில் அது வேறு மாதிரியான தாக்கத்தையே செலுத்தும் என்கின்றனர்.

ஐ.சி.சி எத்தனை தான் அதற்கு சட்ட அங்கீகாரம் வழங்கினாலும் மைதானத்தில் இன்னும் சூழல் மாறவில்லை. 1932–1933 பருவத்தில் அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்களை குறிப்பாக டொன் பிரட்மனை கட்டுப்படுத்துவதற்கு இங்கிலாந்து உடலுக்கு பந்தை எறிந்ததாகட்டும், 1981இல் நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டியின் கடைசி பந்தில் போட்டியை சமன் செய்ய ஆறு ஓட்டங்களை பெற வேண்டி இருந்த போது ட்ரவோர் செப்பல் பந்தை உருட்டி விட்டதாகட்டும் எல்லாமே அப்போதைய சூழலில் சட்டத்தின் பிரகாரம் தப்பில்லை.

ஆனால் எல்லாமே கிரிக்கெட் மான்புடன் தொடர்புபட்ட விவகாரங்களாகவே பார்க்கப்பட்டன. வீரர்கள் இப்படிச் செய்ய மாட்டார்கள் என்ற ஒரு நம்பிக்கையிலேயே விதிகளில் ஓட்டை இருந்தது. ஆனால் பின்னர் அந்த ஓட்டைகள் அடைக்கப்பட்டன.

மன்கட் முறை கிரிக்கெட் விதியில் இருக்கும் ஓட்டையாகவே நீண்ட காலம் இருந்து வந்தது. ஐ.சி.சி அந்த ஓட்டையை அடைக்கு முயற்சியாகவே இப்போது அதற்கு முழு அங்கீகாரம் வழங்கி இருக்கிறது. அதனை முழுமையாக செயற்படுத்துவதற்கு கிரிக்கெட் உலகம் ஒருமித்து அங்கீகாரம் அளிக்க வேண்டும். அதுவரை குழப்பம் தொடர்ந்தும் நீடிக்கும்.

எஸ்.பிர்தௌஸ்...

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒக்டோபர் மாதம் 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்

2022 ஒக்டோபர் 2 ஞாயிற்றுக்கிழமை



# அலங்காரக் கலை, நடிப்புக் கலையில் மின்னும் தாரகை விதுர்ஷா வைஷாலி

# இத்தனை கோபம் கூடாது!



நடுவிரலை காட்டுவது மிக மோசமான செய்கை. வாயால் திட்டுவதை விடவும் நடுவிரலை காட்டினால் சிலருக்கு மூக்குக்கு மேல் கோபம் வரும். ஆனால் அமெரிக்காவைச் சேர்ந்த அலன் மார்கோவிட்ஸ் தனது முன்னாள் மனைவியை திட்டுவதற்கு இந்த நடுவிரல் செய்கையை கச்சிதமாக பயன்படுத்தி இருக்கிறார்.

தனக்கு தெரிந்த ஒருவருடன் கள்ளத் தொடர்பில் இருந்த மனைவி கடைசியில் அந்த நபரை திருமணம் புரிந்து சென்றுவிட்டார். ஆனால், மார்கோவிட்ஸ் சும்மா விடவில்லை. தனது முன்னாள் மனைவியின் வீட்டுக்கு அருகில் இருக்கும் வீட்டை வாங்கினார். வீட்டுக்கு முன்னாள் மிகப்பெரிய சிலை ஒன்றை அமைத்தார். அது சாதாரண சிலையல்ல. நடுவிரலை காட்டும் கையின் சிலை. அதனை முன்னாள் மனைவியின் வீட்டு பக்கம் திருப்பி வைத்தார்.



முன்னாள் மனைவியின் வீட்டில் இருந்து பார்த்தால் அந்த சிலை தெளிவாகத் தெரியும்.

12 அடி உயரமான அந்த சிலையை அமைக்க அவர் 7000 டொலர்கள் செலவிட்டிருக்கிறார் என்றால், எத்தனை கோபமாக இருக்கும்.

# உலகில் 20,000,000,000,000,000 எறும்புகள்

உலகில் எத்தனை எறும்புகள் இருக்கும். எமது கண்ணுக்கெட்டிய தூரத்தில் வரிசையாகச் செல்லும் எறும்புக் கூட்டத்தையே எண்ணிவிட முடியாதபோது இதனை நினைத்துப் பார்க்க முடிகிறதா? ஆனால் ஆய்வாளர்கள் குத்து மதிப்பாக உலகில் இருக்கும் எறும்புகளின் எண்ணிக்கையை கணித்திருக்கிறார்கள்.

அதன்படி உலகில் 20 குவாட்ரில்லியன் (ஆயிரங்கோடி கோடி கோடி) எறும்புகள் இருக்கின்றன. அதாவது 20 ஆயிரம் மில்லியன் மில்லியன்கள் அல்லது எண் வடிவில் சொல்வதென்றால் 20,000,000,000,000,000 (20 மற்றும் 15 பூஜ்ஜியங்கள்).



இதில் மற்றொரு அதிர்ச்சித் தகவல் உலகில் உள்ள மொத்த எறும்புகளும் சுமார் 12 மில்லியன் தொன் உலர் கார்பன் அளவாகும். இது உலகில் உள்ள மொத்த பறவைகள் மற்றும் காட்டில் வாழும் பாலூட்டி விலங்குகளின் நிறையை விடவும் அதிகம். இது மனிதர்களின் மொத்த எடையில் ஐந்தில் ஒரு பங்கிற்கு சமம்.

எறும்புகளின் உலகளாவிய எண்ணிக்கையைத் தீர்மானிக்க அவற்றின் வாழ்விடத்தில் ஏற்படும் மாற்றங்களின் விளைவுகளை அளவிடுவது மிக முக்கியம். பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் விளைவுகளும் அவற்றில் அடங்கும்.

உலகில் 15,700க்கும் அதிகமான எறும்பு வகைகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

எறும்புகள் இயற்கைச் சூழலுக்குக் குறிப்பிடத்தக்க பங்காற்றுகின்றன. விதைகளைப் பரவச்செய்து, இதர உயிரினங்களின் உணவுக்கு வழிவகுக்கின்றன. வேட்டையாடும் உயிரினமாகவும், இரையாகவும் இருக்கின்றன. கூட்டமாக இருக்கும் எறும்புகள் பெரிய பெரிய விலங்குகள் ஏன் மனிதனைக் கூட வேட்டையாடும் வல்லமை பெற்றவை.



# லொஸ் ஏஞ்சல்ஸ் போதுமானது

உலக மக்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது. இப்போது அது 7.8 பில்லியனாக உயர்ந்திருக்கிறது. இவ்வளவு மனிதர்கள் உலகில் வாழ்கிறார்களா? என்று ஆச்சரியப்பட வேண்டாம். உலகின் அளவுடன் ஒப்பிடுகையில் இது ஒன்றும் பெரிய எண்ணிக்கை அல்ல.

அதாவது உலகில் உள்ள ஒட்டுமொத்த மனிதர்களையும் ஓர் இடத்தில் சேர்த்தால் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரம் போதுமானது. ஆதாவது ஒரு சதுர மீற்றர் பகுதியில் சுமார் 10 பேரை நிறுத்தலாம். லொஸ் ஏஞ்சல்ஸ் நகரின் நிலப்பகுதி 1.2 பில்லியன் சதுர மீற்றர்கள். இதன்படி பார்த்தால் அந்த நகரில் மொத்தம் 12 பில்லியன் மக்களை நிறுத்தலாம். எனவே அனைத்து மனிர்களையும் அந்த நகரில் நிறுத்தினாலும் இன்னும் இடம் மிஞ்சும். லொஸ் ஏஞ்சல்ஸ் நகரின் தற்போதைய மக்கள் தொகை 4 மில்லியனுக்குக் குறைவு.

என்றாலும் உலக மக்கள் தொகை 2050இல் 9.8 பில்லியனாக அதிகரிக்கும் என்பது ஐ.நாவின் கணிப்பு. அதுவே 2100இல் 11.2 பில்லியனாக உயரும் என்றாலும் 2070இல் உலக மக்கள் தொகை 9.4 பில்லியனாக உச்சத்தைத் தொட்டு வீழ்ச்சி கண்டு விடுமாம்.

எனவே அடுத்த நூறு ஆண்டுகளுக்கு ஒட்டுமொத்த மனித குலத்துக்கும் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரே போதுமானது.

பூகோள சஞ்சாரம்
பிர்தௌஸ்




# நிறம் மாறும் பூக்கள்



காலநிலை மாற்றம் என்பது கோடை காலத்தில் மழை வருவதும், மழை காலத்தில் வெய்யில் அடிப்பதும் மாத்திரம் அல்ல. அது அன்றாட நிகழ்வுகளில் ஏகப்பட்ட மாற்றங்களை காலப்போக்கில் கொண்டு தரும் நிகழ்வு. ஏன் பூக்களின் நிறம் கூட மாறலாம். அதற்காக சிகப்பு ரோஜாக்கள் ஓரிரவில் நீல நிறமாக மாறும் என்று பயப்பட வேண்டாம்.

கடந்த தசாப்தங்களில் ஓசோன் ஓட்டையில் விரிசல் அதிகரிக்க அதிகரிக்க சூரியனிடம் இருந்து வரும் புற ஊதா கதிர்களின் தாக்கம் அதிகரித்துக்கொண்டே போகிறது. எனவே இந்த புற ஊதாக் கதிர் பட்டு பூக்களின் நிறம் படிப்படியாக மாறும் என்பது ஆய்வு செய்யப்பட்ட உண்மை.



என்றாலும் இந்த நிறமாற்றம் எமது கண்களுக்கு பெரிதாகத் தெரியாது. ஆனால் தேனீக்கள் போன்ற மகரந்த சேர்க்கையில் ஈடுபடும் வண்டுகளுக்குத்தான் பிரச்சினை. அந்த வண்டுகளை கவர பூக்கள் உருவாக்கும் ஒளிரும் நிறங்கள் மங்குவதால் வண்டுகள் வருவது நின்றுவிடும். அவ்வாறான நிகழ்வு முழு உலகின் இயக்கத்தையே நிறுத்திவிடக் கூடியது.

# பேய்கள் உலாவும் உல்லாச உலகம்!

(கடந்த வாரத் தொடர்)





சரி இவ்வளவு காலமும் கெட்ட பேய்களைப் பற்றி பார்த்தோம். இப்போது நல்ல பேய்களைப் பற்றி பார்ப்போம். ஆரம்பத்தில் நல்ல பேய்கள் என நேனேக் கெபாயான், பூனியான் மற்றும் பாரிபாரி என சொல்லியிருந்தேன் அல்லவா. அதில் இப்போது பூனியான் பற்றி சற்று ஆழமாகப் பார்க்கலாம்.

## பூனியான்

இவர்கள் மனிதர்கள் அல்லர். மிருகமும் அல்லர். மனிதர்கள் மண்ணிலிருந்து உருவாக்கபட்டவர்கள். மிருகமும் அப்படியே. ஆனால் பூனியான்கள் ஒளியிலிருந்து உருவாக்கப்பட்டவர்கள். இவர்கள் எப்படி உருவானார்கள் என்பதைப் பற்றி மூன்று கருத்துகள் உள்ளன.

**முதலாவது கருத்து:** மனிதன், தேவத்தூதர்கள் மற்றும் பேய் ஜின் வகைகளில் கடவுளால் உருவாக்கப்பட்ட கெடுதல் செய்யாத ஜின் வம்சாவளிகள்.

**இரண்டாம் கருத்து:** பூனியான்கள் மனிதர்களுக்கும் ஜின்களுக்கும் ஏற்பட்ட உறவினால் பிறந்தவர்கள்.

**மூன்றாவது கருத்து:** கடவுளே இவர்களை ஒளிமிக்க ஜின்களாகப் படைத்திருக்கிறார். ஆக கண்ணால் பார்க்க முடியாத அளவுக்கு அவ்வளவு ஒளிமிக்கவர்கள் இந்த பூனியான்கள். மிகுந்த அழகு படைத்தவர்களான இவர்களில் இன்னும் மூன்று ரகம் உள்ளன. பறக்ககூடியவர்கள், கூடு விட்டுக் கூடு பாயும் சக்தியுடையவர்கள் மற்றும் கால்கள் தரைமேல் படாமல் நடக்கக்கூடியவர்கள். பறக்கக்கூடியவர்களைப் பாரி (தேவதைகள்) என்றும் கூடுவிட்டுக் கூடு பாய்பவர்களை ஓராங் ஹாலிமுனான் என்றும் கால் தரை மேல் படாமல் நடப்பவர்களை ஓராங் பூனியான் கயாங்ஙான் என்றும் அழைப்பார்கள். இவர்கள் உண்பதில்லை, உறங்குவதில்லை, ஓய்வு வெடுப்பதுமில்லை. ஆனால் பூனியான்களில் நம்மைப் போல ஆண், பெண் பேதமுண்டு. நம்மைப் போலவே திருமணம் குடும்பம், பிள்ளை குட்டி, உற்றார் உறவினரோடு ஊராக வாழ்பவர்கள். இவர்கள் எல்லாருமே இஸ்லாத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் எல்லாருமே பனிமூட்டம் போல வெள்ளையாக வெளிச்சமாக மாசற்ற முக தெளிவோடு தெய்வ பக்தியுடையவர்களாக இருப்பார்கள். கயாங்ஙான் என சொல்லப்படும் அலாம் சாரா என்பது தான் இவர்கள் இருக்கும் இடம். மேகத்துக்கு அப்பால் வானத்துக்குக் கீழே பூமிக்கு மேலே என சொல்லப்படும் மிக மிக வெளிச்சமான இடத்தில்தான் அவர்கள் இருப்பார்கள். அந்த வெளிச்சமே அவர்களால் தான் உண்டாகிறது. அதோடு மனிதன் வாசம் செய்யாத மாசு படாத இடங்கள் இயற்கை அழகு ஒளிர்ந்து காணப்படும் இடங்களும் இவர்களுடையது தான். இவர்கள் எல்லோருமே வெள்ளை நிறத்திலான உடைகளை மட்டுமே அணிவார்கள். இவர்களின் தலைவன் மட்டுமே தங்க ஜரிகையுடைய கருப்பு உடை அணிவார்.



இவர்களில் பெண்கள் ரொம்பவும் அழகு. இந்தப் பூனியான் பெண்களுக்கு மனித ஆண்கள் மேல் ஈர்ப்பு அதிகம். அதுவும் சாதாரண திருமணமான ஆண்கள் இல்லை. கன்னித் தன்மையுடைய ஆண்கள் மட்டுமே இவர்களின் தேர்வாகிறது. இங்கே சரவாக்கில் நிறைய மலைகள் உண்டு அல்லவா. இங்கே இப்படிக் காணாமல் போன கன்னி ஆண்களின் எண்ணிக்கை மிகவும் அதிகம். அப்படிக் காணாமல் போனவர்களின் உடலோ உடையோ எதுவுமே அகப்படாது. காணாமல் போன ஆண்கள் அவர்களைக் கவர்ந்த பூனியான் பெண்களைக் கல்யாணம் செய்து பூலோகம் பற்றிய நினைவே இல்லாமல் இருப்பார்கள். பூலோகம் பற்றி நினைவே வராதவாறு பூனியான் குடும்பத்தார்கள் அவர்களைப் பார்த்துக் கொள்வார்கள். அதோடு பூனியான் ஊரே மிகவும் மகிழ்ச்சி தரும். கோபம், சண்டை சச்சரவு எதுவுமின்றி அவ்வளவு அமைதியாக இருக்கும். அப்போது எப்படி இங்கே திரும்ப மனம் வரும்? நியாயம் தானே. ஆண்கள் மட்டுமின்றி சில நேரங்களில் பெண்களும் காணாமல் போவதுண்டு. ஆனால் வித்தியாசம் என்னவென்றால் பெண்கள் காணாமல் போனால் கிடைத்து விடுவார்கள். ஆனால் காலத்துக்கும் திருமணம் நடக்காது. இங்கே தேர்ந்தெடுத்த பெண்கள் அப்படி இருந்ததை நான் கண்கூடாகப் பார்த்திருக்கிறேன். தன் பூனியான் கணவன் தன்னோடு இருப்பதாக, தன்னோடு உறவு கொள்வதாக, உறவின் போது ஏற்படும் சில காயங்களைக் காட்டியும் பின்னர் தான் பூனியான் குழந்தையைக் கருவுற்றிருப்பதாக சில பெண்கள் சொல்லி இப்படி எவ்வளவோ நான் நேரடியாகக் கண்டிருக்கிறேன். பூனியான்கள் ஆண்களை மட்டும் கவர்ந்து போவதில்லை. மாதவிடாய் ஆகாமல் இருக்கும் சிறுமிகளையும் பிறந்த குழந்தைகளையும் தங்கள் உலகுக்குக் கொண்டு சென்று விடுகின்றனர். அவர்களைப் பொருத்தமட்டில் சிறுவர்களும் குழந்தைகளும் இன்னும் மாசு இல்லாத ஆத்மாக்கள். முன்பு சொன்னது போல காடுகளில் காணாமல் போகும் மனிதர்கள் மீட்புப் படையினர் தேடும் போது அங்கேயே தான் இருப்பார்கள். ஆனால் கண்ணுக்குத் தெரிய மாட்டார்கள். கடந்த ஆண்டு இருபத்தோரு வயது இளைஞன் சிங்காய் மலையடிவாரத்தில் காணாமல் போய் பரபரப்பாகப் பேசப்பட்டான். அவன் கிடைத்தது ஏழாவது நாளில். அதாவது காணாமல் போன அன்றே கிடைத்து விட வேண்டும்.

இல்லையென்றால் மூன்றாவது நாளில், இல்லையென்றால் ஐந்தாம் நாள் அதுவும் இல்லையா ஏழாவது நாள். அப்படி ஏழாம் நாளில் கிடைக்கவில்லையென்றால் எப்போதுமே கிடைக்க மாட்டார்கள். என்னடா நடந்தது என அந்தப் பையனிடம் கேட்க. அவன் ஒரு பெண் தான் என்னை இங்கு கூட்டி வந்து விட்டாள் என சொல்லி இருக்கிறான்.

**பூனியான் எனும் பேய் ஆண்களை மட்டும் கவர்ந்து போவதில்லை. மாதவிடாய் ஆகாமல் இருக்கும் சிறுமிகளையும் பிறந்த குழந்தைகளையும் தங்கள் உலகுக்குக் கொண்டு சென்று விடுகின்றன. அவர்களைப் பொருத்தமட்டில் சிறுவர்களும் குழந்தைகளும் இன்னும் மாசு இல்லாத ஆத்மாக்கள்.**

(தொடரும்)

# மின்னும் தாரகை மின் மினி மின்ஹா



**இந்திய தேசத்தின் சக்ரா மின்னியல் விருதினை 'மின்மினி மின்ஹா' சுவீகரித்து இலங்கைக்கு பெருமையை தேடிக் கொடுத்துள்ளார்.**

பாரத பிரதமர் நரேந்திரமோடியின் பிறந்த நாளை 17.10.2022 முன்னிட்டு பசுமை வாசல் பௌண்டேஷன், சின்னாளப்பட்டி, திண்டுக்கல், ஸ்ரீ சக்ஸஸ் அகடமி & பௌண்டேஷன், ஆத்தூர், சேலம், தெய்வீகத் தமிழ் அறக்கட்டளை மற்றும் உலக செம்மொழி பயிலரங்க மன்றம்,கோவை, ஸ்ரீ ஹயக்ரீவர் கலை மற்றும் கலாச்சார அகாடமி, ஈரோடு ஆகிய அமைப்புக்கள் இணைந்து நடாத்திய தேசத்தின் சக்ரா விருதுகளை வழங்கி இருந்தனர். "இளம் படைப்பாளருக்கான ஒளிசுடர் சக்ரா விருதினை" இலங்கையைச் சேர்ந்த ஜலீல் பாத்திமா மின்ஹா (11) தன் வசமாக்கிக் கொண்டார்.

இவர் சம்மாந்துறைப் பகுதியில் வசித்து வருகின்ற மின்மினி எனும் புனைப்பெயர் கொண்ட இளம் படைப்பாளர் பற்றிய அறிமுகம்....

இவர் கமு/சது/ அல் அர்சத் மஹா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) யில் 06ம் தரத்தில் கல்வியைத் தொடர்கிறார்.

இவர் சாதித்தவைகள்...

- 7வது வயதில் சாரணிய இயக்கத்தில் இணைந்து கொண்டு மாவட்டத்தின் முதலாவது "சிங்கிதி சாரணியராக பதக்கம் பெற்றார்.
- 8வது வயதில் மாவட்ட "சிங்கிதி தலைவியாக" (District Siggithi Scout Leader) பதவி பிரமாணம் செய்து தலைமை தாங்கினார்.
- 9வது வயதில் "குருளைச் சாரணிய தலைவியாக செயற்பட்டார்.
- 9வது வயதில் தான் எழுதி வடித்த கவிதைகளை உள்ளடக்கிய மின்மினியின் கீறல்கள் என்ற கவிதைப் புத்தகத்தினையும் வெளியிட முயற்சிகள் அனைத்தும் செய்து முடித்துள்ளார்.
- 10வது வயதில் (2021) சம்மாந்துறை வலய மடட குருளைச் சாரணிய தலைவியாக தெரிவு செய்யப்பட்டு செயற்பட்டுள்ளார்.
- 11வது வயதில் (2022) இருந்து சம்மாந்துறை பிரதேச செயலக கலாசார அதிகார சபையின் கீழ் இயங்கும் "துறைச்சிறார் கலைக் கழகத்தின்" 'பிரதித் தலைவியாக' தெரிவு செய்யப்பட்டு இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார்.
- 11வது வயதில் (2022.08.08) கமு/சது/ அல்அர்சத் மஹா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) யில் "கனிஷ்ட சாரணியையாக" சத்தியப்பிரமானம் செய்து கொண்டு, அணித் தலைவியாகவும் செயற்படுகிறார்.

**இவர் பெற்ற விருதுகள், சான்றிதழ்கள், பாராட்டுக்கள், கௌரவங்கள்:**

- 8 வயதில் இருந்து தற்காப்புக் கலை (சொட்டோக்கான் கராட்டி கலை) பயிற்சி பெற்று வருவதுடன், போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி சான்றிதழ்களும் பெற்றுள்ளார்.
- 8வது வயதில் (2019.12.28) பிரதேச கலை இலக்கிய விழா நிகழ்வில் பங்கு கொண்டமைக்காக பாராட்டுச் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- 9வது வயதில் (2021.05.16) இந்திய தேசத்தின் தமிழ்நாட்டு பசுமை வாசல் பவுண்டேஷன், காருண்யம் டிரஸ்ட் மற்றும் ஒளிச் சுடர் சேவா டிரஸ்ட் இணையத்தில் இணைந்து வழங்கிய இளம் கலைஞர்களுக்கான "பாராட்டுச் சான்றிதழ்" இவருக்கு வழங்கப்பட்டது.
- 11வது வயதில் (2022.08.20) இலங்கை சாரணர் சங்க அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கம் நடாத்திய ஒரு நாள் சாரணர் பயிற்சிப் பாசறையில் பங்கு பற்றியமைக்காக சான்றிதழும், நிகழ்வில் தனது திறமையை காண்பித்தமைக்காக பணப் பரிசும் வழங்கி பாராட்டி இருந்தார்கள்.
- 11வது வயதில் (2022. 08. 29) கலாசார அலுவல்கள் திணைக்கள வழிகாட்டலில் சம்மாந்துறை பிரதேச செயலக கலாசாரப் பிரிவு மற்றும் கலாச்சார அதிகார சபை இணைந்து நடாத்திய "அழகிய சிறுவர் சமூக வேலைத் திட்டம் 2022" கலைப் பயிற்சி பட்டறையில் பங்குபற்றியமைக்காக சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது.

அவற்றில் குறிப்பாக

- 11வது வயதில் (2022.08.30) கமு/சது/அரபா வித்தியாலயமும், சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகமும் இணைந்து "புலமையாளர் பாராட்டு விழா 2022" நிகழ்வில் உலகளாவிய ரீதியில் பேச்சுப் போட்டியில் வெற்றிச் சான்றிதழை சுவீகரித்தமைக்காக இவர் விழாவுக்கு மாலை அணிவித்து அழைத்து வரப்பட்டு, பொன்னாடை போர்த்தி, "சர்வதேச பறவை" எனும் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- 11வது வயதில் (2022.09.13) சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் ஏனைய உறுப்பினர்களின் ஏற்பாட்டில் பாராட்டி,பொன்னாடைகள் போர்த்தி கௌரவித்து, சான்றிதழ் மற்றும் பரிசுகளும் வழங்கப்பட்டன.
- 2022.10.17ல் அயல் தேசத்தின் இளம் சாதனையாளருக்கான ஒளிசுடர் சக்ரா விருதுக்கான மின்னியல் சான்றிதழ் வழங்கி பாராட்டப்பட்டுள்ளார்.







விபுலமாமணி
**வி.ரி.சகாதேவராஜா..**
யாழ்ப்பாணம்

## தேடி நீ இங்கே ஒரு தொழில் செய்

தேவை இருந்தால்
நீ தான் என்றும்
தேடிப் போதல்
நன்று என்று காண்.

நெஞ்சில் உறுதி நீ
கொண்டு என்றும்
சிந்தை நடந்தால்
வென்று நிற்பாய்.

வெருளும் நொடி
மனதில் வரும் உறுதி.
அந்த உந்தல் வழி
நடந்தால் பார் பெருமை.

உந்தன் தேவை
சிறிதானாலும் அது
உனக்கு பெரிது.
புரிந்து நீ நடந்தால்.

எட்டி முன்னே சென்று
முயன்று நிற்கும் போது
கற்று தான் விட்டாய்.
வென்று நின்றிட.

பெரும் மதிலும் சரிய
சிறு குண்டூசி குடைய.
பார்ப்பவர் நம்பார். அந்த
முயற்சி வெல்லும்.

சொல்கிறேன் ஒரு
செயற்பாடு ஆற்றிட.
சிறு மண் கொண்ட
சுவரில் ஒரு மணி தட்டு.

தொடர்ந்து மணல் மணி
எல்லாம் கோடிட்டு நீ
குடைந்தால் சரியாகும்.
சுவரும் வீழ்த்திட

பெரும் பணம் தேவை.
சிறுக நித்தம் சேர்த்தால்
ஒரு நாள் சேரும் பார்
அந்த பெரும் பணம்.

இருந்தால் சேர்க்கலாம்.
விளக்கம் கூட சொல்வார்.
இருந்தும் தேடிப் பார்.
சிறுக சேர்த்திட ஒரு வழி.

ஆயிரம் கொடுத்து நீ
ஆலயம் போனதால்
போனது அந்த ஆயிரம்.
ஏனிந்த சேதாரம்.

ஆலயம் போனால்
அங்குள்ள அந்த
இறைவன் அருள்வான்.
படைத்தது நம்மை நாமா?

படைத்தவன் இங்கே
தன் கடன் செய்தால்
படி தானே அளக்கப்படும்.
அறிந்திட நேரமாகுமோ?

தேங்கி கிடந்து நீ
தேடும் பழக்கம் விட்டு
எப்படி தேறிடுவாய்
வாழ்க்கை பொருளாதாரம்.

மீண்டும் சொல்கிறேன்.
வரவுக்கு செலவு செய்
செலவுக்கு வரவு பார்.
தேடி நீ தொழில் செய்.

அன்புடன் நதுநசி

# செந்தூர மழலைச் செல்வங்கள்


S. Omna Olivyia


க. ஷகஸ்தா


PRITHIKA, BALANGODA


S. Anne Tabitha


S. Emmanuel Benny


இஸ்மா இல்யாஸ்
இப்ராஹிம் வீதி, தொட்டவத்தை


Vaisshnaja (Age 8)
Ramanathan Hindu Ladies College


Dhuwaraga (Age 12)
Ramanathan Hindu Ladies College




# நகைச்சுவை வீரப்பன்

அட்டகாசமான நகைச்சுவைக் காட்சிகளை உருவாக்கிய பேனாவுக்குச் சொந்தக்காரரான நகைச்சுவை கலைஞர் ஆர் .வீரப்பனும் நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் இணை பிரியா பால்ய நண்பர்கள்....!

இவர்"கொமெடி வீரப்பன்" என திரையுலகினரால் அழைக்கப்பட்டார்.

வீரப்பன் நடிகர் திலகத்தின் ஆரம்ப கால நெருங்கிய நண்பர் என்பது நிறைய பேருக்கு தெரிந்து இருக்க வாய்ப்பு இல்லை.




1944ஆம் வருடம் புதுக் கோட்டை சக்தி நாடக சபாவின் முதல் நாடகமான "ராமபக்தி' தயாராகிக் கொண்டிருந்தது. நடிகர்கள் தேர்வின்போது பாலராமர் வேஷத்துக்கு, பாடத் தெரிந்த ஒரு பையன் தேவைப்பட்ட சமயத்தில், குடும்ப நண்பர் ஒருவரால் வீரப்பன் பரிந்துரைக்கப் பட்டார். 1945ஆம் ஆண்டு, மங்கள கான சபாவிலிலிருந்து சக்தி நாடக சபாவுக்கு சிவாஜி கணேசன் வந்துசேர்ந்தார். வீரப்பனும் சிவாஜியும் அப்போதிலிருந்தே நண்பர்களானார்கள். சினிமாவில் மாலைக் காட்சி, இரவுக் காட்சி என்பதுபோல அப்போதுதான் நாடகத்திலும் இரண்டு காட்சிகள் நடைமுறைக்கு வந்தது.

முதல் காட்சியில் சிவாஜி நடித்த வேடத்தில் இரண்டாம் காட்சியில் வீரப்பன் நடித்துள்ளார். ஓய்வு நேரங்களில் சிவாஜியும் வீரப்பனும் உலக சினிமா, ஆங்கில நடிகர்கள் பற்றியே பேசிக்கொண்டிருப்பார்களாம்.1950ல் "என் தங்கை' என்ற நாடகத்தில் சிவாஜி ஹீரோவாக நடித்துக் கொண்டிருக்கும்போது, அவருக்கு "பராசக்தி' படத்தில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர் சினிமாவில் நடிக்கப் போனதால், வீரப்பனுக்கு அந்த வேஷம் கொடுக்கப்பட்டு, 25 வாரங்களுக்குமேல் தமிழகத்தின் பல ஊர்களிலும் அந்த நாடகம் நடத்தப்பட்டது.

வீரப்பனின் நடிப்பு எல்லோராலும் பாராட்டப்பட்டது. ஆனால் தன் நண்பன் சிவாஜி தன் நடிப்பைப் பார்க்கவில்லையே என்ற மனக்குறை வீரப்பனுக்கு இருந்தது.

வீரப்பனின் நடிப்பைப் பார்க்கவேண்டும் என்ற ஆசை சிவாஜிக்கும் இருந்தது. ஆனால் "பராசக்தி' படத்தின் படப்பிடிப்பு இடைவிடாது நடந்து கொண்டிருந்ததால் நேரம் கிடைக்கவில்லை.ஒருநாள் வேலூரில் வீரப்பன் நடித்த அந்த நாடகம் நடந்து முடிந்ததும், பார்வையாளர் பகுதியில் உட்கார்ந்து வீரப்பனின் நடிப்பை ரசித்துக் கொண்டிருந்த சிவாஜி, மேடைக்கு ஓடிவந்து வீரப்பனைக் கட்டிப் பிடித்து, ஆரத்தழுவி நெகிழ்ச்சியுடன் பாராட்டினார்.தன் உற்ற நண்பனின் எதிர்பாராத பாராட்டில் வீரப்பனும் திக்குமுக்காடிப் போனார். வீரப்பனுக்கும் சிவாஜிக்கும் அவ்வளவு அன்யோன்யமான நட்பு. சக்தி நாடக சபாவில் இருவரும் இணைந்து நடித்த காலத்தில் வீரப்பனிடம் இரண்டு சட்டைகளும் சிவாஜியிடம் ஒரு சட்டையும் மட்டுமே உண்டு. இருவரும் அந்த மூன்று சட்டைகளை மாற்றி மாற்றிப் போட்டுக் கொள்வார்கள்.

இரவு நேரங்களில் சட்டைகளைத் துவைத்துப் போடுவதும், காய்ந்ததும் எடுத்து, பித்தளை சொம்புக்குள் சூடான கரிக்கட்டிகளைப் போட்டு இஸ்திரி போடுவதும் வீரப்பனின் வேலை. அவர்களுடைய நட்பு எவ்வளவு நெருக்கமானது என்பதற்கு இவை சில உதாரணங்கள்...

பல படங்களுக்கு நகைச்சுவை காட்சிகளை அமைத்தவர் வீரப்பன்.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...
கம்பளை

# ஒரு கால் வாழ்க்கை

தலை சொறியாத
தலை
தலையணையில் கிடக்கிறது

புன்னகை செத்த
புண் கால் பார்த்து
காலம் நடக்கிறது

சீனி புண் என்பார்
அவர் வாயோடு
நான் சாந்தம்
சீனி புண் இல்லை என்பார்
அவர் வாயோடு நான்
காந்தம்

மாரடைப்பு போல
இது காலடைப்பு

குருதி ஓட்டம்
இல்லை
இறுதி ஓட்டம்
இதுவோ ?
அடடா
இல்லை

கட்டிலில் தினம்
கழியும் காலம்
கண்டால் மனம்
கிழியும் கோலம்

புள்ளியளவு
வந்த புண் தான்
பூமி அளவு வலி
தருவது ஏன் ?

"மருந்தில்லை ரபீக்"
மண்டையில் அறைந்தது
மருத்துவ சாலை

தலைநகர மருத்துவம்
தர வேண்டும் பெரும் சுகம்

போக்குவரத்து
பொருளாதாரத்தை
தாக்கும் உரத்து

ஏது செய்ய
தீது கொய்ய ?

ஏழு கடல் மிஞ்சும்
ஒரு சோடி இலக்கிய
பேனா நெஞ்சம் அழைப்பெடுத்து
அழைத்தணைத்தது

ஒரு கோப்பை தேநீர்
ஒரு பீங்கான் சோறு
ஒரு கட்டில் தூக்கம்
ஒரு நூறு அட்சயப் பாத்திரம்
நுரைத்துப் பொங்கும் பேரன்பு

இனி என்ன வேண்டும்

தவத்திலும் கிடைக்காத
வரம்
தந்தவர் காண்க
சுகத்திலும் சுகம் !

கால் எடுத்து நடக்க
காயங்கள் கடக்க
நாளெடுக்கும் என்றால்
நான் இருப்பேன் என்றாள்

சிறகெடுத்து பறப்பாய்
உடனிருப்பேன் பொறுப்பாய்
என்றாள்
என் இல்லாள்
மேகங்களை விடவும்
மெல்லிய சொல்லாள்

பாவம் என் புண்ணால்
கல்லான தேவதை
இந்நாள்
காண்பதெல்லாம்
தீவதை

நான்
மகன்
வீடு
வாழ்வு
தொழில் ஓடித்திரிவாள்
ஓய்வில்லை ஒரு நாள்

கருணையாளனை
தொழுவாள் கையேந்தி அழுவாள்

ஒரு கால் வாழ்க்கை
இருகால் சேர்க்க
ஒரு நாள் பூக்கும்

கண்
உறங்கு
கண்மணி
சிறு
நொடியில்
இரவு
முத்தமிடும்
வெண் பனி !



வெலிமடை ரபீக்

# கலை இலக்கியத்தில் தடம் பதித்த தன்னிகரில்லா பெண்

## அக்குறணை அஸ்மியா நிஸாம்

**கொரோனா தொற்று அடுத்து இன்றைய பொருளாதார நெருக்கடியான கால சூழலில் அச்சு ஊடகங்கள் சவால்களை வெற்றி கொண்டு ஈ பேப்பர், ஒன் லைன் மூலம் வெளிவரும் பொழுது தமிழ் கலை இலக்கியத் துறை சார்ந்த விடயங்கள் சமூக வலைத்தளம் ஊடாகவும் அச்சு ஊடகங்கள் வாயிலாகவும் சோர்ந்து போகாமல் வெளிக்கொணரப்படும் நிலையில் ஈழத்து தமிழ் இலக்கியப் பரப்பில் நூல்கள் வெளிவந்து கொண்டிருப்பதும் அதற்கான வெளியீட்டு விழாக்களும் இலக்கிய நிகழ்வுகளும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருவதை நாம் அனைவரும் ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். அந்த வகையில் அக்குறணையில் அஸ்மியா நிஸாம் எழுதிய 'மனிதம் இல்லா பூமி' என்ற கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா வெகு விமர்சையாக இடம்பெற்றது. இவர் நாவலப்பிட்டிய பிரதேசத்தை பிறப்பிடமாக் கொண்டவர். அவ்வூரில் சிறிய வயதில் இலக்கியத்தில் தடம் பதித்தவர். அந்நூலாசிரியர் அஸ்மியா நிஸாம் ஞாயிறு தினகரன் செந்தூரம் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.**

**● உங்களுடைய ஆரம்ப கல்வி வாழ்க்கை பற்றிக் கூறுவீர்களா?**

நாவலப்பிட்டி புனித சென்மேரிஸ் கல்லூரியில் ஆரம்பம் முதல் 10



ஆம் ஆண்டு வரையிலும் கற்றேன். (1994 இல் முதல் 1999 ஆம் ஆண்டு வரையிலும்); அடுத்து இடைநிலைக் கல்வியை க. பொ. த சாதாரண தரம் மற்றும் உயர்தரம் வரையிலும் ஹபுகஸ்தலாவ அல் மின்ஹாஜ் மஹா வித்தியாலயத்தில் கற்றேன்.

க. பொ. த. சாதாரணப் பரீட்சையில் 5 ஏ 5 பி சித்திகளை பெற்று க. பொ. த உயர் தரம் கற்பதற்கான தகுதியைப் பெற்றேன். பின்பு க. பொ. த உயர் தரப் பரீட்சைக்கு 3 ஏ சித்தியடைந்து சட்டக் கல்லூரிக்கு தெரிவு செய்யப்ட்டேன். பேராதனைப் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. எனினும் குடும்ப பொருளாதார நெருக்கடி காரணமாக பல்கலைக்கழகம் செல்லவில்லை.

எனக்குப் பின்பு தங்கைமார்கள் இருந்தார்கள். அவர்களுடைய திருமண வாழ்க்கை குறித்து பெற்றோர்கள் அச்சப்பட்டதால் அவர்கள் தூர நோக்குடன் சிந்திக்காமல் என்னைத் திருமணம் செய்து கொடுக்க முன்வந்தார்கள். திருமண பந்தத்தில் இணைந்து கொண்டேன். ஆனால் என் கணவர் அப்போதே 'கல்வியை தொடரப் போகின்றீர்களா?' என்று என்னிடம் வினவினார். அத்துடன் 'கல்வியைத் தொடர்வதற்கு பூரண அனுமதியைத் தருகிறேன்' என்றார். ஆனால் குடும்பத்தவர்கள் எவரும் அதனை விரும்பவில்லை. திருமணத்திற்குப் பின்பு கல்வியைத் தொடரத் தேவையில்லை. திருமண வாழ்க்கையிலே இருங்கள் என்று கூறிவிட்டார்கள். உண்மையிலேயே இரு படகில் கால் வைக்க முடியாது என யோசித்து குடும்ப வாழ்க்கைக்கே முக்கியத்துவம் கொடுத்து எனது வாழ்க்கையின் கால்களை பதிக்க ஆரம்பித்தேன்.

**● உங்களுடைய இலக்கிய ஆரம்பம் குறித்து கூறுவீர்களா?**

ஆம். உண்மையிலேயே எனது இலக்கியப் பயணம் ஆறாம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டது. எங்கள் பாடசாலையில் ரஹ்மான் என்னும் விஞ்ஞான ஆசிரியர் இருந்தார். அவர் ஒரு விஞ்ஞான ஆசிரியர். ஆனாலும் அவர் நிறைய புத்தகங்கள் வாசிப்பார். அவர் கையில் நிறையப் புத்தகங்கள் இருக்கும். அவரிடம் முதன் முதவலாக நான் கண்ணால் கண்ட புத்தகம் யாதெனில் மறைந்த மர்ஹூம் அமைச்சர் எம். எச். எம். அஷ;ரஃப் எழுதிய 'நான் என்னும் நீ' என்னும் கவிதைத் தொகுதி நூல் ஆகும்.



அந்நூலை வாங்கிப் படித்த ஞாபகம் இன்னும் நினைவிலே இருக்கிறது. காதல் கவிதைகள் வாசிப்ப தென்றால் அதிகம் ஆர்வம். அந்த நூலில் ஒரு காதல் கவிதை காணப்பட்டது. 'உன் நகத்தின் தாக்கத்தால் உணர்வு பெற்ற என்னிதயத்தின் அந்த இன்பம் இன்னும் இருக்கிறது.' அந்த கவிதையை வாசித்த பின்பு எனக்கு கவிதையின் மீது ஒரு ஈர்ப்பு வந்தது.

அந்த வகையில் நான் எழுதிய முதலாவது கவிதையும் காதல் கவிதை தான். 'கண்கள் மட்டும் நோக்கி விட வார்த்தைகள் பரிமாறாமல் ' என்று தொடங்கி பல கவிதைகள் எழுதினேன். ஒன்பதாம் ஆண்டு வரையிலும் மூன்று வருடம் காதல் கவிதைகள் எழுதினேன்.



அதேபோன்று தான் ஒன்பதாம் ஆண்டிலும் நான் கரும்பலகையில் வாசகம் ஒன்றை எழுதி வைத்தேன். ' முட்டாள் இரண்டு வழியில் முன்னேறலாம். ஒன்று அரசியல் மற்றையது சினிமா. ' என்று ஆகும். இதை வகுப்பாசிரியர் பார்த்து விட்டு 'இந்த வாசகத்தை யார் எழுதினார்' என்று கேட்டார். அவர் அடுத்த வகுப்பு ஆசிரியரை அழைத்து வந்து பாராட்டினார். அன்று முதல் எனக்கு புத்தகங்கள் கொண்டு வந்து தந்தார். சாண்டிலியனின் கதைப் புத்தகங்கள் எனக்கு பிரயோசனமானதாக இருந்தது. அன்று இருந்துதான் என்னுடைய இலக்கியப் பயணம் ஆரம்பமாயிற்று. அக்கால கட்டத்தில் இலங்கையில் வெளிவரும் தேசிய பத்திரிகைகளுக்கும் ஆக்கங்கள் அனுப்புவேன். நிறைய ஆக்கங்கள் பிரசுமாகியுள்ளன.

சாண்டிலியனின் பொன்விலங்கு, மணிவண்ணின் குறிஞ்சி மலர் ஒரே நாளில் வாசித்து முடித்து விட்டு மறுநாள் ஆசிரியரிடம் ஒப்படைப்பேன். அதன் பின்னர் தான் நான் யோசித்தேன். கதைக்கும் இந்நூலின் தலைப்பின் பொருத்தப்பாடுகள் பற்றியே. ஏன் இந்தக் கதைக்கு குறிஞ்சு மலர் என்று பெயர் வைத்தார்கள். ஏன் பொன் விலங்கு என்று பெயர் வைத்தார்கள். அன்று தொடங்கிய இந்தப் பயணம் இன்று வரையிலும் வாசிப்பதிலும் எழுதுவதிலும் அதிகம் ஈடுபாடு காட்டி வருகின்றேன். சகுனி என்ற படத்தைப் பார்த்தேன். இந்தப் படத்திற்கும் இந்தப் பெயருக்கும் என்ன பொருத்தப்பாடு இருக்கிறது என ஆராய்வேன்.

நான் நன்றாகப் பாடுவேன். எனக்கு நல்ல குரல் வளம் இருக்கிறது. பாடசாலையில் எல்லா வைபவங்களிலும் பாடுவேன். என்ன புதிய பாடல்கள் வெளிவருகின்றறே அதே பாடலை அர்த்துமுள்ளதாக மாற்றிப் பாடக் கூடிய திறமை என்னிடம் இருக்கிறது. அவற்றை இன்று வரையிலும் செய்து கொண்டு தான் இருக்கிறேன்.

**● எழுத்துத்துறைக்கு திருமணம் தடையாக அமையவில்லையா?**

என் கணவரினால் என்னுடைய எழுத்துத் துறைக்கு எந்த விதமான தடையும் விதிக்கவில்லை. நான் திருமணம் முடித்து 16 வருடங்கள் ஆகின்றன. திருமணம் முடிக்கும் போது 19 வயது. என்னுடைய கணவர் இலக்கிய முயற்சிகளுக்கு 100 விகிதம் ஒத்துழைக்கா விட்டால் ஒரு புதிய நூலொன்றை என்னால் வெளிக்கொணர்ந்திருக்க முடியாது.

ஆனால்; நான் திருமண வாழ்க்கை என்னவென்று தெரிந்து கொள்வதற்கு முன்னரே குடும்ப வாழ்க்கைப் பாதையில் காலடி எடுத்து வைத்து விட்டேன். எந்தளவு என்றால் முழுமையாக பாடசாலை வாழ்க்கை பற்றித் தான் தெரியும். திருமண வாழ்க்கை பற்றி பெரியளவு தெரியாது. பொதுவாக ஒரு தேனீரைக் கூட தயாரிக்கத் தெரியாது. ஆனாலும் புகுந்த வீட்டில் தாலி என்ற வேலி வந்து விட்டால் ஒரு பக்குவப்பட்ட ஒரு பெண்ணாகத் தான் சமூகம் எதிர் பார்க்கும். மனைவி. மருமகள், மைனி என்று வரும் போது சிறிய வயதுப் பிள்ளை என்று கருதமாட்டார்கள். அந்த வகையில் பல சவால்களை நான் எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது. இலக்கியப் பயணத்தில் சில தடு மாற்றங்கள் ஏற்பட்டன.

திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட பிற்பட்ட கால கட்டத்தில் இலக்கியத்திற்கு தடைகள் ஏற்பட்டன. ஆனாலும் அந்த நேரம் கூட என்னுடைய இலக்கிய ஆர்வம் எந்தளவு இருந்தது என்றால் என்னுடைய குழந்தை பிறந்த சமயத்தில் எல்லோரும் ஆராரோ ஆரிராரோ என்று என்று தான் தாலாட்டுப் பாடல்கள் பாடுவார்கள். நான் ஒரு வித்தியாசமான ஒரு தாலாட்டுப் பாடலை இயற்றி என் குழந்தைகளுக்காகப் பாடி வந்தேன். என்னுடைய முதல் குழந்தையின் பெயர் ஜனா என்னுடைய தாலாட்டுப் பாடல்கள் உங்ளூர் சுற்று வட்டாரத்தில் பிரபல்யமாகப் பேசப்பட்டன. 'அல்லாஹ் அல்லாஹ் யா அல்லாஹ் ஜனாவுக்கு அறிவை கொடு நல்லா . பெற்றோர் சொல்லைக் கேட்டிட வேண்டும். பெரியோர் போற்றிட வாழ்ந்திட வேண்டும். நற்குணத்தில் இவள் உயர்ந்திடணும் ' எனக்கான எல்லாக் காரியங்களையும் ஒரு தனித்துவமாக செய்து வந்தேன்.

**● உங்கள் பிள்ளைகள் பற்றி கூறுவீர்களா?**

மூத்த மகள் ஜனா அவர் 11 ஆம் ஆண்டு கல்வி பயிலுகின்றார். அக்குறணை ஆயிஷா பாலிக கல்லூரியில் படிக்கின்றார். அவர் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர். இலட்சியங்கள் பெரிய ஆளானதற்கு பின்னர் ஊட்டப்படுவதில்லை. அவை சிறிய வயதில் இருந்து ஊட்டப்பட வேண்டும். அப்படி ஊட்டப்பட்டு வளர்த்த பிள்ளைகள் தான் இவர்கள். இரண்டாவது மகள் இமானா. ஒன்பதாம் ஆண்டு அக்குறணை அல் அஸ்ஹர் தேசிய பாடசாலையில் கல்வி பயிலுகிறார். மூன்றாவது மகன் மஹதி. நீரல்ல முஸ்லிம் வித்தியாலயம். நான்காவது மகன் சீத். மூன்று வயது.

(தொடர் பக்.7)

நேர்காணல்: இக்பால் அலி

# செல்ஃபி உலா


Hathurshan, ஒந்தாச்சி மடம் கடற்கரை


கலைஞர் மொஹமட் நஸார்


மத்திய கொழும்பு இந்துக் கல்லூரி நண்பர்கள்


Denesh Jack நட்பினை மேலும் அழகாக்குவதே உண்மையான சில நண்பர்களால் தான்


ஹரீஸ் மற்றும் சுஹைர் மருதமுனை


புகைப்பட கலைஞர் அருள், அறிவிப்பாளர் ரிலா, நவாஸ்


Puwanesh Idayachandran

**(06ஆம் பக்கத் தொடர்)**

ஆசியப் போட்டியொன்றில் நூறு படங்களை துரிகதியில் சொல்லி முடித்தமைக்கு **நீங்களும் தனியார் கல்வி நிலையத்தில் படிப்பிக்கின்ற ஆசிரியை அவை குறித்து** தனியார் கல்வி நிலையத்தில் படிப்பித்து வருகின்றேன். அங்கு விஞ்ஞானப் பாடம் படிப்பித்துக் கொண்டிருந்த உவைஸ் ஆசிரியர் என்பவர் நான் படித்துக் கொடுக்கின்ற திறனைப் பார்த்து வந்தார். ஒரு தடவை அவர் என் அருகில் வந்து ' நல்ல தமிழ் அறிவு இருக்கிறது. தொண்டர் ஆசிரியராக பாடசாலையில் சேர்த்து விடவா' என்று வினவினார். அப்பாடசாலையில் என் மீது நம்பிக்கை வைத்து க.பொ.த சாதாரண



தரம் மற்றும் உயர் தரம் கற்பிப்பதற்கான அனுமதியை பெற்றுத் தந்தார். அப்பாடசாலையில் இரு வருடங்கள் படிப்பித்தேன். ஒரு பூரணமான திருப்தியை அந்தப் பிள்ளைகள் அடைந்தார்கள். என்னுடைய வயதான மாமா மாமி. குழந்தைகள் இந்த ஊர் உதவிக்கு யாரும் இல்லை. இரண்டு படகில் கால் வைக்க முடியாது என்ற அடிப்படையில் அதில் இருந்து விலகிக் கொண்டேன்.

**● ' மனிதம் இல்லா பூமி ' கவிதை நூலை வெளிக் கொணருவதற்கான ஆர்வம் உங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது.**

அந்நூலில் இடம்பெற்றுள்ள கவிதைகள் யாவும் மூன்று நான்கு மாதங்களில் எழுதிய கவிதைகளாகும். எந்த சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் பிரசுரக்கப்பட வில்லை. வாசகர் மத்தியில் ஜனரஞ்சகப்படுத்தப்படவில்லை. எனினும் ஒரு தொகுதியாக வெளிக்கொணர்ந்துள்ளேன். 50 கவிதைகள் உள்ளன. நூறு பக்களைக் கொண்டது.



ஒவ்வொரு கவிதைகளிலும் ஒவ்வொரு சமூகப் பிரச்சினைகள் சொல்லக் கூடிய செய்திகளையே எழுதியுள்ளேன். கைத் தொலைபேசியில் பெண்கள் அதிகளவு மூழ்கிப் போய் உள்ளார்கள். பொதுவாக இளம் தாய்மார்கள் கைத்தொலைபேசியோடுதான் காலத்தைக் கடத்துகிறார்கள். குழந்தைகளைக் கவனிப்பதை விட கைத் தொலைபேசியைப் பார்ப்பது, கைத்தொலை பேசியின் பெற்றரியைச் சார்ஜ் பண்ணுவது போன்றவற்றில் கவனம் செலுத்துகிறார்கள். இதனால் மழலையின் மனக்குமுறல்கள் எப்படி இருக்கிறது. ஒவ்வொரு கவிதைகளிலும் இந்த அவல நிலையை சுட்டிக்காட்டி எழுதியுள்ளேன். பெண்கள் குறித்த நல்ல விடயங்களை சமூகத்திற்குச் கொண்டு சேர்க்க வேண்டும். விதவைத் தாய்மார்கள் பற்றி எழுத வேண்டும் என்ற அவா இருக்கிறது. இளம் விதவைத் மார்கள் எப்படி கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள் என்பது பற்றி எழுதவுள்ளேன்.

**● வெற்றிகரமான முறையில் நடந்தேறிய உங்கள் நூல் வெளியீட்டு விழா பற்றிக் கூறுவீர்களா?**

பெரு எண்ணிக்கையிலான பெண்கள் கலந்து கொண்ட நூல் வெளியீட்டு விழா என்று குறிப்பிட்டுச் சொல்லலாம். இதைப் பார்க்கும் போது சந்தோசமாக இருந்தது. அரசியல்வாதிகள் யாரும் அழைக்கப்படவில்லை. அரசியல்வாதிகள் வந்தால் பெரு எண்ணிக்கையிலானவர்கள் கலந்து கொள்வார்கள்.

இந்தக் கவிதைத் தொகுதியை சூம் வழியாக வெளியிட யோசித்து வாழ்த்துரை வேண்டி பிரான்ஸில் உள்ள அமீன் அவர்களிடம் தொடர்பு கொண்டேன்.

அவர் இந்தியாவைச் சேர்ந்தவர். கவிஞர்களுக்கெல்லாம் தலைமை தாங்கக் கூடியவர். அவர் எனக்கு குறுந் தகவல் ஒன்றை அனுப்பி இருந்தார். அதாவது ' இந்த கவிதைகளை நூல் வடிவில் கொண்டு வராமல் ஏன் சூமில் வெளியிடப் போகின்றீர்கள் ' என்று கேட்டு எழுதி இருந்தார். அதற்கு பொருளாதார வசதியில்லை என்ற கூறியதற்குப் பின்னர் அதனை வெளியிடுவதற்கான பண உதவியைத் தருகிறேன் என்று கூறினார். அந்த வகையில் தான் இந்த நூல் அச்சில் வெளி வரக் காரணம். அக்குறணையைப் பொறுத்த வரையில் எனக்கு இலக்கியவாதிகள் எவரையும் தெரியாது. இதற்கு ஐடிஎஸ் நிறுவனத்தின் பைசல் இதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக கூறினார்கள்.



அவர் இந்த நூல் வெளியீட்டு விழாவுக்கு உதவி செய்கிறோம். ஆனால் இதற்கு யார் யாரை அழைப்பது என்பது தெரியாது என்று கூறி அவர் இவ்வெளியீட்டு விழாவுக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்தார். ஆனாலும் இந்த நூல் வெளியீட்டு விழாவுக்கு வருகை தந்தவர்கள் யாவரும் எனக்காக வருகை தந்த சனக் கூட்டம் எனலாம்.

இவ்விழாவுக்கு 300 பேர் அளவில் வந்தார்கள். அந்த 300 பேரும் ஒவ்வொரு தனிச் சிறப்பு வாய்ந்தவர்கள். ஒவ்வொருவருடனும் குறைந்தது 20 நிமிடமாவது நான் கதைத்திருப்பேன். இதை யாரிடம் கேட்டாலும் சொல்லுவார்கள். காலையில் 5 மணிக்கு தொலைபேசியில் உரையாடினால் மாலை 12 மணி வரையிலும் தொலைபேசியில் பேசிக் கொண்டே இருப்பேன். அதே தான் என்னுடைய வாழ்க்கையாய் இருந்தது. இன்றைக்கு 10 பேருக்கு கதைத்தால் நாளைக்கு 10 பேருக்கு கதைப்பேன். ஆரம்பத்தில் இருந்து இந்த நூல் வெளியீட்டு விழா பற்றிப் பேச வேண்டும்.



முன்னர் கதைத்தவர்களுக்கு திரும்ப ஞாபகப்படுத்த வேண்டும்.

இந்த நூல் வெளியீட்டு விழா ஆரம்பிக்கும் வரையிலும் தொலைபேசி அழைப்பை நிறுத்தவில்லை. அதனால் தான் அக்குறணை மண்ணில் பெரு எண்ணிக்கையிலான பெண்கள் கலந்து கொண்ட ஒரு நூல் வெளியீட்டு விழாவை மிகவும் சிறப்பாக நடத்தி முடிக்க முடிந்தமையிட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

# சிவகார்த்திகேயனின் இரண்டாம் பாடல்



இயக்குனர் அனுதீப் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் தற்போது பிரின்ஸ் படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தின் இரண்டாம் பாடல் குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. இயக்குனர் அனுதீப் இயக்கத்தில் நடிகர் சிவகார்த்திகேயன் நடிப்பில் 'பிரின்ஸ்' திரைப் படம் தமிழ் மற்றும் தெலுங்கு என இருமொழிகளில் உருவாகி வருகிறது. இந்த படத்தில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக உக்ரைன் நாட்டைச் சேர்ந்த மரியா ரியாபோஷப்கா நடித்து வருகிறார். மேலும் இப்படத்தில் சத்யராஜ், பிரேம்ஜி அமரன் உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். தமன் இசையமைக்கும் இந்த படத்திற்கு மனோஜ் பரமஹம்சா ஒளிப்பதிவு செய்கிறார். 'பிரின்ஸ்' திரைப்படத்தின் முதல் பாடலான பிம்பிலிக்கி பிலாப்பி பாடல் வெளியாகி அனைவரையும் கவர்ந்தது. இந்நிலையில் 'பிரின்ஸ்' திரைப்படத்தின் இரண்டாம் பாடல் குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதன்படி ஜெசிக்கா என்ற இரண்டாவது பாடல் நாளை மாலை 5 மணிக்கு வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. இந்த பாடலின் அறிவிப்பால் ரசிகர்கள் குஷியில் உள்ளனர். இப்படம் தீபாவளி அன்று திரையரங்குகளில் வெளியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கீர்த்தி ஷெட்டியின் மரியாதைக்குரியவர்



'வணங்கான்' படத்தில் சூர்யாவிற்கு ஜோடியாக கீர்த்தி ஷெட்டி நடித்து வருகிறார். மேலும், இயக்குனர் வெங்கட் பிரபு இயக்கத்தில் புதிய படத்திலும் நடித்து வருகிறார். தெலுங்கில் முன்னணி நடிகையாக வலம் வரும் கீர்த்தி ஷெட்டி 'உப்பென்னா' படம் மூலம் திரையுலகிற்கு அறிமுகமானார். இதைத் தொடர்ந்து 'ஷியாம் சிங்கா ராய்', 'தி வாரியர்' போன்ற படங்களின் மூலம் கவனம் ஈர்த்தார். தற்போது இயக்குனர் பாலா இயக்கத்தில் 'வணங்கான்' படத்தில் சூர்யாவிற்கு ஜோடியாக நடித்து வருகிறார்.

இதைத்தொடர்ந்து இயக்குனர் வெங்கட் பிரபு இயக்கும் படத்தில் நாக சைதன்யாவுக்கு ஜோடியாக நடிக்கிறார். இந்நிலையில் நடிகை கீர்த்தி ஷெட்டி, சமூக வலைதளத்தின் மூலம் ரசிகர்களின் கேள்விக்கு பதிலளித்துள்ளார். அப்போது நடிகர் சூர்யா பற்றி ரசிகர் ஒருவர் கேட்ட கேள்விக்கு நான் சந்தித்த மனிதர்களில் மிகவும் மரியாதைக்குரியவர் அவர் தான் என்று கீர்த்தி ஷெட்டி பதிலளித்துள்ளார்.

# 'நித்தம் ஒரு வானம்'



இயக்குனர் ஆர். கார்த்திக் இயக்கத்தில் அசோக் செல்வன் நடித்துள்ள படம் 'நித்தம் ஒரு வானம்'. இப்படத்தின் டீசர் சமூக வலைதளத்தில் வெளியாகி வைரலாகி வருகிறது. அறிமுக இயக்குனர் ஆர். கார்த்திக் இயக்கத்தில் அசோக் செல்வன் கதாநாயகனாக நடிக்கும் படம் 'நித்தம் ஒரு வானம்'. இதில், அபர்ணா பாலமுரளி, ரித்து வர்மா, சிவாத்மிகா ராஜசேகர் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கின்றனர். வியாகோம் ஸ்டூடியோஸ் தயாரித்துள்ள இப்படத்திற்கு பிரபல மலையாள இசையமைப்பாளர் கோபி சுந்தர் இசையமைத்துள்ளார். இப்படம் மலையாளத்தில் 'ஆகாசம்' என்ற தலைப்பில் உருவாகியுள்ளது. சமீபத்தில் இப்படத்தின் கதாபாத்திரங்களை படக்குழு அறிமுகம் செய்து போஸ்டர்களை வெளியிட்டது. இந்நிலையில், இப்படத்தின் டீசர் வெளியாகியுள்ளது. இயக்குனர் அட்லீ தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள இந்த டீசர் ரசிகர்கள் மத்தியில் கவனம் ஈர்த்து வருகிறது. 'நித்தம் ஒரு வானம்' திரைப்படத்தில் அசோக் செல்வன் மூன்று கதாபாத்திரங்களில் நடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# நடிக்க வராமல் போயிருந்தால் Fashion Designing படித்திருப்பேன்



நான் நடிக்க வராமல் போயிருந்தால் பேஷன் டிசைனிங் படித்திருப்பேன் என நடிகை நிதி அகர்வால் அளித்த ஒரு பேட்டியில் தெரிவித்துள்ளார். சிம்பு ஜோடியாக 'ஈஸ்வரன்', ஜெயம் ரவி ஜோடியாக 'பூமி' போன்ற படங்களில் நடித்து பிரபலமானவர் நிதி அகர்வால். இவர் தெலுங்கிலும் ஓரிரு படங்கள் நடித்திருக்கிறார்.

சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நிதி அகர்வாலிடம், 'நடிக்க வரவில்லை என்றால் என்ன செய்திருப்பீர்கள்?' என்று கேட்கப்பட்டது. இதற்கு பதில் அளித்து அவர் பேசியதாவது:

"சினிமா எனக்கு மிகவும் பிடித்த ஒன்று. எனக்கு நடிப்பு வரவில்லை என்றால், வேறு ஏதாவது வேலைக்கு போ என்று எனது குடும்பத்தினர் சொல்லியிருப்பார்கள். ஒருவேளை நான் நடிக்க வராமல் போயிருந்தால் பேஷன் டிசைனிங் படித்திருப்பேன். அதன் பின்னணியில் புதிய தொழில் தொடங்கியிருப்பேன். ஆடை அலங்கார பொருட்களில் ஒரு புதுமையை ஏற்படுத்தி இருப்பேன். நிச்சயமாக எனது குடும்பத்தினரும் முழு ஒத்துழைப்பை அளித்திருப்பார்கள்."

இவ்வாறு அவர் கூறினார். தமிழில் 2 படங்கள் மட்டுமே நடித்துள்ள நிதி அகர்வாலுக்கு சென்னையை அடுத்த காட்டுப்பாக்கம் பகுதியில் ரசிகர்கள் கோவில் கட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

# காஜல் தீவிர களரிப் பயிற்சி



'இந்தியன் 2' படப்பிடிப்பில் காஜல் அகர்வால் தனது பகுதிகளுக்காக களரிப் பயிற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். இயக்குனர் சங்கர் இயக்கத்தில் கமல்ஹாசன் இரட்டை வேடத்தில் நடித்திருந்த இந்தியன் திரைப்படம் ரசிகர்களிடம் பெரும் வரவேற்பை பெற்றது.

இதனைத் தொடர்ந்து 25 வருடங்களுக்கு பிறகு மீண்டும் கமல்ஹாசன் நடிப்பில் 'இந்தியன்2' திரைப்படத்தின் பணிகள் தொடங்கின. பின்னர் ஒரு சில காரணங்களால் இதன் படப்பிடிப்பு நிறுத்தப்பட்டிருந்தது. இதையடுத்து சமீபத்தில் இப்படத்தின் படப்பிடிப்பு பூஜையுடன் தொடங்கியது.

இந்தநிலையில், இந்த படப்பிடிப்பில் கமல்ஹாசன் இணைவதோடு அவருடன் காஜல் அகர்வால் பங்கேற்கிறார். படத்தில் இடம்பெறவுள்ள பிளாஷ் பேக் காட்சிகள் படமாக்கப்பட்டு வருவதோடு மிகவும் பிரம்மாண்டமாகத் தயாராகி வருகிறது. இந்த படப்பிடிப்பில் காஜல் அகர்வால் தனது பகுதிகளுக்காக களரிப் பயிற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். இந்த வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

# சினி பஜார் கேள்வி பதில்

மொழிவாணன்

எம்.மாகிரட், எலபடகம

**கேள்வி:** அரவிந்தசாமி சூப்பர் ஸ்டார் ரஜினி காந்துக்கு வில்லனாக நடிக்கப் போகிறாராமே உண்மையா...?

**பதில்:** 'டான்'பட இயக்குநர் சிபி சக்கரவர்த்தி அண்மையில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தை சந்தித்து நகைச்சுவை கலந்த கதை ஒன்றை சொல்லி இருக்கிறார். கதைகேட்டு உற்சாகமடைந்த சூப்பர் ஸ்டார் "விரைவில் முழுக்கதையுடன் வாருங்கள் இணைந்து பணியாற்றலாம்"என்று நம்பிக்கை அளித்திருக்கிறார். அத்துடன் இந்தப் படத்தை லைக்கா நிறுவனம் தயாரிக்க இருப்பதாகவும் தகவல் வெளியாகி இருக்கிறது. இந்நிலையில்'தலைவர் 170'என தற்காலிகமாக பெயரிடப்பட்டிருக்கும் இந்தப் படத்தில்தான் அரவிந்தசாமி வில்லனா நடிக்க இருக்கிறாராம். அவரும் அதற்கு சம்மதித்திருக்கிறாராம்.

ஆர்.கே.புஹாரி, மாவனெல்ல.

**கேள்வி:** வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் வாசுதேவ மேனனின் 'வெந்து தணிந்தது காடு'படத்தின் நாயகி சித்தி இத்தானியைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்..?

**பதில்:** மும்பையில் பிறந்து வளர்ந்த நடிகை சித்தி இத்தானி தமிழ் திரைப்படத்தில் நடிகையாக அறிமுகமாகியிருந்தாலும் அவர் நடித்த காட்சிகளை அவரே தமிழில் பேசி இருப்பது அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது. அவருடைய அர்ப்பணிப்புடன் கூடிய உழைப்பிற்கு வாழ்த்து தெரிவிப்பவர்களுக்கு நன்றி தெரிவித்து நடிகை சித்தி இத்தானி பேசுகையில் "ஆச்சரியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. நானும் கௌதம் மேனன் அறிமுகப் படுத்திய நடிகையாகி விட்டேன். நான் நடித்த காட்சிகளுக்கு நானே பின்னணி பேசவேண்டுமென இயக்குநர் கட்டளையிட்டது டன் முதலில் தயங்கினேன். பிறகு என்னுடைய தந்தையார், வொய்ஸ் மோடுலேஷன் பயிற்சியாளர் என்பதால் எனக்கு உதவி செய்து பின்னணி பேச வைத்தார். அதன் பிறகு கௌதம் மேனன் கேட்டு விட்டு பாராட்டு தெரிவித்தார். இந்த திரைப் படத்தில் 'பாவை' எனும் கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறேன்.இந்த 'பாவை' ரசிகர்களை குரல் வழியாகவும் கவர்வார் என நம்புகிறேன்" என்றார் நடிகை சித்தி இத்னானி.

மகேந்திரன் மலர்ராணி
கொழும்பு13

**கேள்வி:** பின்னணிப் பாடகர் P.B.Sriனிவாஸ் அவர்கள் நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்காக பின்னணி குரலில் பாடியிருக்கிறாரா...! பலரிடம் கேட்டேன்... இல்லை என்றுதான் எல்லோரும் சொல்லுகிறார்கள்...நீங்களும் அதையேதான் சொல்லப்போகிறீர்களா மொழி வாணன் சேர்..?

**பதில்:** நீங்கள் சொல்வதும் உண்மைதான்.. சிவாஜி கணேசனுக்காக அவர் பின்னணி குரல் கொடுக்கவில்லை என்றுதான் பலரும் சொல்லுகிறார்கள். ஆனாலும் நான் கொஞ்சம் தேடிப் பார்த்ததில் P.B.S. ஒரே ஒரு பாடல் மட்டுமே பாடியிருக்கிறார் என்ற விபரம் தெரிய வந்தது. அந்த பாடல் இடம் பெற்ற படம் 'நான் சொல்லும் ரகசியம்' அந்த பாடல் "கண்டேனே உன்னை காதல் ஜோதியே.."என்று ஆரம்பமாகிறது. காட்சியில் சிவாஜி கணேசனும் அஞ்சலிதேவியும் நடித்திருக்கிறார்கள்.

P.B.Sசும் லீலாவும் பாடலை பாடியிருக்கிறார்கள்.

சினி பஜார் கேள்வி பதில்,
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

# சமந்தாவின் சாகுந்தலம்



சமந்தா தற்போது குணசேகர் இயக்கத்தில் சாகுந்தலம் படத்தில் நடித்துள்ளார். இப்படத்தின் ரிலீஸ் திகதியை படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. நடிகை சமந்தா தற்போது சரித்திர கதையம்சம் கொண்ட படமாக உருவாகியுள்ள சாகுந்தலம் படத்தில் நடித்துள்ளார். மலையாள நடிகர் தேவ் மோகன் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ள இப்படத்தை குணசேகர் இயக்கியுள்ளார். ஸ்ரீ வெங்கடேஷ்வரா கிரியேஷன்ஸ் தயாரித்துள்ள இப்படத்திற்கு மணிசர்மா இசையமைத்துள்ளார். இந்நிலையில், சாகுந்தலம் படத்தின் மோஷன் போஸ்டர் மற்றும் ரிலீஸ் திகதியை படக்குழு அறிவித்துள்ளது. அதன்படி இப்படம் வருகிற நவம்பர் 4ந் திகதி தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி போன்ற 5 மொழிகளில் வெளியாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை ரசிகர்கள் சமூக வலைத்தளத்தில் வைரலாக்கி வருகின்றனர்.





# கர்ப்பிணிகள் சாப்பிட வேண்டிய பாரம்பரிய உணவுகள்

கர்ப்பகாலத்தில் வலிமையான, ஆரோக்கியமான அடுத்த சந்ததியை உருவாக்குவதற்கு சத்துக்கள் மிகமிக அவசியம்.

"வாயும் வயிறுமா இருக்கியே, வயித்துல இருக்கிற புள்ளைக்கும் சேர்த்து சாப்பிடணும்" என்று நம் பாட்டி காலம் முதல் பழகி வந்தவை நம் பாரம்பரிய உணவுகள். இன்றைய அறிவியல் கூறும் சுண்ணாம்பு சத்தும் (கால்சியமும்), இரும்புச் சத்தும் கர்ப்ப காலத்தில் மிகவும் அவசியம் என்பதை பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே கணித்து அத்தகைய சத்துக்கள் இருக்கும் உணவு முறைகளை வழங்கி இயற்கையான முறையில் ஆரோக்கியத்திற்கு வித்திட்டனர்.

புரதச்சத்துக்கள் உடலின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான ஒன்று. மகப்பேறு காலத்தில் பெண்கள் புரதசத்தினை அதிகம் எடுத்துக் கொள்ள வேண்டும். அதுவே உடல் உறுப்புகள் வளர்ச்சியை அதிகரிக்கும். கர்ப்ப காலத்தில் பெண்களுக்கு கிட்டத்தட்ட 10 கிலோ வரை எடை கூடும். அதற்கு புரதம் சிறந்த உணவு. சைவபிரியர்களுக்கு பட்டாணி வகைகள், முளைகட்டிய தானியங்கள், பயறு வகைகள் இவற்றிலும், அசைவப்பிரியர்களுக்கு மீன், முட்டை, கறி வகைகள் இவற்றிலும் அதிக அளவு புரதம் உள்ளது குறிப்பிடத்தக்கது. நமது பாரம்பரிய பருப்பு வகையான உளுந்து மற்றும் பாசிப்பயறில் அதிகம் புரதம் உள்ளது. ஆதலால் மாதவிடாய் துவங்கியது முதல் பெண்கள் தோலுடன் உள்ள கருப்பு உளுந்தை வடையாகவோ அல்லது பனைவெல்லம் சேர்த்த கஞ்சியாகவோ எடுத்துக் கொள்ளலாம். உளுந்து பெண்களுக்கு இடுப்புக்கு அதிக வலிமையை தரும் என்கிறது சித்த மருத்துவம். பாசிப்பயிறு எனும் சிறந்த போஷாக்கு அளிக்கும் பருப்பு வகையை பொங்கலில் சேர்த்து எடுத்துக் கொள்வது நம் மரபு. பொங்கல் என்பது கார்போஹைட்ரேட் நிறைந்த அரிசி, புரதம் நிறைந்த பாசிப்பயிறு, கொழுப்புச்சத்து நிறைந்த நெய் இவை மூன்றும் கலந்த சரிவிகித உணவாக உள்ளது. சரிவிகித உணவு பற்றி இன்றைய அறிவியல் பேசும் முன்னரே, பொங்கலை உணவாக படைத்தது நமது பாரம்பரிய உணவுமுறையின் சிறப்பு. சர்க்கரைச் சத்து எனப்படும் கார்போஹைட்ரேட்கள் உடலுக்கு முதன்மை ஆற்றலை அளிக்கும் தன்மையுடையன. விட்டமின் சி அதிகமுள்ள பழங்களை உணவில் சேர்த்துக் கொண்டால் ஆலோக்கியத்திற்கு சிறந்தது.



குடும்ப விழாக்கள், திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும்போது, அணிந்திருக்கும் ஆடைகளுக்கு பொருத்தமாக நகத்திற்கும் அலங்காரம் செய்து கொள்வது இன்றைய டிரெண்டாக உள்ளது.

சிலர், நக அலங்காரத்தைப் பொழுதுபோக்காகக் கற்றுக் கொண்டு, பகுதிநேரத் தொழிலாக செய்து வருமானம் ஈட்டுகிறார்கள்.

"கை நகங்களை நீளமாக வளர்த்து, அதில் அழகாக வண்ணம் பூசி, அதன் மேல் அலங்கரிப்பது தனிக்கலை. இதைக் கற்றுக்கொள்ளவும், செயல்படுத்தவும், பொறுமையும், கலை உணர்வும் அவசியம்.

அழகுக்கலை படிப்பில், நகங்களை அலங்கரித்தல் பற்றி தனிப் பாடம் உண்டு. வெளிநாடுகளில் இதற்கு வரவேற்பு அதிகம்.

நக அலங்காரத்திற்கு என்றே சிறிய கற்கள், ஜிகினாத் தூள்கள், ஸ்டிக்கர்கள், செயற்கை நகங்கள் என பல பொருட்கள் உண்டு. நக அலங்காரம் செய்வதற்கு பிரஷ் போன்ற சிறிய உபகரணங்களும் உள்ளன.

# நக அலங்காரம்



# மணப்பெண்களுக்கான சருமப் பராமரிப்பு



திருமணத்துக்கு தயாராகும் மணப்பெண்கள் அனைவரும் சந்தோஷம், பரபரப்பு, எதிர்பார்ப்பு, குழப்பம் என பல்வேறு உணர்வுகள் கலந்த மனநிலையில் இருப்பார்கள். மேலும் திருமணத்துக்கு தேவையான பொருட்கள் வாங்குவதில் ஏற்படும் அலைச்சல் மற்றும் பணிச்சுமை ஆகியவையும் சிரமத்தை தரும். இந்த பாதிப்புகள் அவர்களின் சருமத்தில் பிரதிபலிக்கக்கூடும். எனவே, 3 மாதத்திற்கு முன்பாகவே, சருமப் பராமரிப்பில் முழுக்கவனம் செலுத்த வேண்டும்.

சருமப் பராமரிப்பில் முதலில் செய்ய வேண்டியது, நிறைய தண்ணீர் குடித்தல் மற்றும் நார்ச்சத்து நிறைந்த பழங்களை உணவில் சேர்த்துக்கொள்ளுதல் ஆகும். இதன் மூலம் உடலில் தேங்கி இருக்கும் நச்சுத்தன்மை மற்றும் கழிவுகள் வெளியேறி சருமம் பொலிவு பெறும்.

தினமும் காலை மற்றும் மாலை வேளைகளில் மென்மையான, ரசாயனம் சேர்க்காத சோப்பு கொண்டு முகத்தைக் கழுவிய பின்பு டோனர் அல்லது ரோஜா பன்னீரை சுத்தமான பஞ்சில் நனைத்து முகம் முழுவதும் துடைக்கவும். இது முகத்தில் படிந்திருக்கும் அழுக்குகளை நீக்கும். அதன் பின்னர் மாய்ஸ்சுரைசர் அல்லது கற்றாழை ஜெல் தடவி முகத்தை எப்போதும் ஈரப்பதத்துடன் வைத்திருப்பது அவசியம்.

இலங்கையில் மொடலிங் துறையிலும் நடிப்புத் துறையிலும் ஈடுபட்டு தனக்கென தனி முத்திரையை பதித்து அந்தந்த துறைகளில் முன்னேறி வருபவர் 'வைஷா' என்று அனைவரும் செல்லமாக அழைக்கும் விதுர்ஷா வைஷாலி.

**நீங்கள் எப்போது இருந்து மொடலிங் துறையில் ஈடுபாடு காட்டத் தொடங்குனீங்கள்..?**

ஆரம்பத்தில் இது மேல் எனக்கு நாட்டம் இருக்கவில்லை. என்னுடைய நண்பர் ஒருவருக்கு உதவுவதற்காக 2017 ல் எனது முதலாவது போட்டொ சூட் செய்தேன். அதன் பிறகு இரண்டு வருட இடைவெளிக்குப் பிறகு இத்துறையில் ஈடுபட்டேன். இப்போது தொடர்ந்து இத்துறையில் ஈடுபட்டுள்ளேன்.

**உங்களது முதலாவது குறும்படம் எது?**

எனது முதலாவது குறும்படம் 'மன்னிப்பாயா'. இது 2021 ல் சக்தி டி.வி யில் ஒளிபரப்பாகியது. அதன் பிறகு சமீபத்தில் சக்தி டி.வி யில் தினேஷ் கனகராஜ் அண்ணாவின் இயக்கத்தில் 'கடலும் காதலும்' தொலைக்காட்சி நாடகத்தில் நடித்தேன். அது வெகுவிரைவில் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகவுள்ளது.

**உங்களுக்கு எப்படி வாய்ப்பு கிடைத்தது?**

தெரிந்த நண்பர் ஒருவரின் பரிந்துரையில் வாய்ப்பு கிடைத்தது.

**உங்களது குடும்பத்தைப் பற்றிக் கூறுங்களேன்......**

அப்பா, அம்மா மற்றும் எனக்கு ஒரு தம்பி அடங்கியஒரு சிறு குடும்பம் .

**உங்களது கலைத் துறை அனுபவங்கள் பற்றி கூறுங்களேன்.**

Sh production தயாரிப்பில், நிலுக்ஸனின் இசை இயக்கத்தில், இந்தியாவில் ராஜ கணபதி பாடிய பாடலில், ரோனியுடன் இணைந்து நடித்தேன்.Bridal show




# அலங்காரக் கலையில் எல்லையில்லா மையல் கொண்ட நடிப்புலக மேதை


## விதுர்ஷா வைஷாலி











இல் கலந்து கொண்டேன், மேலும் Ramp wak, இன்னும் சில Bridal showகளில் கலந்து கொண்டேன்.

**போட்டிகளில் மோதிப் பார்த்த அனுபவம் ஏதும் உண்டா?**

போட்டிகள் எதுவும் இல்லை, 'மாற்று மோதிரம்' எனும் Bridal show இல் கலந்து கொண்டேன். மேலும் Pamp walk மற்றும் இன்னும் சில Bridal show கலந்து கொண்டேன்.

**நீங்கள் நடிப்பதற்கு பெற்றோர் எதிர்ப்பு தெரிவிக்கவில்லையா?**

ஆரம்பத்தில் எனது அப்பாவிற்கு தெரியாமல் தான் நடித்தேன். ஒரு தொலைக்காட்சி விளம்பரத்தில் நடித்த பொழுது அப்பாவிடம் மாட்டிக் கொண்டேன். அவரும் அதன் பின் இதற்கு இணக்கம் தெரிவித்தார். நான் அதை எதிர்பார்க்கவில்லை. ஆச்சரியமாகவும் ஆனந்தமாகவும் இருந்தது. எனக்கு ஆரம்பம் முதல் இன்று வரை அப்பா உறுதுணையாக உள்ளார்.

**இலட்சியம் என்ன?**


இலட்சியம் என்று ஒன்றும் இல்லை, கிடைக்கும் வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொண்டு இருப்பேன்.

**திருமணம் பற்றி....?**

இப்போதைக்கு அதைப்பற்றி எந்த விதமான யோசனையும் இல்லை.

**உங்களுக்கு உதவியவர்கள்?**

எனக்கு உதவியவர்கள் நிறைய பேர் இருக்காங்க. யாரிட சரி பெயர் மிஸ் பண்ணினா....சொறி. முதலில் என்ட அம்மா, அப்புறமா ஷம்றா, கீதன், கிறிஸ்மித்தா, சுதர்சன், அபிஷேக் அண்ணா, சீகேஆர் அண்ணா, சாகர், தினேஷ் அண்ணா.



கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543















## நிறம் தீட்டுங்கள்



## வழிகாட்டுங்கள்



## இளநீர்

தென்னை மரத்து இளநீரு – நல்ல
தேன்போல இனிக்கும் சுவைநீரு
என்றும் எங்கும் கிடைத்திடுமே – தினம்
ஏற்றுக் குடித்தால் நலம் தருமே!


பானத்தில் இளநீர் அரியவகை – எந்த
காலமும் நமக்கு நல்ல துணை
விலையோ ஒன்றும் அதிகமில்லை – இங்கு
இதுபோல் பானம் வேறு இல்லை.

இயற்கை தந்தது இளநீரு – நல்ல
இன்சுவை தந்திடும் இளநீரு
உடலின் வெப்பம் தணித்திடுமே – நம்
உள்ளம் தனிலே நிறைந்திடுமே!


கொத்துக் கொத்தாய் காய்த்திடுமே – நம்
அனைவரின் தாகம் தீர்த்திடுமே!
அனைவரும் நாளும் குடித்திடலாம் – வரும்
ஆனந்தம் தனிலே திளைத்திடலாம்!



## 07 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



## தொடர்புபடுத்துங்கள்



நான் ரொம்ப பிஸி...

# நகைச்சுவையுடன் விழிப்புணர்வை எடுத்துச் சொல்லும் இலக்கியம் வில்லுப்பாட்டு

முத்தமிழில் ஒன்றாக முடிசூடிக் கொண்ட நாடகம் படித்த, எழுதப் படிக்காத எப்படிப் பட்டவர்களையும் ஆட்கொள்ளும் உணர்வுத் திறன் கொண்டது.

அவ்வாறான இயலில் மக்கள் உள்ளங்களை அதிகம் கவரந்திழுக்கக் கூடிய சுவாரஸ்யமான கதாபாத்திரங்களில், வாழ்க்கை நடைமுறைகளையும் விழிப்புணர்வுகளையும் நகைச்சுவையுடனும் எடுத்துச் சொல்கின்ற இலக்கிய வடிவமாக "வில்லுப்பாட்டு" திகழ்கிறது எனலாம். இவ்வாறான கருத்துக்களையும் மேலும் பல தகவல்களையும் வில்லுப்பாட்டு கலைஞர் கயஸ்திரி ஜெயகாந்த் செந்தூர பகுதிக்காக பகிர்ந்து கொண்டார்.

மனித வாழ்வை நெறிப்படுத்துவதில் கலைகளின் பங்கு முக்கியத்துவம் பெற்றிருப்பதற்கான காரணம் அவைகள் மகிழ்ச்சி மற்றும் உற்சாகம் என்பவற்றை ஏற்படுத்தி மன அழுத்தத்தை மாற்றி உள ஆறுதல்களை அளிப்பதாகும்.

இவ்வாறு கலைகள் அறநெறியை போதிப்பதிலும் மனித சமுகத்தை நல்வழிப்படுத்துகிற விடயங்களிலும் அதன் வகிபாகம் அளப்பெரியது.

அண்மையில் சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையத்தில் வில்லுப்பாட்டு நிகழ்வொன்று அரங்கேற்றம் செய்யப்பட்டது. பேராசிரியர் பாலசுகுமாரின் தலைமையில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஏற்பாட்டில் கலாநிதி ஏ.எப்.எம். அஷ்ரப் , எழுத்தாளர் அமானுல்லா, திட்டமிடல் பணிப்பாளர் ஏ.சி.எம். முஸ்இல் ஆகியோர்கள் விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தனர்.

"இறை காக்கும் மகளிர் காப்பே தலை" என்ற வாசக மகுடம் தாங்கி ஆசிரியை திருமதி கயஸ்திரி ஜெயகாந்த் தலைமையில் அழகான காட்சி அமைப்புக்களுடன் "வில்லுப்பாட்டு " அரங்கேறியது.

பெண்ணானவள் தன் கற்பையும் காத்து பிறரது வசை சொல்லில் இருந்தும் தன்னைக் காக்கவேண்டும் என்று கற்பின் முக்கியத்துவம் பற்றியதாக வில்லுப்பாட்டு அமைந்திருந்தது.

அழகிய கதையாடல்,சொல்லாடல்களினூடாக வில்லுப்பாட்டு நிகழ்வின் கதாநாயகி திருமதி கயஸ்திரி ஜெயகாந்த் விறு விறுப்பாக எடுத்துச் சென்றார்.

இந்த வில்லுப்பாட்டு நிகழ்வில் கயஸ்திரி ஜெயகாந்த்,கலைச்செல்வி செல்வராசா,இந்திராகாந்தி இராமலிங்கம்,ராஜானத்தி ஜெயகாந்தன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர் .

கலைவாணி இசைக் குழுவினரான கலாபூஷணம் செல்வநாயகம் சசிதரன் ஹார்மோனியமும்,வர்ணகுலசிங்கம் விதுசன் கடம், சிற்றம்பலம் செல்வரத்தினம் தபேலாவும் , நவரட்ணராஜா தஜிவன் உடுக்கை போன்ற பக்க வாத்திய இசைக் கருவிகளை இயக்கிட வில்லுப்பாட்டு கலை கட்டியது

இந்த வில்லுப்பாட்டின் கதாநாயகி கயஸ்திரி ஜெயகாந்த் இக்கலையை பாரம்பரியமாக செய்து வருகிறார். தந்தையின் உயிர் மூச்சாக வில்லுப்பாட்டு இருந்தது. தந்தை கா.வீரசிங்கம் வில்லுப்பாட்டில் தேர்ச்சி பெற்றவர். கலாபூஷணம் விருதும் அவருக்கு இத்துறைக்காக வழங்கப்பட்டுள்ளது.









ஏ.எம் கஸ்புள்ளா...

நான் படிக்கின்ற காலத்தில் மாகாண மட்டத்தில் வில்லுபாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளேன். என்னை தயார் செய்தது என் தந்தையே!

எனது தந்தை கா.வீரசிங்கம் பலருக்கு இக்கலையை படிப்பித்தார். அதில் நானும் ஒருத்தி என்று பெருமையுடன் சொல்லிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன் என்றார்.

எனது தந்தை 2018 இல் மரணம் அடைந்ததன் பின்னர் இக்கலையை சேனையூர் கட்டைபறிச்சானிலிருந்து வில்லுப்பாட்டுக் கலையை உயிர்ப்பிக்க வேண்டும் என்ற அவா எனக்குள் உருவாகியது.எனது ஆசை நிறைவேறி வருகிறது .நானிருக்கும் வரை இக்கலையை வளர்ப்பேன் எனவும் கூறிக் கொள்கிறேன் என்றார் கயஸ்திரி ஜெயகாந்த்.

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

# அகம்பத்து 05

பாலைபாடியபெருங்கடுங்கோவின் பாலைப் பாடல், தலைமகன் தன் நெஞ்சுக்குக் கூறிய கூற்றுக்களின் தொகுப்பு.

வாழப்பொருள் தேடிதலைவியைப்பிரிகிறான் தலைவன். பிரிவுஎன்பதுபாலைநிலத்து உரி. பிரிவுத்துயர் அவனைவருத்துகிறது. அவனுக்கும் நெஞ்சுக்குமிடையே நடைபெறும் உணர்வுப்போரொன்று பாடல் முழுதும் படர்கிறது.

தலைவன் பொருள் தேடிப்பிரியப்போவதனைஉணர்கிறாள் தலைவி. 'அளிநிலைபெறாஅதுஅமரியமுகத்தாள்....'' தலைவிவேறுபட்டமுகத்தோற்றம் காட்டினாள். தனித்தவளாய் நின்றாள் சிவந்தகாலடிகள் நிலத்தில் மெதுவெனப்பதிய முன்னே வந்து நிற்கிறாள் பொய்யானசிரிப்பை உதிர்க்கிறாள் பிரிதலை உடன்படாது நின்றாள் எனத்தலைவன் 'முறுவல்' தோற்றத்தைத்தனக்குள் எண்ணுகிறான்.

அவன் பொருளீட்டச் செல்லும் வழியின் கொடுமை கூறுதலில் கருப்பொருள் துலங்குகிறது. ஓமை மரங்களுடைய அடர் காட்டில் சிறுவர்கள் விளையாடுவதற்கெனக்கு வித்துவைத்திருக்கும் நெல்லிக்காய் தட்டுக்கள் போல உதிர்ந்துகிடக்கின்றன. தீட்டப்பட்ட கூர்மையானகற்கள் வழிப்போக்கரின் கால்களைச் சிதைக்கும் அத்தகையபாலை. பரற்கற்கள் நிரம்பிய வளமற்றகாட்டுவழி, அவ்வழியால் செல்லநேர்ந்தால், 'அறத்தாறுஅன்று'' எனமொழிந்துதொன்றுபடுகிளவிஅன்ன ஆக...", 'காதலனைப் பிரிதல் அறமன்று என்றுமுன்னர் நீர் சொன்ன சொல் சொல்லிய அளவிலேயேகழிக..''என்று கூறுபவள் போலமுகக்குறிப்புக்காட்டுகிறாள்.

பிரிவாற்றாத்தலைவியின் உள்ளுணர்வுகள் தன் நெஞ்சுபிழியப் பிழியதனக்குள் சொல்லிமாள்கிறான். தலைவிஓவியம் போலநின்றுதலைவனின் பிரிவுக்கான உடன்பாடின்மையைக் குறிப்புணர்த்துகிறாள். அவளதுகண்ணீர் கண்களையேமறைத்தது. அவள் குழந்தையைஏந்தியிருக்கிறாள். குழந்தை செழுங்கழுநீர் மாலைசூடியிருக்கிறது. அவளோமாலையைமோந்தாள் பெருமூச்சுவிடுகி



றாள். அவள் மோந்தபோதுபவளம் போன்றசெழுங்கழுநீர் கருகிவிட்டது. இந்தக் காட்சிதலைவனின் நெஞ்சைத்தைக்கிறது. அவன் பிரிதலைத்தவிர்க்கிறான்.

'செலவேஒண்டொடிஉழையம் ஆகவும் இனைவோள் பிழையலவள் மாதோ,பிரிதும் நாம் எனினே!'' என்றுமுடிகிற பாலைப்பண், நெஞ்சைவிளிக்கும் விளியமைப்பைகுறிப்பால் உணர்த்துகிறது. பாலையின் கொடுநிலையைஉணர்த்தி, அதனைவிடவும் கொடுமையானது, சொன்னசொல் தவறுதலெனத் தலைவிசொல்லாதுசொல்வதாகஉணர்த்துகொள்கின்றபோதுபிரிவின் வலிமேலெழுகிறது.

தலைவியின் மனத்துயரை அளந்துபார்க்கும் காட்சிவலுவானது. அவளதுமனத்துயர், ஏக்கம், பெருமூச்சு அது. புதல்வனின் மாலையையும் கருகவைக்கின்றது. வாசகரையும் மனங்கருகச்செய்வது.

ஒளிபொருந்திய வளையலுடைய இவள் நாம் அருகிருந்தபோது இவ்வாறுவருந்துபவளாயின் பிரிந்தால் இறந்துபடுவாளென எண்ணி பிரிதலைத்தவிர்க்கிறான்பாலைநிலத்துத் தலைமகன். சங்கத்துஅகவுணர்வுப்பாடல்களின்ஓவச்செய்தியின் வெளிப்பாடிது.

## ஓவச் செய்தி

ஓவியத்தில்
நிறங்கள் மேவிஉணர்வுவழியுமோர் வதனக் காட்சி
அவன் மனச் சுவரில்
ஆயிரம் வார்த்தைகளால் ஒருமொழியோவியம்
ஓவியத்திலிருந்துஉதிர்கிறதுபிரிவின் சொற்கள்
ஏன் பிரிகிறாயென்றுவருந்திற்று
பிரிவின் வலிஉணராயாவென்று
வருத்திற்று

ஓவியத்தின் முகத்தில்
கோடிவார்த்தைரேகை
நெஞ்சைப் பிழிகையில் வழியும் கண்ணீர்
என்னகனவா இல்லைவழிச்சுவா

அவள் முகத்தின் குறிப்பொருகாதல்
பாலைகொதிக்கும் கூர்ங்கல்லொருநினைவு
நினையநினையச்
சிதையும் சிறுவிரல் ரத்தம்
ஓவியத்தின் முகத்தில் தெறிக்கும்

நெஞ்சேநெஞ்சே

எப்படிப் பொத்துவேன்
ஓவச் செய்தியிலோர் வலி

# மஜ்லிஸ்



முல்லை முஸ்ரிபா

## நிலாம் 77



எம்.ஏ.எம் நிலாம் என்ற பெயருக்குச முத்துதமிழ் ஊடகப்பரப்பில் நான்குதசாப்தத்துக்கு மேலான மதிப்பிருப்பது போலவே 'ஈழத்து நூன்'என்றநாமத்துக் குஈழத்து இலக்கியப் புலத்தில் நல்லமதிப்புண்டு.

வடக்குக் கிழக்குக்கு வெளியே எழுத்துவேர் பாய்ச்சுகின்ற ஆளுமைகளை நமது இலக்கிய வரலாற்றில் காண்கிறோம். அத்தகைய இடப்பரப்புகளில் தென்னிலங்கை மினுவாங்கொட முக்கியமானது. மு.பஷீர் என்கிற பேராளுமையின் வாரிசாகத் தன்னை முன்னிறுத்துபவர் ஈழத்து நூன். இவர் கவிதை, சிறுகதை,ஆய்வு எனப் பயணிப்பவர்.

தேசிய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும், நினைவுமலர்களிலும் எழுதுபவர்.எளிமையான மொழியில் ஆழமான பொருள் மிளிரஎழுத்தைக் கையாள்பவர். இவரது தட்டுத்தாவரம் பிந்தியவரவெனினும் அழகியக விதைகளின் கூட்டு.

பழக இனியநிலாம், சமூகசிந்தனையும், மானுடநேசிப்பும்கொண்டவர். இலக்கியத்தின் நிமித்தம் பண்பட்டமனிதம் கொண்டநிலாம்,சமூகத்தின் வெட்டுமுகமாக தன் எழுத்துக்களை கையாளும் ஆற்றலாளர்.

எழுத்து என்பது வெறும் பொழுதுபோக்குக்கானது என்ற கருத்தியலிலிருந்து விடுபட்டு எழுத்தை இருண்டசமூகத்தின் ஒளிப்பாதையாகக்கருதுபவர்.இளந்தலைமுறைக்கு வழி காட்டும் ஆர்வலர் நிலாம் என்கிற நிவவு எழுத்துக்காரர்.

இவரது சிறுகதைகளின் திரட்டுவிரைவில் வெள்ளாப்பு வெளியில் வெளிவர இருக்கிறது. 1977இல் ஊடகத்துறையில் நுழைந்து அதன்வழிதழைத்தெழுந்து உயர் பண்புகளைக் கொண்டு நிமிர்ந்தார் நிலாம்.

எழுபதுகளில் வானம்பாடிகளின் தாக்கம் ஈழத்திலும் பரவியபோது அதன்வழிநின்று கவிதை எழுதத்தொடங்கிய நிலாம் 1977 இல் 'நிலாம் கவிதைகள்' என்கிற கையடக்கப் பிரதியை எழுதியிருந்தார். அகவை 77 காணுகின்ற கலாபூசணம் ஈழத்து நூனின் எழுத்துக்கள்; ஒளிகுன்றாது தொடரட்டுமென வாழ்த்துவோம்.

## ஔவன் கவிதை

பழுப்புநிறக்கோது

கருமஞ்சள் நிறத்திலொருவானம்
வரைஎன்றாய்

வரைந்தேன்

வெள்ளைநிறத்திலொரு கடல்
வரைஎன்றேன்

வரைந்தாய்

என் வானத்தைச்சுருட்டியெடுத்து
மஞ்சள்கருஎன்றாய்

அதனைச்சுற்றிக் கடலைஉருண்டையாக்கினாய்
வெண்கருஎன்றேன்

வானமும் கடலும் புணர்ந்ததொருபழுப்புநிறக் கோது

உள்ளேநீ
வெளியேநான்

வெளியேநீ
உள்ளேநான்

# இளவயதினர் இலக்கியம்

மழலைச் சொல் அழகானதுளு அற்புதமானதுளு உணர்வு பூத்தது. மழலைச் சொல்லுக்கு இருக்கும் அர்த்தம் அலாதியானது. மழலை இலக்கியம் எவருக்கானது. எவர்களால் படைக்கப்படுகிறது என்கிற கேள்வி அவசியமாகிறது.

இலக்கிய வரலாறு நெடுகிலும் மழலையரை மையப்படுத்திய கலை, இலக்கிய வடிவங்களைக் கண்டு வருகிறோம். இவற்றின் பற்றுறுதி காலம் கடந்தும் நிற்கும் தனித்துவம்தான்.

மானுட வாழ்வில் சிறார் பருவம் பெறும் முக்கியத்துவத்தை முன்னிறுத்திப் பார்க்கும் போது சிறுவர் குறித்த இலக்கியப் போக்குகள் குறித்து அதிக கவனக்குவிவு தேவையாகிறது. சங்க காலத்திலேயே சிறுவர் பாத்திரங்களை முன்னிறுத்திய இலக்கியங்கள் தோன்றிவிட்டன. அதன் தொடரறாத் தொடர்ச்சியை பாரதி வழி கடந்தும் காணுகிறோம்.

இன்றைய தகவல் மைய நூற்றாண்டில் சிறுவர் சார்ந்த வடிவங்கள், அணுகுமுறைகள், அறிவுக்கோலங்கள், பண்பாட்டு முறைமைகள் மாறி விட்டன அல்லது வளர்ச்சியுற்றன. இந்தப் பின் புலத்திலிருந்து இவர்களுக்கான இலக்கிய வடிவங்கள் குறித்து அவதானித்தல் அவசியமாகிறது.

சிறுவர்சார் இலக்கியங்களை வகைப்படுத்துகிறபோது, தாலாட்டுப் பாடலில் தொடங்கிவிடலாம். பியாஜே குறிப்பிட்டது போல உளவியல் சார்ந்த பருவங்கள் வழி இலக்கிய உள்வகைமையொன்றினை முன்னிறுத்தலாம்.

புலனியக்க இலக்கியம், தூல சிந்தனை இலக்கியம், நியம சிந்தனை இலக்கியம் என்றோ அல்லது உடல் கட்டுமானத்துக்கேற்ப மழலையர் இலக்கியம், குழந்தைகள் இலக்கியம், சிறுவர் இலக்கியம், இளையவர் இலக்கியம், இளைஞர் இலக்கியமென இதன் உள் வகைமையைக் கட்டமைக்கலாம். இந்த கட்டமைப்பு அவ்அவ் பருவம் சார்ந்து உளவியல் மற்றும் மொழியளவு முறை, கிரகித்தல், கற்பனை என்பனவெல்லாம் உயிரோட்டமாக இருத்தல் வேண்டும்.

மேலும் இவை எவரால் எழுதப்படுகிறது. மூத்தோரால் இளையோர் படிக்குமாறு எழுதப்படுவது, இளையோரால் இளையோருக்காக எழுதப்படுவது, இளையோரை கருவாகக் கொண்டெழுதப்படுவதென இவற்றையும் வேறுபடுத்திப் பார்க்கலாம்.

இத்தகைய கட்டமைப்பில் கவிதை, பாடல், இசையும் அசைவும், நடிப்பு, நாடகம், காணொளி, ஓவியம், கதை, காவியம், நாவல் என்றவாறான வடிவமைப்புகள் முன்னெழுகின்றன.

இவற்றின் சிந்தனைப் பெருக்க வாயிலாக அமைவது வாசிப்பு. வாசிப்பதற்கான சாளரத்தைத் திறந்து கொடுத்தல் குறித்து மிகுந்த அவதானிப்பு வாசிப்பு முறைமை மாறிய காலத்தில் முக்கியம் பெறுகிறது.

குறிப்பாகப் பதின்மப் பருவ வாசிப்புக் கலாசாரத்தை மேம்படுத்துவதில் இளையோர் இலக்கியத்தை வளர்ப்பதில் பாடசாலைகளை வகுப்பறைகளை நூலகங்களை கணினி முறைகளை மையப்படுத்திய வாசிப்பை ஒழுங்குபடுத்துதல் மூலம் இளையோர் இலக்கியத்தை வளர்க்கலாம். இதன் தொடர்ச்சியான போக்கை அல்லது வளர்ச்சியை மூத்தோர் இலக்கியத்தில் சந்திக்கலாம்.

இந்த நோக்கில் இளையவருக்கான இலக்கியங்களைப் படைத்தலும் பன்முகப்படுத்தலும் பரவலாக்கலும் ஒரு ஆற்றுப்படை சார் செயற்பாடாகத் தமிழில் முன்னகர வேண்டும். உயிர்ப்பான வாசிப்பு உன்னதமான மாற்றங்களைக் கொண்டுவரும்.

அங்கம் 01

## முற்போக்கு சிந்தனைகளால் தமிழினத்தை மீட்டுடெடுத்த பேரறிஞர் அண்ணா

# மதராச பட்டினத்திற்கு "தமிழ்நாடு" என பெயரிட்டவர் அறிஞர் அண்ணா

இந்தியாவின் முதலாவது பிரதமர் ஜவஹர்லால் நேரு ஒருமுறை தமிழகம் வந்த போது பாடசாலை ஒன்றில் ஆங்கிலத்தில் உரையாற்ற மொழிபெயர்ப்பாளர் ஒருவர் அதைத் தமிழில் மொழிபெயர்த்தார். ஒரு கட்டத்தில் ஜவஹர்லால் நேரு அவர்கள் “வேறு யாராவது மொழிபெயர்க்கிறீர்களா?” எனக் கேட்டார். அப்போது அங்கிருந்த பாடசாலை மாணவர்களில் ஒருவன் எழுந்து சென்று இந்தியாவின் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களுடைய பேச்சை மொழிபெயர்த்தான். அம்மாணவன் தான் பிற்காலத்தில் “அறிஞர் அண்ணா”.

செங்குந்த முதலியார் வகுப்பைச் சார்ந்த ஒரு நடுத்தர கைத்தறி நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த காஞ்சிபுரம் நடராஜன், பங்காரு அம்மாள் தம்பதியினருக்கு மகனாக 1909 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15 ஆந் திகதி அண்ணாதுரை பிறந்தார். சி.என்.அண்ணாதுரையை அண்ணா என்றே அழைத்து வந்தனர்.

பெற்றோர்கள் அண்ணாவை பேரன்பு காட்டி வளர்த்தார்கள். பங்காரு அம்மாளின் தங்கையார் இராஜாமணி அம்பாள் என்பவரும் அண்ணாவை வளர்ப்பதில் பெரும்பங்கு வகித்தார். அண்ணா இராஜாமணி அம்மாள் சின்னம்மாவை “தொத்தா” என்றே அழைத்தார்கள். அண்ணா வளர வளர தொத்தாவிடம் காட்டிய அன்பும், அண்ணாவிடம் தொத்தா காட்டிய அன்பும் பெருகின.

1914 ஆம் ஆண்டு அண்ணா காஞ்சிபுரத்திலுள்ள பச்சையப்பன் ஆரம்பப் பாடசாலையில் சேர்ந்தார். அந்தக் காலத்தில் ஆண் பிள்ளைகளுக்கும் குடுமி வைத்து, காது குத்தி, கடுக்கன் போடுவார்கள். அண்ணா குடுமியுடன் தான் பாடசாலைக்குச் சென்றார். அண்ணா அப்பாடசாலையில் இறுதி வகுப்பு வரை (எஸ்.எஸ்.எல்.சி) கல்வி கற்றார்.

அண்ணா பச்சையப்பன் பாடசாலையில் படிக்கும் போது சென்னையில் நடந்த பார்;க் போர் கண்காட்சிக்கு அவரது தாயாருடன் சென்றார். அண்ணா கையில் தங்கக் காப்பும் கழுத்தில் தங்கச் சங்கிலியும் அணிந்திருந்தார்.

பலூன் வியாபாரிகள் நிறைந்திருந்த பகுதிக்கு சென்ற அண்ணா பலூன் வாங்கித் தரும்படி கேட்ட அழுதார். இதனை ஒரு திருடன் கவனித்தான். அவன் அண்ணாவிடம் “நான் பலூன் வாங்கித் தருகிறேன். நீ என்னுடன் வா” என்று அழைத்தான். திருடன் அழைத்ததற்கு இணங்கி அண்ணாவும் சென்று விட்டார். திருடன் அண்ணாவை ஒரு மறைவிடத்திற்கு அழைத்துச் சென்றான். ஏனோ அத்திருடனின் நோக்கம் அண்ணாவுக்கு புரிந்துவிட்டது. உடனே “அம்மா, அம்மா” என்று கூறியபடி அழுதார். குழந்தையின் குரலைக் கேட்டு அங்கு மக்கள் கூடி விட்டனர். திருடனும் தப்பித்தால் போதும் என்று அங்கிருந்து ஓடி விட்டான். இந்நிகழ்ச்சிக்குப் பிறகு அண்ணாவுக்கு தங்க நகைகள் அணிவதை குடும்பத்தார் தவிர்த்து விட்டார்கள்.

கல்வி கற்கும் போது பெரும்பாலான மாணவர்கள் பாடங்களை நன்றாக புரிந்து கொண்டு சொந்தமாக எழுதுவதில்லை. ஆசிரியர்கள் கொடுக்கும் குறிப்புக்களை அல்லது கட்டுரைகளை மனப்பாடம் செய்தே எழுதுவார்கள்.

ஆனால் அண்ணா ஒருபோதும் இப்படிச் செய்வதில்லை. ஆசிரியர்கள் பாடம் பற்றி விளக்கிச் சொல்லும் போது மிகவும் கவனமாகக் கேட்பார். பிறகு தமது சொந்த நடையிலே தேர்வுகளை எழுதுவார். சிறப்பான புள்ளிகளைப் பெறுவார். அண்ணா தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல பாண்டித்தியம் பெற்றார். அண்ணா மற்றைய பாடங்கள் அனைத்தையும் சிறப்பாகப் படித்தாலும் கணித பாடம் ஏனோ சற்றுக் கடினமாகவே இருந்தது. இருந்தும் எப்போதும் அண்ணாவை “படி படி” என்று ஊக்கமூட்டிக் கொண்டே இருந்தார். அண்ணாவின் சின்னம்மா இராஜாமணி அம்மையார். அண்ணா, மின்விளக்கு வசதி இல்லாத சூழ்நிலையிலும் கைவிளக்கின் மங்கலான ஒளியிலேயே படித்தார். இறுதியில் எஸ்.எஸ்.எல்.சி தேர்வில் சித்தியடைந்தார்.

எஸ்.எஸ்.எல்.சி தேர்வில் சித்தியடைந்ததும் அண்ணா சென்னையிலுள்ள பச்சையப்பன் கல்லூரியில் படிப்பைத் தொடர ஆசைப்பாட்டார். ஆனால் அவரது ஆசை உடனடியாக கைகூடவில்லை. அதற்கு காரணம் குடும்பத்தின் பொருளாதார நிலை தான். குடும்பத்தின் வறுமை காரணமாக அண்ணா வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அக்காலத்தில் பத்தாம் வகுப்புப் படித்தாலே அரசாங்கப் பணி கிடைத்துவிடும். அண்ணாவிற்கு காஞ்சிபுர நகராட்சியில் எழுத்தர் பணி கிடைத்தது. அண்ணா ஆறு மாதங்களே பணி புரிந்தார். காரணம் பச்சையப்பன் கல்லூரியில் படிப்பைத் தொடர விரும்பினார். படிப்பைத் தொடர குடும்ப பொருளாதார சூழ்நிலை நன்றாக இல்லை என்ற காரணத்தால் கல்லூரி முதல்வர் சின்னத்தம்பி, இராஜேஸ்வர ஆங்கில ஆசிரியர் வரதராசன், திரு.வெங்கடசாமி ஆகியோர் உதவினர்.



அண்ணா பி.ஏ. பட்டப்படிப்பு, ஹோனர்ஸ் தேர்விலும் சித்தியடைந்து 1934 இல் எம்.ஏ. பட்டதாரியானார். 1930 இல் அண்ண தனது 21 ஆவது வயதில் இராணியை மணமுடித்தார். அவர்களுக்கு பிள்ளைகள் இல்லை. 1931 இல் அண்ணா “தமிழரசு” பத்திரிகையில் கட்டுரைகள் எழுதினார். அண்ணா இலக்கியப் போட்டிகளில் கலந்து கொண்டு பல பரிசில்கள் பெற்றார்.

அண்ணாவின் முதல் சிறுகதை “கொக்கரக்கோ” 1934 பெப்ரவரி 11 இல் ஆனந்த விகடனில் வெளி வந்தது.

1935 இல் திருப்பூரில் வாலிபர் மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு அண்ணாவும் சென்றார். அந்த மாநாட்டில் பெரியாரின் சீர்திருத்தம் நிறைந்த தெளிவான பேச்சை கேட்டார்.

சென்னையில் சுயமரியாதை, இளைஞர் மன்ற தொடர்பால் மொட்டாகியிருந்த அண்ணாவின் அரசியல் ஆர்வம் பெரியாரின் பேச்சை கேட்டதும் மலர்ந்து மணம் வீசத்தொடங்கியது. மாநாடு நடந்த அன்றே அண்ணா பெரியாரைத் தனியாகச் சந்தித்து வணங்கி தனது படிப்பைப் பற்றி கூறினார். மேலும் அண்ணா பொது வாழ்வில் ஈடுபடதாம் விரும்புவதாகவும் கூறினார். அண்ணா கூறியதைக் கேட்டதும் பெரியார் மகிழ்ந்தார்.

**(தொடரும்)**


கலாபூஷணம் பரீட் இக்பால் ...
யாழ்ப்பாணம்



# களுத்துறை மாவட்ட இளைஞர் லீக் (PYL) கிரிக்கெட் அணியில் அல் ஹுமைஸரா மாணவன் ருஸ்லான்

### பாடசாலை சமூகம் வாழ்த்து; பாராட்டு

பேருவளை, சீனன்கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையில் 8 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவன் ருஸ்ளான் ஹிஷாம், 2022 ஆம் ஆண்டுக்கான 15 வயதிற்குட்பட்ட இளைஞர் லீக் (PYL), களுத்துறை மாவட்ட கடின பந்து (Hard ball) கிரிக்கெட் அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.






களுத்துறை மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் பல நாட்களாக நடைபெற்ற தெரிவுச் சுற்றுப் போட்டிகளில் கலந்து கொண்ட மாணவர்களில், திறமையின் அடிப்படையில் ருஸ்ளான் ஹிஷாம் உட்பட 13 கிரிக்கெட் விளையாட்டு வீரர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர் ஒரு சுழல் பந்து வீச்சாளராக தெரிவு செய்யப்பட்டது விஷேட அம்சமாகும்.

அல்ஹுமைஸரா தேசிய பாடசாலையில் கடின பந்து கிரிக்கெட் விளையாட்டு வீரர்களுக்கு தேவையான பயிற்சிகளையும் உதவிகளையும் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் (OBA) ஏற்பாட்டில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அண்மைக் காலமாக இப்பாடசாலை கிரிக்கட் விளையாட்டில் பல சாதனைகளை நிலைநாட்டி வருகின்றமையையும் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

கிரிக்கெட் விளையாட்டில் ஆர்வமுள்ள இவர், தேசிய கிரிக்கெட் அணியில் இணைந்து விளையாட வேண்டும் என்பதை தனது குறிக்கோளாக கொண்டு முன்னேற்றப்பாதையில் சாதனை நிலைநாட்டி வருகிறார். அதுமாத்திரமன்றி மாலை நேரங்களில் தனது நண்பர்களுடனும் கிரிக்கட் விளையாட்டில் ஈடுபட்டு பயிற்சிகளை பெற்று வரும் இவர், தனக்கு பாடசாலையில் வழங்கிய பயிற்சியினாலே இவ்வாறான சாதனையை நிலைநாட்ட முடிந்தமையை நன்றியுடன் நினைவுகூருறார்.

எனவே, அவரது இலட்சியம் நிறைவேற , பாடசாலை சமூகம் உட்பட மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோரும், ஊர் மக்களும் ஊக்கமளித்து உற்சாகப்படுத்த முன் வர வேண்டும்.

அத்துடன், தான் கல்வி கற்கும் பாடசாலையின் முழு பங்களிப்பும் தான் இவரின் வெற்றிக்கு உறுதுணையாக இருக்கப் போகின்றது என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை.

இவர், பேருவளை சீனன்கோட்டை ஜாபிர் எவனியூவைச் சேர்ந்த ஹிசாம் மிஹ்லார், பாத்திமா சிபானா அன்ஸார் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அஜ்வாத் பாஸி...

# தேசிய மட்டத்திற்கு தெரிவாகிய அல் அக்ஸா கல்லூரி அணி கௌரவிப்பு














பதினாறு வயதுக்குக் கீழ்பட்ட மாணவர்களுக்கான கிழக்கு மாகாண மட்ட உதைப்பந்தாட்டப் போட்டியில் அல் அக்ஸா தேசியப் பாடசாலை சம்பியனாக தெரிவு செய்யப்பட்டதை முன்னிட்டு அணியை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இக் கௌரவிப்பு நிகழ்வை கிண்ணியா வலயக் கல்வி அலுவலகமும் அல் அக்ஸா தேசியப் பாடசாலையும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

கல்லூரி அதிபர் ஏ.எம்.சலீம் தலைமையில் உடற் கல்வி இணைப்பாளர் எ.எல்.எம்.நபீல் ஆசிரியரின் ஒருங்கமைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர் எ.எச்.எம்.அக்மல்,ஆசிரிய ஆலோசகர் என். அறபாத் ஆகியோருடன் கல்வி அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் சகல போட்டிகளிலும் சிறப்பாக விளையாடிய அணித் தலைவர் கே.எம்.ஹாதிஹ் கௌரவிக்கப்பட்டார். சிறந்த கோல் காப்பாளராக செயற்பட்ட என்.எம்.றிப்சின் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வுக்கான நிதி அனுசரணையை வெளிநாட்டில் வசிக்கும் தனவந்தர் எ.எம்.நாஜிர் வழங்கியிருந்தார்.

மாகாணங்களுக்கிடையிலான 34 பாடசாலை அணிகள் பங்கு கொண்டதில் இடம்பெற்ற ஐந்து சுற்றுப் போட்டியிலும் அல் அக்ஸா கல்லூரி வெற்றி பெற்றதுடன் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடைபெற உள்ள தேசிய ரீதியான உதைப்பந்தாட்ட போட்டியிலும் பங்கேற்க உள்ளது.

**கிண்ணியா தினகரன் நிருபர்**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒக்டோபர் மாதம் 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.